THE

VEDANTA CRIMINAL CASE

BY

A SATAVADANIAR

AND

A FELLOW OF THE MADURA TAMIL SANGAM

SECOND EDITION

M. ADI & CO.

CHANDRA PRESS, MADRAS.

1917.

 [Price Rs. 1-8-0

உ

கடவுள் துணை.

வேதாந்த விவகாரக்

கிரிமினல் கேஸ்

இது

மதுரைத் தமிழ்ச்சங்கத்துப் புலவருளொருவரான

சதாவதானி ஷேக்குத்தம்பி பாவலரால்

எழுதப்பட்டது.

சென்னை

எம். ஆதி அண்டு கம்பெனியாரால்

தமது

சந்திரா பிரஸில்,

பதிப்பிக்கப்பட்டது.

1917.

நூன்முகம்


இவ்வுலகத்தி னிடத்துள்ள ஒவ்வொருவருந் தத்தம் மனதை உலக விஷயமான பல விவகாரங்களிற் செலுத்தித் தங்கள் தங்கள் காலத்தைக் கழித்து வருகின்றார்களே தவிர, வேதாந்த விஷயங்களிற் செலுத்தி ஆன்மவிசாரணை செய்பவர்கள் மிகவுஞ் சுருக்கம். ஆனால் ஆன்மவிசாரணை ஒவ்வொருவருக்கும் இன்றியமையாததென்பதற்கு எவ்விதத் தடையுமில்லை. சரீரநோயை யகற்றுவதற்குப் பற்பல மருந்துகளேற்பட்டிருப்பதுபோல, ஆன்மநோயை யகற்றுவதற்கு வேதாந்தமாகிய மகா மருந்தேற்பட்டிருக்கின்றது. அம்மருந்தை உட்கொள்பவர்கள் சரீரநோயகன்று மிக்க சுகத்தை யடைவதுபோலவே, வேதாந்த மருந்தை உட்கொள்பவர்களும் ஆன்ம நோயகன்று பேரானந்த சுகத்தை யடைகின்றார்கள். அவ்வாறடைவதற் காதாரமான வேதாந்த நூல்கள் பல நந் தமிழ்நாட்டிலிருப்பினும், அவைக ளியாவும் ஆசிரியரின்றி ஒவ்வொருவருந் தாமே கற்றுத் தெளிவதற்குத் தகுதியுடையன வல்ல. ஆதலால், ஆண் பெண் சிறுவர்களான யாவர்களும் அன்னியாது உதவியின்றித் தாமே கற்றுத் தெளிவதற்குத் தகுதியாகவும், இடையிடையே பலநீதி, கதை, தருக்க முதலியன கலந்ததாகவும், வாசிப்போருக்கு வெறுப்பின்றி விருப்பை யளிக்கத்தக்க

தாகவும், ஓர் வேதாந்த நூல் மிகவும் எளிய தமிழ் நடையில் வசனரூபமாக எழுதுவித்து இத்தமிழ் நாட்டிற்குதவ வேண்டுமென்னும் எண்ணம் பன்னாளாய் எமதுசிந்தையிற் குடியிருந்து வந்தது. அதற்குத் தக்க காலமும் அவகாசமு மேற்படாததனால் அது நிறைவேறாமற் போயிற்று. ஆயினுந் தற்போது, சில வருடங்களுக்கு முன்னர் மலையாள பாஷையில் "தன்னைத்தானறிதல்" என்னும் ஆப்த வாக்கியத்தை மேற்கோளாகக்கொண்டு ஆன்மா, சரீரமாகிய இவைகளை வாதி, பிரதிவாதிகளாக்கி மண், தண்ணீர் முதலிய தத்துவங்கள் தொண்ணூற்றாறையுஞ் சாக்ஷிகளாக்கி அவைகளுக்குத் தக்க வக்கீல்களையு மேற்படுத்தி மாயையே நியாயாதிபதியாக நியமித்துப் போலீஸ்க் கோர்ட்டுகளில் நடக்கும் வியாச்சியங்கள் போலக் கேசுருவமாக எழுதப்பட்டதை ஆதாரமாகக்கொண்டு வேதாந்த விவகாரக் கிரிமினல் கேசென்னும் இச்சிறு புத்தகம் தமிழில் எழுதலானேன். முதல் பதிப்பு அச்சாகி விற்று விட்டதனால் இந்த இரண்டாம் பதிப்பு அச்சிடலானேன். அறிஞர்கள் தயவுசெய்து இதனையும் அவ்வாறே வாங்கி வாசிக்கப் பிரியப்படுகிறேன்.

இங்ஙனம்,

P. S. P.

கோட்டாறு.



உ

மதுரை ஜில்லா, செம்பூர், ஆசுகவி

ஆறுமுகஞ்சேர்வை யவர்களியற்றிய

சிறப்புப்பாயிரம்.

கோச்சகக்கலிப்பா.

மலைமிகைத்த வளமிகைத்து வனமிகைத்து மலர்மிகைத்தங்
கலைமிகைத்த கடற்புவிக்கு ளணிமிகைத்த மலைநாட்டில்
விலைமிகைத்த மணிகொழித்து மிளிர்தந்த நதிபரவுங்
கலைமிகைத்த புலவர்தினங் களிமிகைத்த கோட்டாறும். (1)

மதிக்கிழவன் றனக்குறுசம் மதிக்கிழவ னெனும்பெரிய
நிதிக்கிழவன் பதிக்குமுயர் செறிப்பமைநற் றிருப்பதியில்
மதிக்கிழவன் றனைப்பலரு மதிக்குமிகு மதியாற்கீழ்ப்
பதிக்கிழவ னெனத்தாக்கிப் பதத்துடன்வாழ் பெருமதியான். (2)

இருநிதிபெற் றிருப்பினுமிங் கிசைந்தநிதிக் கிழவனெனு
மொருபெயரைப் பழமையிற்றே யுற்றனமெப் பரியபல
பெருநிதிகொள் குமரனிவன் பிறங்குலகிற் பீடனைத்துந்
தருநிதியாற் பருவத்தாற் சமமடையோ மெனக்கருதி. (3)

அத்தரத்தா லகநாணி யலத்துடனே யஞ்சித்தன்
உத்தரத்தைக் கணடொடுங்கி யொளித்திம்ப ருருவமதை
எத்தரல்கா ருங்காண வியலாமற் றனதுற
இத்தரத்த தெனக்கணித்தற் கிசையாம லிசைதிருவோன். (4)

சகரன்முதன் முதலெழுவர் தருங்குணத்திற் றலத்துனக்கு
நிகரடையா ரவரீகை நித்தலுநின் பெயராலே
மிகநடந்த தவர்க்குமுனே மேவிசையு நின்னிசையே
இகமதனி லெனப்புலவ ரிசைப்பாவா லிசைக்கும்வணம். (5)

இருந்தலத்து ளிருந்தெழுந்த வெவ்வுயிர்க்கு மெழில்பெருகப்
பெருந்தரத்த முகிலென்னப் பிறந்தென்றும் பெறுந்தனத்தால்
வருந்தவர்க்கும் புலவருக்கு மற்றையர்க்கும் வறுமையறத்
தருந்தரத்துத் தருமானத் தருந்தொழிற்கே தகுங்கரத்தான். (6)

அகத்தியன்ற னகத்துலகத் தருந்தவநாம் பலவாற்றி
மிகச்சிறப்புற் றிருப்பினுமா வெண்செம்பூ மெல்லியலை
உகப்புடனோ ரகத்தமைக்கு முயர்நெறியுற் றுணராமல்
ஜகத்தினினோ மகண்மட்டு நண்ணவளர்த் தோரிசையே. (7)

பெற்றனமிப் பெருந்தகையான் பிணக்குளவவ் விருவரையும்
உற்றகவாத் தனதகத்து ணட்பொடும்வா ழப்புரிந்து
வெற்றியுட னீரிசையு மேவினனென் றேவெள்ளிக்
குற்றுடலைக் கொடுபொதிகைக் கோவரையுட் குலவிடுவான். (8)

பிணக்கருத்து மாவெணச்சொல் மாமியொடு பிறங்குறுவெள்
வணக்கொடியென் மருகியையும் வருகவென வரவழைத்துக்
குணத்துடன்ற னகத்தொருங்கு குலவிநிதங் குடியிருந்தங்
கிணக்கமுறப் புரிந்துதமி ழியல்தெரிந்த பெருந்தவத்தான். (9)

மதனையுரு விலியாக்கி வளர்ந்தபெரு வனப்புடையான்
நிதநனிவா ணிபத்தொழிலே நிலவுபல தேயமெலாம்
இதநல்க வள்ளுவனா ரிசைத்ததொன்மை நெறிப்படிபல்
விதமியற்றி யூதியங்கண் மிகவீட்டு மேன்மையுளான். (10)

ஆக்கன்முத லைந்தையுஞ்செ யைமுகத்தா னடிபரவி
மோக்கமுறுந் தொண்டரது முதியபெருந் திருமரபில்
ஆக்கமுட னுதித்துயர்ந்த வழகியநற் சுற்றமெங்கள்
பாக்கியமென் றிசைக்கவளர் பாக்கியமாந் திருப்பெயரான். (11)

சீர்பெருகத் தானுதித்த திருநகரிற் றிகழ்ந்தோங்கு
கார்பெருகத் தனக்குநெறி நவில்புலவர் பலர்க்குமவன்
பேர்பெருக வுதவிவளர் பெருந்தகவுற் றுணர்ந்தவனுக்
கோர்பநுப வியற்றுவித்தங் குயர்நேய நிலைத்தொளிர. (12)

நல்லுரிமை யாக்குவதே நமக்கழகென் றிருக்காதி
சொல்லுமறைப் பொருடேர்ந்து சூழறிஞர் பலருமலை
வெல்லும்வகை யாவமைந்த வேதாந்தப் பெருநூலைத்
தொல்லைமுறை தழுவிமிகச் சுருங்கவியற் றுதியென்ன. (13)

தொழுதியலன் பொடும்பரவித் தாயதன தடிபேணிப்
பழுதியலா வணர்ந்துதித்துப் பழவினையின் றொடர்பகற்றி
எழுதியலே முதலாக வேய்ந்திடுமுத் தமிழ்வளர்ந்த
வழுதியர்மே லவர்தமிழ்மேன் மாருநல் விருப்பெய்தி. (14)

கண்ணுதல்வேற் படைகொண்ட காளையொடுங் கயற்றடங்கண்
ஒண்ணுதலா ருமையோடு மும்பர்புகழ்ந் திடக்குறுகி
எண்ணுதவத் திருவிளையாட் டெண்ணில்பல வியற்றியிந்த
நண்ணுநலத் தரசுரிமை நாமுமடை குதுமென்றே. (15)

அன்னபெருந் தென்னவர்போ லாய்நிம்பத் தார்சூடி
மன்னர்பெறு முடியேற்று மனுநீதி முறைகாட்டி
மன்னியசெங் கோலோச்சி வானமுதே யனையதமிழ்த்
துன்னியநற் சுவைதேர்ந்து சூழ்சங்கத் திடையிருந்த. (16)

உருக்கூடப் புலவருக்கன் றனமுவக்குஞ் செயல்புரிந்த
தருக்கூடப் புலவுமழை தவழுமுயர் தண்டலைசூழ்
திருக்கூடற் பதியின்முன்பு திகந்தமுறைப் படியின்று
மருக்கூடம் மலர்மாலை மன்னர்பலர் வண்மையினால். (17)

கூடிநடை பெற்றுயர்வாக் குலவிவரு தமிழ்ச்சங்க
நேடியமர் கலைப்புலவர் நெறிக்குழுவு ளொருவனென
நாடியெவ ரும்புகழ நன்கார்ந்து சதமென்னும்
பீடிருந்த வவதானப் பெயர்கொள்ளும் பெருந்தரத்தான். (18)

கான்சிறந்த மலரூடு கடியென்னக் கலந்தெங்கும்
வான்சிறந்த வொருபொருளின் வகையறிந்தெம் மதியினரும்
ஊன்சிறந்த வுடன்மறந்துற் றுய்யும்வண மந்நூலைத்
தேன்சிறந்த சுவைமிகுந்த தெண்டமிழாற் சீர்த்திபெற. (19)

மித்தையெனு மூலகவியல் விளக்கமுறு மெய்யில்வரு
தத்துவங்கள் கிருத்தியங்கள் தனுச்சார்ந்த சீவரது
சுத்தநிலை யாவரணந் தொடர்ந்தநிலை சுகநீண்ட
முத்திநிலை யெனப்பலவா மொழியுமந்நூல் முடிபெல்லாம். (20)

சுருக்கிவிவ காரமெனச் சொன்முறையிற் றொடுத்துயர்ந்த
தருக்கமதற் குரியவிடை தழுவிவரப் பழுதின்றி
விருப்பமிகு வேதாந்த விவகார மெனுநாமந்
திருத்திபெறப் பொருத்தியிதைச் செய்துதவக் கையடைந்தே. (21)

தன்னையறிந் தாலிகத்திற் றலைவனையு முணர்ந்திடலாம்
என்னுமொழி யியல்விளக்க விசைந்தவிந்நூ லியாவர்க்கும்
மன்னுமெனக் குறித்தறிஞர் மனமெல்லா மகிழ்பூப்பச்
சென்னையெனுந் திருப்பதியிற் றிகழுமுய ரச்சிலிட்டே. (22)

எவ்விடத்தும் புகவிட்டா னிசைத்திடமெய்ப் பெரியனுடன்
ஒவ்விடவோர் நகரினில்வந் துடன்கற்றிங் குறவாகிச்
செவ்விபெற வென்னிடத்துந் திருஞேய மிகக்கொண்ட
எவ்வமிலான் பெருங்குணத்தா னிசைமிக்கா னெழின்மிக்கான். (23)

குவலயத்திற் பெற்றோர்முன் குறித்தரிதி லியற்றியமா
தவசண்ணிப் பெருங்குலத்திற் சார்ந்தீகை தயைகீர்த்தி
நவமென்னும் பேரறிவு நண்பிவற்றோ டுதித்தென்றும்
அவமின்றி யுயர்நெறியி லாவதற்கு மனத்தெண்ணி. (24)

அங்கரனு ருங்கமலத் தடிகளிடத் தன்பார்ந்த
சங்கரநா ராயணனார் தமிழ்க்குரவன் றனையனாகி
அங்கரநா வாற்றெரிந்த வளப்பரிய பலகலையும்
இங்கரணுக் கற்றுளசுப் பிரமணிய னெனும்வேளே. (25)

சிறப்புப்பாயிரம்

முற்றுப்பெற்றது.

உ

வேதாந்த விவகார

கிரிமினல் கேஸ்.

தத்துவார்த்தபுரம் டிஸ்டிரிக்டு மாஜிஸ்திரேட்டுக் கோர்ட்டு மாஜிஸ்திரேட்டு மிஸ்டர், மாயாமய ஐயரவர்களது முன்னிலையில் நடந்த கலியுகம் 5010-இலக்க வருடம் சித்திரை மாதம் 1-ந் தேதி பைல் 1-ம் நெம்பர் கிரிமினல் கேஸ்.

வாதி.
1-தத்துவார்த்தபுரம்கவர்ன்மெண்டு

வாதி சாக்ஷிகள்.
1-காலன்
2-சித்திர குப்தன்

வாதி வக்கீல்.
1-ஞானச்சந்திர ஐயர்.

பிரதிவாதிகள்.
1-ஆன்மா
2-சரீரம்

1-ம் பிரதிவாதி வக்கீல்.
1-சரசநாயகம் பிள்ளை

2-ம் பிரதிவாதி வக்கீல்.
1-தத்துவவாதி ஐயர்.

சார்ஜ்.

இந்தச் சார்ஜிற் கண்ட 1-ம், 2-ம், பிரதிவாதிகள் ஒன்று சேர்ந்து எப்பொழுதும் பிரமஹத்தி, விசுவாச வஞ்சனை, ஜீவவதை, பொய், களவு, காமம், சூது முதலிய பல துஷ்டச் செய்கைகளைச் செய்து சாது ஜனங்களை வருத்தி வருகிறதாக எனது மேலதிகாரி தெரிந்து இவர்கள்

பால் நரை, திரை முதலியவைகளை அனுப்பி ஒருவாறு இவர்களது அழகையும், வல்லமையையுங் குறைத்தார். இவர்கள் அதிலும் அடங்காமல் மீண்டும் மதுபானம், வியபிசாரம், சூதாட்டு முதலிய கெட்ட செய்கைகளைச் செய்தார்கள். அதனால் இவர்கள் புராதன சிக்ஷா நியம மனுஸ்மிருதியிற் சொல்லிய சகல குற்றங்களுக்கும் பாத்திரவாளிகளாக விருக்கின்றார்களென்று என்னைக் கொண்டு தங்கள் சமுகத்தில் ஒப்பிக்கும்படி கட்டளையிட்டார். அவ்வண்ணமே யானும் இவர்களைப் பிடித்து இதோ தங்கள் சமுகத்தில் ஒப்பித்திருக்கின்றேன். ஆதலால் மகா கண்ணிய முள்ள தாங்கள் இப்பிரதிவாதிகளை நியாயமாக விசாரணை செய்து இவர்கள் செய்த குற்றத்திற்குத் தக்கபடித் தண்டிக்கத் தீர்மானங் கிடைக்க வேண்டுமென்று மிகவுந் தாழ்மையாய்க் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

காலன் (கையெழுத்து-)

வாதி சாக்ஷி விசாரணை.

வாதிபக்கம் 1ம், சாக்ஷி

காலன் சத்தியஞ்செய்து

தெரிவித்த வாக்குமூலம்.

சர்வ வல்லமையுள்ள தெய்வஞ் சாக்ஷியாக

நான் சொல்வதெல்லாம் உண்மை.

வாதி வக்கீல் வினவும் 1-ம், சாக்ஷி விடையும்.

இந்தச் சார்ஜ் கொடுத்தவன் நீ தானா?

ஆம்.

இந்தச் சார்ஜில் வாதிபக்கம் 1-ம் சாக்ஷியம் நீ தானே ?

ஆம்.

இந்தச் சார்ஜிற் கண்ட பிரதிவாதிகள் இவர்கள் தாமா ?

ஆம்.

இவர்கள் என்ன செய்தார்கள் ?

சார்ஜிற் சொல்லியபடி பிரமஹத்தி, விசுவாச வஞ்சனை, ஜீவவதை, பொய், களவு, காமம், சூது முதலிய பல துஷ்டச் செய்கைகளைச் செய்து சாது ஜனங்களை வருத்தினார்கள்.

அதை நீ நேரிற் பார்த்தாயா ?

இல்லை

ஆனால் அது உனக்கு எப்படித் தெரிந்தது ?

எனது மேலதிகாரி சொல்லத் தெரிந்தது.

உனது மேலதிகாரி என்ன சொன்னார் ?

முற்கூறியது போல பல துஷ்டச் செய்கைகளைச் செய்கிறதாகச் சொன்னார்.

அப்பால் நிகழ்ந்த தென்ன ?

அவரது உத்தரவின்படி யான் இவர்களைப் பிடித்து இந்தக் கோர்ட்டு முன்பாக ஒப்பித்தேன்.

அது எதற்காக ?

இவர்களை விசாரணை செய்து இவர்கள் செய்த குற்றத்திற்குத் தக்கபடி தண்டித்து இவர்களை நியாய வழியில் நடத்துவதற்காக.

நீ இவ்வாறு ஒப்பிப்பதற்கு முன் உனது மேலதிகாரி இவர்களை ஒன்றுஞ்செய்ய வில்லையா ?

செய்தார்.

வாதி வக்கீல் வினவும், 2-ம், சாக்ஷி விடையும்.

இந்த வாதி பிரதிவாதிகளை உமக்குத் தெரியுமா?

தெரியும்.

இந்த வியாச்சியப்படி இந்தப் பிரதிவாதிகள் குற்றஞ் செய்தார்க ளல்லவா?

ஆம்.

இவர்கள் செய்த குற்றம் யாது?

சாது ஜனங்களுக்கு வேதனை யுண்டாகும் வண்ணம் வியபிசாரம், விசுவாசகாதகம், பிரமஹத்தி, ஜீவவதை, பொய், களவு, சூது முதலியன.

இதற்காக இவர்களை இதற்கு முன் யாராவது வேதனைப் படுத்தின துண்டா?

உண்டு.

அவர் யார்?

தருமாதிபதி.

அவர் என்ன வேதனை செய்தார்?

நரை, திரை முதலியவைகளை அனுப்பி இவர்களது அழகையும், வல்லமையையுங் குறைத்தார்.

இவ்வியாச்சியத்தைப் பற்றி உமக்குத் தெரிந்தது இவ்வளவு தானே?

ஆம்.

1-ம், பிரதிவாதி வக்கீல் கிறுசும், 2-ம், சாக்ஷி விடையும்.

இந்தப் பிரதிவாதிகள் குற்றஞ் செய்ததாகச் சொன்னீரல்லவா?

ஆம்.

அப்படிச் செய்ததை நீர் நேரிற் பார்த்தீரா? யாராவது சொல்லக் கேட்டீரா?

நேரிற் பார்த்தேன்.

என்ன? அவர்கள் செய்யும்போது கூட இருந்தா பார்த்தீர்?

கூட இருந்து பாரா விட்டாலும் அவர்கள் செய்யுங் குற்றங்களெல்லாம் எனக்குத் தெரியும்.

அது எதனால்?

நான் ஒவ்வொருவருடைய நன்மை தீமைகளையுங் குறித்துக் கணக்கு எழுதுவதனால்.

உமக்குத் தொழில் யாது?

ஜனங்களது ஜனன மரணங்களையும், நன்மை தீமைகளையும் பற்றிக் கணக்கு எழுதுவது.

ஓகோ! நீர் கணக்கப் பிள்ளையா?

ஆம்; கணக்கப் பிள்ளைதான்.

கணக்கு அன்றாட மெழுதுவீரா? அல்லது மொத்தத்தி லெழுதுவீரா?

அன்றாடம்.

இந்தப் பிரதிவாதிகள் செய்த குற்றங்களையும் அந்தக் கணக்கில் எழுதி யிருக்கின்றீரா?

எழுதி யிருக்கின்றேன்.

அதைக் கோர்ட்டு முன்பாகக் காட்டலாமா?

காட்டலாம்.

புத்தகத்தின் இலக்கம் யாது?

கலியுகத்து 12-வது புத்தகம்.

பக்க விலக்க மென்ன?

18-வது பக்கம்.

(கோர்ட்டில் நின்றும் அப்பக்கத்தில் முத்திரையிடப் பட்டது)

அதில் எழுதி யிருப்பது யாது?

முற்சொல்லிய குற்றங்களெல்லாம் இவர்கள் செய்த தாக.

2-ம், பிரதிவாதி வக்கீல் கிருசும், 2-ம், சாக்ஷி விடையும்.

இவர்கள் செய்த குற்றங்களை யெல்லாம் உமது புத்த கத்தி லெழுதினதாகச் சொன்னீரல்லவா?

ஆம்.

அப்படி எழுதினது ஆன்மா செய்ததாகவா? சரீரஞ் செய்ததாகவா?

இருவர்களுஞ் செய்ததாக.

நீக்கிருசில்லை.

கோர்ட்டார் வினவும், 2-ம், சாக்ஷி, விடையும்.

வாக்குமூலம் வாசிக்கக் கேட்டீரா?

கேட்டேன்.

சரிதானா?

ஆம்.

வாதிபக்கம் 2-ம், சாக்ஷி சித்திர குப்தன் (கை—து.)

பிரதிவாதி விசாரணை.

1-ம், பிரதிவாதி,

ஆன்மா சத்தியஞ்செய்து

தெரிவித்த வாக்குமூலம்.

சர்வ வல்லமையுள்ள தெய்வஞ்சாக்ஷியாக

நான் சொல்வதெல்லாம் உண்மை

கோர்ட்டார் வினவும், 1-ம், பிரதிவாதி விடையும்.

உனது இரட்டைப் பெயர் யாது?

இல்லை.

எது இல்லை?

இரட்டைப் பெயர்.

ஒற்றைப் பெயரோ?

அது ஆன்மா.

உனது ஊர் யாது?

எனக்கு ஊருமில்லை; வீடுமில்லை.

உன்னை இந்த 1-ம், சாக்ஷி எவ்விடத்திலிருந்து பிடித்தார்?

2-ம், பிரதிவாதியாகிய சரீரத்திலுள்ளிருந்து

சரீரத்திலுள் நீ எதற்காகப்போனாய்?

இந்தச் சரீரத்தின் ஜனன காலமுதல் யாங்களிருவரும் சினேகிதர்கள்.

இந்த வியாச்சியப்படியுள்ள குற்றஞ் செய்தவர் உங்களில் யாவர்?

நான் செய்யவுமில்லை. எனக்குத் தெரியவுமாட்டாது

நீயும் இந்த 2-ம், பிரதிவாதியாகிய சரீரமும் ஒன்றாகத்தானே இருந்து செய்தீர்கள்?

அல்ல; ஒருக்காலமு மல்ல.

அல்லவென்பதற்கு நியாயம் யாது?

எனக்கு விசேஷ ஞான மொன்றிருப்பதல்லாமல் ஆகாரம், மைதுனம், நித்திரை முதலிய யாதொரு செய்கையுங் கிடையாது. விசேஷ ஞானம் சரியாக இருப்பதனால் யான் இவ்விதக்கெட்ட செய்கைகளில் ஒருக்காலமும் பிரவேசியேன். ஆனால் என்னை இந்தச் சரீரம் துஷ்ட

மிருகங்கள் சஞ்சரிக்கின்ற காடுகளிலும், அதிகமாகத் திரவியங்க ளிருக்கின்ற நாடுகளிலும், ஒருக்காலமும் கம்பத்தகாத கொடிய இதயத்தை யுடைய பெண் களது சயன வீடுகளிலும், முள், கல் முதலியவை கள் செறிந்த வனாந்தரங்களிலும் வலித்திழுத்துக்கொண்டு போய்ப் பலவிதத் தீய செய்கைகளுக்கு ஆளாக்கிற்று. அச்செய்கைகளா லுண்டான சகல சுக துக்கங்களேயும் அநுபவித்ததும் இச்சரீரந்தான். எனக்கு நடப்பதற்குக் கால்களோ? ஸ்பரிசிப்பதற்குக் கைகளோ? உண்பதற்கு வாயோ? காண்பதற்கு கண்களோ? கேட்பதற்குக் காது களோ? கிடையா. இவைகளனைத்துஞ் சரீரத்திற் குரிய னவேயன்றி எனக்குரியன வல்ல, என்னை உண்மையாகத் தெரிந்தவர்கள் இந்தக் கோர்ட்டு முன்பாகக் கொண்டு வந்து நிறுத்தமாட்டார்கள். இது தான் அதற்கு நியாயம்.

உனக்குச் சொல்லவேண்டியது இவ்வளவு தானே?

ஆம்.

வாக்குமூலம் வாசிக்கக் கேட்டாயா?

கேட்டேன்.

சரிதானா?

ஆம்.

1-ம், பிரதிவாதி ஆன்மா (கை—து.)

2-ம், பிரதிவாதி

சரீரஞ் சத்தியஞ்செய்து

தெரிவித்த வாக்குமூலம்.

சர்வவல்லமையுள்ள தெய்வஞ் சாக்ஷியாக

நான் சொல்வதெல்லாம் உண்மை

கோர்ட்டார் வினவும், 2-ம், பிரதிவாதி விடையும்.

உனது இரட்டைப் பெயர் யாது ?

எனக்கு இரட்டைப் பெயரில்லை.

ஒற்றைப் பெயரோ ?

சரீரம்.

நீ இருப்பது யாரோடு ?

1-ம், பிரதிவாதியாகிய ஆன்மாவோடு.

இந்த வியாச்சியத்திற் கண்ட குற்றங்கள் நீயும் அந்த 1-ம், பிரதிவாதியாகிய ஆன்மாவுங் கூடித் தானே செய்தீர்கள் ?

அல்ல.

பின்னே அக்குற்றஞ் செய்தவர் யாவர் ?

1-ம், பிரதிவாதியாகிய ஆன்மா.

அந்த 1-ம், பிரதிவாதியாகிய ஆன்மாதான் செய்ததென்பதற்கு நியாயம் யாது ?

எனக்கு ஆன்மாவின் உதவியின்றி யாதொரு செய்கையுஞ் செய்வதற்குச் சக்தியில்லை. சொந்தமான அறிவோ ? காமக்குரோத லோப மோக மத மாற்சரியமோ ? கிடையா. யான் கண், கால், கை, மூக்கு, செவி, வாய், தலை முதலிய அவயவங்களமையப்பெற்ற ஓர் மரப்பாவைக்குச் சமமாக விருக்கின்றேன். என்னால் விசேஷமான ஒரு செய்கையைச் செய்யவோ ? அச்செய்கையினு லுண்டாகும் இன்ப துன்பங்களை அநுபவிக்கவோ ? முடியாது. சூத்திரக்காரனால் ஆட்டப்படுகிற மரப்பாவை அவன் எண்ணிய விதத்திலெல்லாம் ஆடுவதுபோல, ஆன்மாவாகிய சூத்திரக்காரனால் மரப்பாவையாகிய யான் ஆட்டப்பட்டு அது எண்ணிய விதத்திலெல்லா மாடினேன். ஒரு வேடனது

பாணப் பிரயோகத்தால் ஒரு விலங்கு மாளில், அவ்விலங்கை மாளுவித்த குற்றஞ் சாருவது அவ்வேடன் மீதா? பாணத்தின் மீதா? யாதொரு அறிவு மில்லாத விறகுக் கொம்புக்கொப்பான அப்பாணம் என்ன குற்றஞ் செய்தது? அதுபோல, அப்பாணத்திற் கொப்பாகிய யான் ஒரு குற்றமுஞ் செய்யவில்லை. எல்லாம் வேடனுக்கொப்பாகிய ஆன்மாவே செய்தது. இதுதான் அதற்கு நியாயம்.

நீ சொல்லவேண்டியது இவ்வளவு தானா?

ஆம்.

வாக்குமூலம் வாசிக்கக் கேட்டாயா?

கேட்டேன்.

சரிதானா?

ஆம்.

2-ம், பிரதிவாதி சரீரம் (கை—து.)

கோர்ட்டார் அபிப்பிராயம்

ஒருவன் ஒரு திருட்டுத் தொழிலிற் பிரவேசிக்கும் போது அவனது ஆன்மா அவனுக்கு வேண்டிய உபாயங்களைக் காட்டி அவனுக்கு உபகருவியாக இருந்து சகாயஞ் செய்கின்றது. ஒருவன் மதுபானஞ் செய்து தனது சுய புத்தி யொழிந்த காலத்து அவனது கை, கால் முதலியவைகளுக்குச் சுதந்தர மில்லாமற் போகின்றது. இதற்கு நேர் மாற்றமாக, ஒருவன் ஒரு கொலை பாதகஞ் செய்ய நினைக்கில் அச்செய்கைக்காக அவனது சரீரம் வேண்டிய வல்லமையை அவனுக்குக் கொடுக்கின்றது. ஒருவனது ஆன்மாவுக்கு விபசன முண்டான காலத்து அவனது சரீரமும் உடனே வாடிப்போகின்றது. ஒருவனை மற்றொரு

வனுக்குக் கிரயத்திற்காக அடிமைப்படுத்தி விற்கும்போது அடிமைப்படுவது சரீரமாயினும் அவனது ஆன்மாவுக்கும் அளவற்ற வியசன முண்டாகின்றது. ஆதலால் இவ்வியாச்சிய சம்பந்தமான சகல குற்றங்களுக்கும் இந்தப் பிரதிவாதிகள் பூவும் மணமும் போலவும், மணியுமொளியும் போலவும், மரமும் நிழலும்போலவும், ஒருவரைவிட்டொருவர் பிரியா திருந்ததனல் இக்குற்றங்களைத்திற்கும் பாத்திரவாதிக ளிருவருமென்றே யான் அபிப்பிராயப்படுகின்றேன்.

குற்றப்பத்திரிகை.

தத்துவார்த்தபுரம் டிஸ்திரிக்ட் மாஜிஸ்திரேட்கோர்ட் மாஜிஸ்திரேட், மாயாமய ஐயனென்னும் பெயரினனை யான் தருமாதிபதியால் இக்கோர்ட்டில் இவ்வருடம் இந்த மாதம் 1-ந் தேதி சார்ஜ செய்யப்பட்ட பைல் 1-ம் நெம்பர் வியாச்சியத்தில் 1-ம், 2-ம், பிரதிவாதிகளாகிய ஆன்மா, சரீரமென்னும் பெயர்களையுடைய உங்கள்மீது அடியிற் கூறியபடி இதனற் குற்ற ஸ்தாபகஞ் செய்கின்றேன். அதாவது இவ்வியாச்சியத்திற் சொல்லியபடி நீங்களிருவருமொன்று சேர்ந்து பிரமஹத்தி, விசுவாச காதகம், ஜீவவதை, பொய், களவு, காமம், சூது முதலிய பல குற்றங்கள் செய்ததாகத் தெரிகின்றது. இது புராதன சிக்ஷாநியம மனுஸ்மிருதி 2-வது அத்தியாயம் 161, 201, 8-வது அத்தியாயம், 125, 279, 310, 9-வது அத்தியாயம், 225, 11-வது அத்தியாயம் 59-ஆகிய இவ்வகுப்புகளின்படி தண்டிக்கத்தக்கதும் எனது முன்னர் விசாரிக்கத்தக்கதுமான குற்றங்களாயிருக்கின்றன. ஆதலால் இக்குற்றங்க-

ளுக்காக உங்களிருவரையும் என்முன் விசாரணை செய்வ தற்கு யான் இதனால் உத்தரவு செய்திருக்கின்றேன்.

டிஸ்திரிக்ட் மாஜிஸ்திரேட்

மாயாமய ஐயன் (கை—து.)

1-ம், பிரதிவாதி வக்கீல் வினாவும், 1-ம், பிரதிவாதி விடையும்.

உன்மீது சித்தப்படுத்தின குற்றப்பத்திரிகை வாசிக்கக் கேட்டாயல்லவா ?

ஆம்.

அந்தக் குற்றப் பத்திரிகையிற் சொல்லியபடி நீ குற்றஞ் செய்ததுண்டா ?

இல்லை; ஒரு குற்றமுஞ் செய்யவில்லை.

நீ இக்கோர்ட்டு முன்பாக முன் தெரிவித்ததிலும் அதிகமாக யாதாவது தெரிவிக்க வேண்டியதுண்டா ?

இல்லை.

உனது பக்கத்திற்கு வேறு உருபகமோ ? சாட்சிகளோ ? உண்டா ?

சாக்ஷிகளுண்டு.

அவர்கள் யார் ? யார் ?

பூதங்கள், புலன்கள், ஞானேந்திரியங்கள், கருமேந்திரியங்கள் முதலியன.

ஆக மொத்தம் எத்தனை பெயர் ?

தொண்ணூற்றாறு பெயர்.

அவர்களது தனித்தனிப் பெயரென்ன ?

அதைச் சாக்ஷிப் பத்திரிகையில் தெரிவிக்கின்றேன்.

அவர்கள் தொண்ணூற்றாறு பெயர்களையும் இக்கோர்ட்டு முன்பாக விசாரிக்க வேண்டுமா ?

வேண்டும்.

உனக்குத் தெரிவிக்க வேண்டியது இவ்வளவுதானே?

ஆம்.

கோர்ட்டார் வினவும், 1-ம், பிரதிவாதி விடையும்.

வாக்குமூலம் வாசிக்கக் கேட்டாயா ?

கேட்டேன்.

சரிதானா ?

ஆம்.

1-ம், பிரதிவாதி ஆன்மா (கை—து)

2-ம்,பிரதிவாதிவக்கீல்வினவும், 2-ம், பிரதிவாதி விடையும்.

உன்மீது சித்தப்படுத்தின குற்றப் பத்திரிகையை நீ வாசிக்கக் கேட்டாயா ?

கேட்டேன்.

நீ அந்தக் குற்றப் பத்திரிகையிற் சொல்லிய குற்றங்கள் செய்ததுண்டா ?

இல்லை.

இதற்காக உனது பக்கத்திற்கு வேறு உரூபகங்களோ ? சாக்ஷிகளோ ? உண்டா ?

சாக்ஷிகளுண்டு.

அவர்கள் யார் ?

1-ம், பிரதிவாதி சொன்ன சாக்ஷிகளே.

அவர்களை விசாரித்தாற் போதுமல்லவா ?

போதும்.

கோர்ட்டார் வினவும், 2-ம், பிரதிவாதி விடையும்

வாக்குமூலம் வாசிக்கக் கேட்டாயா?

கேட்டேன்.

சரிதானா?

ஆம்.

2-ம், பிரதிவாதி சரீரம் (கை—து.)

பிரதிவாதி வக்கீல்களது விவாதம்.

பிரதிவாதி வக்கீல்கள்

சாக்ஷி விசாரணைக்கு முன் தெரிவிக்கவேண்டிய சில விஷயங்களிருப்பதனால் அவற்றைத் தெரிவிக்கும்படி கோர்ட்டில் நின்றும் தயவான உத்தரவு கிடைக்கவேண்டுமென்று தாழ்மையாய்க் கேட்டுக்கொள்ளுகின்றோம்.

கோர்ட்டார்.

இவ்வியாச்சியத்திற்கு இன்றியமையாததாகவும், நியாயமாகவு மிருக்குமானால் அவற்றை மாத்திரஞ் சுருக்கமாய்த் தெரிவித்துக்கொள்ள உத்தரவு செய்திருக்கின்றேன்.

1-ம், பிரதிவாதி வக்கீல்.

ஆன்மாவையுஞ் சரீரத்தையுஞ் சேர்த்துக் குற்றப்பத்திரிகை கொடுத்திருப்பது ஒருக்காலமும் நியாயமாகமாட்டாது. நித்தியமும் பரிசுத்தமு மில்லாத சரீரம் நித்திய பரிசுத்தமு முள்ள ஆன்மாவைப் பலவாறு வசப்படுத்திக் கெட்ட செய்கைகளைச் செய்யும்படி தூண்டுகின்றது. அஃதெவ்வாறெனில், கல்வியில் மிக்க சிரேஷ்டனும் சன்மார்க்க

முள்ளவனுமான ஒரு விகாரரூபனும், மூடனும் சன்மார்க்கமில்லாதவனுமான ஒரு சுந்தரனும் ஒன்று சேர்ந்து ஒரு வீதி வழியாகப் போகின்றார்களென்று வைத்துக்கொள்ளுவோம். அவ் வீதியில் ஒரு தாசி அவர்களைக் காணில் அந்தவிகாரரூபனது கல்வியோ? சன்மார்க்கமோ? அவளுக்குத் தென்பட மாட்டாது. சுந்தரனது அழகே அவள் கண்களுக்குத் தென்படும். அதனால் அவள் தன் கவனத்தை அவன்மீது செலுத்துகின்றாள். அவனும் தனது இச்சையை நிறைவேற்றிக் கொள்ளும்பொருட்டு அவளது மாயவலையிற் சிக்குகின்றான். அதனாற் பரிசுத்தமாயிருக்கின்ற அவனது ஆன்மாவும் அக்கெட்ட செய்கைகளுக்குட்பட்டுப் பலவிதத் துன்பங்களுக் காளாகின்றது. இக்காரணத்தாற் சரீரமே ஆன்மாவைக் கொண்டு நடந்து ஒவ்வொரு குற்றங்களிலு முட்படுத்துகின்றதேயல்லாமல் ஆன்மா சரீரத்தைக்கொண்டு நடப்பதாகத் தெரியவில்லை. ஆதலால் 1-ம், பிரதிவாதியாகிய ஆன்மாவை இப்பொழுதே நிரபராதியாக விட்டுவிடவேண்டுமென்பது எனது வேண்டுகோள்.

2-ம், பிரதிவாதி வக்கீல்.

கோர்ட்டில் நின்றும் 2-ம், பிரதிவாதியையுஞ் சேர்த்துக் குற்றப் பத்திரிகை கொடுத்தது எவ்வளவும் நியாயமாகாதென்று நான் நிச்சயமாகச் சொல்லுவேன். எந்தச் சமயமும் ஆன்மாவினது உதவியினாலேயே சரீரம் எவ்விதப் பாவச் செய்கைகளுக்கும் ஆளாகின்றது. ஆன்மாமுன் கருதலோடும் நியாயத்தோடும் இச்சரீரத்தை நடத்துவதாயிருந்தால் இச்சரீரம் எவ்விதக் குற்றங்களுக்கு முள்ளாக

மாட்டாது. உதாரணமாக ஒருவன் ஒரு குதிரையின்மீது ஏறிச் சவாரி செய்கின்றானென்று வைத்துக்கொள்ளு வோம். அவன் அக்குதிரையினது கடிவாளத்தைச் சரி யானபடி இழுத்துப் பிடித்து ஒழுங்கோடும் நடத்துவா னேயானால் அது யாதொரு அபாயமும் நேரிடாத வண்ணம் அவனைச் சுகமாய் அவன் நினைத்த ஸ்தானத்திற் கொண்டுபோய்ச் சேர்க்கின்றது. இதற்கு மாற்றமாக, அவன் அக்குதிரையை அதனது இஷ்டம்போல் விட்டு விடுவானேயானால் அது மதத்தோடும் நினைத்தபடியெல்லா மோடிச் சாடி வழிகளில் வரப்பட்டவர்களை மிதித்துப் பலவிதக் காயப்படுத்துவதோடு ஒருவேளை அவனைக்கூடக் கல்லுகளிலும், முள்ளுகளிலும், குன்றுகளிலும், குழிக ளிலுங் கொண்டுபோய்ப் பூமியில் வீழ்த்திப் பிராண நாசத் திற் கேதுவை வருத்துகின்றது. அப்படி வருத்துவதனு லுண்டாகுங் குற்றம் யாரைப் பொறுக்கும். அக்குதிரை யின் மீதிருந்த எஜமானை யல்லவா? அதுபோலச் சரீரமா கிய குதிரையின்மீது ஆன்மாவாகிய எஜமான் ஏறிச்சவாரி செய்து இவ்விதக் குற்றங்களைச் செய்திருக்கின்றான். ஆதலால் அக்குற்றங்களுக்கெல்லாம் ஆன்மாவாகிய எஜ மான் உத்தரவாதியே யல்லாமற் சரீரமாகிய குதிரை யுத் தரவாதியல்ல அதனுல் 2-ம், பிரதிவாதியாகிய சரீரத்தை இப்பொழுதே நிரபராதியாக விட்டுவிட வேண்டு மென் பது எனது வேண்டுகோள்.

கோர்ட்டார்.

நீங்கள் இருவர்களும் இவ்வித வீண்வாதங்களைப் பேசித் தருக்கித்தக் கொண்டிருப்பதில் யாதொரு பிர

யோசனமுமில்லை. ஆனால் இந்தப் பிரதிவாதிகளில் மூந்தினவர் யாவர்? அதை மாத்திரம் உங்களுக்குத் தெரிந்த மட்டில் இங்கே தெரிவியுங்கள்.

1-ம், பிரதிவாதி வக்கீல்

இந்தப் பிரதிவாதிக ளிருவரிற் சரீரமே மூந்தின தென்பதற்கு அநந்த நியாயங்க ளிருக்கின்றன. அவற்றில் முக்கியமான ஒன்றை மாத்திரம் இப்பொழுது கோர்ட்டு முன்பாகத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன். அதாவது புருஷனும் ஸ்திரீயும் ஒன்றாகச் சம்பந்தப்படுங் காலத்தில் இருவர்களது சுக்கில சுரோணிதமும் அப்பொழுதே ஒன்று சேர்ந்து உடன்றனே கருப்பவறையிற் குடி புகுகின்றது. அப்பால் ஐந்தாவது நாளில் நீர்க்குமிழி போலிருந்து முதல் மாதத்தில் முட்டைப் பிரமாணமாய்க் காலக் கிரமத்தில் தசைகளேற்பட்டு இரண்டாவது மாதத்தில் தோள், சிரசு முதலியவைகளும், மூன்றாவது மாதத்திற் கால், கை முதலியவைகளும், நான்காவது மாதத்தில் நாடி, நரம்பு முதலியவைகளும், ஐந்தாவது மாதத்தில் கண், மூக்கு முதலியவைகளும், ஆறாவது மாதத்தில் வேறு எல்லா அவயவங்களும், ஏழாவது மாதத்தில் நகம், உரோம முதலியவைகளு முண்டாகின்றன. அதன் பின் பத்தாவது மாதத்திற் குழந்தையாகப் பூமியிற் பிறக்கின்றது. இந்தக் குழந்தைச் சரீரம் ஒன்றிற்கு முக்காலுண்டான ஐந்தாவது மாதத்தில் தான் அச்சரீரத்தில் ஆன்மா பிரவேசிக்கின்றது. இக்காரணத்தால் மூந்தினது சரீரமே. ஆதலால் மூந்தினதாகிய சரீரத்தையே குற்றத்திற்குப்

பாத்தியப்படுத்தி நிரபராதியான, ஆன்மாவை விட்டுவிட வேண்டுமென்று வேண்டிக் கொள்ளுகின்றேன்.

2-ம், பிரதிவாதி வக்கீல்

இந்தப் பிரதிவாதிகளில் ஆன்மாவே முந்தினதென்பதற்கு எவ்வளவோ? நியாயங்களிருக்கின்றன. ஆயினும் யானும் அவற்றில் ஒன்றை இக்கோர்ட்டு முன்னர்த் தெரிவித்துக் கொள்ளுகின்றேன். அதாவது ஸ்திரீ புருஷ சங்கமத்தால் 1-ம், பிரதிவாதி வக்கீலவர்கள் சொல்லியபடி ஒரு குழந்தை ஜனனமாய்ப் பத்தாவது மாதத்திற் பூமியில் அவதரிக்கின்றதென்று வைத்துக் கொள்ளுவோம். அவ்வாறு அவதரித்தபின்னரே நமக்கு அக்குழந்தையைக்காண்பதற்கு முடியும். அவதரிப்பதற்கு முன்னர் நம்மாற் காண முடியாது. எந்தச் சமயத்தில் ஸ்திரீ புருஷர்களது சுக்கில சுரோணிதங் கருப்பவறையிற் சேருகின்றனவோ? அச்சமயத்திலேயே ஆன்மாவும் அவற்றோடு பிரவேசிக்கின்றது. நிராகாரமாகியும், ஜனன மரணமில்லாததாகியும், அநாதியாகியு மிருக்கின் ஆன்மா ஆதியாகிய சரீரத்தோடு இப்பிரகாரஞ் சேர்ந்து சரீரத்தைக் கொண்டு நடத்திச் சகல துஷ்ட காரியங்களையுஞ் செய்கின்றது. இக்காரணத்தால் ஆன்மா முந்தினதென்று வெள்ளிடை மலைபோல் விளங்குகின்றது. ஆதலால் முந்தினதாகிய ஆன்மாவையே குற்றத்திற்குப் பாத்தியப்படுத்தி நிரபராதியான சரீரத்தை விட்டுவிட வேண்டுமென்று வேண்டிக் கொள்ளுகிறேன்.

கோர்ட்டார்.

ஒருவன் மீது அவன் செய்யாத கொலை, திருட்டு முதலிய கொடிய குற்றங்களை அவன் செய்ததாக உறுதியாய் ஸ்தாபிக்கின்ற சமயமும், நிர்நிமித்தமாய் ஒவ்வொரு அபாய காரியங்கள் நேரிடுகின்ற சமயமும் அவனது ஆன்மா அளவற்ற வியசனத்தைக் கொள்ளுகின்றது. அந்தச்சமயம் அவனது கால்களுக்கோ? கைகளுக்கோ? விரல்களுக்கோ? எவ்வித வேற்றுமையும் வியசனமு முண்டாகமாட்டா. அவனது மனம் அசைவுற்றதாகவுஞ் சரீரம் அசைவற்றதாகவு மிருக்கின்றன. இதற்கு நேர்மாற்றமாக, எவ்விதக் காரணத்தினாலாவது சரீரத்திற் பலமான வெட்டுகளோ? காயங்களோ உண்டானால் அவை ஆன்மாவிற்குச் சம்பந்தப்படாதிருக்கின்றன. வெட்டுகளுங் காயங்களும் ஆன்மாவின்மீது சேரவோ? அவ்வான்மாவைக் காயப்படுத்தவோ? செய்யா. வெட்டுப்பட்டுப் பிளக்கின்றதுங் காயத்தை யேற்றுக் கொள்ளுவதுஞ் சரீரந்தான். அந்தச் சமயத்திற் சரீரந் துன்பத்தோடும், ஆன்மா இன்பத்தோடு மிருக்கின்றன சில வேளைகளில் ஆன்மா வேலைசெய்கின்றது சரீரம் சும்மாவிருக்கின்றது. ஆன்மா சரீரமாகிய இருவர்களுந் தங்கள் தங்கள் சுதந்திரத்தோடு மிருக்கப்பட்டவர்கள்தாம். சரீரந் துன்பப்படுகின்றதென்று சரீரத்திற்கும் எவ்விதச் சிந்தனையுங் கிடையாது. ஆன்மா தனது மனக்கண்ணினால் மிகவும் அழகுள்ள ஒரு பெண்ணைப் பார்க்கவும், மாயையினது அந்தகாரத்தால் அப்பெண்ணினது மோகவலையிற் சிக்கவுஞ் செய்வதா யிருந்தால் அந்தக் குற்றம் அவ்வான்மாவிற்குப் பாத்தியப்படுமே யல்லாமற் சரீரத்திற்குப் பாத்தியப்படாது. அதுபோலவே

அசத்தியவாதிகளாகவும் அபலைகளாகவுமிருக்கின்றபெண்களது கூட்டுறவு முற்றும் வேண்டாமென்று வெறுத்து யோகமார்க்கத்திற் சென்று ஒரு தவசியினது பக்கத்தில் ஒரு பெண் சென்று தனது உபசார சாமர்த்தியத்தாலும் அங்க பரிசத்தாலும் அத் தவசியினது ஆன்மா அறியாதபடி அச்சரீரத்திற்கு ஒருவிதக் கிளர்ச்சியை யுண்டாக்கித் தனது எண்ணத்தை நிறைவேற்றிப் பிரயத்தனித்தபோது அச்சரீரமும் அவ்வாறே செய்யில், அக்குற்றம் அச்சரீரத்திற்குப் பாத்தியப்படுமேயல்லாமல் ஆன்மாவிற்குப் பாத்தியப்படாது. அதனால் ஆன்மாவினது காரணத்தால் சரீரங் குற்றவாளியெனவும், சரீரத்தினது காரணத்தால் ஆன்மா குற்றவாளியெனவும், நீங்களிருவருங் கொண்டு வந்திருக்கின்ற நியாயங்கள் "பிரபஞ்சதரும" மென்னுஞ் சட்டப்படி ஒருக்காலமுஞ் சரியானதல்ல, உங்களுடைய நியாயங்களும் விவாதங்களும் உங்களது சாக்ஷிகளின்றுன் சரியானபடி ருஜுவாக வேண்டிய திருக்கின்றன. ஆதலால் நீங்கள் சொல்லியபடி உங்களது சாக்ஷிப் பத்திரிகையைக் கொடுத்து உங்களது சாக்ஷிகளையும் இந்தக் கோர்ட்டு முன்பாக ஆஜராக்குவீர்களாக.

சாக்ஷிப் பத்திரிகை.

தத்துவார்த்த புரம் டிஸ்திரிக்ட் மாஜிஸ்திரேட்டுக் கோர்ட்டு மாஜிஸ்திரேட், மிஸ்டர், மாயாமய ஐயரவர்களது முன்னிலையில் கலியுகம் 5010-கிலசௌஸு சித்திரைமீ 1-ந்

தேதி பைல் 1-ம் நம்பர் கிரிமினல் கேசிற் பிரதிவாதிகளாகிய ஆன்மா, சரீரமென்னும் இருவர்களும் ஒன்று சேர்ந்து தெரிவித்த சாக்ஷிப் பத்திரிகை.

சாக்ஷிகளது பெயர்கள்.

பூதங்கள்.

1. மண்
2. தண்ணீர்
3. நெருப்பு
4. காற்று
5. ஆகாயம்

பொறிகள்

6. மெய்
7. நாக்கு
8. கண்
9. மூக்கு
10. செவி

புலன்கள்.

11. சத்தம்
12. பரிசம்
13. ரூபம்
14. இரசம்
15. கந்தம்

கருமேந்திரியங்கள்.

16. வாக்கு
17. பாதம்
18. பாணி
19. பாயுரு
20. உபத்தம்

கரும விஷயங்கள்.

21. வசனம்
22. கமனம்
23. தானம்
24. விசர்க்கம்
25. ஆநந்தம்

அந்தக்கரணங்கள்.

26 மனம்
27. புத்தி
28. சித்தம்
29. அகங்காரம்

அறிவு.

30. அறிவு

தசநாடிகள்.

31. பிங்கலை
32 இடைகலை
33. சுழுமுனை
34. சங்கினி
35. குகு
36. காந்தாரி
37. அலம்புடை
38. புருடன்
39. அத்தி
40 சிகுவை

தசவாயுக்கள்.

41 பிராணன்
42. அபானன்
43. வியானன்
44. உதானன்

45. சமானன்
46. நாகன்
47. கூர்மன்
48. கிருதரன்
49. தேவதத்தன்
50. தனஞ்சயன்

ஆசயங்கள்.

51. ஆமாசயம்
52. பக்குவாசயம்
53. மலாசயம்
54. சலாசயம்
55. சுக்கிலாசயம்

கோசங்கள்.

56. அன்னமயம்
57. பிராணமயம்
58. மனோமயம்
59. விஞ்ஞானமயம்
60. ஆநந்தமயம்

அவத்தைகள்.

61. சாக்கிரம்
62. சொப்பனம்
63. சுழுத்தி
64. துரியம்
65. துரியாதீதம்

வினைகள்.

66. நல்வினை
67. தீவினை

விகாரங்கள்.

68. காமம்
69. குரோதம்
70. லோபம்
71. மோகம்
72. மதம்
73. மாற்சரியம்
74. இடும்பை
75. வேட்கை

குணங்கள்.

76. இராசதம்
77. தாமசம்
78. சாத்துவிகம்

ஈடணை.

79. அர்த்தம்
80. புத்திரர்
81. தாரம்

பிணிகள்.

82. வாதம்
83. பித்தம்
84. சிலேத்துமம்

மலங்கள்.

85. ஆணவம்
86. காமியம்
87. மாயை

மண்டலங்கள்.

88. சூரியன்
89. சந்திரன்
90. அக்கினி

ஆதாரங்கள்.

91. மூலாதாரம்
92. சுவாதிட்டானம்
93. மணிபூரகம்
94. அநாகதம்
95. விசுத்தி
96. ஆஞ்ஞை

பிரதிவாதி சாக்ஷி விசாரணை

பிரதிவாதி பக்கம் 1-ம். சாக்ஷி

மண் சத்தியஞ்செய்து

தெரிவித்த வாக்குமூலம்.

சர்வ வல்லமையுள்ள தெய்வஞ் சாக்ஷியாக

நான் சொல்வதெல்லாம் உண்மை.

1-ம், பிரதிவாதி வக்கீல் வினவும், 1-ம், சாக்ஷி விடையும்.

உனது பெயர் யாது ?

மண்.

உனக்குத் தொழி லென்ன ?

நைதனந்தின சலன மெனவும், வாருஷிகச் சலன மெனவு மிருவகைச் சலனங்கள். அன்றியும், மண், தண்ணீர், காற்று, நெருப்பு, ஆகாய மென்னும் ஐவகைப் பூதங்களிற் பிரதம பூதமான என்னிடத்து ஸ்தூல சூக்கும காரண கூடஸ்த பிரமமென ஐவகை அங்கங்களும்; சப்த ஸ்பரிச ரூப ரச கந்தமென ஐவகை, விஷயங்களும்; சிருஷ்டி, ஸ்திதி, சங்கார மென மூவகைத் தொழில்களு மடங்கி யிருக்கின்றன.

உனக்கு இந்தப் பிரதிவாதிகளான ஆன்மாவையுஞ் சரீரத்தையுந் தெரியுமா ?

தெரியும்.

இவ்வியாச்சியத்தைப் பற்றி யாதாவது தெரியுமா ?

ஒன்றும் தெரியாது.

வாதி வக்கீல் கிறுசும் 1-ம், சாக்ஷி விடையும்.

தைனந்தின சலனமென்று சொன்னயே; அது யாது?

பந்தைப் போல உருண்டை வடிவமாயிருக்கின்ற யான் என்னிற்றுனே அறுபது நாழிகை நேரத்தில் ஒரு முறை சுற்றுவது.

வாருஷிகச் சலன மென்ப தென்ன ?

யான் என்னில் நின்றும் 1331000, பங்கு பெரிதும் 92400000-மைல் தூரத்திலு மிருக்கின்ற சூரிய மகா கோளத்தை முந்நூற்றறுபத்தைந்து நாளும் பதினைந்து நாழிகையுங் கொண்டு ஒரு முறை சுற்றுவது.

உன்னிடத்தில் ஸ்தூல சூக்கும காரண கூடஸ்த பிரம மென்னும் ஐவகை அங்கங்கள் அடங்கியிருப்பதாகச் சொன்னயே; அதற்குக் காரணம் யாது ?

ஸ்தூல ரூபமா யிருக்கின்ற யான் எனது அணுக்களைச் சற்று இளக்கினுற் கந்த மில்லாமல் தண்ணீரைப் போலச் சூக்கும தேகியாகிப் போகின்றேன். கந்த மில்லாமல் தண்ணீரைப்போ லிருக்கும் யான் மறுபடியும் எனது அணுக்களைச் சற்று இளக்கினல் இரசமில்லாமல் நெருப்புப்போலக் காரண தேகியாய்ப் போகின்றேன். கந்த ரச மிரண்டு மில்லாமல் நெருப்பைப் போலக் காரண தேகியா யிருக்கும் யான் மறுபடியும் எனது அணுக்களைச் சற்று இளக்கினல் ரூபமில்லாமல் வாயுவைப் போல கூடஸ்த தேகியாய்ப் போகின்றேன். கந்த, ரச, ரூப, மூன்று மில்லாமல் வாயுவைப் போலக் கூடஸ்த தேகியா யிருக்கின்ற யான் மறுபடியும் எனது அணுக்களைச் சற்று இளக்கினுற் பரிசமில்லாமல் ஆகாயத்தைப் போலப் பிரம தேகியாய்ப்

போகின்றேன். இவ்வாறு ஸ்தூல தேகியாய் மூக்கால் முகரவும், நாக்கால் உருசிக்கவும், கண்ணாற் பார்க்கவும் கையாற் பரிசிக்கவுமா யிருந்த யான் எனது அணுக்களை இளக்க, இளக்க முடிவில் அகண்டாகாரமான ஏகப்பெரு வெளியில் யாவர் காதுக்குங் கேட்கின்ற ஓசையாகிய நாத மொன்றுமே யுடையவனாய் எவ்விடத்தும் பிரமத்தைப் போல வியாபித்து நிற்கின்றேன். இவ்வாறே எனது அணுக்கள் ஒன்றோடொன்று கூடும்போது முன்னிருந்த ஸ்தூல தேகியாகின்றேன். உதாரணமாக, பஞ்சலோகத்திலொன்றாகவும், உருகுகின்ற பொருளாகவும், ஸ்தூல ரூபமாகவு மிருக்கின்ற செம்பை நெருப்பி லிட்டு உருக்கினால் அது தனது அணுக்கள் இளகப் பெற்றுத் தண்ணீரைப் போல் சூக்கும ரூபமாகின்றது. அதுவே நெருப்பு அதிகரித்தால் மறுபடியு மதிகமா யிளகிப் புகையாகிக் காரண ரூபமாகின்றது. பின்னரும் நெருப்பு அதிகரித்தால் அப் புகை வாயுவாகிக் கூடஸ்த ரூபமாகின்றது. பின்னரும் நெருப்பு அதிகரித்தால் அவ்வாயு ஆகாயமாகிப் பிரமரூபமாகி யப்பாலொன்று மில்லாமலாகின்றது. இதுவே அதற்குக் காரணம்.

சத்த, ஸ்பரிச, ரூப, ரச, கந்த மென ஐவகை விஷயங்களிருப்பதாகச் சொன்னாயே; அது எதனால்?

யான் என்னைத் தட்டுகிறவர்களுக்குச் சத்தத்தையும், தொடுகிறவர்களுக்கு ஸ்பரிசத்தையும், காணுகிறவர்களுக்கு ரூபத்தையும், உருசிப்பவர்களுக்கு ரசத்தையும், முகருகிறவர்களுக்குக் கந்தத்தையுங் கொடுப்பதனால்.

சிருஷ்டி, ஸ்திதி, சங்கார மென மூவகைத் தொழில்களிருப்பதாகச் சொன்னாயே; அதற்குக் காரணம் யாது?

உலகத்திற் சரமாகவும், அசரமாகவு மிருக்கின்ற அரசன், குடிகள், யானை, குதிரை, சிங்கம், புலி, கரடி, நாய், பூனை, கிளி, புறா, பாம்பு, பல்லி, புழு, மீன் முதலிய ஜீவராசிகளும்; பொன், வெள்ளி, செம்பு, ஈயம், இரும்பு ஆகிய உலோகங்களும்; கோமேதகம், நீலம், பவளம், புஷ்பராகம், மரகதம், மாணிக்கம், முத்து, வைரம், வைடூரியமாகிய இரத்தினங்களும்; வாழை, பலா, மா, கமுகு, புன்னை, ஈட்டி, வேங்கை, அசோகு, அகில் முதலிய விருக்ஷங்களும் என்னில் நின்றுந் தானுண்டாகின்றன. இவ்வாறு என்னில் நின்று முண்டான யாவும் என்னாலேயே போஷிக்கப்பட்டு முடிவில் என்னிற்றானே இலயமாகின்றன. என்னில் நின்று முண்டாகாதனவும், என்னில் இலயமாகாதனவு மிவ்வுலகத்திற் கிடைக்கவே கிடையாது. இதனாற்றான் "மண்ணில் நின்று முண்டான யாவும் மண்ணிற்கே இரையாகு" மென்ற முதுமொழி இன்றும் வழங்கி வருகின்றது. இது தான் அதற்குக் காரணம்.

நீ இந்தப் பிரதிவாதியோடு கூடி யாதாவது கெட்ட செய்கைகள் செய்ததுண்டா?

இல்லை.

உனக்கும் 2-ம், பிரதிவாதிக்கும் யாதாவது சம்பந்தமுண்டா?

உண்டு.

என்ன சம்பந்தம்?

சரீரத்தின் கண்ணுள்ள தசை, எலும்பு, தோல், மயிர் நகமாகிய இவைகள் என்றனம்சம், இதுதான் சம்பந்தம்.

சிருஷ்டி, ஸ்திதி, சங்கார முதலிய அளவற்ற வேலைகள் செய்வதற்கு வல்லமையும், எப்பொழுதும் பிரதி

வாதிகளோடு கூட்டுறவுமுள்ள நீ பிரதிவாதிகள் செய்த குற்றங்களி லொன்றும் எனக்குத் தெரியா தென்று சொன்னதற்கு நியாயம் யாது?

முற்கூறிய விஷயங்கள் யாவு மென்னி லடங்கி யிருந்தாலும் எனக்குப் பிரத்தியேகமாகக் கண்களோ? கால்களோ? கைகளோ? காதுகளோ? வாயோ? அறிவோ? ஞாபகமோ? கிடையா. ஆதலால் பிரதிவாதி கள் செய்த எவ்விதச் செய்கையையும் எனக்கு அறிவ தற்கு மார்க்கமில்லை. இக்காரணத்தினால்தான் என்னைக் காரியமாகவும், அகாரியமாகவும் பலரு முபத்திரவிக்கின் றார்கள். ஆனால் யான் அவைக ளெல்லாவற்றையும் பொறுத்துக் கொண்டிருக்கிறேன். எனது தன்மையாவுங் கோர்ட்டார்க்கு நன்றாகத் தெரியும். இது தான் அதற்கு நியாயம்.

றீக்கிறாசில்லை

கோர்ட்டார் வினாவும், 1-ம், சாக்ஷி விடையும்.

வாக்குமூலம் வாசிக்கக் கேட்டாயா?

கேட்டேன்.

சரிதானா?

ஆம்.

பிரதிவாதி பக்கம் 1-ம், சாக்ஷி மண் (கை—து.)

பிரதிவாதி பக்கம், 2-ம், சாக்ஷி

தண்ணீர் சத்தியஞ்செய்து

தெரிவித்த வாக்குமூலம்.

சர்வ வல்லமையுள்ள தெய்வஞ்சாக்ஷியாக

நான் சொல்வதெல்லாம் உண்மை.

1-ம், பிரதிவாதி வக்கீல் வினவும், 2-ம், சாக்ஷி விடையும்.

உனது பெயர் யாது ?

நண்ணீர்.

தொழிலென்ன ?

சிருஷ்டி, ஸ்திதி, சங்காரங்கள்.

இந்தப் பிரதிவாதிகளைத் தெரியுமா ?

தெரியும்.

இவ்வியாச்சியத்தைப் பற்றி யாதாவது தெரியுமா ?

ஒன்றுந் தெரியாது.

வாதி வக்கீல் கிருசும், 2-ம், சாக்ஷி விடையும்.

சிருஷ்டி, ஸ்திதி, சங்கார மென்பன மூன்றும் உனது தொழில்களல்லவா ?

ஆம்.

அவற்றில் முதலாவதாகிய சிருஷ்டித் தொழிலை நீ செய்வது எவ்விதம் ?

நெருப்பில் எவ்வாறு புகையிருக்கின்றதோ ? அது போல என்னில் உவராகிய உப்பிருக்கின்றது. அதுவே மாயையாகும். யான் அம்மாயையை யுட்கொள்ளுகின்ற ஆண், பெண்ணாகிய இரு பாலாரையும் அம்மாயையாற் பிடித்து அவர்களை மோகாந்தகாரர்களாக்கி ஒருவரோ டொருவர் சம்போகிக்கு மாறு செய்து அச்சம்போக சமயத்தில், என்றன் கூறாகிய சுக்கில சுரோணிதத்தை யுண்டாக்கி அவற்றைக் கருப்ப வறையிற் சேர்த்துப் பிண்டமாக்கிப் பின்னர்க் குழந்தையாகப் பூமியிற் பிறப் பிக்கின்றேன். ஸ்தாவர வருக்கங்களையும் அம்மாயையினாற்

பிடித்துப் பூவாகவும், பிஞ்சாகவுங் காயாகவும், பழமாகவும் வளர்த்து அப்பால் அப்பழத்தினுள்ளிருக்கும் விதைகளினுலேயே அம்மரம், செடி, கொடி, முதலியவைகளையுண்டாக்குகின்றேன். இம்மாதிரியாக யான் எனது பிரத்தியேக சத்தியினால் உலகத்திலுள்ள சகல ஸ்தாவர சங்கமப்பொருள்களையுஞ் சிருஷ்டிக்கின்றேன். இதுதான் நான் சிருஷ்டி செய்யும் விதம்.

ஸ்திதி செய்கின்றது எவ்வாறு?

யான் எனது விசேஷ சகாயத்தினால் நெல், கொள், பயறு, உளுந்து, வரகு, கம்பு, சோள முதலிய தானிய வருக்கங்களை விளைவித்துப் பால், தயிர், மோர், நெய் முதலியவைகளையுங் கொடுத்து எல்லா ஜீவராசிகளையு மிரக்ஷிக்கின்றேன். அன்றியும், அவர்களுக்கு வாசனைத் திரவியங்களையுங் குடி வகைகளாகிய மதுபானங்களையுங் கொடுத்து அவர்களைச் சந்தோஷிப்பிக்கின்றேன். அவர்களுக்கு வசிக்கும்படி வீடுகள் கட்டுவதற்கும், ஸ்நானஞ் செய்வதற்கும், குடிப்பதற்கும், போஜனப் பதார்த்தங்கள் சமைப்பதற்கும், மற்ற எல்லா வகைகளுக்கும் நான் முக்ய உபகாரியாக விருக்கின்றேன். யான் என்னால் எக்காலமும் எல்லாப் பொருள்களும் பிரயோசனப்பட வேண்டுமென்று கருதிக் கடல், ஆறு, குளம், கிடங்கு, கிணறுகளாகவும்; மது, கள், பனிநீர் முதலியவைகளாகவும்; தித்திப்பு, கசப்பு, கைப்பு, புளிப்பு, உவர்ப்பு முதலிய இரச பதார்த்தங்களாகவு மிருக்கின்றேன். ஜீவராசிகளுக்கு ஒவ்வொரு நாளும் எனது உதவியில்லாவிட்டால் உடனே அவைகள் தாகத்தால் தளர்ந்து மிகவும் வருந்தா நிற்கும். ஸ்தாவர வர்க்கங்களும் அவ்வாறே வாடிப்போகும். யான் இல்லா

திருந்தால் மக்களோ? விலங்குகளோ? பறவைகளோ? ஊர்வனவோ? ஸ்தாவரங்களோ? சுருக்கிச்சொன்னால் இவ்வுலகமோ? ஒரு கணப்பொழுதில் அழிந்துவிடும். சூரிய வெப்பத்தினால் யான் வாயுவாக மாறி ஆகாயத்திற் சென்று சகல ஜீவராசிகளுக்கும் உபகாரார்த்தமாகச் சில சமயங்களிற் பூமியினது பல விடங்களிலும் மழையாக விறங்குகின்றேன். அப்பாலும் எனது விசேஷ சத்தியினாற் பற்பல இயந்திரங்களை நடத்தி மிக்க ஜனங்களுக்கும் உபஜீவன மார்க்கத்தைக் கொடுக்கின்றேன். இதுதான் யான் செய்யும் ஸ்திதி.

நீ எதனாற் சங்காரஞ் செய்கின்றாய்?

கடற்பெருக்கு, ஜலப்பிரளயம், பெரு மழை முதலிய அபாயங்களாலும்; அதிபானம், மகோதாம், நீர்க்கழிச்சல், வீக்கம், வாதம், பித்தம், சிலேட்டுமம் முதலிய வியாதிகளாலும்.

நீ இப்பிரதிவாதிகளோடு சேர்ந்து யாதாவது கெட்ட செய்கை செய்ததுண்டா?

இல்லை.

உனக்கும் இந்த 2-ம், பிரதிவாதிக்கும் யாதாவது சம்பந்தமுண்டா?

உண்டு.

அது யாது?

2-ம், பிரதிவாதியினிடத் துள்ள மச்சை, சுக்கிலம் இரத்தமாகிய இவைகள் என்றன் அம்சம்.

2-ம், பிரதிவாதி தனது சகல செய்கைகளையுஞ் சரிவர யாதொரு இடையூறுமின்றிச் செய்வது இரத்தத்தினது பிரத்தியேக சத்தியினாலல்லவா?

ஆம்.

அது உனது அம்சம் தானே ?

ஆம்.

அப்படியானால் இரத்தத்தினது சத்தியினாற் செய்த சகல செய்கைகளும் உனக்குத் தெரியாமலிருந்ததற்குக் காரணம் யாது ?

யான் பிராண வாயு, ஜல வாயுவென்னும் இருவாயுக்கள் ஒன்றோடொன்று சேருகின்ற காலத்திலுண்டாகிச் சுமார் பூமியில் மூன்றிலிரண்டு பாகத்தை அடக்கிக்கொண்டிருக்கின்றேன். என்னிடத்திற் பூமியைப்போல மலைகளோ ? பள்ளங்களோ ? வெளிகளோ ? கிடையா. எக்காலமும் சமத்துவமுள்ளவனாக எல்லாவிடங்களிலும் பரவவும், காற்றில்லாவிட்டால் மிகவும் நுண்ணிய சிறிய துவாரங்களிற் கூடச்செல்லவுஞ் செய்வேன். முற்காலத்திற் பெரிய மகான்களெல்லாம் என்னை ஒரு தெய்வமாகப் பாவித்துப் பத்தியோடு வணங்கி வந்தார்கள். அதற்கு மாற்றமாக இக்காலத்திலுள்ளவர்கள் தங்களது அழுக்குத் துணிகளையும், மலின வஸ்துக்களையும், பிரேதங்களையும் என்னிலிட்டு என்னை அசுத்தப்படுத்துகிறார்கள். சிருஷ்டி, ஸ்திதி சங்காரமென்னும் முத்தொழில்களும் என்னிடத்திருப்பதினால் என்னை ஞானிகள் "விஷ்ணு" வென்று சொல்லுகிறார்கள். அன்றியும், எந்தக் காலம்வரை உவராகிய உப்பிரசம் என்னிடத்திலிருக்கின்றதோ ? அந்தக் காலம்வரை இந்த உலகமும் மாயையாற் பிடிக்கப்பட்டிருக்கும் இந்த மாயை மக்களுக்கும், மிருக வருக்கங்களுக்கும், மற்ற ஜீவராசிகளுக்கும் உலகம் நித்தியமெனவும், புத்திர மித்திர களத்திராதிகள் சாசுவதமெனவும், ஞாபகத்தைக் கொ

டுத்து மகனுக்குத் தாயிடத்தும், தாய்க்கு நாயகனிடத்தும், நாயகனுக்கு நாயகியிடத்தும், அன்னியோன்னிய சினேகப் பான்மையை யுண்டாக்குகின்றது. இம்மாயையினுலுண்டாகின்ற ஒவ்வொரு அநித்தியமாகிய காரியங்களிலும் இவ்வுலகத்தார் மிகவும் மயங்கி எப்பொழுதும் அலைந்துகொண்டிருக்கின்றார்கள். அவ்வாறு அலைகின்ற ஒவ்வொருவரும் இம்மாயா சத்தியினு லுண்டாகின்ற எவ்விதக் காரியத்தையுங் கனவிலும் மறந்துகூட சாசுவதமென்று நினைக்கக் கூடாது. சினேகர்கள் பொய்யாகிய மனோ விருத்தியால், கண்ட அளவில் வேண்டிய பத்தி விசுவாச உபசரணை செய்கின்றார்கள். மனைவிமார்கள் பொருளொன்றையே கருதிப் புருஷ சினேகத்திற்கு வேண்டிய அளவற்ற பணிவிடைகளைச் செய்கின்றார்கள். பந்துக்களு மவ்வாறே பொய்யன்பு காட்டி நடிக்கின்றார்கள். இவைகள் யாவும் அந்த மகா மாயையினுல் உண்மையெனவும், இவர்களனைவரும் தனது மரண கால பரியந்தந் தனக்குற்ற துணையாக இருந்து இரட்சிப்பார்களெனவுந் தோற்றுவது மித்தியாப் பிரமமாகும். புத்திர மித்திர களத்திராதிகள் தங்கள் தங்கள் இஷ்ட சித்திக்காகப் பிறந்து மிறந்தும் யாதொரு உபகாரமு மில்லாதவர்களாகப்போவதும் வழக்கந்தான். இதனுல் இவ்வுலகத்திலுள்ள ஒவ்வொருவருடைய மனோ வெண்ணங்களும் நினைத்த பிரகாரமெல்லாம் சித்திபெறுத தென்பது நிச்சயமாய்த் தெரிகின்றது மேலும், இந்த உப்பிரசத்தை யுட்கொள்ளுகிறவர்கள் மாயையையே வணங்குகின்றவர்க ளாகின்றார்கள் ஞானிகளோ? அப்படியல்ல, அவர்கள் இதை நிராகரித்திருப்பதனுல் அவர்களுக்குச் சரியான ஆன்ம

ஞானமிருக்கின்றது. இவ்வுலகங் கூடப் பொன்மயமா யிருக்கும். முதலாவது ஒரு புஷ்பந் தோற்றுகின்றது அது காலவேற்றுமையாற் காயாக மாறுகின்றது. அப்பால் பழமாகின்றது. அதன் பின் வித்தாய் மறுபடியும் மரமாகின்றது. சொற்பக் காலத்தில் அளவற்ற மரங்க ளுண்டாவதற்கேதுவான விதைகள் அம்மரத்திலிருந்துண் டாகின்றன. அப்பால் அது கரிந்து தீய்ந்து பூமியில் விழுகின்றது. இவ்வண்ணமே சுக்கில சுரோணிதமும் ஒன்றாய்ச் சேர்ந்து கருப்பவறையிற் சென்று அங்குத்தங்கி வளர்ந்து பிண்டமாய் மாமிசங்களேற்பட்டு வடிவமுண் டாய் அப்பால் குழந்தையாகப் பூமியிற் பிறக்கின்றது. காலக்கிரமத்தி லிளமையகன்று வாலிபம் வருகின்றது. சொற்பக் காலத்தில் அளவற்ற குழந்தைகளுக்குப் பிதா வாகின்றான் பின்னர் விருத்தாப்பியனைப் மாண்டு மண்ணு கின்றான். இதுதான் "மாயை" ஆனால் இந்த மாயை என்னிடத்து மாத்திரமல்ல, எனது அம்சங்களான எல் லாப் பொருள்களிடத்து மிருக்கின்றன. இவ்வாறு சிருஷ்டி, ஸ்திதி, சங்காரஞ் செய்வதற்குள்ள வல்லமை யும், மாயையும் என்னிடத்திருந்தாலும் எனக்குப் பிரத்தி யேகமாகக் கண்களோ? காதுகளோ? கைகளோ? கால் களோ? வாயோ? மூக்கோ? கிடையா. யான் எப்பொழு தும் எல்லாக் காரியங்களையுஞ் சரிவர நடத்துவதற்காக எனது வல்லமையைச் சந்திரனது ஆகருஷண சக்தி தடுத் துக்கொண்டிருக்கின்றது அதிவேகமாய்ப் பாய்கின்ற குதிரையைக் கடிவாளத்தினால் நிறுத்திக்கிரமமாய் நடத்து வதுபோல இச்சந்திரன் தனது ஆகருஷண சக்தியினால் எனது வேகத்தைக் குறைத்து என்னைச் சரிவர நடத்து

கின்றான். ஆனதினால் யான் என்னை வேதனைப் படுத்துவோர்களிடத்துப் பதிற் பேசுவதற்குக் கூடச் சக்தியில்லாதவனாயிருக்கின்றேன். சரீரத்திலுள்ள இரத்தம், சுக்கில முதலியவைகள் எனது அம்சங்களாக இருந்தாலும் அவைகளுக்குப் பிரத்தியேகம் ஒரு சக்தியைக் கொடுத்தவர் இன்னாரென்று எனக்குத் தெரியாது. யாதோ? ஒரு பிரத்தியேக சக்தியால் அவைக ளாட்டப்படுகின்றன. அதன் சூட்சுமங் கொஞ்சமுந் தெரியவில்லை. இதுதான் அதற்குக் காரணம்.

நீ சொல்லியவாறு உனது அம்சமாகிய இரத்த முதலியவைகளுக்குப் பிரத்தியேக சத்தியைக்கொடுத்தது 1-ம், பிரதிவாதியாகிய ஆன்மா தானே?

அது எனக்குத் தெரியாது.

உனக்கு வயதென்ன?

ஞாபகமில்லை.

கோர்ட்டார் வினவும், 2-ம், சாக்ஷி விடையும்.

வாக்கு மூலம் வாசிக்கக் கேட்டாயா?

கேட்டேன்.

சரிதானா?

ஆம்.

பிரதிவாதி பக்கம் 2-ம், சாக்ஷி தண்ணீர் (கை—து.)

பிரதிவாதி பக்கம், 3-ம், சாக்ஷி

நெருப்பு சத்தியஞ்செய்து

தெரிவித்த வாக்குமூலம்.

சர்வ வல்லமையுள்ள தெய்வஞ் சாக்ஷியாக

நான் சொல்வதெல்லாம் உண்மை.

1-ம், பிரதிவாதி வக்கீல் வினவும், 3-ம், சாக்ஷி விடையும்.

உனது பெயர் யாது?

நெருப்பு.

உனக்குத் தொழிலென்ன?

சிருஷ்டி, ஸ்திதி, சங்காரம், திரோபவம், அநுக்கிரகமாகிய ஐந்தும்.

சிருஷ்டி, ஸ்திதி, சங்காரமென்னும் முத்தொழில்களும் 1-ம், 2-ம், சாக்ஷிகள் தமது தொழில்களென்று வாக்குமூலங் கொடுத்திருக்க, நீ அம்முத்தொழில்களோடு திரோபவம், அநுக்கிரக மென்னு மிரு தொழில்களும் உனது தொழில்களென்று சொன்னதற்கு நியாயம் யாது?

1-ம், 2-ம், சாக்ஷிகள் சிருஷ்டி, ஸ்திதி, சங்காரமென்னும் முத்தொழில்களையும் நடத்தி வருபவர்களா யிருந்தாலும், அவர்கள் என்னைப்போலச் சூக்குமம், ஸ்தூலமென்னும் இருவகைத் தேகங்களையும், முடிவில் எல்லாம் போய்க் காரண தேக சத்தியையு முடையவர்களென்று சொல்லுவதற்குச் சரியான யாதொரு நியாயத்தையும் காணவில்லை. பண்டித சிகாமணிகளாகிய மகான்கள் தத்துவப் பரிசோதனையால் மிகவும் பெரிதாயுள்ள பூமியினது அளவையும் தண்ணீரினது அளவையும், வாயுவினது அளவையு மிவ்வளவென்று கண்டு பிடித்து அளவிற்கருமையான ஆகாயத்தை நிராலம்பமெனவும், அகண்டப்பிரமமெனவுங் கூறியிருக்கின்றார்கள். ஆயினும் அவர்களோ? மற்றவர்களோ? எனது நிச்சயமான அளவை இவ்வளவென்று உறுதியாக அறியவில்லை. அதனால் எனது தொழில் இன்னதுதானென்று ஒருவராலும் நிச்சயமாகச் சொல்ல முடியாது. எனக்கு முதலோ? இடையோ?

கடையோ? இல்லை. இவ்வாறிருக்கின்ற எனக்கு முற் கூறிய தொழில்களிருக்கின்றனவென்று யான் இக் கோர்ட்டு முன்பாக சொன்னதாலுண்டான விரோத மின்னதென்று எனக்குத் தெரியவில்லை. யாதாவது ஒரு பொருளின் மீது எனது கூறாகிய சீதோஷ்ண அளவு (டிக்கிரி) 500-க்கு மேல் 600 வரை சேர்ந்தால் அப்பொரு ளிற் புகையோ? பிரகாசமோ? சுவாலையோ? இராது. தொட்டால் உணர்வு மாத்திர மிருப்பதாக உணரும் விதத்தில் ஓர்வகைச் சூடிருக்கும். அப்பொருளிலேயே எனது கூறு 600-க் கதிகமாய்ச் சேர்ந்தாற் படிப்படி யாகப் புகை யுண்டாகிப் பிரகாசமதிகரித்து அப்பொருள் கொஞ்ச நேரத்திற் பற்றி யெரிந்துவிடும். அந்தச் சமயத் தில் எனது வடிவம் பார்வைக்குத் தெரிவதா யிருந்தா லும் அவ் வடிவம் என்னுடன் சேர்கின்ற பொருள்களி னது நிறங்களைப் போலப் பற்பல நிறங்களாகி முடிவில் அப் பற்பல நிறங்களும் ஒரே நிறமாகும். மனுஷியர்களது சரீரத்திலுள்ள சூடு எனது சூக்கும தேகமும், மனுஷி யர்களது பார்வைக்குத் தோற்றத்தக்க விதத்திற் பற்றி யெரிகின்ற தீப முதலியவைகளி லிருக்கும் பிரகாசம் எனது ஸ்தூல தேகமுமா யிருக்கின்றன. காரண தேக மாகிய சைதன்னியம் எனது பிரத்தியேகமான ஒரு வடிவ மாவதோடு அது சகல சராசரங்களுக்கும் உட்புறத் திருக்கின்றது. இவ்வாறுள்ள முத்தேகங்களோடுங் கூடித் தான் யான் எனது ஐந்தொழில்களையும் நடத்தி வருகின் றேன்.

இவ்வியாச்சியத்திற் பிரதிவாதிகளான ஆன்மாவை யுஞ் சரீரத்தையும் உனக்குத் தெரியுமா ?

தெரியும்.

இவ்வியாச்சியத்தைப் பற்றி உனக்கு என்ன தெரியும் ?

ஒன்றுந் தெரியாது.

வாதி வக்கீல் கிறாசும், 3-ம், சாக்ஷி விடையும்.

சிருஷ்டி, ஸ்திதி, சங்காரம், திரோபவம், அநுக்கிரக மென்பன உனது தொழில்களென்று நீ இக் கோர்ட்டு முன்பாகத் தெரிவித்தா யல்லவா ?

ஆம்.

அதற்குக் காரணம் யாது ?

பிரதி வாதி வக்கீல்.

வாதி வக்கீல் இந்த வியாச்சியத்திற் கவசியமான கேள்விகளைக் கேளாமல் அநாவசியமான கேள்விகளைக் கேட்பது நியாயமில்லை யென்று கோர்ட்டார் முன்னர்த் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

வாதி வக்கீல்

இந்தச் சாக்ஷிகள் எப்பொழுதும் பிரதிவாதிகளை விட்டு நீங்காமல் ஒன்றாகவே வாழ்ந்து வந்தவர்களாயிருந் தும் இந்த வியாச்சியத்தைப் பற்றி எனக்கு ஒன்றுந் தெரியாதென்று சொல்லுவதனால் இவர்களது தொழில் களைப் பற்றி விசாரித்தால் மாத்திரம் இவ்வியாச்சியத்திற்

குத் தக்க பலனுண்டாகு மென்று யானுங் கோர்ட்டார் முன்னர்த் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

கோர்ட்டாரது உத்தரவு.

வக்கீல் கேட்கின்ற கேள்விகளுக் கெல்லாம் சாக்ஷிகள் சரியான விடை சொல்ல வேண்டியது ஆவசியமே.

நெருப்பு.

யானே சகல ஜீவராசிகளுக்கு முணர்வைக் கொடுக்கின்றேன். எனது எல்லையில்லாத பிரகாசத்தின் கூறுகளே ஒளிமயமான கோள வடிவமாய் எல்லா சராசரங்களையும் பகுத்தறியும் வண்ணஞ் சந்திர சூரிய நட்சத்திரங்களென்று தோற்றுகின்றன. அவைகளில் எனது பிரகாசம் சேராதிருந்தால் அவைகள் மனுஷியர்களது பார்வைக்கு விஷயமாகவோ? சராசரங்கள் ஜீவராசிகளுக்குத் தோற்றவோ? செய்யா. எனக்கு எந்த விடத்திலும் எவ்விதத் தடையுங் கிடையாது. எனது பிரகாசத்தில் மிகவுஞ் சிறியதான ஓ ரம்சந்தான் சூரிய மகாகோளமாய் இவ்வுலகத்தின் கண்ணுள்ள அந்தகாரத்தைப் போக்கிச் சிருஷ்டி, ஸ்திதி, சங்காரமாகிய தொழில்களைச் செய்கின்றது. எனது பிரகாச மனைத்தையும் அந்தச் சூரிய மகாகோளத்திலுபயோகித்தால் ஒரு கணப்பொழுதில் மனுஷியர்களோ? மிருகங்களோ? கோட்டை, கொத்தளங்களோ? சுருக்கிச் சொன்னால் இவ்வுலகமோ? வெந்து சாம்பராய்ப் போகும். யான் எனது சூக்ஷும தேகத்தால் ஜீவராசிகளை யிரட்சிக்கின்றேன். ஜீவராசிகளது அடி, நடு, முடியென்று சொல்லும் மூலம், இதயம், கபாலமென்னு மூவிடங்களி

லும் யான் இருந்துகொண்டு அந்த ஜீவராசிகளினது சரீர முழுவதிலும் வியாபித்துக் காமாக்கினியாற் சத்த தாதுக்களை யுருக்கிப்பிழிந்து சுக்கிலமாக்கி அதைக் கபாலத்திற் கொண்டுபோய் நிறுத்துகின்றேன். அப்பால் ஸ்திரீ புருஷ சங்கமத்தாற் சுக்கில சுரோணிதங்களொன்றோ டொன்று சேருகின்ற காலமுதல் இரசவாதிகள் ஒருசிறிய சூட்டினாற் செம்பைப் பொன்னாக்குவதுபோல, யான் கருப்பவறையி னுள்ளிருந்து பிரதிதினமும் எனது சூட்டைக் கொண்டு அப்பிண்டத்தை இரட்சித்து உயிருள்ளதாக்கி அவ்வுயிரி னுள்ளும் பிரவேசித்து மூலம், இதயம், கபாலமென்னும் முத்தானங்களிலுந் தங்கிப் பூமியின்கண் பிறக்கச் செய் கின்றேன். அன்றியும், தாவர சங்கமங்களாகிய எல்லாவற் றிலும் யான் ஸ்தூலம், சூக்கும மென்னு மிருவகைத் தேகங்களே யல்லாமல் எப்பொழுதும் காரணரூபமாகவு மிருக்கின்றேன். இதனுண்மை காடுகளி லிருக்கின்ற மூங்கி லாகிய தாவரத்தைப் பரிசோதித்துப் பார்த்தால் நன்கு விளங்கும். அதாவது. அம்மூங்கிலினுள்ளும் யான் காரண ரூபமாகச் சேர்ந்திருப்பதனால் அம்மூங்கில்கள் ஒன்றோ டொன்று சேர்ந்து உரையும்போது எனது உஷ்ண அளவு (டிக்கிரி) 500-க்குமேல் உண்டானால் எனது சூக்குமதேக மாறிப் புகையுண்டாய் உடன்றானே அம்மூங்கில் பற்றி யெரிந்து எனது ஸ்தூலதேகத்தை விளக்குகின்றது. இவ் வாறு யான் காரணரூபியாய் எல்லாப் பொருள்களினிடத் துஞ் சேர்ந்து ஜீவராசிகளுண்ணுகின்ற எல்லாப் பொருள்க ளோடுங் கூடி அவர்களது வயிற்றினகஞ்சென்று அவர் களை இரட்சித்து எனது சூட்டினாலேயே அவர்களைக் கொண்டு எல்லாக் காரியங்களையும் நடத்தி வருவது மல்

வாமல் மூலாக்கினியை இடைவிடாமல் சுழுமுனைக்கேற்றி ஆலோசனுசத்தி, தாரணுசத்தி, கற்பனுசத்தியாகிய இவைகளைக் கொடுத்து அறிவை யதிகப்படுத்தி இவ்வுலகத்தின்கண் பலவித யந்திரங்கள், சித்திரங்கள், சாஸ்திரங்கள் முதலியவைகளை யுண்டாக்கவும்; அநேகவிதக் கைத்தொழில்களைச் செய்யவுஞ் செய்து இப்பூலோகத்தை அலங்காரப் படுத்துகின்றேன். மேலும் காதிலிருக்கின்ற நெருப்பினுற் கேட்கவும், தோலி லிருக்கின்ற நெருப்பினுற் பரிசிக்கவும், மூக்கிலிருக்கின்ற நெருப்பினுல் முகரவும், நாக்கிலிருக்கின்ற நெருப்பினுல் உருசிக்கவும், கண்ணிலிருக்கின்ற நெருப்பினுலும் விண்ணிலிருக்கின்ற ஒளியினுலும சகல சேதனுசேதன சராசரங்களைப் பார்த்தறியவுஞ் செய்கின்றேன். அன்றியும், இதய கமலத்தில் எப்பொழுதுஞ் சோதிமயமா யிருக்கின்ற ஜீவாக்கினியைப் பஞ்சேந்திரிய விஷயங்களிற் பிரவேசித்து இப்பூமியின்கண் உலகவிவகாரத்தை அதிகரிக்கச் செய்கின்றேன். பூலோகத்திற்கும் ஆகாயத்திற்கு மிடையிலுள்ள வாயுவானது ஓடிப்போகாமலுங் கடல்நீர் பெருகித் தனது எல்லையை விட்டுக் கடவாமலும், பூமி தனது நிலையைவிட்டுப் பெயராமலும், அதனதன் ஸ்தானங்களில் அவைகளை எனது ஆகருஷண சத்தியினுல் நிறுத்திக்கொண் டிருக்கின்றேன். சரீரத்தினிடத்து முடி, நகம், மாமிச முதலியவைகள் வளர்வதுபோல இப்பூமியினிடத்து மலை, மரம், செடி, கொடி முதலியவைகள் வளர்வதற்குப்; மாணிக்கமுதலிய இரத்தினங்கள் பிரகாசிப்பதற்கும் எனது பிரத்தியேக சத்தியை உபயோகப் படுத்துகின்றேன். இவ்வாறு சகல சராசரங்களையும் சிருஷ்டித்துத் திதி செய்வதோடு சங்கட

ஜீவராசிகளை நாற்பது பேதங்களான பித்தச்சூடென்னும் வியாதிகளாலும், காமாக்கினியினு லுண்டாகின்ற விஷயா சத்தியினு லேற்படும் அன்னிய பாதையாலும், சூரிய வெப்பத்தாலும், பூமியினது கொதிப்பாலும், இன்னும் பல விதத் துன்பங்களாலுஞ் சங்காரஞ் செய்கின்றேன். இவ்விதச் சிருஷ்டி, ஸ்திதி, சங்காரமென்னும் இம்மூத் தொழில்களோடு எனது மாயா தொழிலாகிய உண்டாக்கு வதும், வளர்ப்பதும், தகிப்பதும், தீய்ப்பதுமாகிய திரோ பவத் தொழிலைச் சூரியனால் நடத்துகின்றேன் இனி ஜன்ம நட்சத்திரங்களென்று பெயர்பெற்ற சந்திரனது கலைகளாகிய இருபத்தேழு நட்சத்திரங்களும், சூரிய சந்திரர்களும் ஜீவராசிகளுக்குப் போதுமான இன்பத்தைக் கொடுக்கின்றார்க ளென்பதும் ஒவ்வொருவருந் தங்கள் தங்கள் கிரகசாரப் பலன்களை அநுபவித்தே தீர்வார்க ளென்பதும், அக்கிரகசாரபலன்கள் ஒவ்வொருவருக்கும் ஏற்பட்ட அளவிலிருந்து கூடுதலாகவோ? குறைதலாக வோ? நடைபெறுமென்பதுங் கணிதசாஸ்திரங்கற்ற கணித சிகாமணிகளது அபிப்பிராயம். இவ்வாறுள்ள கிரகசாரப்பலனை மாற்றுகின்ற தன்மையைத்தான் அநுக் கிரகமென்று சொல்லப்படும். ஒரு தரித்திரன் தனது கிரக சாரப்பலனால் மிகவும் தரித்திரத்தை அநுபவிக்கின்றா னென்று வைத்துக்கொள்ளுவோம். அதைக்கண்ட இரக் கச் சித்தமுள்ள ஒரு தனவான் அவனது தரித்திரம் நீங் கும்படி அவனுக்குப் போதுமான செல்வத்தைக்கொடுத்து அவனைக் காப்பாற்றுவதனால் அதுவே அவனுக்கு அநுக் கிரகஞ் செய்ததாகும். அதுபோலவே கருமசாரப் பலத்தி னாற் பிறந்து மிறந்தும் சமுசார சாகரத்திற் கிடந்துழன்று

கரையேற முடியாமல் அலைகின்ற ஜீவஜாதிகளுக்கு அவர்களது மூடத்துவத்தை யகற்றி அறிவை யதிகப் படுத்தி ஒவ்வொரு நாளுந் தோன்றுகின்ற உலகசேஷ்டைகளினாற் காணுகின்ற இப்பிரபஞ்சத்தை அசத்தியமெனவும், அநித்தியமெனவும்' தெரிவித்து மூலாக்கினியைச் சுழுமுனைக் கேற்றித் துரியத்தின் மீது சேர்ப்பித்துப் பரமானந்தப் பதத்தை யுணரும்படி செய்து அப்பொழுதே காணுகின்ற தேஜோமயமான தோற்றத்தின் மீது அவர்களது மனதை நிலைக்கும்படி செய்து சமாதியை யுடையவர்களாக்கிப் பிரமபீடங் காண்பித்து நவ துவாரங்களையு மடைத்த அவர்களது விஷய வாஞ்சனையை யொழிப்பித்துச் சாயுச்சியப் பதத்தைக் கொடுத்துச் சிருஷ்டி முதலிய பஞ்ச தொழில்களைச் செய்கின்றேன். இதுதான் அதற்குக் காரணம்.

நீ இந்தப் பிரதிவாதிகளோடு கூடி யாதாவது கெட்ட செய்கை செய்ததுண்டா?

இல்லை.

எல்லாப் பொருள்களையு முட்கொண்டு நாசமாக்குகின்ற ஒரு கெட்ட வழக்க முன்னிடத்தி லிருக்கின்றதல்லவா?

யான் எல்லாப் பொருள்களையு முட்கொண்டாலும் அப்பொருள்கள் முழுவதையும் நாசஞ் செய்வது எனது வழக்கமல்ல, யான் எந்தப் பொருளை யுட்கொள்ளுகின்றேனோ? அந்தப்பொருளில் நின்றும் அப்பொருளைப் பார்க்கிலும் இருபங்கான வாயுவை வெளியாக்குகின்றேன். மேலும் ஒரு பாத்திரம் நிரம்பத் தண்ணீரைவிட்டு அப்பாத்திரத்தை அடுப்பில்வைத்து அவ்வடுப்பில் என்னைப்

பிரவேசிக்கச் செய்தால் எனது வெப்பத்தினுல் அப்பாத்திரத்திலுள்ள தண்ணீர் கொஞ்சங் கொஞ்சமாக வற்றி முடிவிற் கொஞ்சமு மில்லாமல் அப்பாத்திரத்தைவிட்டு மாறுகின்றது. இப்படி மாறுகின்ற தண்ணீரானது நீராவியாய் ஆகாயத்திற் செல்லுகின்றது. பின்னர் அவ்வாவி அவ்வாகாயத்திலும் நிலைபெருமற் காலவேற்றுமையால் மழையாகப் பூமியிலிறங்குகின்றது. இவ்வாறு நான் எந்தப் பொருளை நாசஞ்செய்கின்றேனே ? அந்தப் பொருள் அப்பொழுதே தனது உருபாந்தரத்திற் பற்பல பொருள்களாகிப் பேதப்படுகின்றது. ஆனல் நான் மாத்திரமல்ல, வேறு யார் நினைத்தாலும் ஒரு பொருளை முழுதும் நாசஞ் செய்யவோ ? அல்லது முதலாவது சிருஷ்டிக்கவோ ? முடியாது. ஆயினும் யான் இல்லாவிட்டால் இவ்வுலகத்தில் எந்தக் காரியமும் நடைபெருது. மனுஷியர்கள் அவதரியார்கள். மிருகவர்க்கங்கள் தோற்று. தானியங்களுமுளையா. பண்டித சிகாமணிகள் தந்திரங்களும் நிறைவேரு. இவ்வியாச்சியத்திலுள்ள மற்ற சாக்ஷிகளெல்லாம் என்னைப்போன்ற வல்லமைசாலிகளல்லர். எனது வடிவத்திற் சேர்ந்திருக்கின்ற சங்காரத்தொழில்தான் எனது முக்கிய தொழில். அத்தொழிலையும் யான் செய்வது முற்கூறியவாறுதான்.

உனக்கும் 2-ம், பிரதிவாதியாகிய சரீரத்திற்கும் யாதாவது சம்பந்தமுண்டா ?

உண்டு.

என்ன சம்பந்தம் ?

யான் சரீரத்தினேடு சேர்ந்து அச்சரீரத்தின் எல்லாவிடங்களிலும் வியாபித்திருக்கின்றேன். எனது காரண

சத்தியையும், சூக்கும சத்தியிற் சில பாகங்களையும் யான் அந்தச் சரீரத்திற் சம்பந்தப்படுத்தி யிருக்கின்றேன். எனது ஸ்தூலசத்தியைப் பிரயோகித்தால் உடன்றானே அச்சரீரம் வெந்து சாம்பராய்ப்போகும். இந்தச் சூக்கும சத்தியையுந் தக்கபடி பிரயோகித்தால் அச்சரீரத்திலுள்ள நகம், மாமிச முதலியவைகள் வெந்து கருமையாகும். இதுதான் எங்களது சம்பந்தம்.

எப்பொழுதும் பிரதிவாதியாகிய சரீரத்தோடுசேர்ந்து வாழ்ந்திருந்த நீ அவ்விரண்டாம் பிரதிவாதியினது செய்கைகளில் யாதொன்றும் எனக்குத் தெரியாதென்று சொன்னதற்கு நியாயம் யாது ?

எனக்குச் சரீரத்தில் மாத்திரமல்ல, மற்ற எந்தப் பொருளிடத்திலும் நான் பிரவேசிப்பதும், அதைவிட்டு நீங்குவதும் இவ்விதமெனத் தெரியாது. ஒரு தீபத்தில் யான் ஆதியிற் பற்றுவதும், முடிவிலணைவதும் எவ்வாறென்றெனக்கு அறிவதற்கு யாதொரு மார்க்கத்தையுங் காணவில்லை. இதனைற்றான் பிரதிவாதிகளது செய்கைகள் எனக்குத் தெரியாதென்று சொன்னேன். இதுதான் அதற்கு நியாயம்.

உனக்கு வயதென்ன ?

தெரியாது.

கோர்ட்டார் வினவும், 3-ம், சாக்ஷி விடையும்.

வாக்குமூலம் வாசிக்கக் கேட்டாயா ?

கேட்டேன்.

சரிதானா ?

ஆம்

பிரதி வாதி பக்கம் 3-ம், சாக்ஷி நெருப்பு (கை—து)

பிரதிவாதி பக்கம் 4-ம், சாக்ஷி
காற்று சத்தியஞ்செய்து
தெரிவித்த வாக்குமூலம்.

சர்வ வல்லமையுள்ள தெய்வஞ் சாக்ஷியாக
நான் சொல்வதெல்லாம் உண்மை.

1-ம், பிரதிவாதி வக்கீல் வினாவும், 4-ம், சாக்ஷி விடையும்

உனது பெயர் யாது?

காற்று.

உனது தொழிலென்ன?

சிருஷ்டி, ஸ்திதி, சங்காரம், திரோபவம், அநுக்கிரகமாகிய ஐந்தும்.

சிருஷ்டி, ஸ்திதி, சங்கார முதலிய ஐந்தொழில்களையும் நடத்தி வருவது இவ்வியாச்சியத்திற் பிரதிவாதிகள் பக்கம் 3-ம், சாக்ஷியாகிய நெருப்பு நானென்று இக்கோர்ட்டார் முன்னர்ச் சத்தியஞ்செய்து வாக்குமூலங்கொடுத்திருக்க, நீயும் மேற்கூறிய பஞ்ச கிருத்தியங்களை யான் செய்து வருகின்றேனென்று சொன்னதற்குக் காரணம் யாது?

எனது உதவியில்லாவிட்டால் நெருப்பினால் யாதொரு பிரயோசனமு முண்டாகமாட்டாது. எல்லா சமயங்களிலும் யான் நெருப்பிற்குப் பந்துவா யிருக்கின்றேன். இவ்வியாச்சியத்திலுள்ள எல்லா சாக்ஷிகளிலும் பெரியவன் யான்றான். எனக்கொப்பானவர் வேறு ஒருவருமில்லர். மூவுலகங்களிலும் யான் வியாபித்துச் சஞ்சரிக்கின்றேன். இப்பூலோக முழுவதிற்கும் ஓர் மேற்போர்வையைப்போல இப்பூலோகத்தின் கண்ணுள்ள சகல ஸ்தாவரசங்கமப்

பொருள்களையும் மூடிக்கொண்டு பூமியில் நின்றுஞ் சுமார் ஐம்பது நாழிகை தூரம் மேலே யுயர்ந்து காலத்திற்குந் தானத்திற்குங் குணத்திற்குந் தக்கபடி பல நாமதேயங்களைப்பெற்று எவ்விடத்துஞ் சுற்றிச் சஞ்சரிக்கின்றேன். இதன் மத்தியில் யான் முற்கூறிய ஐந்து தொழில்களையும் நடத்துகின்றேன். என்னைத்தவிர வேறொருவரும் இத்தொழில்களை நடத்த வில்லை. அவர்களால் நடத்தமுடியாது. இதுதான் அதற்குக் காரணம்.

உனக்கு இவ்வியாச்சியத்திற் பிரதிவாதிகளான ஆன்மாவையுஞ் சரீரத்தையுந் தெரியுமா ?

தெரியும்.

இவ்வியாச்சியத்தைப் பற்றி யாதாவது தெரியுமா ?

ஒன்றுந் தெரியாது.

வாதி வக்கீல் கிறுசும், 4-ம், சாக்ஷி விடையும்.

நீ சிருஷ்டி முதலிய ஐந்தொழில்களையும் நடத்தி வருவதாக வாக்குமூலங் கொடுத்தாயல்லவா ?

ஆம்.

அந்த ஐந்தில் முதலாவதாகிய சிருஷ்டித் தொழிலை நீ செய்வது எவ்விதம் ?

யான் ஒவ்வொரு நாளும் பற்பல தடவை ஒவ்வொரு ஜீவராசிகளினுள்ளுஞ் சென்று அவைகளி னுட்புறத்தைச் சுத்தப்படுத்திக்கொண்டு வெளியிற் போகின்றேன். ஆனால் என்னில் முக்கியமாய்ப் பத்து வாயுக்களிருக்கின்றன. அப்பத்து வாயுக்களிலும் அதிமுக்கியமானது பிராணவாயு. அவ்வாயு இடகலை, பிங்கலை, சுழுமுனை யென்னும் முக்கலைகளாசப் பிரிந்து செட்ட வாயுக்களை நிச்சுவாசித்தும்,

சுத்த வாயுக்களை உச்சுவாசித்துஞ் சரீரத்தில் யாதொரு நோயும் வந்து சாராமல் அவைகளை இரட்சிக்கின்றது. அன்றியும் அபான வாயுவினது மூலாக்கினியைப் பிராண வாயுவினது உதவியினால் மூளையில் தாக்கி அங்கிருந்து நரம்புகளின் வழியாக இதயத்திற் சூட்டையுண்டாக்கி இதயவழியாய் வியான வாயுவைச் சரீரமுழுவதிலும் வியாபிக்கச் செய்து காமாக்கினியை வளர்ப்பித்துத் தச வாயுக்களையும் அந்தமில்லாமற் கூட்டிச் சேர்த்துச் சுக்கில ஸ்கலித சமயத்தில் யான் பிராண வாயுவாக மாறி அதனுள்ளிருந்து சுரோணித சம்பந்தமுண்டாக்கிக் கருப்ப வறையில் தங்கிப் பிண்டமாக்கி இரட்சித்துப் பத்துமாத முஞ் சென்றபின் உதானன், அபானன் என்னும் வாயுக்கள் மூலமாய்க் குழந்தை வடிவமாகக் கருப்பவறையில் நின்றும் பூமியிற் பிறப்பிக்கின்றேன். இதுதான் யான் செய்யும் விதம்.

அப்பால் ஸ்திதி செய்வது எவ்விதம்.

மேற்கூறியவாறு பிறந்த ஒவ்வொரு குழந்தைகளையும் யான் நாளொன்றிற்கு 21,600. சுவாசங்களைச் சுவாசிக்கும்படிச் செய்து அக்குழந்தைகளின் சரீரத்தினகத்துள்ள மலினங்களெல்லாவற்றையும் நவத்துவாரங்களின் வழியாக வெளியி லாக்குகின்றேன். அப்பால் உண்பதற்கும் உறங்குவதற்கும் நடப்பதற்கும் பிடிப்பதற்கும் மற்ற அனைத்திற்கும் யானே காரணமாக நின்று நடப்பிக்கின்றேன். அதனோடு அக்குழந்தைகளுக்கு மனம், புத்தி, சித்தமாகிய இவைகளும் யானாகவே யிருக்கின்றேன். எவ்வாறெனில் மனமே சுவாசமாகும். சுவாசம் எப்படி உட்புறத்தும் வெளிப்புறத்துஞ் செல்லுகின்றதோ! அவ

வாறே அனேக விஷயங்களை அடிக்கடி நினைப்பதை மனமெனவும், உள்வாங்கும் சுவாசத்தைப் பற்றிப் பிடிப்பதை மனம் நினைக்கின்ற ஒவ்வொரு விஷயங்களையும் பற்றி விசாரிக்கின்றதில் புத்தியெனவும், அவ்வாறுள்ள விசாரங்களை உச்சுவாச நிச்சுவாச மென்னு மிரண்டிற்கு மிடையில் நின்று சுழுமுனை வாயுவால் நிறுத்தப்படுகிற அவசரத்தில் சித்தமெனவும் சொல்வார்கள். இவ்வாறுள்ள மூவித வாயுக்களாற்றான் யான் இவ்வுலகத்திலுள்ள சகல ஜீவராசிகளையுந் ஸ்திதிசெய்கின்றேன்.

சங்காரத் தொழில் எவ்வாறு செய்கின்றாய்?

நாற்பதுவித வாதரோகங்களாலும், சுழல்காற்று, கொடுங்காற்று முதலிய காற்றுக்களாலும், நெஞ்சடைப்பு, சுவாசகாச முதலிய பல வியாதிகளாலுஞ் செய்கின்றேன்.

மாயையினது தொழிலை அநுவர்த்திப்பதான திரோபவஞ் செய்வது நீதானே?

ஆம்.

அது எவ்வாறு?

யான் இப்பூலோகமாகிய சக்கரத்தின்மீது ஒரு கணப்பொழுதாவது ஓரிடத்தும் நிலையாக நில்லாமல் எவ்வாறு சுற்றிச் சஞ்சரிக்கின்றேனோ? அவ்வாறே சகல ஜீவராசிகளையும் அதனதன் பிண்டங்களிலிருக்கின்ற வாயுக்களையும் நிலையாக நிற்கவொட்டாமல் உச்சுவாச நிச்சுவாச ரூபராக மாற்றி மாற்றி எப்பொழுதுஞ் சஞ்சரிக்கச் செய்கின்றேன். எனது வல்லமையினாற் புத்தி, சித்த முதலிய அந்தக்கரணங்களை யடக்கி ஞானம், மோக்ஷமாகிய மார்க்கத்தை யடைவதற்குக் கருதுகின்ற விசுவாசத்தை யழித்துச் சமுசாரசாகரத்திற் கிடந்துழன்று கரைபெற முடி

யாமல் தவிக்கவும், வீணாய் மாண்டு மண்ணாகவுஞ் செய்கின்றேன். எனது மகா கொடிய மாயாசேஷ்டையினால் இவ்வுலகத்தி லிறந்துபோகின்ற பிண்டங்களிலுள்ள ஜீவனாகிய வாயுவை ஆகாயமார்க்கத்திற் சேர்க்கின்றேன். அப்பால் அதை மறுபடியும் பூலோகத்தில் மழையாய் இறக்கிப் புல், பூடு, மரம் முதலிய ஸ்தாவர வருக்கங்களுக்கும், நெல், கொள், வரகு முதலிய தானிய வருக்கங்களுக்கும் உயிராகச் சேர்க்கின்றேன். அதன்பின் அவைகளை உயிருள்ள மிருகவர்க்கங்களையும், பட்சி சாலமுதலியவைகளையும் அருந்தப்பண்ணி அவைகளை இரட்சித்துப் பின்னர் மனுஷியர்கள் புசிக்கின்ற போசனப்பொருள்களிற் சேர்த்து இரத்தம், எலும்பு, மாமிச முதலிய சத்ததாதுக்களாக மாற்றுகின்றேன். இவ்வாறு மாற்றப்பட்டவற்றுள் ஒன்றான சுக்கிலத்தைச் சுரோணிதத்தோடு சேர்த்துக் கருமசார பலனுக்குத் தக்கபடி தரித்திரனாகவோ, தனவானாகவோ, வித்வானாகவோ, மூடனாகவோ, அடிமையாகவோ, எஜமானாகவோ, பூலோகத்திற் பிறப்பித்துத் தொலையாத பெருஞ்சாகரமாகிய பிறவிக்கடலிலழுந்தச் செய்கின்றேன். இதுதான் யான் செய்யுந் திரோபவம்.

நீ செய்யும் அநுக்கிரகம் யாது?

பிராணவாயு முதலிய பத்துவித நாமபேதங்களோடு ஜீவராசிகளது உட்புறத்தில் ஒவ்வொரு தானத்திலும் தங்கியிருக்கின்ற யான் மூலாதாரத்தில் நின்றெழும்பிச் சுழுமுனையளவும்போய் அச்சுழுமுனைக்குக் கீழ்ப்புறத்தில நின்று ஒவ்வொன்றையுங் காணுகின்ற கண்களின் வழியினாலும், கேட்கின்ற காதுகளின் வழியினாலும், முகருகின்ற மூக்கின் வழியினாலும்; பேசுகின்ற வாயின் வழியி

னூலும் தும்மல், ஏப்பம், கொட்டாவி முதலியவைகளினு லும் வெளிப்புறத்துச் செல்லுவதனுல் மோக்ஷவாசலாகிய சுழுமுனையைத்திறந்து கபால வெளியாகிய பரலோகத்திற் குச் செல்லுவதற்குத் தடையாகின்றது. மூலாதாரத்தி லுள்ள அபான வாயு பிராணவாயுவோ டொன்றாய்ச் சேர்ந்தெழும்பிக் கண், மூக்கு முதலிய நவதுவாரங்களின் வழியாக வெளிப்புறத்துச்செல்லாமல் முற்கூறிய மோக்ஷ வாயிலைத் திறந்து கபால வெளிக்குச் செல்லவேண்டுமென் பதுதான் "ஈசுவர சித்தம்" இதற்கு மாற்றமாக இப்பிர பஞ்ச சம்பந்தமான கிரியைகளிற் கிடந்துழன்று ஐம்புல நுகர்ச்சியான விஷய வாசனைகளை அநுட்டிப்பதனுற் பிராணவாயு சேதப்பட்டு ஜீவராசிகள் நாளுக்குநாள் தாழ் வடைகின்றார்கள். இவ்வாறு தாழ்வடைகின்ற ஜீவராசி கள் ஈடேறும்பொருட்டு எனது மகத்துவத்தைப் பிரத்தி யக்ஷமாயறிந்த மகா ஞானிகளைக்கொண்டு அனேக யோக சாஸ்திரங்களை வெளிப்படுத்தியிருக்கின்றேன். அதன்படி அநுட்டிப்பவர்கள் எனது அநுக்கிரகத்தால் கடைத்தேறு வார்கள் இதுதான் யான் செய்யும் அநுக்கிரகம்.

மேற்கூறிய யோகசாஸ்திரங்களிலமைந்த தத்துவங் களும், அதை யநுட்டிப்பதனுலுண்டாகும் பிரயோசனங் களும் யாவை?

யோக சாஸ்திரங்களிலமைந்த தத்துவங்கள் முழு வதையும் பிரத்தியட்சமாய்க் கூறுவதானுல் அதற்குக் காலம் போதாது. அவற்றில் அடங்கிய யாவும் அளவற்ற சாரமுள்ள தத்துவங்களாகும். அவை விசிஷ்ட யோகசாஸ் திர சித்தி பூர்வப் புண்ணிய பரிபாகத்தாலன்றி ஒருவருக் குஞ் சித்திக்கமாட்டா. யோகசாஸ்திர அநுபவமுள்ள

ஒருவன் தனது எண்ணங்களனைத்தையும் யாதொரு கஷ்டமுமின்றிச் சாதிக்கின்றான். அவனுக்குத் தரித்திரத்தினாலும் நோயினாலும் மற்றெவ்விதத்தாலும் யாதொரு துன்பமும் நேரிடாது. இம்மை மறுமையாகிய இரண்டிடத்தும் அவன் மிக்க ஆநந்தத்தை யநுபவிக்கின்றான். அவனை மனுஷியர்களெல்லாரும் "ஞானி" யென்று அழைக்கின்றார்கள். இவ்வித மேன்மை பெற்ற அந்த யோகசாஸ்திரங்களினொழுங்கைப் பற்றிச் சற்று கூறுகின்றேன். அதாவது சுவாசத்தை உள்ளே சுவாசித்தபின் மூலாதாரத்தில் நின்று பொங்கி வருகின்ற வாயுவானது கபாலத்தில் முட்டி அங்கிருந்து இடகலை, பிங்கலை, சுழுமுனையாகிய மூவிதக்கலைகளாகப் பிரிந்து பன்னிரண்டு அங்குலம் வெளியே பாய்ந்து மறுபடியும் சுவாசிக்கும் போது நாலங்குலங் குறைந்து எட்டங்குலம் உட்புறத்துச் செல்லுகின்றது இவ்வாறு ஒவ்வொரு நாளுஞ் சுவாசிக்கின்ற 21600, சுவாசங்களுங் குறைந்து நாளுக்கு நாள் பலங்குன்றிச் சரீரமிளைத்து நரம்புகள் தளர்ந்து என்பது அல்லது, நூறு வயதிற்குள்ளாக மனுஷியர்கள் மாண்டுபோகும்படி நேரிடுகின்றது. வெளியிற்போகின்ற சுவாசம் எவ்வளவோ அவ்வளவே உட்புறத்துஞ் சென்றால் முற்கூறியபடி அதிசீக்கிரத்தில் மாண்டுபோவதற்கு எவ்விதக்காரணமுஞ் சம்பவிக்காது. மேலும் நித்திய விருத்திக்காகக் கஷ்டப்பட்டு வேலைகள் செய்வதனாலும், நித்திரை செய்வதனாலும், அதிக நேரம் நித்திரை செய்யாதிருப்பதனாலும், மாறுமல் வழி நடப்பதனாலும், சம்போகத்தினாலும் அளவுக்கதிகம் சுவாசம் நஷ்டப்பட்டுப் போகின்றது. இதுநிற்க, முற்கூறிய இடகலை, பிங்கலை, சுழுமுனை யென்பவைகளுக்கு

முறையே சந்திர சூரிய அக்கினியென்று பெயர்கள் சொல்லப்படும். இவற்றில் சந்திர னென்பது இடதுபக்கத்து நாசிவழி சுவாசிக்கப்படுகின்ற சுவாசமெனவும், சூரியனென்பது வலது பக்கத்து நாசிவழி சுவாசிக்கப்படுகின்ற சுவாசமெனவும், அக்கினி யென்பது இவ்விரு நாசிகளினது மத்தியிலுஞ் சமரச மாகச் சுவாசிக்கப்படுகின்ற சுவாசமெனவும் ஆதியில் அறிந்துகொள்ளவேண்டும். அன்றியும், இம்மூன்றிற்கும் வேறு நாமங்களுமுள்ளன அவை சந்திரனுக்குச் சத்தியெனவும், சூரியனுக்குச் சிவனெனவும், அக்கினிக்குப் பரமெனவுமாம். சந்திரகலை சூரியகலையைப்பார்க்கினும் அதிக வேகமும் ஓட்டமுமுள்ளதாதலால் முதலாவது சந்திரகலையையே சூரியகலையில் மாற்றவேண்டும். அப்பாற் சூரியகலையைச் சந்திரகலையில் மாற்றவேண்டும். இவ்வாறு இருகலைகளையும் ஒன்றோடொன்று மாற்றி முடிவில் அக்கலைகளிரண்டையுஞ் சுழுமுனையில் நிறுத்தவேண்டும். அப்படி நிறுத்தினால் சுவாசவேகங்குறைந்து பத்து வாயுக்களுமொன்றாகச் சேர்ந்து கெட்டிப்படுவதோடு சுவாச நடையு மடங்கிச் சுவாசயோகத்திற்கும் யோக்கிய முண்டாகும். அதன் பின்னர் எவ்வித யோகத்தையும் யாதொரு கஷ்டமுமில்லாமற் செய்யலாம். இப்படி சுவாசயோகஞ் செய்யில் அக்கினி வாயுக்களாற் சரீரமுழுவதும் பூரித்துச் சிரசில் விளங்குகின்ற ஆன்மாவானது ஆகாயத்திற் சூரியனோடு சேர்ந்து மூவுலகங்களுள்ளும் நிகரற்ற இராஜயோகியாய் மெய்ஞ்ஞானதீத வாழ்வடைந்து சுகபோகப் பதவிக்குச் சுதந்திரமாய்த் தீரும். அதனால் யாவரும் பிராணாயாம யோக சித்தியைப் பெற

று ச் சமுசாரப் பந்தத்தை யறுத்து இம்மை மறுமையாகிய இரண்டிடத்தும் மெய்ப்பதவியை யடைகிறார்கள். இவை தாம் முற்கூறிய சாஸ்திரங்களிலமைந் தத்துவங்களும், அவற்றாலுண்டாகும் பிரயோசனங்களும்.

இவ்வாறு ஐந்தொழிலும் நடத்துவதற்கு வல்லமையுள்ள நீ இந்தப் பிரதிவாதிகளது செய்கைகளில் யாதொன்றும் எனக்குத் தெரியாதென்று சொன்னதற்குக் காரணம் யாது ?

எனக்கு ஆன்மாவோடு யாதோ ? சற்று சம்பந்தமிருப்பதனால் யான் சரீரமுழுவதிலும் வியாபித்து ஓடுவதற்கும், உறங்குவதற்கும், பேசுவதற்கும், வேறு விதமான ஜீவசேட்டைகள் செய்வதற்கும் ஆதாரமா யிருக்கின்றேன். ஆனால் யான் எனது யதாஸ்தானமாகிய மார்பு முதல் புருவம் வரையுள்ள மகேசபாகத்தில் கட்டுப்பட்டிருக்கின்றேன். அவ்விடத்தில் யார் என்னைத் தட்டியெழுப்பி இவ்வித வேலைகளை என்னாற் செய்விக்கிறார்களோ ? அது எனக்குத் தெரியாது. இதுதான் காரணம்.

உனக்கு வயதென்ன ?

தெரியாது.

கோர்ட்டார் வினவும், 4-ம், சாக்ஷி விடையும்.

வாக்குமூலம் வாசிக்கக் கேட்டாயா ?

கேட்டேன்.

சரிதானா ?

ஆம்.

பிரதிவாதி பக்கம் 4-ம். சாக்ஷி காற்று (கை—து.)

பிரதி வாதி பக்கம் 5-ம். சாக்ஷி

ஆகாயஞ் சத்தியஞ்செய்து

தெரிவித்த வாக்குமூலம்.

சர்வ வல்லமையுள்ள தெய்வஞ் சாக்ஷியாக

நான் சொல்வதெல்லாம் உண்மை.

வாதி வக்கீல் வினவும், 5-ம், சாக்ஷி விடையும்.

உனது பெயர் யாது ?

ஆகாயம்.

இவ்வியாச்சியத்திற் பிரதிவாதிகளான ஆன்மாவை யுஞ் சரீரத்தையுந் தெரியுமா ?

தெரியும்.

இவ்வியாச்சிய சம்பந்தமாக முன் விசாரணை செய்த மண், தண்ணீர், நெருப்பு, காற்றாகிய நால்வரையும் நீ அறிவாயா ?

அறிவேன். அதுவுந்தவிர அவர்கள் நால்வருக்கும் மேலானவனும் யானே.

சிருஷ்டி, ஸ்திதி முதலிய ஐந்தொழில்களையும் நடத்தி வருகின்ற சாக்ஷிகளாகிய முற்கூறிய நால்வருக் கும் மேலானவன் நீ என்பதற்கு நியாயம் யாது ?

அண்டம் என்று கூறப்படுகிற பரியாய நாமத்தை யுடைய என்னை மனுஷியர்களது உத்தமாங்கமாகிய சிர சிற்கும் முட்டைக்கும் ஒப்பாகக் கருதலாம். சரீரத்தில் மற்ற அவயவங்களைப் பார்க்கினும் சிரசு எவ்வளவு மேலாக விருக்கின்றதோ ? அதுபோல யான் பிரமாண்டகோடிக ளான சகல ஸ்தாவர ஜங்கமங்களுக்கும் மேலாக விருக்கின் றேன். உலகவியலின் சகல பேதாபேதங்களும் சமஷ்டி, வியஷ்டியாக என்னிடத்திலிருந்தே தோற்றமாகி என்னி

டத்திலேயே இலயமாகுகின்றன. சத்திச் சக்கரமாகிய இவ்வுலகமே என்னிடத்தி லடக்கமாயிருக்கின்றது. எனக்கு உருவமோ, வடிவமோ, கிடையா. ஒரு முட்டையானது இந்த விடத்திலிருந்து ஆரம்பித்து இந்த விடத்தில் முடிகிறதென்று சொல்லுவதற்குந் தீர்மானப்படுத்துவதற்கும் ஒருவராலும் முடியாதது போல, எனது ஆரம்பத்தையும் முடிவையுங்கண்டு சொல்வதற்கு ஒருவராலும் முடியாது. ஆதலால் யான் மற்ற சாக்ஷிகளைவிட மேலானவனென்பதில் யாதொரு தடையுமில்லை. எனது உண்மை விஸ்தாரத்தைத் தெரிந்தவர்களொருவருமில்லர். இதோ காணப்படுகிற பூமியானது உள்ளும் புறமுங்கூடி எல்லா அளவும் (833,25,23000) காததூரமுள்ளது. ஆனால் எனது கோளவிலாசத்திலிருந்து பிரகாசிக்கின்ற சூரியன் முற்கூறிய அளவுள்ள பூமியைப்பார்க்கிலுஞ் சற்றேறக் குறையப் பன்னிரண்டரையிலக்ஷம் பங்கு பெரிதாயிருக்கின்றது. இவ்வளவு பெரிய சூரியனானது பூமிக்கு (9560800) காதவழி தூரத்தி லிருக்கின்றது; இதுமாத்திரமன்று. சூரியனைச் சூழ்ந்திருக்கின்ற பல கிரகங்களும், தூமகேதுக்களும், சந்திரனும் என்னிடத்திற்று னிருக்கின்றன. புதனென்னுங் கிரகம் பூமிக்கு (13693680) காதவழி தூரத்திலும், வெள்ளியென்னுங் கிரகம் பூமிக்கு (16277940) காதவழி தூரத்திலும், செவ்வா யென்னுங் கிரகம் பூமிக்கு (22466300) காதவழி தூரத்திலும், சிரசென்னும் கிரகஞ் சூரியனிலிருந்து (260) மைல் தூரத்திலும் பாலாசென்னுங் கிரகஞ் சூரியனிலிருந்து (226) மைல் தூரத்திலும், ஜானோ வென்னுங் கிரகஞ் சூரியனிலிருந்து (300) மைல் தூரத்திலும், வெஸ்டா என்னுங்

கிரகஞ் சூரியனி லிருந்து (225) மைல் தூரத்திலும், வியாழ னென்னுங் கிரகம் பூமிக்கு (59915520) காதவழி தூரத்திலும், சனியென்னுங் கிரகம் பூமிக்கு (113515300) காதவழி தூரத்திலும், சூரியனுக்கு (900) மைல் தூரத்திலும், யூரான் சென்னுங் கிரகஞ் சூரியனிலிருந்து (1800) மைல் தூரத்திலும், சந்திரன் பூமிக்கு (83160) காதவழி தூரத்திலும், நட்சத்திரமண்டலங்கள் பூமிக்கு (252000000) காதவழி தூரத்திலுமிருக்கின்றன. இவைகளொவ்வொன்றும் (7000—8000—7000—80000) மைல் விஸ்தாரமுள்ளவைகள். இவ்விதப் பிரமாண்டங்களான வான ஜோதிகளியாவு அதனதன் பிரமாணகற்பனைகளைத் தவறாமல் அதனத னயனங்களில் ஒழுங்கோடுஞ் சாரி வந்து உத்தராயணம், தக்ஷிணாயனமெனவும், சந்திரகிரகணம், சூரியகிரகணமெனவும்; கார், கூதிர், முன்பனி, பின்பனி, இளவேனில், முதுவேனிலாகிய பருவகாலங்களெனவும்; வருடம், மாதம், பக்ஷம், வாரம், நாளெனவும்; இரவு, பகல் நாழிகை, வினாடியெனவு மிவைகளை யுண்டாக்குகின்றன. அன்றியும், மேட முதலிய பன்னிரண்டு இராசிகளிலும், அசுபதி முதலிய இருபத்தேழு நட்சத்திரங்களுஞ்சேர்ந்து பாகுபாடடைந்து ஆரோகண அவரோகணஞ் செய்து அந்தந்த நட்சத்திரங்களி லவதரிப்பவருக்குத் தக்க சுகா சுகங்களைக் கொடுக்கின்றன. மேலும் புட்கலாவர்த்தம், ஆவர்த்த முதலிய சத்த மேகங்களால் பொன், நீர் முதலிய எழுவகை மழைகளைப் பெய்வித்தும்; இடி, மின்னல் முதலியவைகளை யுண்டாக்கியும், அயனவேகங்களாற் காற்றை வீசிப்பித்தும், சமுத்திர ஜலத்தைச் சலனப்படுத்தியும் வருகின்றன. கிரகங்களது சுழற்சியின் வேகத்தில்

நின்று முண்டாகின்ற ஓசையானது இப்பூமியின் கண் சங்கீத சாஸ்திரங்களுக்கு மூலாதாரமாயிருக்கின்ற ச, ரி, க, ம, ப, த, நி, என்னும் எழுவகைச் சுரங்களையுங் கொடுத்துத் தேவ கணங்களுக்கு ஆநந்தத்தைக் கொடுப்பதோடு இவ் வுலகவாசிகளான ஜீவராசிகளுக்கும் அச்சுரத்தொனி கொண்டமைந்த வாத்தியக் கருவிகளினால் இடைக்கிடை ஆநந்தத்தைக் கொடுப்பதற்காக யான் எனதுறுப்பின்கண் இடமளித்திருக்கின்றேன். இவ்வாறு யான் அளவற்ற அங்கமுடையவனாகவும், எல்லாச் செய்கைகளுக்குங் காரண பூதனாகவுமிருப்பதனாற்றான் முற்கூறிய சாக்ஷிகள் நால்வருக்கும் மேலானவனென்று சொன்னேன். இது தான் அதற்கு நியாயம்.

உனது தொழில் யாது?

சிருஷ்டி, ஸ்திதி, சங்கார முதலிய ஐந்தும்.

அவற்றில் முந்தின சிருஷ்டித்தொழிலை நீ செய்வது எவ்விதம்?

இப்பூமியின் கண்ணுள்ள ஸ்தாவரசங்கமங்களெல்லாவற்றிற்குஞ் சூரியன் ஒரு காரண கர்த்தனாயிருக்கின்றான். அவ்வாறிருக்கின்ற சூரியன் தனது சொந்தப் பிரகாசத்தினாலும், உஷ்ணத்தினாலும் இப்பூமியின் கண்ணுள்ள கடல், குளம், ஆறு முதலியவற்றிலிருக்கின்ற நீரை ஆவியாக்கி என்னிற் சேர்க்க, யான் அதை மழையாகவும், பனியாகவும் பூமியிலிறக்குகின்றேன். இப்படி இறக்குவதனால் மரம், செடி, கொடியாகிய சசியாதிகளும், ஜீவராசிகளுஞ் சுகமடைகின்றன. மேலும் சூரியப் பிரகாசத்தாற் பூமியிற் கிடக்கின்ற மணல்கள் பிரகாசமடைந்து காலக்கிரமத்தில் வேற்றுருக்கொண்டு விலையேறப்பெற்ற இரத்

தினங்களாக ஒளிர்கின்றன. பின்னரும் உஷ்ணதிக்கத்தால் ஸ்திரீ புருஷர்களுக்குக் காமாசையை யுண்டாக்கி ஒருவரோடொருவரைச் சேர்ப்பித்துக் கருப்பத்தை யுண்டாக்குகின்றேன். அப்பால் அக்கருப்பத்தைக் குழந்தையாகப் பிறப்பித்து அக்குழந்தையைச் சூரியப் பிரகாசத்தாலும், எனது அநுக்கிரகத்தாலும் வளர்க்கின்றேன். இப்படி அளவற்ற கிரியைகளை யான் சூரியனால் நடத்தி வருகின்றேன். முற்கூறிய வெப்பமும், பிரகாசமும் சூரியனில் தங்கியிருந்தாலும் அந்தச் சூரியன் தனக்குச்சொந்தமான சூடோ, பிரகாசமோ, ஒன்றுமில்லாத ஒரு இருண்ட பொருள். அது தன்னைச் சூழ்ந்த சோதி மண்டலங்களிலிருந்தே சூட்டையும், பிரகாசத்தையுங் கிரகிக்கின்றது. அந்தச் சோதி மண்டலங்களான கிரகங்களுக்கும் முதலில் முற்கூறிய குணங்களில்லை. அவைகளும் வேறு பொருள்களில் நின்றுதான் அக்குணங்களைக் கிரகிக்கின்றன. இவ்வாறு இக்கிரகங்களனைத்துஞ் சூட்டையும் பிரகாசத்தையுங் கிரகிப்பதற்கு ஆதாரமாக நின்று ஒன்றிலிருந்து மற்றொன்றிற்கு ஆகருஷித்து விடுகின்ற காரண கருத்தாவாகிய யான் கிரகங்களது கவர்ச்சியினால் ஒன்றோடொன்றைப் பொருந்தவைத்து அதனால் எல்லாச் சிருஷ்டித் தொழில்களையுஞ் செய்கின்றேன். இதுதான் யான் சிருஷ்டி செய்யும் விதம்.

நீ ஸ்திதி செய்வது எவ்விதம்?

ஜீவராசிகள் எப்பொழுது தமது தாய்மாரது வயிற்றிலிருந்து இவ்வுலகத்தின்கண் அவதரிக்கின்றனவோ, அப்பொழுதே யான் அவைகளின் பாதுகாப்பிற்காக வந்து அவைகளோடு சேருகின்றேன். யான் கொடுக்கும் ஆறுத

வினுற்ருன் அவைகள் தமது தாய்மாரது கருப்பப் பாத்திரத்துள் கிடந்து அநுபவித்த கஷ்டங்களெல்லாவற்றையும் மறந்து சுவாசமானது நிலைக்கப்பெற்று வாய்விட்டு அழுகின்றன. எனது அங்கத்தின் ஓர் பாகமாகிய வாயுவானது இல்லாவிட்டால் அக்குழந்தைகளொன்றும் உயிர் தரித்து இவ்வுலகத்தின்கண் இருக்கமாட்டாது. ஸ்தாவர ஜங்கமப் பொருள்களாகிய ஒவ்வொன்றுந் தனது உற்பவ காலத்தில் எனது நிறமாகிய வெளிறின ஓர் மஞ்சள் நிறமாயிருக்கும். அதுதான் எனது சுபாவ நிறம். ஆனுல் அவைகள் அப்படியிருந்த கொஞ்ச நேரத்திற்கெல்லாம் யான் எனது அம்சமாகிய வாயுவைக்கொண்டு அவைகளை இரட்சிப்பதற்காக அவ்வாயுவை அவைகளின்மீது பிரவேசிப்பிக்கின்றேன். அதனுல் அவைகள் தாம்சொந்த நிறத்தை விட்டும் வேறு நிறத்தை யடைகின்றன. தானிய முதலியவைகளை விதைத்தாலும் அவைகளிலிருந்து முதலிலுண்டாகின்ற நிறம் வெளிறின ஓர் மஞ்சள் நிறமாகவேயிருக்கின்றது. ஆனுல் அவைகள் வாயுவினது பிரவேசத்தால் அந்நிறத்தை யொழித்துப் பச்சை நிறத்தை ஏற்கின்றன. இவ்வாறு உலகத்திலுள்ள ஒவ்வொன்றையும் யான் எனது பாகமாகிய வாயுவைக் கொண்டு வளர்த்து அவைகளை யிரக்ஷிக்கின்றேன். இதுதான் யான் ஸ்திதி செய்யும் விதம்.

நீ சங்காரத்தொழில் எவ்வாறு செய்கின்ருய் ?

கொடுங்காற்று, அதியுஷ்ணம், எரிநட்சத்திரம், இடி, மின்னல், பெருமழை முதலியவைகளாற் செய்கின்றேன்.

திரோபவஞ் செய்வது எவ்விதம் ?

யான் என்னிலிருந்துண்டான காற்று, நெருப்பு, தண்ணீர், மண்ணாகிய நால்வகைப் பூதங்களாலும் அளவற்ற செய்கைகளைச் செய்கின்றேன் இன்று உருவத்தோடிருப்பவை மறுநாள் மறைந்துபோகின்றன. நேற்று உடலோடிருந்தவை இன்று புகையாகின்றன. சில தினங்களுக்குமுன் வெறும் வெளியாயிருந்த ஓர் மைதானம் சொற்ப காலத்தில் கோட்டை, கொத்தளம், கோபுரம், அரண்மனை, மாளிகை முதலியவைகளையுடைய பட்டினமாய்ப் பிரகாசிக்கின்றது. அளவற்ற மாடமாளிகை, கூடகோபுரங்களையுடைய பெரிய பட்டினங்கள் இருந்த இடங்கூடத் தெரிவதற்கு முடியாத விதத்திற் பாழாகிப் போகின்றன. ஆதலால் ஆகாயமாகிய என்னுள் காணப்பட்ட யாவும் மாயையெனவும், அது எனது திரோபவத் தொழிலெனவும் ஒவ்வொருவரும் தெரிந்துகொள்ள வேண்டும். இதுதான் யான் திரோபவஞ் செய்யும் விதம்.

நீ அநுக்கிரகஞ் செய்வது எவ்விதம் ?

மனுஷியர்கள் யாவராலும் முடிவில் விரும்பப்படுவது உன்னதபதவியான பரமபதத்தையல்லவா ? யான் உலகத்தில் அதிவிலாசமாய்க் காணப்படுகின்ற இம்மண்ணைத் தண்ணீரிலொடுக்கித் தண்ணீரை நெருப்பிலொடுக்கி நெருப்பைக் காற்றிலொடுக்கி வாயுவை ஆகாயமாகிய எனதகத்தொடுக்கி அநுக்கிரகஞ் செய்கின்றேன். இதுதான் யான் அநுக்கிரகஞ் செய்யும் விதம்.

இவ்வியாச்சியத்தைப் பற்றி உனக்குத் தெரிந்ததுயாது ?

ஒன்றுமில்லை.

வாதி வக்கீல் கிருசும், 5-ம், சாக்ஷி விடையும்.

சிருஷ்டி முதலிய ஐந்தொழில்களையுஞ் செய்யும் நீ இவ்வியாச்சியத்தைப்பற்றி எனக்கு ஒன்றுந் தெரியாதென்று சொன்னதற்குக் காரணம் யாது?

யான் மிகவும் வல்லவனாய் இவ்வைந்தொழில்களையுஞ் செய்து வந்தாலும், எனக்குப் பிரத்தியேகமாகக் கண்களோ, காதுகளோ, கால்களோ, கைகளோ, வாயோ, அறிவோ? ஒன்றுங் கிடையா. இதுதான் அதற்குக் காரணம்.

உனது வாசஸ்தானம் யாது?

எனது முக்கிய வாசஸ்தானம் மனுஷியருடைய சிரசு. அதைத்தான் அவர்கள் ஆகாயமென்று சொல்லுகின்றார்கள். யான் அங்கிருந்து செய்கின்ற செய்கைகளெல்லாவற்றையும் என்னாற்கூட அறிவதற்கு மார்க்கமில்லை. என்னையும் யாரோ? ஒரு பிரத்தியேகச் சத்தியிருந்துதான் நடத்துகிறதாகத் தெரிகிறது.

உனக்கு வயதெத்தனை?

தெரியாது.

கோர்ட்டார் வினாவும், 5-ம், சாக்ஷி விடையும்.

வாக்குமூலம் வாசிக்கக் கேட்டாயா?

கேட்டேன்.

சரிதானா?

ஆம்.

பிரதிவாதி பக்கம் 5 ம், சாக்ஷி ஆகாயம் (கை—து)

பிரதிவாதி பக்கம் 6-ம், சாக்ஷி

மெய் சத்தியஞ்செய்து

தெரிவித்த வாக்குமூலம்.

சர்வ வல்லமையுள்ள தெய்வஞ்சாக்ஷியாக

நான் சொல்வதெல்லாம் உண்மை.

பிரதிவாதி வக்கீல் வினாவும், 6-ம், சாக்ஷி விடையும்.

உனது பெயர் யாது?

மெய்.

வயதென்ன?

நிச்சயமில்லை.

நீ இவ்வியாச்சியத்திற் பிரதிவாதிகளான ஆன்மாவையுஞ் சரீரத்தையும் அறிவாயா?

அறிவேன்.

உனக்கும் 2-ம், பிரதிவாதியாகிய சரீரத்திற்கும் யாதாவது சம்பந்த முண்டா?

உண்டு.

எவ்வித சம்பந்தம்?

பெரிதான சம்பந்தம்.

அது எவ்வாறு?

சந்திரனு மொளியும் போலவும், நெருப்பும் புகையும் போலவும்.

உங்களிருவருள்ளும் மூத்தவர் யாவர்?

அதைப்பற்றிச் சொல்ல முடியாது.

சொல்ல முடியாததற்குக் காரணம் யாது?

நான் ஆகாயத்தையும் பூமியையும் ஒன்றாகக் காட்டுகின்ற அதிவினோதமான ஒரு கண்ணாடியைப் போலிருக்கின்றேன். அண்டத்திலுள்ளது பிண்டத்திலென்றாற்

போல அண்டமாகிய எனது சிரசினிடத்துள்ள மூளையினது சலனமானது ஆகாயத்தினசைவைப்போ லிருக்கின்றது. இருகண்களும் சூரிய சந்திரர்க்கறிகுறியா யிருக்கின்றன நெற்றியிற் சிலவேளைகளிற் பளீர் பளீரென்று இடைவிட்டுப் பிரகாசிக்குந் தன்மை நட்சத்திர கணங்களைப் போலிருக்கின்றது. இரு காதுகளின் சத்தமானது மேகத்தின் முழக்கத்தைப் போன்றிருக்கின்றது. இரு நாசிகளாலும் சுவாசிக்கப்படுகின்ற சுவாசமானது சிறுகாற்று, பெருங்காற்றுகளைப்போ லிருக்கின்றது. கண்களில் தோற்றுநிற்கும் உக்கிர கோபமானது மின்னல், எரிநட்சத்திர முதலியவைகளைப்போ லிருக்கின்றது. கண்களிலிருந்துண்டாகும் கண்ணீரானது சிறுமழை, பெருமழைகளைப்போ லிருக்கின்றது. அன்றியும், சிரசினடிப்புறத்துள்ள இதயம் சூரியனைப்போலவும், பித்து செவ்வாயைப் போலவும், மாங்காய் சுக்கிரனைப்போலவும், இரத்த தாரைகள் ஆறு, நதி முதலியவைகளைப் போலவும், வியர்வை பனியைப் போலவும், அங்கத்தின் நடுக்கம் பூகம்பத்தைப்போலவும், மலாசயம், சலாசய முதலியன சமுத்திரம், தடாக முதலியவைகளைப் போலவும்; கால், கை, விரல் முதலியவை மரம், கொடி, செடி முதலியவைகளைப் போலவும், ஈரல் முதலியவை மலைகளைப் போலவும், உரோமங்கள் புற்பூடு முதலியவைகளைப் போலவு மிருக்கின்றன. இவ்வாறுள்ள எனது அங்கத்தில் முக்கியாம்சமானது சிரசாகும். அவ்வங்கத்தின் மேலுங் கீழுமுள்ள அவயவங்களுக்கு ஸ்பரிசித்தறிகின்ற ஓரே அறிவுதானுள்ளது சிரசிற்கோ? அப்படியல்ல, அதனிடத்துள்ள பஞ்சேந்திரியங்களாலும் பார்த்தறிதல், கேட்டறிதல்; முகர்ந்தறிதல், சுவைத்தறிதல்,

ஸ்பரிசித்தறிதலாகிய ஐயறிவுகளு மிருக்கின்றன. அன்றி யும், நவதுவாரங்களையுடைய தேகத்திற்கு வாயாகிய வாயி லும் புறந்திண்ணையாகிய மூக்கும் சிறு சன்னல்களாகிய கண்களும், பெரிய சாளரங்களாகிய காதுகளு மிருப்ப தோடு சிரசின்கண் மூளையுமிருக்கின்றது. அச்சிரசை யுற்றுநோக்கில் முகத்தினிடத்துள்ள சிரேஷ்டேந்திரியங் களும் மூளையு மடங்கிய கபாலத்தை மேற்சிரசாகவும், வாயடங்கிய பாகத்தைக் கீழ்ச் சிரசாகவுஞ் சொல்லலாம். அக்கபாலத்தி லெட் டெலும்புகளும், காதுகளி லாறெ லும்புகளும், முகத்திற் பதினாந் தெலும்புகளு மிருக்கின் றன. மூளையான து வளருந்தோறுங் கபாலமும் வளர வேண்டுவதால் அவ்வெலும்புகள் அங்குமிங்குமோடி ஒன் றோடொன்று புணர்ந்து சேர்ந்துகிடக்கின்றன. முகத்தின் மேற்புறத்து அரையெலும்பிரண்டும், அண்ணக்கெலும் பிரண்டும், துந்தவெலும்பிரண்டும், கண்ணீரெலும்பிரண் டும், மூக்கெலும்பிரண்டும் சன்னவெலும்பிரண்டும், கொழு வெலும்பிரண்டும், மோவாயெலும் பொன்றும், நாவெலும் பொன்றுமாகப் பதினாந்தெலும்புகளிருக்கின்றன. இவ் வெலும்புகள் முகத்திற்கு வடிவத்தைத் தருகின்ற மிகவும் மெதுவான எலும்புகளாம். அன்றியுங் கீழ்ப்பாகத்தில் தாடியெலும்பு, நாவெலும்பாகிய இரண்டெலும்புகளும் மேலுங் கீழுமாய் முப்பத்திரண்டு பற்களுமிருக்கின்றன. ஒரு யௌவனப் புருஷனது தேகத்தைப் பரிசோதித்தால் அதில் ஒருபடி இரத்தமும், இரண்டரைப்பங்கு நீரும், ஐந்துபடி பித்தமும், ஒன்றரைப்பங்கு சிலேட்டுமமும், இரண்டுபடி மேதசும், ஒன்றேமுக்காற்பங்கு மலமும், அரைப்படி சிறுநீரும், மூன்றிறாத்தல் மூளையும், முந்நூற்

றுபது எலும்புகளும், பொருத்துக்களி லிருநூற்றுப் பத்து எலும்புகளும், மூன்றரைக்கோடி யுரோமமும், எழுபத்தீராயிரம் நரம்புகளும், ஒன்பது துவாரங்களும், பதினான்கு வாயுகளும், கை கால்களில் நாற்பத்து நான்கும், வயிற்றின் மூன்றும், மார்பிலொன்பதும், முதுகிற் பதினொன்கும், கழுத்திற் பன்னிரண்டும் தலையிலிருபத்தைந்துமாக நூற்றேழு மருமங்களும், ஒன்பது தத்துவங்களு மடங்கியிருக்கும். தத்தம் கைகளுக்குத் தொண்ணூற்றாறு அங்குல அளவு எல்லாத் தேகிகளுக்குமுள்ளன. அத்தேகத்தின் நடுவிற்றான் மூலாதாரமிருக்கின்றது. அதிலிருந்து மேலாகச் சென்ற சுழுமுனை கபாலதாமரையிற்போய் முட்டி யிருக்கின்றது. இவைகளுக் கிடையிற்றான் ஆதாரங்களின் நிலைகளிருக்கின்றன. மூலாதாரத்திலிருந்து கபாலம் வரை பன்னிரண்டு நிலைகளிருக்கின்றன. இந்நிலைகளைக் கொண்ட ஆதாரங்களில் மூர்த்தி பேதங்களோடு கூடிய பரப்பிரமர்கள் ஸ்திதி செய்கின்றார்கள். அதனாற்றான் எங்களில் மூத்தவரின்னாரென்று சொல்ல முடியாதென்றேன். இதுதான் அதற்குக் காரணம்.

அவ்வாதாரங்களில் மூர்த்திப் பேதங்களோடு கூடி ஸ்திதி செய்கின்ற பரப்பிரமர்கள் யாவர்?

விநாயகர் முதலிய அறுவர்.

அவர்களுள் யார்? யார்? எவ்வெத்தானங்களிலிருக்கின்றார்கள்?

விநாயகர் மூலாதாரத்திலும், பிரமன் சுவாதிட்டானத்திலும், விட்டுணு மணிபூரகத்திலும், உருத்திரன் அநாகதத்திலும், மகேசுரன் விசுத்தியிலும், சதாசிவன் ஆக்கினையிலு மிருக்கின்றார்கள்.

ஜீவராசிகளருந்துகின்ற ஆகாரங்கள் எவ்வாறு செரித்து வெளியாகின்றன ?

முதலாவது: அவைகள் அருந்துகின்ற ஆகாரங்களனைத்தையும் பற்கள் பொடிப் பொடியாக நறுக்குகின்ற சமயத்தில் உமிழ்நீர் அவற்றை நனைக்கின்றது. அப்பால் நனைந்து குழைந்த அவ்வாகாரமானது அமாசயத்திற் போய்ச் சேர்ந்து கீழ்மேலாக உருளுவதனாலும் அமாசய இரசம் அதனோடு சேர்ந்து அவற்றின் சாரத்தை வேறு படுத்துவதனாலும் சோஷமணிகள் அவகளனைத்தையு முறிஞ்சியிழுக்கின்றன. அமாசயத்திற் கிடந்துருண்ட உருளை சற்றுநேரஞ் சென்ற பிற்பாடு ஆதியிலிருந்த வடிவம் முற்றும் மாறிப் பக்குவாசயத்திற் செல்லுகின்றது. அவ்விடத்துள்ள பித்தமும் நீரும் அதனோடு கலந்து அந்த உருளையி னுப்பையும் நீரையும் வேறுபடுத்தி யுருட்டி ஒருவித வெண்ணிறத்தைக் கொண்ட கூழைப்போலாக்குகின்றன. அவ்விடத்துள்ள குடல்களினது சலனத்தால் அக்குடல்களினுள்ள மயிர்ப்பிரமாணமான மிகவுஞ் சிறிய இரசமுளைகள் அந்தச் சாரத்தை இடைவிடாம லுறிஞ்சி யிழுத்துக் குதம் வரை சென்று இரத்தத்தோடு சேர்க்கின்றன. அவ்வுருளையினது சாரங்களனைத்தும் போனதன் பின்னர் அந்த மலினம் அபானவழியாய் வெளியிற் செல்லுகின்றது. வாய்முதல் குதம் வரை இருபத்தெட்டு முழ நீளமுள்ள தோலினலான ஓர் குழல் சுருண்டு வளைந்து கிடக்கின்றது. அந்தக் குழல்வழியாற்றான் ஆகார முதலியன உட்புறத்தும் மலசலாதிகள் வெளிப்புறத்துஞ் செல்லுகின்றன. இதுதான் யான் உணவுகளை செரிப்பித்து வெளியாக்கும் விதம்.

நீ கூறிய அந்தத் தோற்குழல் நேரே கிடக்காமல் சுருண்டுருண்டு கிடப்பதற்குக் காரணம் யாது?

நேரே கிடந்தால் மனுஷியர்களருந்துகின்ற ஆகாரங்களெவ்வளவும் அப்பொழுதே குதத்தின் வழியாக வெளிப்புறத்தில் வந்துவிடும் அப்படி. வாராதவண்ணந்தான் அக்குழல் சுருண்டுருண்டு கிடக்கின்றது. இதுதான் காரணம்.

ஆகாரங்கள் ஆமாசயத்தின் தத்துவத்தால் வேறுபடுத்தப்பட்டதின் பின்னர் அவைகள் எவ்வாறாகுகின்றன?

குடல்களினுள் கூழைப்போல வேறுபட்டுச் சென்ற அவ்வுணவினது சாரத்தை இரசமூலைகள் உறிஞ்சியிழுத்தபின் அவ்விசேஷ சாரமானது மிகவும் மெதுவான குழல்களின் வழியாய்ப் போய்ப் பிரதானமான ஒரு குழலிற் சேர்ந்து இதயத்தினடிப்புறத்துள்ள இரத்த நாடியைத் தாண்டி இரத்தமாகி அப்பால் ஓர்வகைத் தோற்குழல்களின் வழியாகத் தேகத்தில் எல்லாவிடங்களினுஞ் சஞ்சரிக்கின்றது.

இவ்விரத்தத்தினது மூலஸ்தானம் யாது?

இதயம்.

இவ்விரத்த சஞ்சாரத்தால் தேகத்திற் கேதேனும் பிரயோசன முண்டா?

உண்டு.

அது யாது?

இதயத்திலிருந்து தேகமுழுவதுஞ் சுத்தவிரத்தம் பாவுகின்றது. அசுத்த இரத்தத்தைச் சுத்தீகரிப்பதற்காக இதய ஸ்தானத்திற்கு மடக்கிக்கொண்டு செல்லுகின்றது. இரத்தத்திற் போதுமான சூடுண்டாயிருப்பதால் தேகத்

திலும் போதுமான சூடுண்டாகின்றது. இதுதான் பிரயோசனம்.

எப்பொழுதுந் தேகத்தி லிரத்த மோடிக்கொண்டிருக்கின்ற தென்பதற்கு யாதாவது திருஷ்டாந்தமுண்டா?

உண்டு.

அது யாது?

தேகத்தில் எந்தப் பக்கத்திலாவது ஒரு ஊசியாற் சற்று குத்தினால் உடன்றானே அக்குத்தின் வழி இரத்த முண்டாகும். இதுதான் அதற்குத் திருஷ்டாந்தம். ஒரு பொழுதாவது ஒரு தேகத்தில் இரத்த ஓட்டமில்லாதிருந்தால் அப்பொழுதே அத்தேகத்தையுடையோன் மாண்டு போவான்.

இவ்விரத்த வோட்டமிருப்பது மனுஷியர்களுக்கு மாத்திரமா? அல்லது மிருக முதலியவைகளுக்கு மிருக்கின்றதா?

ஜீவராசிகளெல்லாவற்றிற்கு மிருப்பதோடு தாவரங்களுக்கும் ஓர்வகை இரத்தமிருக்கின்றது.

இதயம் தேகத்திற் கெவ்விடத்தி லிருக்கின்றது?

மார்பினது மத்தியிற் சற்று இடப்பக்கமாகப் பெரிய இரத்த தாரைகளா லோங்கப்பட்ட இதயாசயமென்னும் நேர்மையான ஓர் பையிலிருக்கின்றது.

கெட்ட இரத்தங்களைச் சுத்தப்படுத்துவதற்காக இதய ஸ்தானத்திற்கு அந்த இரத்தங்களைத் திருப்பிக் கொண்டு போகின்றதாகச் சொன்னாயல்லவா?

ஆம்.

அங்கே அவ்விரத்தம் சுத்தப்படுவது எவ்வாறு?

இதய ஸ்தானத்தில் இருபாகமாகி நான்கு அறைக ளிருக்கின்றன. தேகத்தில் நின்றும் நரம்புவழியாய்த் திரும்பிவருகின்ற கெட்ட இரத்தம் இதயத்தினது வலப் பக்கத்திலுள்ள மேலறையிற் பிரவேசிக்கின்றது. இடப்பக் கத்திலுள்ள கீழறையினின்றுந் தேகத்திற் செல்லவேண் டிய செந்நிறமுள்ள சுத்த இரத்தமுண்டாகின்றது. ஆனால் கருநிற முள்ள கெட்ட இரத்தமானது சுத்தமான பின் னரே புதிதாகத் தேகத்தினிடத்துச் சஞ்சரிப்பதற்காக இதய ஸ்தானத்தினது வலப்பக்கத்திலுள்ள மேலறையை விட்டுக் கீழறையிற்சென்று அங்கிருந்து சுவாசகோசங் களுக்குத் தாண்டிச் செல்லுகின்றது. அவ்விடத்துள்ள நரம்புகள் மிகவும் நுண்ணியவாய் மெலிந்திருப்பதால் அக்கரிய கெட்ட இரத்தம் சுவாசத்தோடுகூடி நாசிவழி யாய் வெளியிற் போகின்ற மூச்சினோடு தனது மலினங் களை யொழித்தும், உள்வாங்கும் மூச்சினோடு புதிய வல்ல மையைப் பெற்றுஞ் சுத்தப்படுகின்றது.

தேகத்தினிடத்திருக்கின்ற கரிய உரோமங்க ளிருந் தாற் போலிருந்து கொஞ்சகாலத்திற்குள் வெண்ணிற மடைந்து விடுகின்றனவே, அதன் காரணம் யாது?

கோர்ட்டார்.

இவ்வினா இவ்வியாச்சியத்திற்கு யாதொரு பிரயோ சனத்தையுந் தராதென்று தெரிவதனால் மறுத்திருக்கின் றோம்.

இவ்வியாச்சிய சம்பந்தமாக உனக்கு என்ன தெரி யும்?

ஒன்றுந் தெரியாது.

வாதி வக்கீல் கிறுசும், 6-ம், சாக்ஷி விடையும்.

இந்த வியாச்சியத்தைப்பற்றி ஒன்றும் எனக்குத் தெரியாதென்று சொன்னாயல்லவா ?

ஆம்.

அப்படிச் சொன்னதற்குக் காரணம் யாது ?

எனக்கு எப்பொழுதும் யாதாவது ஆகாரங் கிடைத்துக்கொண்டிருந்தால் அதனால் யான் மிகவும் உணர்வுள்ள ஓர் தைரியசாலியாக விருப்பேன். ஒருவேளை ஆகாரங் கிடைக்காவிட்டால் அதனால் எனது உணர்வும் வல்லமையுங் கெட்டு விவகாரங்களொழிந்து காதுகளடைத்துக் கண்கள் மருண்டு நாவு தளர்ந்துபோகும். ஆகாரஞ் சரியாய் ஒழுங்குடனிருந்தால் எனது கால்கள் நடக்கும். கைகள் வேலை செய்யும். மாமிசங்களில் இரத்தப் புஷ்டியுண்டாகும். நாடிகளுக்கு வன்மை யேற்படும். தாதுகளதிகரிக்கும். இவ்வாறுள்ள தத்துவங்களினால் வேறு குழந்தைகள் ஜனிப்பதற்கும் ஏதுவாகின்றது. ஆனால் யான் வேலை செய்கின்றேன். பொருள் சம்பாதிக்கின்றேன். என்னைச் சேர்ந்த யாவரையு மிரட்சிக்கின்றேன். உண்ணுகின்றேன். உறங்குகின்றேனென்பனவே யல்லாமல் இவைகளனைத்தையும் நடத்துவோர் யாவரென எனக்குத் தெரியாது. அதனாற்றான் எனக்குத்தெரியாதென்று சொன்னேன். இதுதான் அதற்குக் காரணம்.

உனக்கும் ஆன்மாவுக்கும் எவ்விதச் சம்பந்தமாவது உண்டா ?

உண்டு.

அது எவ்விதச் சம்பந்தம் ?

அதைப்பற்றிச் சொல்லத் தெரியாது.

கோர்ட்டார் வினவும், 6-ம், சாக்ஷி விடையும்.

வாக்கு மூலம் வாசிக்கக் கேட்டாயா ?

கேட்டேன்.

சரிதானா ?

ஆம்.

பிரதிவாதி பக்கம் 6-ம், சாக்ஷி மெய் (கை—து.)

பிரதிவாதி பக்கம். 7-ம், சாக்ஷி

நாக்கு சத்தியஞ்செய்து

தெரிவித்த வாக்குமூலம்.

சர்வ வல்லமையுள்ள தெய்வஞ் சாக்ஷியாக
நான் சொல்வதெல்லாம் உண்மை.

1-ம், பிரதிவாதி வக்கீல் வினவும், 7-ம் சாக்ஷி விடையும்.

உனது பெயர் யாது ?

நாக்கு.

தொழிலென்ன ?

இரசமறிதல், பேசுதல் முதலியன.

அவற்றை விவரமாய்ச் சொல் ?

இப்பூமியினிடத்துள்ள சகல காரியங்களும் என்னாற்றான் நடத்தப்படுகின்றன. எழுத்துக்களின் மூலமாய் மொழிகளை வாயிலிருந்து வெளியிற் புறப்படுவிப்பவனும் யான்றான் யானில்லாவிட்டால் ஒருவனது மனோவெண்ணங்களை இன்னொருவன் உணரவும் தனது மனோவெண்ணங்களை அவனுக்குத் தெரிவிக்கவும் முடியவே முடியாது. என்னாற்றான் சங்கீதங்களையும் வேதசாஸ்திரங்களினிரகசியங்களையும் பிறவற்றையும் காதுகள் கேட்கின்றன. ஒரு நியாயாதிபதி ஒரு குற்றவாளியின்மீது தண்டனை நியமிப்

பதும், ஒரு அரசன் தனது சேவகர்களிடத்தில் அவர்களது கடமைகளை நிறைவேற்றுவதற்குக் கட்டளையிடுவதும், ஒருவக்கீல் தன் பக்கத்தார்களது நியாயங்களை விவகரிப்பதும், ஒரு யாசகன் யாசிப்பதும், ஒரு பண்டிதன் பிரசங்கிப்பதும், நாயகன் நாயகிமார் சரச சல்லாபமாடுவதுங் குழந்தையர்கள் தங்கள் தாய் தந்தையர்களிடத்துத் தங்களது இஷ்டத்தை நிறைவேற்ற வேண்டிக் கொள்வதும் எனது பிரத்தியேக வல்லமையினாற்றான். ஒரு பாகவதன் இராக விஸ்தாரஞ்செய்வதும், ஒரு பிணியாளன் ஔஷதமுட்கொள்ளுவதும், ஒரு மாமிச பட்சணி மாமிசமருந்துவதும், ஒரு குழந்தை பால் குடிப்பதும் எனது சத்தியினாற்றான். எனது விசேஷ குணத்தினாற்றான் ஜீவராசிகள், உவர்ப்பு, கைப்பு, துவர்ப்பு, புளிப்பு முதலிய அறுசுவைகளையும் நிதானித்துத் தெள்ளத்தெளிய உணருகிறார்கள். ஒரு நிரபராதியைக் கொலைபாதகனாக்குவதும், ஒரு கொலைபாதகனை நிரபராதியாக்குவதும் யான்றான். ஒருவனைப் புகழுவதும் ஒருவனை இகழ்வதும் என்னைத் தவிர வேறொருவருமிலர். யானே ஒருவனை ஒருவனோடு நேசிப்பிக்கின்றேன். யானே ஒருவனை ஒருவனோடு விரோதிப்பிக்கின்றேன். சத்தியத்தையும் அசத்தியத்தையுஞ் சிருட்டிப்பதும் அழிப்பதும் யான்றான். சுருக்கிச்சொன்னால் இவ்வுலகத்தின்கண் சகல குண தோஷங்களையும் வியாபகப்படுத்துவோன் யானே. இதைக் கருதியன்றோ! வள்ளுவப் பெருமானார் "யாகாவாராயினும் நாகாக்க காவாக்கால், சோகாப்பர் சொல்லிழுக்குப்பட்டு" என்று கூறினார். ஆனால் என்னைக் காப்பதற்குத் தானென்று சொல்லும்படி முப்பத்திரண்டு பற்கள் என்னைச் சூழ

கிறுத்தப்பட்டிருக்கின்றன. யான் சமயத்திற்குத் தக்க படி வளைபவனாகவும், நீள்பவனாகவும், சுருள்பவனாகவு மிருக்கின்றேன்.

ஆன்மாவையுஞ் சரீரத்தையுந் தெரியுமா ?

தெரியும்.

இவ்வியாச்சியத்தைப் பற்றி உனக்குத் தெரிந்தது யாது ?

ஒன்றுமில்லை

வாதி வக்கீல் கிருசும், 7-ம், சாக்ஷி விடையும்.

சரீரத்தை வளர்ப்பதற்கு ஏற்பட்ட சகாயிகளில் நீயும் ஒருவன்றானே ?

ஆம்.

உமிழ்நீருண்டாவது எவ்விடத்திருந்து ?

என்னிடத்திருந்து.

இவ்வியாச்சியத்தைப்பற்றி ஒன்றுந்தெரியாதென்று சொன்னதற்குக் காரணம் யாது ?

யான் மிகவுஞ் சிறிய ஒரு மாமிசத்துண்டம். என்னை இரட்சித்துக்கொள்ளுவதற்கும் உள்ளே அடக்கிக்கொள்ளுவதற்கும் வெளியில் வருவதற்கும் எனக்கு வல்லமையில்லை. யான் இருப்பது எப்பொழுதும் காவலுக்குள் தான் ஆதலால் மற்றவர் செய்யுஞ் செய்கைகளை எனக்குப் பார்ப்பதற்கு அவகாசங்கிடையாமற் போகின்றது. இதுதான் அதற்குக் காரணம்.

ஜீவராசிகளுக்கு உன்னால் வேறு யாதாவது பிரயோசனமுண்டா ?

உண்டு

அது யாது ?

சில மிருகங்கள் தங்கள் தங்கள் நாவுகளால் தங்களை நக்கித் தங்களது சரீரங்களை எப்பொழுதுஞ் சுத்தமாய் வைத்துக்கொண்டிருக்கின்றன. பசுக்கள் பிரசவகாலத்தில் தங்களது கன்றுகளை நாவால் நக்கி அவைகளின் சரீரங்களைச் சுத்தப்படுத்துகின்றன. சில ஜீவராசிகள் தங்களது குட்டிகளை நாவால் நக்கித் தங்களது சிநேகத்தை வெளிப்படுத்துகின்றன.

கோர்ட்டார் வினவும், 6-ம், சாக்ஷி விடையும்.

வாக்குமூலம் வாசிக்கக் கேட்டாயா ?

கேட்டேன்.

சரிதானா ?

ஆம்

பிரதிவாதி பக்கம் 7-ம், சாக்ஷி நாக்கு (கை—து)

பிரதிவாதி பக்கம் 8-ம், சாக்ஷி

கண் சத்தியஞ்செய்து

தெரிவித்த வாக்குமூலம்.

சர்வ வல்லமையுள்ள தெய்வஞ் சாக்ஷியாக

நான் சொல்வதெல்லாம் உண்மை.

1-ம் பிரதிவாதி வக்கீல் வினவும், 8-ம் சாக்ஷி விடையும்.

உனது பெயர் யாது ?

எங்கள் பெயர் கண்கள்.

நீங்கள் எத்தனை பேர் ?

இரண்டு பேர்.

நீங்களிருவரும் ஒன்றாய்ப் பிறந்தவர்களா?

ஆம்.

உங்களுக்குத்தொழில் யாது?

உலகத்திலுள்ள பொருள்களனைத்தையும் எங்களிற் பிரதிபலிக்கச்செய்து ஜீவராசிகளது இருதயத்தில் அவைகளது சொரூபங்களை அறிவிப்பது.

இவ்வொன்றே தொழிற்றானா? அல்லது வேறு குணங்களுமுண்டா?

வேறு குணங்களுமுண்டு.

அவை யாவை?

எங்களால் அநந்தகுணங்கள் ஜீவராசிகளுக்குண்டாகின்றன. இவ்வுலகத்திற்கு யாங்கள் மிகவும் பெரிய பிரயோசனங்களைச் செய்கின்றோம். அவற்றை விவரமாய்ச் சொல்லப் புகுந்தால் இப்பிரபஞ்சத்தினது முடிவுகாலம் வரை சொல்லலாம். யாங்கள் மிகவும் மேலானவர்களென்பது யாங்கள் வாசஞ்செய்யும் உன்னத ஸ்தானத்தினாலேயே யாவருக்கும் உள்ளங்கை நெல்லிக்கனிபோல் விளங்கா நிற்கும். எல்லா அவயவங்களிலும் மேலானது சிரசு. அச்சிரசிலும் மேலானவை யாங்கள். அதனாற்றான் யாங்கள் உன்னத ஸ்தானத்தில் அமைக்கப்பட்டிருக்கிறோம். எங்களது பாதுகாப்பிற்காகப் பல அறிகுறிகளேற்பட்டிருக்கின்றன. முதலாவது:—எங்களிடத்து மண்களோ, தூசிகளோ, வேறு மலினங்களோ, சேராத வண்ணம் எங்களை ஒரு குழியிலிருத்தி அக்குழியின் மேற்புறத்து இமைகளையும் அவற்றின் மேற்புறத்துப் புருவங்களையும் வளைவாக அமைக்கப்பட்டிருக்கின்றன. சூடதிகரிக்கில் வாடிக் கெட்டுவிடுவோமெனக் கருதியே அக்குழிகளில்

எப்பொழுது மகலாத நீர் நிலையாக நிறுத்தப்பட்டிருக்கின்றது. அந்நீரினது உதவியினாற்றான் யாங்கள் எப்பொழுதுங் குளிர்ச்சியா யிருக்கின்றோம். ஒரு பொருளைக் குறிப்பாகப் பார்க்கும்போதாவது சந்தோஷமோ, வியசனமோ, உண்டாகும்பொழுதாவது அக்குழிகளில் நிலைபெற்று நிற்கின்ற நீர் பொங்கி அதிகரித்து வெளியில் வருகின்றது. ஜீவராசிகளது புத்தி ஒரு பொருளிற் பிரவேசித்து அப்பொருளைப்பற்றி ஆராய்ந்து கொண்டிருந்தாலும் எங்களது மேற்புறத்திருக்கின்ற இமைகளிற் கீழ்ப் பக்கமிருக்குஞ் சிறிய இமை எங்களை-மூடவுந் திறக்கவுஞ் செய்துகொண்டிருக்கின்றது. இவ்வாறு இமைகள் எங்களது செய்கைகளை மாறாமல் செய்து வருவதனால் எங்களுக்கு விசேஷ ஒரு சுகமேற்படுகின்றது. முதலாவது:—அந்த இமைகள் எங்களுக்கு யாதொரு தீங்கும் நேரிடாமற் காக்கின்றன. இரண்டாவது:—எங்களிடத்துச்சேர்ந்த கல், மண், தூசி முதலியவைகளை அப்போதைக்கப்போது துடைத்து ஒரு புறத்தி லொதுக்குகின்றன. இவ்விமைகள் இவ்வாறு அதிவேகமாய் மூடவுந் திறக்கவுஞ் செய்யாதிருந்தால் சொற்பநேரத்தில் எங்களது பிரகாசத்தினாலுண்டாகின்ற வெப்பமானது எங்களுக்கு ஒருவித எரிவைத்தந்து யாங்கள் நிலைத்திருக்குங் குழிகளினிடத்தள்ள நீரை அதிசீக்கிரத்தில் அழைத்துக்கொண்டு வெளிப்புறத்துச் செல்லுகின்றது. அதனால் அந்த இமைகளின் செய்கைகள் எங்களுக்கு இன்றியமையாத குணகரமாயிருக்கின்ற நீரிற்குப் போதுமான குளிர்ச்சியைக் கொடுக்கின்றன. எங்களை மனுஷியர்கள் மிகவும் மேன்மையாகக் கருதுகிறார்க ளென்பதற்கும் அந்த திருட்

டாந்தங்களிருக்கின்றன. முதலாவது: மனிதர்கள் கடவுளைத் தோத்திரஞ் செய்வதில் "கண்ணே" "கண்மணியே" என்று கூறுகின்றார்கள். அன்றியுந் தங்களது மனைவிமார்களையோ, புத்திரர்களையோ, அன்பின்மேலீட்டால் அவ்வண்ணம் சொல்லுகின்றார்கள். இவ்வாறே ஒவ்வொரு தேசத்திலுமுள்ள ஒவ்வொருவரும் தாங்கள் பேசுகின்ற அவ்வப் பாஷைகளினால் தங்களுக்கு மிகவும் அருமையான பொருள்களைக் கூறுகின்றார்கள். மேலும் உலகத்தில் இன்றியமையாததும் மனுஷியர்களை அஞ்ஞானாந்தகாரத்தில் நின்றுங் கரையேற்றுவதுமான கல்வி, அறிவு முதலியவைகளுக்குக் கூட உலகிலுள்ளார் எங்களது நாமத்தைக் கொடுத்து அழைக்கின்றார்கள். இதனாலும் எங்களது மேன்மை இன்னதென வெள்ளிடை மலைபோல் விளங்குகின்றது. கற்றோரே கண்ணுடையாரெனவும், கல்வியே கண்ணெனவும, கற்றிலார் கண்ணில்லாக் குருடரெனவும் பெரியோர்கள் கூறுகின்றார்கள்.

உலகத்திற் காணப்பட்ட பொருள்களனைத்தையும் உங்களிற் பிரதிபலிக்கச்செய்து அவற்றினது சொரூபத்தை ஜீவராசிகளது இருதயத்தில் தெரிவிப்பதாக நீங்கள் சொன்னீர்களல்லவா ?

ஆம்.

அதைத்தவிர வேறு தொழில்களோ, ஆச்சரியகரமான செய்கைகளோ, உங்களிடத்துண்டா ?

உண்டு.

அவை யாவை ?

வேறொருவராற் செய்து முடிப்பதற்கும் நினைப்பதற்கு மியலாத பல செய்கைகளை யாங்கள் சமபத்திற்குத்

தக்கபடி செய்வதனல் மனுஷியர்களுக்கு அளவற்ற பிரயோசனங்களுண்டாகின்றன. ஒருவனது இதயத்தின்கண்ணிருக்கின்ற எண்ணத்தை யாங்கள் அதிநுட்பமாய் மிகவும் நுட்பப்புத்தியுள்ள மற்ருெருவனுக்குத் தெரிவிக்கின்ரேம். ஒருவனைப் பார்த்த வளவில் மற்றவனது கோபம், சந்தோஷம், தயை, பொருமை முதலிய குணங்களை அவனிடத்திருந்தும் வெளிப்படுத்துகின்ரேம். குரூரநோக்கம், கிருபாநோக்கமாகிய நாமபேதங்கள் அவசரத்திற்குத் தக்கவாறு எங்களிடத்துண்டாகின்றன. யாங்கள் நேரே பார்ப்பதாலுல் கருணையினது அறிகுறி வெளிப்படமாட்டாது. கருவிழி எங்களில் ஒரு புறதது ஒதுங்கினின்ருற்ருன் அது வெளிப்படும். அப்பொழுது அந்நோக்கத்திற்குக் கடாக்ஷமென்று சொல்லுவார்கள். கொடிய விரோதங்களுண்டாகின்ற சமயத்தில் யாங்கள் அவற்றை மிகவும் நிச்சயமாய் ஒவ்வொருவருக்குந் தெரிவிக்கின்ரேம். அப்பொழுது யாங்கள் எங்களிடத்திருந்து நெருப்புப்பொறி சிந்தத்தக்க விதத்தில் மிகவுஞ் செந்நிறமடைந்திருப்போம். இவ்வாறு இதயத்தினிடத்துண்டாகின்ற சற்குண துற்குணங்களை உடனுக்குடன் வெளிப்படுத்துகின்ரேம். ஒருவன் வேருெருவனிடத்து யாதாவது கேட்டு வாங்கவேண்டுமென்ருவது அல்லது அவனல் யாதாவது உதவிபெற வேண்டுமென்ருவது அவனைத் தேடிவந்தால் வந்தவன் முதலாவது பார்ப்பது அவனது கண்களைத்தான். அது எதற்காகவென்ருல் அப்பொழுதுள்ள அவனது நோக்கத்தால் தனது காரியத்தின் சாத்தியாசாத்தியத்தை நிச்சயப்படுத்துவதற்கும், நிச்சயப்படுத்தியவாறு அவனிடத்துக்கேட்பதற்குந்தான்.

அவன் சற்குணத்தோடுஞ் சந்தோஷத்தோடு மிருப்பானு யின் அவற்றையும், துற்குணத்தோடும் கோபத்தோடு மிருப்பானுயின் அவற்றையும் அப்பார்வையானது தெரி விக்கின்றது: சற்குணத்தோடுஞ் சந்தோஷத்தோடுமிருந் தால் வந்தவன் தனது மனேவெண்ணங்களைத் தெரிவிக்க வும் காரியத்தை நிறைவேற்றவு மேதுவாகின்றது. துற் குணத்தோடுங் கோபத்தோடுமிருந்தால் வந்தவன் தனது மனேவெண்ணங்களை தெரிவிக்காமலிருக்கவும் தெரிவித் தால் நிறைவேருமற்போகவு மேதுவாகின்றது. இவ்வாறு ஒவ்வொரு பொருளினதும் விசேடங்களை இதயத்தினிடத் தும இதயத்தினிடத்துள்ள விசேடங்களை வெளிப்புறத் துந் தெரிவிப்போர் யக்கங்களே. இப்பூமியின்கண் பாக் கிய மில்லாதவர்கள் கண்ணில்லாதவர்களே. அவர்கள் இறந்த பிரேதத்திற் கொப்பானவர்கள். அவர்களது இதயம் எப்பொழுதும் பரிதாபத்தோடிருக்கும். இவ் வுலக சம்பந்தமான எவ்விதத் தொழிலும் அவர்களால் காணமுடியாது. இப்பிரபஞ்சமாகிய கோளத்திற்கு அவர் களன்னியர்களா யிருக்கின்ருர்கள். அவர்களுக்கு இப்பிர பஞ்சஞ் சூனியமா யிருக்கின்றது. ஆதலால கண்ணுள்ள வர்களே புண்ணியமுள்ளவர்கள்.

இவ்வியாச்சியத்திற் பிரதிவாதிகளான ஆன்மாவுஞ் சரீரமுந் தெரியுமா?

தெரியும்.

இவ்வியாச்சியத்தைப்பற்றி யாதாவது தெரியுமா?

ஒன்றுந் தெரியாது.

வாதி வக்கீல் கிருசும், 8-ம், சாக்ஷி விடையும்.

2-ம், பிரதிவாதியாகிய சரீரத்திற்கு ஒவ்வொரு செய்கையுஞ் செய்ய வழிகாட்டிக் கொடுத்தவர்கள் நீங்களல்லவா ?

அப்படி யிருக்கலாம்.

வேறுவிதமு மிருக்குமா ?

இருக்கும்.

அது யாது ?

எங்களிடத்து ஒவ்வொரு பொருளும் பிரதிபலிக்கும்போது அதை இதயமறிகின்றது.

சரீரத்தினது செய்கைகளனைத்திற்கும் நீங்கள் உபகாரிகளல்லவா ?

சில செய்கைகளுக்கு மாத்திரம் உபகாரிகள்.

அப்படியிருக்க, இவ்வியாச்சியத்தைப்பற்றி எங்களுக்கு ஒன்றுந் தெரியாதென்று சொன்னதற்குக்காரணம் யாது ?

யாங்கள் மிகவுஞ் சிறிய அளவுள்ள அவயவங்கள். எங்களைக்கூடக் காப்பாற்றிக் கொள்ளுவதற்கு எங்களுக்கு வல்லமையில்லை. எங்களை யாரோ ? ஒருவர் இவ்வாறு நடத்துகின்றார். அவர் யாவர், என்று தெரிவதற்கு எங்களுக்கு வன்மைபோதாது. ஆதலால் இவ்வியாச்சிய சம்பந்தமாக யாதொன்றும் எங்களுக்குத் தெரிவதற்கு மார்க்கமில்லை. இது சத்தியம். இதுதான் அதற்குக் காரணம்.

கோர்ட்டார் வினவும், 8-ம், சாக்ஷி விடையும்.

வாக்குமூலம் வாசிக்கக்கேட்டாயா ?

கேட்டேன்.

சரிதானா ?

ஆம்.

பிரதிவாதி பக்கம் 8-ம், சாக்ஷி கண் (கை—து.)

பிரதிவாதி பக்கம் 9-ம், சாக்ஷி

மூக்கு சத்தியஞ்செய்து

தெரிவித்த வாக்குமூலம்.

சர்வ வல்லமையுள்ள தெய்வஞ் சாக்ஷியாக

நான் சொல்வதெல்லாம் உண்மை.

1-ம், பிரதிவாதி வக்கீல் வினாவும், 9-ம், சாக்ஷி விடையும்

உனது பெயர் யாது ?

மூக்கு.

இவ்வியாச்சியத்திற் பிரதிவாதிகளான ஆன்மாவுஞ் சரீரமும் உனக்குத் தெரியுமா ?

தெரியும்.

இவ்வியாச்சியத்தில் இவர்கள் பிரதிவாதிகளாய் வந்த விபரம் யாதாவது தெரியுமா ?

தெரியும்.

நீ இவ்விடத்தில் எதற்காக விசாரணை செய்யப்படுகிறாயென்பது தெரியுமா ?

தெரியாது.

அது எதனால் ?

வக்கீல்களோ, பிரதிவாதிகளோ, இவ் வியாச்சிய சம்பந்தமாக என்னிடத்தில் ஒன்றுஞ் சொல்லவில்லை. அதனால்.

இந்தப் பிரதிவாதிகளிற் குற்றஞ்செய்தவரின்னாரென்று உனக்குத்தெரியுமா ?

தெரியாது.

நீ இதற்குமுன் எந்தக் கோர்ட்டிலாவது வாக்கு மூலங் கொடுத்ததுண்டா ?

இல்லை.

உனது தொழில் யாது ?

ஆச்சரியகரமான அளவற்ற பல தொழில்கள்.

அவற்றை விபரமாய்ச்சொல்.

யான் அவைகளை விபரமாய்ச் சொல்லப் புகுந்தால் இக்கோர்ட்டார் எனக்குக் கொடுத்திருக்கும் காலம் போதாதென்று கருதுகின்றேன். ஆயினுஞ் சிலவற்றை மாத்திரஞ் சொல்லுகின்றேன். முதலாவது எனது தொழிலினது மகத்துவத்தால் யான் அரைநாழிகை நேரமாவது ஒரு மனுஷியனது உட்புறத்து இல்லாதிருக்கில் அம்மனுஷியன் உயிரோடிருக்கின்றானா ? அல்லது இறந்துவிட்டானா ? என்ற சந்தேகம் பார்ப்பவர்களுக்குத் தோற்றுகிற்கும். "உயிரிருக்கின்றது" என்று நிச்சயமான ஒரு வார்த்தை சொல்ல வேண்டுமானால் எனது பிரவேசத்தால் மாத்திரம் சொல்லலாம். தாயினது கருப்ப வறையிலிருந்து ஒரு குழந்தை வெளிப்பட்ட உடன்றானே அக்குழந்தைக்கு யான் சுவாசத்தைக் கொடுத்து அதை இரட்சிக்கின்றேன். அது முதல் இராப்பகலாக யான் அக்குழந்தைச் சரீரத்தில் தங்கிச் சுவாசோச்சுவாசங்களைச் சரிவர நடத்துகின்றேன். அதனால் அக்குழந்தை உயிரோடிருக்கின்றதென்று பார்ப்பவர்களுக்கு நிச்சயப்படுகின்றது. இதனால் எனக்கு மனுஷியர்களிடத்து மிகவும் பெருமை ஏற்படுகின்றது. ஒருவன் மரணமடைகின்ற சமயத்தில் அவனது உறவினர்கள் தங்களது கரங்களை என்மீது வைத்துச் சுவாசமிருக்கின்றதா ? என்று பரிசோதிக்கின்

ளார்கள். என்னிடத்திருந் துண்டாகுஞ் சுவாசத்தினது வேகத்தால் அவன் பிழைப்பதையும், மரணமாவதையும், ஆணதையுந் தெரிகின்றார்கள். இவ்வாறு யான் சுவாசத்தை வெளியில் விட்டும் உள்வாங்கியும் சரீரத்தினிடத்துப் பிராணனிருக்கின்றதென்ற தத்துவத்தை ஒவ்வொருவருக்குந் தெரிவிக்கின்றேன்.

உனது தொழில் இந்த ஒன்றுந்தானே ?

அல்ல.

வேறு யாது ?

ஜீவராசிகளைக் காப்பாற்றுகின்ற வேறோர் தொழிலுஞ் செய்து வருகின்றேன்

அது செய்வது எவ்வாறு ?

ஜீவராசிகளுட்கொள்ளுகின்ற கெட்ட வாயுவை வெளியில் விடாமல் அடக்கினால் அதிகத் தாமதமில்லாது அவ்வாயு மிகவும் விஷவாயுவாகி அச்சீவராசிகளிறந்து போவதற்கேதுவாகின்றது. அதனால் கெட்ட வாயுக்களை அப்போதைக்கப்போது வெளியிற் கொண்டுவந்து சுத்த வாயுவை உளவாங்கும்படி செய்கின்றேன்.

அவ்வாறு கெட்ட வாயுக்களை விசேஷமாய் வெளியிற் கொண்டுவந்து விடுவதனால் ஒரு காலத்தில் இவ்வுலக முழுவதும் அசுத்த வாயுக்களால் நிறையப்பட்டு இதில் ஜீவித்திருக்கின்ற ஜீவராசிகளனைத்தும் ஒன்றாக மாண்டு போவதற்கு மார்க்கமாகுமல்லவா ?

ஆகாது.

அவ்வாறு ஆகாததற்கு நியாயம் யாது ?

இப்பூமியின்கண் மரம், கொடி, செடியாகிய சசியாதிகளில்லாதிருந்தால் ஒருவேளை அவ்வாறு ஆகுமென்று

னிக்கலாம். ஆனால் இந்த மரம், கொடி, செடி முதலியவைகள் அளவுக்கதிகமாய் ஒவ்வொரு வீட்டிலுமிருப்பதனால் அவ்வீட்டிலுண்டாகின்ற அசுத்த வாயுக்களை அவைகள் அப்போதைக்கப்போது உட்கொண்டு சுத்த வாயுவைக் கொடுக்கின்றன. யான் செய்யும் இத்தொழிலினது வல்லமையினாற் சுத்தவாயு ஜீவராசிகளைக் காப்பாற்றுவதற்கும் அசுத்த வாயு மரம், செடி, கொடி முதலிய ஸ்தாவரங்களைக் காப்பாற்றுவதற்கும் ஏதுவாகின்றன.

அன்றியும், நற்கந்த துர்க்கந்தங்களைப்பகுத்தறிந்து ஆசார முதலியன உண்ணுவதற்காக என்னை எல்லா வல்லமையுமுள்ள கடவுள் வாயினது மேற்புறத்தில் அமைத்திருக்கின்றான். அஸ்திகளாலுந் தோல்கள் பிணித்து சிறிய எலும்புகளாலுஞ் சேர்க்கப்பட்ட உயர்வினால் நெற்றி எலும்போடு பொருந்திக்கிடக்கின்ற யான் கொழுவாகிருதியுள்ள ஓரஸ்தியினால் இருபாகமாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றேன். இப்பாகங்களாலுண்டான இரு துவாரங்களே யல்லாமல் உருவத்தினால் பல்வேறுபட்ட பல சிறிய துவாரங்களையும் என்னிடத்திற் பாக்கலாம். இத்துவாரங்களனைத்தும் மிகவும் நுண்ணியவாகிய வேறு பொருள்களினால் மறைக்கப்பட்டுக் கிடக்கின்றன என்னிடத்துச் செல்லுகின்ற வாசனையை யான் நன்றாய் அறியும் வண்ணம் எனது மேற்புறத்தில் அதைச் செலுத்துகின்றேன். இரசந்தெரிவதற்காக ஒவ்வொரு பொருளும் உமிழ்நீரோடொன்று சேர்ந்து அதனோடு கலக்கவேண்டியதிருப்பது போல, வாசனை யறிவதற்கும் ஒவ்வொரு பொருளும் வாயுவோடு ஒன்றுசேர்ந்து அதனோடு கலக்கவேண்டியதிருக்கின்றது. அவ்வாறு கலந்தபின்னரே அவற்றின் வாசனை

யை நன்கு அறியலாம். என்னிடத்து அதிசுந்தரமுள்ள புஷ்பங்களது வாசனையையும் மற்றப் பொருள்களினது மணத்தையும் அறியக்கூடிய வல்லமையிருப்பதனால் யான் மனுஷியர்களுக்கு எப்பொழுதுஞ் சந்தோஷத்தை யுண்டாக்கிக் கொண்டிருக்கின்றேன். ஆனால் எனது முக்கிய தொழில் ஜீரணகோசத்தையுஞ் சுவாசத்தினது ஆதாரமாகிய சுவாசகோசங்களையும் வேறுவிதமான அபாயங்களில் நின்றுங் காப்பதேயாம். அன்றியும் துர்நாற்றமும் சரீரத்திற்குக் கெடுதியுமுள்ள பொருள்களை யொழித்து உண்பதற்குத் தகுதியான பொருள்களைத் தெரிந்துகொள்ளுவதற்கு ஓர் கருவியாயிருக்கின்றேன். என்னுள் கடந்து செல்லுகின்ற ஒவ்வொரு வாசனையையும் யான் பரிசோதித்து அது தேக க்ஷேமத்திற்கு விரோதமாயிருக்கில் அதை நீக்கிவிடவேண்டுமென்று உடனே மூளையின் வழியாக இதயத்திற்குத் தெரிவிக்கின்றேன். இருளினது மிகுதியால் மனுஷியர்களையும் பொருள்களையும் பகுத்தறிவதற்கு மார்க்கமில்லாத அவசரங்களிலும் அநுபவமுள்ளவர்கள் தங்களது இஷ்டப் பொருள்களையும் மனுஷியர்களையுஞ் சுவாசித்து உணருகின்றார்கள். பெண்கள் தங்களது சொந்த நாயகன்மாரை இன்னாரென்று பிரித்தறிவதோடு அவர்களது வஸ்திரங்களிலுள்ள வாசனைகளையுந் தெரிகிறார்கள். பெண்களிலும் பல பேதங்களிருக்கின்றன. சிலரிடத்திற் செந்தாமரை மலரினது வாசனையும், சிலரிடத்தில் மிருகத்தினது வாசனையும், சிலரிடத்திற் புலால் நாற்றமும், சிலரிடத்திற் சவநாற்றமுமிருக்கின்றன. அவ்வவ்வாசனையுள்ள மனைவி, புருடன்மார் எவ்வித இருட்டான அசந்தர்ப்பங்களிலும் தங்களுக்குச் சொந்தமான

வர்களை அவரவர்களது வாசனைகளாலறிந்துகொள்ளுகின்றார்கள். ஆனால் இவ்விஷயத்தை அநுபவத்தினாலறிந்தவர்கள் ஒருக்காலமும் பொய்யென்று சொல்லமாட்டார்கள். நாய்கள் தங்களது எஜமான்மார்களையும் ஆகாரப்பொருள்களையும் எவ்விதமான இருட்டிலும் பிரித்து அறிந்துகொள்ளுகின்றன. நரி, முயல் முதலியவைகள் ஓடுகின்ற சமயத்திலும் தங்களுக்கு விரோதமாயுள்ள நாய்கள் தூரத்திலிருந்தாலும் என்னால் முகந்து அவற்றின் பாதங்களைக்கண்டு அப்பால் அவைகளை ஏமாற்றி விடுகின்றன. இதுதான் அதற்கு நியாயம்.

இதுவன்றி உன்னால் மனுஷியருக்கு யாதாவது பிரயோசனமுண்டா?

உண்டு

அது யாது?

"சரம் பார்த்தல்" என்னும் பெரிய ஓர் வித்தையினால் மனுஷியர்களுக்குப் பின்வரப்போகின்ற இன்ப துன்பங்களை முன்னமே அறிவிக்கின்றேன். என்னிடத்துள்ள துவார வழியால் வருகின்ற இடகலை, பிங்கலை, சுழுமுனையாகிய சந்திர சூரியாக்கினியென்னும் முக்கலைகளும் எந்தெந்தச் சமயத்தில் எவ்வளவு, எவ்வளவு தூரம் பாய்கின்றனவென்று என்மீது கைவிரல் வைத்துப் பரிசோதிப்பதனால் அவரவர்களுக்கு உண்டாகப்போகின்ற ஆபத்து, துன்பம், இன்பம், நோய், நட்டம், மரண முதலியவைகளை அவரவர்களுக்குத் தெரிவிக்கின்றேன். தெய்வீகமாகிய இந்த விசேஷத் தொழிலையும் யான்றான் செய்துவருகின்றேன்.

இவ்வியாச்சிய சம்பந்தமாக உனக்கு என்ன தெரியும் ?

ஒன்றுந் தெரியாது.

வாதி வக்கீல் கிருசும், 9-ம், சாக்ஷி விடையும்.

எல்லா விஷயங்களையும் நுட்பமாய்ச் சாத்திரலறி விக்கும் வல்லமையுள்ள நீ இவ்வியாச்சிய சம்பந்தமாக ஒன்றுந் தெரியாதென்று சொன்னதற்குக் காரணம் யாது ?

மேற்கூறிய தொழில்களியாவும் யான் நடத்தி வருகின்றேனாயினும், அவற்றைச் சொந்தமாக நடத்துவதற்குள்ள ஓர் வல்லமை என்னிடத்திலில்லை. யாரோ ஒருவர் என்னைக்கொண்டு இந்தத் தொழில்களெல்லாவற்றையும் நடத்திவருகின்றார். அவரைபேனும் அவரால் நடத்தப்படும் இத்தொழில்களை பேனும் அறிவதற்கு எனக்கு வன்மையில்லை. ஆதலினாற்றான் இவ்வியாச்சிய சம்பந்தமாக எனக்கு ஒன்றும் தெரியாதென்று சொன்னேன். இதுதான் அதற்குக் காரணம்.

கோர்ட்டார் வினவும், 9-ம், சாக்ஷி விடையும்.

வாக்குமூலம் வாசிக்கக் கேட்டாயா ?

கேட்டேன்.

சரிதானா ?

ஆம்.

பிரதிவாதி பக்கம் 9-ம், சாக்ஷி மூக்கு (கை—து.)

பிரதிவாதி பக்கம் 10-ம். சாக்ஷி

செவி சத்தியஞ்செய்து

தெரிவித்த வாக்குமூலம்.

சர்வ வல்லமையுள்ள தெய்வஞ் சாக்ஷியாக

நான் சொல்வதெல்லாம் உண்மை.

1-ம், பிரதிவாதி வக்கீல் வினவும், 10-ம், சாக்ஷி விடையும்.

உனது பெயர் யாது?

எங்கள் பெயர் செவிகள்.

நீங்க ளெத்தனை பெயர்?

யாங்க ளிரண்டு பெயர்

நீங்க ளிரண்டு பெயரும் ஒன்ருகப் பிறந்தவர்களா?

ஆம்.

உங்களுக்கு இந்தப் பிரதிவாதிகளான ஆன்மாவுஞ் சரீரமுந் தெரியுமா?

தெரியும்.

இவ்வியாச்சியத்தைப்பற்றி யாதாவது தெரியுமா?

தெரியாது.

உங்களை இப்போது இக்கோர்ட்டு முன்னர் வரவழைத்தது எதற்காகவென்பது உங்களுக்குத் தெரியுமா?

தெரியும்.

எதற்காக.

சாக்ஷி சொல்லுவதற்காக

இவ்வியாச்சியத்தைப்பற்றி ஒன்றுந் தெரியாதென்று சொன்ன நீங்கள் பின்னர் எவ்வாறு சாக்ஷி சொல்லுவீர்கள்?

நியாயமான் கேள்விகள் கேட்டால் எங்களுக்குத் தெரிந்த அளவு சொல்லுவோம்.

நீங்கள் இதற்கு முன் எந்த வியாச்சியத்திலாவது அகப்பட்டிருக்கின்றீர்களா?

இல்லை.

எந்தக் கோர்ட்டிலாவது சாக்ஷி சொல்லியிருக்கின்றீர்களா?

இல்லை.

உங்களுக்கு வயதென்ன?

இத்தனையென்று நிச்சயமாகத் தெரியாது.

நீங்களிருப்பது எங்கே?

இரண்டாம் பிரதிவாதியோடு.

சாக்ஷி சொல்லும் விஷயத்தைப்பற்றி இந்த 1-ம். பிரதிவாதியாகிய ஆன்மா உங்களிடத்தில் யாதாவது சொன்னதுண்டா?

இல்லை.

இதற்கு முன்னர் விசாரணை செய்த சாக்ஷிகள் உங்களுக்குத் தெரியுமா?

ஒருவாறு தெரியும்.

8-ம், சாக்ஷிக்கும் உங்களுக்கும் நெருங்கிய பந்துத்துவ முண்டல்லவா?

இல்லை.

உங்களது தொழில் யாது?

எங்களுக்குப் பல தொழில்களிருந்தாலும் முக்கிய தொழிலானது மனுஷியர்கள் பேசுகின்ற வார்த்தைகளைக் கேட்டு அவைகளைத் தெளிவாக மனதிற்குத் தெரிவிப்பது.

அதை விபரமாய்ச் சொல்லுங்கள்.

யாங்கள் பார்வைக்கு மிகவுஞ் சிறியனவாயிருந்தாலும் இந்தப் பிரமாண்ட கோடிகளெங்கும் நிறைந்தவர்க

ளாக விருக்கின்றோம். விராட்புருட வருணனையில் எங்களைத் திக்குகளென்று சொல்லியிருப்பதால் அஷ்ட திக்குகளும் யாங்களாகவே இருக்கின்றோம். ஒருவனது பார்வை எவ்வளவு தூரம் பற்றுகின்றதோ? அவ்வளவு தூரமே அவனுக்குத் திகாந்தங்களாகத் தோற்றும். ஆனால் அவனது வாயில் நின்றுமுண்டாகின்ற ஓசை காற்றோடு கலந்து அதிகதூரம் அதிவேகத்திற் செல்லுகின்றது. ஒரு கல்லைத் தண்ணீரிற் போட்டாற் போட்டவுடனே விருத்தாகாரமாய்ச் சிறிய ஒலிகள் ஒன்றின்பின்னொன்றாகப் பரந்து வியாபிக்கின்றன. அவ்வாறு இளகிக் குலுங்கிக்கொண்டிருக்கின்ற ஒவ்வொரு பொருளினது ஓசையும் விருத்தாகாரமாய் வாயுவிற் பரவி எங்களையடுத்து எங்களது உட்புறத்தை இளக்குவதனால் அவ்வோசையை யாங்கள் கேட்கவும், உடன்றானே மனதிற்குத் தெரிவிக்கவுஞ் செய்கின்றோம். வன்மையுள்ள பொருள்கள்; ஆவி, நீர் முதலியவைகளைப் பார்க்கினும் சத்தத்தை விரைவாய்க் கடத்துகின்றன. வாயுவைப் பார்க்கினுந் தண்ணீர் நான்கு பங்கும், இரும்பு பதினேழு பங்கும் கடத்துகின்றன. அதிக தூரத்திலோடுகின்ற குதிரைக்கூட்டத்தினதோ, பீரங்கியினதோ, சத்தத்தை எங்களைப் பூமியோடு சேர்த்துவைப்பதனால் மிகவுந் தெளிவாகக் கேட்கலாம். இந்தச் சத்தம் ஒரு விநாடி நேரத்தில் வாயுவோடுகூடி (1100) அடி தூரமும், ஐந்து விநாடிக்குள் ஒருநாழிகை தூரமுஞ் செல்லுகின்றது மிகவும் பள்ளமாகிய குழிகளிலோ, உயர்ந்த சுவர்களால் நான்கு அல்லது மூன்று புறங்களிற் கட்டப்பட்ட கட்டடங்களிலோ? நின்றுகொண்டு சத்தமிடுவதானால் உடன்றானே பிரதிச்சத்தம் மற்றவர்களுக்

குக் கேட்கின்றது. எப்பொழுதும் நேர்நேராய்ச் செல்லுகின்ற சத்தத்திற்கு வழி மத்தியில் தடை நேரிடுவதால் அவ்விடத்திருந்து தள்ளப்பட்டு நேரே திரும்பி மடங்கி வருவதனால் பிரதிச் சத்தமுண்டாகின்றது. முதலாவது சத்தமுண்டான அளவில் வேறு சத்தமுங் கேட்கின்றதி. னாற்றான் அச்சத்தத்தினது வேகத்தைப்பற்றி நிச்சயப்படுத்தவேண்டியதா யிருக்கின்றது. "கேள்விமயம் லோகம்" என்பதனாற் கேள்விதான் உலகத்திற் பிரதானமானது. யாங்கள் அக்கேள்வியினது புருடர்களானதினால் யாங்களே இவ்வுலகத்தின்கண் பிரதானமானவர்கள். யாங்களில்லா திருந்தால் இவ்வுலகத்தின்கண் சங்கீதசாகித்தியங்கள் கேட்கப்படாமற் போகின்றன. அவைகள் கேட்கப்படாமற் போகின்ற காலத்தில் மனுஷியர்களுக்குச் சந்தோஷமில்லாமற் போகின்றது. சந்தோஷமில்லாவிட்டாற் சரீரத்தில் வியாதி முதலியன உண்டாகின்றன. முடிவில் அந்தரங்கமோ, பகிரங்கமோ, இல்லாமல் யாவரும் துக்கசாகரத்தில் மூழ்குவதற் கிடையாகின்றது. ஆனால் இவ்விதக்கஷ்டங்களொன்றும் நேராதபடி யாவரையும் நல்வார்த்தைகளாலும் பிரசங்கங்களாலும் ஒன்றாய்ச் சேரச்செய்து யாங்கள் அவர்களொவ்வொருவருக்கும் ஒவ்வொன்றையுங் கேட்டறிகின்ற வல்லமையைக் கொடுத்து அவர்களைக் காப்பாற்றுகின்றோம். இதுதான் யாங்கள் செய்யும் பிரதான தொழில்.

உங்களுக்கு ஆன்மா சரீரமாகிய பிரதிவாதிக ளிருவருங் குற்றவாளிக ளென்பது தெரியுமா?

தெரியாது.

வாதி வக்கீல் கிருசும், 10-ம், சாக்ஷி விடையும்

யாதாவது ஒரு செய்கையில் ஒருவன் வேறொருவனைக் கொண்டு செய்விப்பதற்கு ஆஜ்ஞாபிப்பது உங்கள் மூலமாக வல்லவா?

ஆம்.

இந்த 2-ம், பிரதிவாதியாகிய சரீரத்தினிடத்து யாதாவது கெட்ட செய்கைகள் செய்வதற்கு வேறு யாராவது சொல்ல நீங்கள் கேட்டதுண்டா?

இல்லை.

உங்களையல்லாமல் அவ்விதச் செய்கையுஞ் செய்வதற்கு வழி தெரியாத பிரதிவாதியாகிய இச்சரீரம் செய்திருக்கின்ற செய்கைகளில் ஒன்றும் எங்களுக்குத் தெரியாதென்று நீங்கள் சொன்னதற்குக் காரணம் யாது?

எங்களுக்கு யாதோ, ஒருவித வல்லமையிருப்பதே யல்லாமல் அதிருட்டமான விஷயங்களைப் பூரணமாய்க் கண்டு பிடிப்பதற்குத் தக்க சாமர்த்தியமோ, வல்லமையோ, கிடையா. அதனால் இவ்விஷயங்களைப்பற்றி எங்களுக்கு யாதொன்றுந் தெரியாது. இதுதான் அதற்குக் காரணம்.

உங்களுக்குப் பிறராலேற்படும் நிந்தை மொழிகளைக் கேட்பதற்கு வல்லமையுண்டா?

கோர்ட்டார்.

இது அநாவசியமான கேள்வியானதினால் இக்கேள்விக்கு விடை சொல்லவேண்டாமென்று தடுத்திருக்கின்றோம்.

கோர்ட்டார் வினவும், 10-ம், சாக்ஷி விடையும்.

வாக்குமூலம் வாசிக்கக் கேட்டாயா ?

கேட்டேன்.

சரிதானா ?

ஆம்.

பிரதிவாதி பக்கம் 10-ம், சாக்ஷி செவி (கை—து.)

பிரதிவாதி பக்கம் 11-ம், சாக்ஷி

சத்தம் சத்தியஞ்செய்து

தெரிவித்த வாக்குமூலம்.

சர்வ வல்லமையுள்ள தெய்வஞ்சாக்ஷியாக

நான் சொல்வதெல்லாம் உண்மை.

1-ம், பிரதிவாதி வக்கீல் வினவும், 11-ம், சாக்ஷி விடையும்.

உனது பெயர் யாது ?

சத்தம்.

நீ இருப்பது எவ்விடத்தில் ?

தொண்டைக்கும் உட்செவியிலுள்ள ஓர் ஜவ்விற்கும் நடுவில்.

தொழில் யாது ?

சத்தத்தை வெளியிற் புறப்படுவிப்பதுங் காதின் மார்க்கமாய் உள்ளே கிரகிப்பதும்.

இவ்வியாச்சிய சம்பந்தமாக உனக்குத் தெரிந்தது யாது ?

இவ்வியாச்சியத்தினது 10-வது சாக்ஷியாகிய செவி சொல்லியதெல்லாம் யான் சொன்னதெனவும், அவைகளனைத்தும் எனது பிரத்தியேக வல்லமையினாற் சொல்லப்பட்டதெனவுங் கொள்ளல்வேண்டும். அதைத்தவிர வேறு யாதொன்றும் எனக்குத் தெரியாது.

அப்படித் தெரியாததற்குக் காரணம் யாது ?

என்னை யாரோ ? ஒருவரிருந்து கொண்டு இவ்வாறு சத்திக்கச் செய்கின்றாரே தவிர, வேறு யாதொன்றையும் எனக்கு அறிவதற்கு வல்லமையில்லை. இதுதான் அதற்குக் காரணம்

கோர்ட்டார்

வக்கீல் ! இந்தச் சாக்ஷியிடத்திற் கிருசு முதலியன கேட்டுக் காலத்தை வீணாகப் போக்குவதிற் பிரயோசனமில்லை. அடுத்த சாக்ஷியை விசாரணைசெய்வதற்கு ஏற்பாடு செய்யும்.

கோர்ட்டார் வினவும், 11-ம், சாக்ஷி விடையும்.

வாக்குமூலம் வாசிக்கக் கேட்டாயா ?

கேட்டேன்.

சரிதானா ?

ஆம்.

பிரதிவாதி பக்கம் 11-ம், சாக்ஷி சத்தம் (கை—து.)

பிரதிவாதி பக்கம் 12-ம். சாக்ஷி

ஸ்பரிசம் சத்தியஞ்செய்து

தெரிவித்த வாக்குமூலம்.

சர்வ வல்லமையுள்ள தெய்வஞ் சாக்ஷியாக

நான் சொல்வதெல்லாம் உண்மை.

1-ம், பிரதிவாதி வக்கீல் வினவும், 12-ம், சாக்ஷி விடையும்.

உனது பெயர் யாது ?

ஸ்பரிசம்.

தொழிலென்ன ?

யான் ஜீவராசிகளது எல்லா அவயவங்களுக்கும், வெளிப்புறத்திருக்கின்ற தோலிற்கும் உணர்வைக் கொடுக்கின்றேன். அவ்வொரு வல்லமையு மில்லாவிட்டால் மனுஷியர்கள் நெருப்புச் சுடுகின்றதென்றறியாமல் அதில் வீழ்ந்து சாம்பராய்ப் போவார்கள். தண்ணீர் குளிர்ச்சியைச் செய்கின்றதென்றறியாது அதி லதிகநேரங் கிடந்து குளிரதிசரித்து மாண்டு போவார்கள். காற்றினது அளவுக்குமிஞ்சிய வேகத்தால் தள்ளுண்டு மரிப்பார்கள். மேலும் சரீரத்தின் வெளிப்புறத்துள்ள உரோமத்துவாரங்களிலிருந்துண்டாகின்ற வியர்வையை யறிந்து ஒவ்வொரு நாளுஞ் சரீரத்தைச் சுத்தஞ் செய்வதற்கு மனம் வராமற் பல நோய்க ளுண்டாவதற்கும், அதனாலிறப்பதற்குங் காரணமாகும். இவ்வாறான கொடிய அபாயங்களில் நின்றும் விலக்கி ஆன்மாவையுஞ் சரீரத்தையுஞ் சரியாகக் காப்பாற்றிக்கொண்டு போகின்ற ஒரு பிரதான தொழிலை யான் செய்கின்றேன். இதுதான் யான் செய்யுந் தொழில்.

உனக்கும் மெய்க்கும் யாதாவது சம்பந்தமுண்டா ?

உண்டு.

அது யாது ?

அது சொல்லியவனைத்தும் எனது விசேஷ வல்லமையினாற்றான் நடைபெறும். யானில்லாதிருந்தால் ஒரு தொழிலுஞ் செய்வதற்கு வல்லமையில்லை. அதன் காரியங்களனைத்தும் ஒரு நொடிப்பொழுதி லில்லாம லாகிவிடும்.

இவ்வியாச்சிய சம்பந்தமான செய்கைகள் செய்தவர் இந்தப் பிரதிவாதிகளில் யாவர் ?

இன்னாரென்று எனக்குத் தெரியாது.

அது எதனல் ?

முற்கூறிய செய்கைகளியாவும் யான் செய்துவரு கின்றேனாயினும், அது எனது சொந்த வல்லமையினாலல்ல வென்பது எனக்கு நிச்சயமாகத் தெரியும். அவ்விஷயத் தில் எனக்கு உறுதியான விசுவாசமுமிருக்கின்றது. அத ஞல்.

அப்படியானல் அது யாருடைய வல்லமையினால் நடத்தப்படுகிறது ?

அதுவும் எனக்குத் தெரியாது.

கோர்ட்டார்.

வக்கீல் ! இந்தச் சாக்ஷியையுமொழித்து அடுத்த சாக்ஷியை விசாரணை செய்வதற்கு வேண்டிய ஏற்பாடு செய்யும்.

கோர்ட்டார் வினவும், 12-ம், சாக்ஷி விடையும்.

வாக்குமூலம் வாசிக்கக்கேட்டாயா ?

கேட்டேன்.

சரிதானா ?

ஆம்.

பிரதிவாதி பக்கம் 12-ம், சாக்ஷி ஸ்பரிசம் (கை—து.)

பிரதிவாதி பக்கம் 13-ம், சாக்ஷி

ரூபம் சத்தியஞ்செய்து

தெரிவித்த வாக்குமூலம்.

சர்வ வல்லமையுள்ள தெய்வஞ் சாக்ஷியாக

நான் சொல்வதெல்லாம் உண்மை.

1-ம், பிரதிவாதி வக்கீல் வினவும், 13-ம், சாக்ஷி விடையும்.

உனது பெயர் யாது?

ரூபம்.

நீ இருப்பது எங்கே?

கண்களிடத்து.

தொழில் யாது?

ஒவ்வொரு பொருளையு முருவப்படுத்தி இதயத்திற்குத் தெரிவிப்பது யானில்லாதிருந்தால் இவ்வுலகம் இவ்வித மிருக்கின்றதென்று ஒருவராலும் அறியமுடியாது. எல்லாப் பொருள்களையும் படமெடுத்தாற்போலும் அதனதன் வடிவங்களைக் கிரகித்துக் கிரகித்தவாறே இதயத்திற்குத் தெரிவிக்கின்றேன். இந்தப் பிரபஞ்சத்திலுள்ள சிருஷ்டிகளி லெல்லாம் மானுஷிய சிருஷ்டியே மேலானதென்று நிச்சயப் படுத்துவது உருவமென்று சொல்லும் எனது வல்லமையினது மகத்துவத்தினாற்றான். மனுஷியர்களது கண்களிற் காணுகின்ற மற்ற ஜீவராசிகளையோ, பொருள்களையோ, அப்படியே பிரதி பிம்பமாகச் செய்து காட்டுகின்ற ஒரு வல்லமை அந்தக் கண்களுக்கிருப்பதினாற்றான் ஜீவராசிக ளெல்லாம் மனுஷியர்களுக்குப் பயந்து நடுங்கிக் கீழ்ப்படி கின்றன பிரதி பிம்பத்தின வல்லமையினது மகத்துவம் மிகவும் நுட்பமாயிருப்பதனால் அதை அறிந்தவர்களே அறிவார்கள். இதனாற்றான் அனேக பெரிய நூல்களில் கண்கள் தாம் உலகமென்று கூறப்பட்டிருக்கின்றன அன்றியும்; மனுஷியர்களது கண்களிலிருக்கின்ற பிரகாசமாகிய ஒரு வல்லமை மகா இரகசியமான பல வேலைகளைச் செய்கின்றது. அதிக அழகுள்ள வஸ்திரங்களை அணிந்திருப்பவர்களையாவது பலவித ஆபரணங்களை

அணிந்திருப்பவர்களையாவது பிரசங்கிப்பவர்களையாவது பாடுபவர்களையாவது இவைபோன்ற பிறவிஷயங்களைச் செய்பவர்களையாவது பார்க்கப்பட்டவர்களுள் சிலரது பார்வையினால் அவர்களுக்கு திருஷ்டித் தோஷமுண்டாகின்றது. ஸ்திரீ புருஷர்களுள் ஒருவரிடத் தொருவருக்கு அதிக மோகமுண்டாகுவதும் கண்களைக் கொண்டு மயக்குவதினாற்றான். இவ்வாறு கண்களினொளியினால் மிகவும் மகத்துவமிருப்பதினாலேயே ஜபம், தியான முதலியன செய்கின்ற அவசரங்களிற் கண்களை மூடிக்கொண்டிருக்க வேண்டுமென்பது வழக்கத்தி லிருக்கின்றது. சிலருக்கு யுத்திபூர்வமான ஓராலோசனை யுண்டாகவேண்டுமானால் அவர்கள் தங்களது கண்களைமூடி அப்பிரகாசத்தை இல்லாடத் தானத்திற் செலுத்துகின்றார்கள், அவ்வாறு செய்வதனாற் சிலருக்கு மறந்துபோன விஷயங்கள் உடனே ஞாபகத்தில் வந்துவிடுகின்றன. இதுவன்றியும் இவ்வியாச்சியத்தில் 8-ம் சாக்ஷியாகிய கண்கள் சொன்ன யாவும் என்னாலேயே நடத்தப்படுகின்றன.

இவ்வியாச்சியத்தைப்பற்றி உனக்குத் தெரிந்ததியாது?

ஒன்றுமில்லை.

அப்படித் தெரியாததற்குக் காரணம்?

முற்கூறிய விஷயங்களியாவும் எனது சொந்தத் தொழிலும் அவைகளைச் செய்வதற்குறிய வல்லமை என்னது மானாலும் என்னை யாதோ? ஒரு வல்லமையிருந்து கொண்டு இவ்வாறு செய்யும்படி செய்விக்கின்றது, அதுதான் காரணம்.

அவ்வாறு செய்விக்கும் வல்லமை யாது ?

அது தெரியாது.

வர்தி வக்கீல் கிறுசில்லே.

கோர்ட்டார் வினவும், 13-ம், சாக்ஷி விடையும்.

வாக்குமூலம் வாசிக்கக் கேட்டாயா ?

கேட்டேன்.

சரிதானா ?

ஆம்.

பிரதிவாதி பக்கம் 13-ம், சாக்ஷி ரூபம் (கை—து)

பிரதிவாதி பக்கம் 14-ம், சாக்ஷி

இரசம் சத்தியஞ்செய்து

தெரிவித்த வாக்குமூலம்.

சர்வ வல்லமையுள்ள தெய்வஞ் சாக்ஷியாக

நான் சொல்வதெல்லாம் உண்மை.

1-ம், பிரதிவாதி வக்கீல் வினவும், 14-ம், சாக்ஷி விடையும்.

உனது பெயர் யாது ?

இரசம்.

தொழிலென்ன ?

அளவற்ற பொருள்களினால் நிறையப்பட்ட இவ்வுலகத்தின்கண் பிராணகாசத்திற்குரியன இவையெனவும், பிராண இரட்சிப்பிற்குரியன இவையெனவுமுள்ள தாரதம்மியத்தை முக்கியமாய் ஜீவராசிகளுக்கறிவிப்பது. மேலும், உவர்ப்பு, கார்ப்பு, கைப்பு, தித்திப்பு, துவர்ப்பு, புளிப்பாகிய அறுசுவைகளேயும் பிரித்தறிவித்துக் கிரமானுசாரப்படி ஒவ்வொருவரையு முண்ணச்செய்வது. ஆனல்

"அளவுக்கு மிஞ்சினாலமுதமும்விஷ" மென்பதனால் ஆகாரப் பொருளல்லது உருசிகரமான மற்ற எவ்விதப் போசனப்பொருள்களையும் ஆவசியமான அளவுதான் ஒவ்வொருவரையு முண்ணும்படி செய்வேன். அதற்கு மேலும் அவர்களுண்பதற்குப் பிரயத்தனப்பட்டால் அவைகள் விஷமாய் மாறுகின்றன. அப்பொழுது அவற்றைத் தெவிட்டும்படி செய்தோ? அல்லது அவைகளில் அவர்களுக்கு வெறுப்புண்டாகும்படி செய்தோ? அவர்களுக்குப் போதுமான திருப்தியையுண்டாக்குகின்றேன். அதனால் ஒவ்வொருவரும் ஒவ்வொரு நாளும் தங்கள் தங்கள் ஓரே அளவான உணவினால் திருப்தியடைகின்றார்கள். ஆனால் இச்சுவையை ஆகாரப்பொருள்களில் மாத்திரமல்ல, சங்கீத சாகித்தியங்களிற்கூடக் காட்டுகின்றேன். ஒருவன் பாடும்போது அவனது பாட்டின் மேன்மையால் பக்கத்திலிருப்பவனது காதில் இரசநீரூறுகின்றது. இவ்விதமாக ஒவ்வொரு பொருளினிடத்துமுள்ள இரசங்களைத் தெரிவிப்பதுந்தவிர, 7-ம், சாக்ஷியாகிய நாக்குச் சொல்லிய வனைத்தும் எனது சகாயத்தினாற்றான் நடைபெறுகின்றன. இதுதான் எனது தொழில்.

நீ இருப்பது எவ்விடத்தில்?

நாவின்மேல்.

இந்தப் பிரதிவாதிகளது செய்கைகளில் எதிலேனும் நீ சேர்ந்ததுண்டா?

இல்லை.

இவ்வியாச்சியத்தைப்பற்றி உனக்குத் தெரிந்தது யாது?

ஒன்று மில்லை.

வாதி வக்கீல் கிருசில்லை.

கோர்ட்டார் வினவும், 14-ம், சாக்ஷி விடையும்.

வாக்குமூலம் வாசிக்கக் கேட்டாயா?

கேட்டேன்.

சரிதானா?

ஆம்.

பிரதிவாதி பக்கம் 14-ம். சாக்ஷி இரசம் (கை—து.)

பிரதிவாதி பக்கம் 15-ம். சாக்ஷி

கந்தம் சத்தியஞ்செய்து

தெரிவித்த வாக்குமூலம்.

சர்வ வல்லமையுள்ள தெய்வஞ் சாக்ஷியாக

நான் சொல்வதெல்லாம் உண்மை.

1-ம், பிரதிவாதி வக்கீல் வினவும், 15-ம், சாக்ஷி விடையும்.

உனது பெயர் யாது?

கந்தம்

நீ இருப்பது எவ்விடத்தில்?

மூக்கில்.

தொழிலென்ன?

கந்த மறிவது.

அதை விபரமாய்ச் சொல்?

அப்படிச் சொல்லுவதற்கு யாதொன்றுமில்லை. துர்க்கந்த சுகந்தங்களையும், வாதபித்த சிலேட்டுமங்களின் கூடுதல், குறைவுகளையும், மரணமடுக்கும்போது ஒவ்வொருவரதுஞ் சரீரத்தின் சந்த வித்தியாசத்தையும் யாவருக்குந் தெரிவிக்கின்றேன். அன்றியும் 9-ம், சாக்ஷியாகிய

மூக்குச் சொல்லிய யாவும் எனது உதவியினாற்றான் நடைபெறுகின்றன. இதுதான் எனது தொழில்.'

இவ்வியாச்சியத்தைப்பற்றி உனக்கு என்ன தெரியும் ?

ஒன்றுந் தெரியாது.

வாதி வக்கீல் கிறாஸில்லை.

கோர்ட்டார் வினாவும், 15-ம், சாக்ஷி விடையும்.

வாக்குமூலம் வாசிக்கக் கேட்டாயா ?

கேட்டேன்.

சரிதானா ?

ஆம்.

பிரதிவாதி பக்ஷம் 15-ம், சாக்ஷி கந்தம் (கை—து.)

பிரதிவாதி பக்கம் 16-ம், சாக்ஷி

வாக்கு சத்தியஞ்செய்து

தெரிவித்த வாக்குமூலம்.

சர்வ வல்லமையுள்ள தெய்வஞ் சாக்ஷியாக

நான் சொல்வதெல்லாம் உண்மை.

1-ம், பிரதிவாதி வக்கீல் வினாவும், 16-ம் சாக்ஷி விடையும்.

உனது பெயர் யாது ?

வாக்கு

நீ இருப்பது எவ்விடத்தில் ?

நாக்கில்.

உனக்கு தொழிலென்ன ?

வார்த்தையாடல்.

அதை விவரமாய்ச் சொல் ?

ஒருவனது இதயத்திலுண்டாகின்ற எண்ணங்களை வேறொருவனுக்குத் தெரிவிப்பதும், ஒவ்வொரு சபைகளிலும் அதிசாதுரியமாய்ப் பிரசிங்கிப்பதும், வக்கீல்கள் வியாச்சிய சம்பந்தமாக விசாரணை நடத்துவதும், பிறவும் எனது தொழிலினது விசேஷத்தினாற்றான். 7-ம், சாக்ஷியாகிய நாக்குச் சொல்லிய யாவும் எனது தொழிலினது மகத்துவததாற்றான் நடைபெறுகின்றன. திரிகரண சுத்திகளில் ஒன்றாகிய வாக்கின் சுத்தி முக்கியமாய் ஒவ்வொருவருக்கும் வேண்டியதாயிருக்கின்றது. எனது பெருமையைப்பற்றிச் சொல்லப் புகுந்தால் அது எல்லைபற்றதாக முடியும். அகார உகார மகாரமாகிய இவை ஓங்காரமாகிய பிரணவ சத்தமாய் முடிகின்றன. அகாரம் பிரமாவும், உகாரம் விட்டுணுவும், மகாரம் சிவனுமாயிருக்கின்றன. "ஓம்" என்ற பிரணவ அட்சரந்தான் முதலிலுண்டாயிற்று. அப்பால் அதிலிருந்து இப்பிரபஞ்சமுண்டாயிற்று. இதனால் ஆதியிலிருந்தது வாக்குந்தானென்பது ஏற்படுகின்றது. ஒரு குழந்தை பிறந்தவுடன் (ம-உ-அ) மா என்று முதலிற் சத்தமிடத் தொடங்குகின்றது. ஆதலால் ஆதியிலேயே யிருப்பவனும் எல்லா விஷயங்களையும் யாதொரு இடையூறுமின்றி நடத்துபவனும் யான் ஒருவன்றான். இதுதான் எனது தொழில்.

இந்த வியாச்சியத்தைப்பற்றி உனக்குத் தெரிந்ததியாது?

ஒன்றுமில்லை.

எல்லா விஷயங்களையும் யாதொரு இடையூறுமின்றி நடத்துபவனும் உலகத் தோற்றத்திற்கு முதலிலேயே யிருப்பவனுமான நீ இவ்வியாச்சியத்தைப்பற்றிய சொற்ப

சங்கதிகளில் எனக்கு யாதொன்றுந் தெரியாதென்று சொன்னதற்குக் காரணம் யாது?

யான் சொல்லிய விஷயங்களெல்லாவற்றையும் என்னைக்கொண்டு யாதோ. ஒரு பெரிய வல்லமை நடத்துகின்றதே தவிரச் சொந்தமாய் எந்த வேலையும் செய்வதற்கு யான் வன்மையுடையேனல்லேன். ஆதலினால் இதைப்பற்றி இதுவரை யாதொரு விவரமும் எனக்குத் தெரிவதற்கு மார்க்கமில்லை. இதுதான் அதற்குக் காரணம்.

வாதி வக்கீல் கிராசில்லை.

கோர்ட்டார் வினவும், 16-ம், சாக்ஷி விடையும்

வாக்குமூலம் வாசிக்கக் கேட்டாயா?

கேட்டேன்.

சரிதானா?

ஆம்.

பிரதிவாதி பக்கம் 16-ம். சாக்ஷி வாக்கு (கை—து.)

பிரதிவாதி பக்கம் 17-ம். சாக்ஷி

பாதம் சத்தியஞ்செய்து

தெரிவித்த வாக்குமூலம்.

சர்வ வல்லமையுள்ள தெய்வஞ் சாக்ஷியாக

நான் சொல்வதெல்லாம் உண்மை.

1-ம், பிரதிவாதி வக்கீல் வினவும், 17-ம், சாக்ஷி விடையும்

உனது பெயர் யாது?

எங்கள் பெயர் பாதங்கள்.

நீங்களெத்தனை பெயர்?

யாங்களிரண்டு பெயர்கள்.

நீங்க ளிரண்டு பெயர்களும் ஒன்றாகப் பிறந்தவர்களா?

ஆம்.

உங்கள் தொழில் யாது?

யாங்கள் மிகவுந் தாழ்ந்த நிலைமையி லிருப்பவர்களானாலும், எங்களது தொழில் மிகவும் உன்னத நிலைமையிலுள்ளது. அதன் பெருமைகளெல்லாவற்றையுஞ் சொல்ல வேண்டுமானால் அது முடியாத காரியம். முக்கியமாக ஒரே தொழிலை மாத்திரம் இங்கே சொல்லுகின்றோம். அதாவது, மனுஷியர்கள் சுவாசோச்சுவாசஞ் செய்வதுகூட எங்களது மகத்துவத்தினாற்றான். அஃதெவ்வித மென்னில் சுவாசமானது முதலாவது கால்களின் பெருவிரலில் நின்று முற்பவித்து முதுகின்றண்டின் மார்க்கமாய்ச் சென்று அங்கே கத்தரிக்கோல்போல் மாறி இடநாசி, வலநாசிகளிற் பாய்கின்றது. இவ்விதம் பாயும் வித்தியாசத்தின் திறவுகோல் எங்கள்பாலிருக்கின்றது

அதை அறிவது எவ்விதம்?

ஒருவன் சொற்பநேரந் தனது பெருவிரலைப் பூமியில் படியும் வண்ணம் ஊன்றி நடப்பானேயானால் அவனது சுவாசம் இயல்பாயுள்ள அளவில் நின்றும் வேறுபடும். அல்லேயெல் அது தடைப்படும். தலைநோயுள்ள ஒருவன் சற்றுநேரந் தனது பெருவிரலையூன்றி நடப்பானேயானால் அவன் நோயானது நிச்சயமாய்க் குணமாகும் யோகிகள் சமாதியஸ்தர்களாக உட்காரும்போது தங்களது முகத்திலிடத்துள்ள கண்களைப் பொருட்படுத்தாது பெருவிரல்களின் நகங்களைக் கண்களாகக்கருதி அவற்றின்மீது தங்களது நாட்டத்தைச் செலுத்துகின்றார்கள். அன்றியும்

தேகமானது ஒவ்வொருவருங் கருதியவாறு வளைவதற்கும் நிமிர்வதற்குங் குழைவதற்கும் ஏதுவாயிருப்பது எங்களது உதவிதான். இதுதான் அதை அறியும் விதம்.

இவ்வியாச்சியத்தைப் பற்றி உனக்குத் தெரிந்தது யாது?

ஒன்றுமில்லை.

வாதி வக்கீல் கிருசில்லை.

கோர்ட்டார் வினவும், 17-ம், சாக்ஷி விடையும்.

வாக்குமூலம் வாசிக்கக் கேட்டாயா?

கேட்டேன்.

சரிதானா?

ஆம்.

பிரதிவாதி பக்கம் 17-ம், சாக்ஷி பாதம் (கை—து.)

பிரதிவாதி பக்கம் 18-ம், சாக்ஷி

பாணி சத்தியஞ்செய்து

தெரிவித்த வாக்குமூலம்.

சர்வ வல்லமையுள்ள தெய்வஞ் சாக்ஷியாக

நான் சொல்வதெல்லாம் உண்மை.

1-ம், பிரதிவாதி வக்கீல் வினவும், 18-ம், சாக்ஷி விடையும்.

உனது பெயர் யாது?

எங்கள் பெயர் பாணிகள்.

நீங்களெத்தனை பெயர்?

யாங்களிரண்டு பெயர்கள்.

நீங்களிரண்டு பெயர்களும் ஒன்றாகப் பிறந்தவர்களா?

ஆம்.

உங்களுக்கு யாதாவது தொழிலுண்டா?

உண்டு

அது யாது?

எங்களது தொழில்களைப்போன்ற தொழில்கள் இந்தக் கோர்ட்டுமுன்னர் இதற்குமுன் வாக்குமூலங் கொடுத்த எந்த சாக்ஷிக்குங் கிடையா. எங்களது தொழில்களின் மகத்துவத்தைப்பற்றி ஆலோசிப்பதானல் இக்கோர்ட்டு முன்னர் இனிமேல் வாக்குமூலங் கொடுக்கப்போகின்ற சாக்ஷிகளிலும் எங்களையே மேலாகக் கருதவேண்டியதாக வரும்.

கோர்ட்டார்

உங்களுக்குக் கொடுத்திருக்குங் காலம் அதிகமில்லாததனுல் உங்களது தொழில்களை மாத்திரஞ் சுருக்கமாய்ச் சொல்லுங்கள்.

சாக்ஷி.

"எண்சாணுடம்பிற்குஞ் சிரசே பிரதான" மென்று பெரியோர்கள் கூறுவது சுத்தப் பொய்யெனவும், கைகளே பிரதானமெனவும், எங்களது மகத்துவத்தைப்பற்றி ஆலோசிக்கும் சமயத்தில் நிச்சயமாக வெளிப்படும். சிரசிற்குப் பிரதானத்துவங் கற்பிப்பது கண், காது, மூக்கு, வாயாகிய கிரேவ்ஷேந்திரியங்கள் அதனிடத்து வாசஞ்செய்வதனுற்றான். அவைகளொவ்வொன்றையும் அதிநுட்பமாக எங்களோடு ஒப்பிட்டுப் பார்ப்பதானல் அவைகளியாவுஞ் சாரமற்றன வென்பது கரதலாமலகம்போல் விளங்காநிற்கும். அவைகளுள் பிரதானமான கண்களைப்

பற்றி ஆலோசிப்போம். இக்கண்கள் மனுஷியர்களது நெற்றிக்குக் கீழ்ப்புறத்துள்ள இரு குழிகளில் வாசஞ் செய்கின்றன. அவற்றிற்கு அவ்விடத்தைவிட்டும் ஓரணுப் போலும் அங்கோ? இங்கோ? விலகுவதற்கு வல்லமையில்லை. அவற்றின் தொழில்களை அவைகள் அக்குழியிலிருந்துகொண்டுதான் செய்துவருகின்றன. முதுகினிடத்து யாதாவது விரணங்களுண்டாகவோ! தூசி முதலியன படியவோ! செய்தால் அவற்றை எட்டிப்பார்த்து அறிந்துகொள்ள அவைகளால் முடியா. அவ்விதச் சந்தர்ப்பங்களில் அவற்றின் தொழில்களைச் சரிவர நடத்துவதற்கு அவைகளுக்கு வன்மை போதாது. அப்பொழுது அவைகளுக்கு வேறு உதவியோ! எங்களது சகாயமோ! வேண்டியதாயிருக்கின்றது. அதன் அடுத்தாற்போலிருப்பது மூக்கு. அதுவுந் தனது வாசஸ்தானத்தை விட்டும் ஒரு கடுகளவும் அகலுவதற்கு வல்லமையற்றதாயிருக்கின்றது. வாயுவினாற் சேகரித்துக்கொண்டு வரப்பட்ட நற்கந்த துர்க்கந்தங்களைக் கிரகித்து இதயத்திற்கு அறிவிப்பதே அதன் தொழில். சற்று ஜலதோஷங்கொண்டாற்கூட அது எங்களது உதவியைத் தேடுகின்றது. இனிக் காதுகள் தங்களது சொந்தத் தலத்தைவிட்டும் அகலுவதற்கு வல்லமையற்றனவாய்த் தங்களது சமீபத்திற் கேட்கப்பட்ட ஒலிகளை இதயத்திற்கு அறிவித்துக் கொண்டிருக்கின்றன. அளவுக்கதிகமாய் வேறு யாதேனும் முழக்கங்களுண்டாவதாயிருந்தால் அப்பொழுது அவைகள் அஞ்சி எங்களது சகாயத்தை விரும்புகின்றன. யாங்கள் உடனே அவைகளின் துவாரங்களைப் பொத்தி அவைகளை ரட்சிக்கின்றோம். அப்பாற் பிரதானமானது

வாய். அதன் விஷயங்களைப்பற்றிச் சொல்ல ஆரம்பித்தால் இவைகளைப் பார்க்கிலும் மிகவும் விசேஷமாக முடியும். அது இருந்த இடத்தைவிட்டும் அசைந்து செல்ல வல்லமையற்றதாய் இருந்த இடத்திற்றானே இருந்துகொண்டு யாங்கள் யாதாவது கொண்டுவந்து கொடுத்தால் அவற்றை வயிறார உண்டு என்னைப்போலும் வல்லவன் இவ்வுலகத்தின்கண்ணில்லையென்று வாயில் வந்தனவெல்லாம் பிதற்றா நிற்கும். ஆனால், திருத்தமாய்ப் பேசத்தக்க விதத்தில் நாக்கைச் சுத்தஞ்செய்வதற்கும் அப்பேச்சைப் பக்கத்தில் நின்று கேட்பவர்களுக்குத் துர்நாற்றம் வீசாதபடிப் பற்களைச் சுத்தஞ்செய்வதற்கும் அதற்கு வல்லமையில்லை. எங்களது சகாயமே வேண்டியதாயிருக்கின்றது. இதைப்பற்றி அதிகமாய்ப் பேசுவதிற் பிரயோசனமில்லை. அதற்குண்டாகும் ஆபத்துகளனைத்தையும் நீக்குவோர் யாங்களே. ஆனால், யாங்கள் இவர்களது தொழில்களைப்போன்ற தொழில்கள் செய்பவர்களல்ல. யாங்கள் எவ்வளவோ உயர்தரமான தொழில்கள் செய்பவர்கள. எங்களது உதவியில்லாவிட்டால் இவர்களுக்குக்கூட ஒரு தொழிலுஞ் செய்வதற் கிடமில்லாமற் போகும். ஆனாலும், இவர்கள் செய்கின்ற தொழில்களையும் யாங்கள் செய்துவருகின்றோம்.

கண்களது தொழில்களை நீங்கள்செய்வது எவ்விதம்?

கண்ணில்லாத குருடர்களுக்கு யாங்கள் உதவியாகவிருந்து கோல்கொண்டோ, எங்களால் தடவிப்பார்த்தோ, அவர்களை நினைத்தவிடத்திற்கு நடந்துபோகும்படி செய்கின்றோம். அதைப்போலவே பேசவியலாத ஊமைகள் தங்களது மனோவெண்ணங்களைக் கைச்சாடைகளால்

பிறருக்குத் தெரிவிக்கின்றார்கள். குருடர்களுக்குங்கைச்சாடைகளால் விஷயங்களை மனதிலாக்குகின்றார்கள். ஒவ்வொருவருந்தங்களுக்கு அறிவுண்டானதுமுதல்கடவுளை வணங்குவதுந்தங்களது கைகளைக் கூப்பித்தான். ஆனால் இதற்கு நேர் விரோதமாகத் தலையாலும், மூக்காலும் இவ்விதச் செய்கைகளை ஒருவருஞ் செய்யார்கள். கிரீடத்தைச் சிரசிற்பூண்டு உடைவாளைக் கையிற்பற்றித் துஷ்டநிக்கிரக சிஷ்டபரிபாலனஞ் செய்கின்ற மன்னர்களுக்கும், வீடு வீடாய் யாசகம்வாங்கிக் கிடைத்த அரிசியை அடுசிலாக்கி உண்டு உறங்குகின்ற யாசகர்களுக்கும் உதவியாக இருப்போர் கைகளாகிய யாங்கள்தாம். தண்டனைக்காரர்களுக்குத் தண்டனை கொடுப்பதும், குரூரச்செய்கைகள் செய்கின்ற ஒளிபொருந்திய வாளாயுதத்தைப்பூண்டு மிகவும் பயங்கரமான பெரும் யுத்தங்களில் நுழைந்து அனேகாயிரம் ஜனங்களைக்கொன்று வென்று புஜபலபராக்கிரமசாலியென்னும் நாமதேயத்தைப் பெறுவதும், கரிய பெரிய பாறைகளைப் பிளந்து பொடியாகத் தகர்ப்பதும், மாடமாளிகை, கூடகோபுர முதலியவைகளைக்கட்டுவதும் யாங்கள்தாம் புகைவண்டி, புகைக்கப்பல், தந்திதபால், புகைப்படம், சங்கீதப்பெட்டி முதலிய விசேடப்பொருள்களை யாதொரு தடையுமின்றி நடத்தி வருவதும் யாங்கள்தாம். பெரிய மலைகளிலும் பல நிலங்களிலுஞ் சமுத்திரங்களிலுங் கிடக்கின்ற இரத்தினம், பொன் முதலியவைகளை எடுத்து மனுஷியர்களுக்கு மிகவும் உபயோகப்படுமாறு உதவி வருபவர்களும் யாங்கள்தாம். அன்றியும் அனேகாயிரம் யோசனை தூரத்திலிருக்கின்ற சந்திரசூரிய நட்சத்திரங்களைச் சமீபத்திலுள்ள பொருள்களைப்போற்

காட்டுகின்ற தூரதிருஷ்டிக் கண்ணாடிகளும், ஆகாயமார்க்கமாய் நினைத்தவிடத்திற்கெல்லாஞ் செல்லுவதற்கு ஏதுவாகிய புகைக்கூண்டுகளுமே எங்களது வல்லமையைத் தெள்ளத்தெளிய ஒவ்வொருவருக்குங் காட்டாமற்போகா. மேலும் யாங்கள் தேகாப்பியாசத்திற்கு மிகவும் உதவியாயிருக்கின்றோம். தேகஞ் சுகமாயிருப்பதற்கு வேண்டிய பொருள்களைச் சம்பாதிப்பதற்கு உதவியாக விருக்கின்றோம். பெரியோர்களைப் பணிவதற்கு உதவியாக இருக்கின்றோம். ஸ்திரீபுருஷர்கள் ஒருவரோடொருவர் ஆலிங்கனஞ் செய்வதற்கு உதவியாக இருக்கின்றோம். காதுகளுக்கு இன்பத்தைத் தரவல்ல யாழ் முதலியன வாசிப்பதற்கு உதவியாக இருக்கின்றோம். இதுமாத்திரமன்று. இவ்வுலகத்தில் எல்லாத் தொழில்களுக்கும் முக்கியமாக யாங்கள் வேண்டியவர்களாகவே யிருக்கின்றோம்.

இவையல்லாமல் ஆச்சரியகரமான வேறு யாதாவது விசேடம் உங்களிடத்துண்டா?

உண்டு.

அது யாது?

உண்மையைக் காட்டா நிற்கும் ஓர் விஷயம் விசேட கற்பனையாக எங்களிடத்தடங்கி யிருக்கின்றது. அது "சாமுத்திரிகா லக்ஷண" மென்னும் உள்ளங்கை இரேகைகளைப் பார்ப்பதாற் பூதபௌஷிய வர்த்தமானங்களை உண்மையாய்த் தெரிவிக்கின்ற ஓர் சாஸ்திரமே. இன்பம், துன்பம், செல்வம், தரித்திரம், புத்திரபாக்கியம், ஸ்திரீ பாக்கியம், நோய், அபாயம், கீர்த்தி, ஞானம், ஜீவநிர்ணயம், மரண முதலிய எல்லாவற்றையும் இச்சாஸ்திரத்தில் வல்லமையுள்ள ஒவ்வொருவரும் எங்களிடத்திருக்கின்ற

இரேகைகளால் உள்ளங்கை நெல்லிக்கனிபோல் தெரிந்து கொள்ளுகின்றார்கள். இவ்வாறு தெரிவதற்குக் காரணையான இரேகைகளைப் பெற்றிருப்பவர்களும் யாங்கள்தாம். எங்களிடத்துள்ள இரேகைகளைத்தாம் "பிரமலபி" என்று சொல்லுகிறார்கள். இதைத்தவிரத் தலையிலெழுதப்பட்டிருக்கின்றதென்பது சுத்தப்பொய்யென்று சிலர் சொல்வதைச் சாஸ்திர சம்பந்தமாகவே மெய்யாகக் கருதலாம்.

உங்களுக்கு இவ்வியாச்சியத்தைப் பற்றி என்ன தெரியும்?

ஒன்றுந் தெரியாது.

நீங்கள் கோர்ட்டு முன்னிலையில் நின்றுகொண்டு பொய் சொல்லக்கூடாது. இவ்வுலகத்தினிடத்து எல்லா விஷயங்களும் எங்களது மகத்துவத்தினாற்றான் நடைபெறுகின்றனவென்று இப்பொழுது இக்கோர்ட்டு முன்னர்ச் சொன்ன நீங்கள் இவ்வியாச்சியத்திற் பிரதிவாதிகளான ஆன்மா சரீர மிவர்களது செய்கைகளில் யாதொன்றுந் தெரியாதென்று சொன்னது உண்மைதானா? நீங்களுங் கூடித்தான் இச் செய்கைகள் செய்திருக்கின்றீர்கள். (கோர்ட்டாரைப் பார்த்து) இவர்களைப் பிராசிக்யூட் செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகின்றேன். (சாக்ஷிகளை) ஞாபகத்தோடும் பேசுதல் வேண்டும்.

இவ்வாறு சொன்னால் யாங்கள் பயந்து எங்களை மறப்பதற்கு ஏதுவாகும்.

கோர்ட்டார்.

அதிருக்கட்டும். நீங்கள் உண்மை சொல்லுங்கள்?

யாங்கள் சொல்லிய யாவு முண்மைதான்.

இந்தப் பிரதிவாதிகள் செய்த குற்றங்களில் ஒன்றே னும் உங்களுக்குத் தெரியாதா ?

தெரியாது.

அப்படித் தெரியாமலிருந்ததற்குக் காரணம் யாது ?

சில எலும்புகளாலும் பல நரம்புகளாலும் சொற்பத் தசைகளினாலும் ஒன்றாகச் செய்யப்பட்ட எங்களுக்கு அறிவென்பது கொஞ்சமேனுங் கிடையாது. யாரோ ஒருவர் எங்களைக்கொண்டு இவ்வியாச்சியங்களைச் செய் விக்கின்றார்.

அவர் யார் ?

தெரியாது.

வாதி வக்கீல் கிராசில்லை.

கோர்ட்டார் வினாவும், 18-ம், சாக்ஷி விடையும்.

வாக்குமூலம் வாசிக்கக் கேட்டாயா ?

கேட்டேன்.

சரிதானா ?

ஆம்.

பிரதிவாதி பக்கம் 18-ம், சாக்ஷி பாணி (கை—து.)

பிரதிவாதி பக்கம் 19-ம், சாக்ஷி

பாயுரு சத்தியஞ்செய்து

தெரிவித்த வாக்குமூலம்.

சர்வ வல்லமையுள்ள தெய்வஞ் சாக்ஷியாக

நான் சொல்வதெல்லாம் உண்மை.

1-ம், பிரதிவாதி வக்கீல் வினாவும், 19-ம், சாக்ஷி விடையும்

உனது பெயர் யாது?

பாயுரு.

இதுவன்றி வேறு பெயர்களுமுண்டா?

உண்டு.

அவை யாவை?

மலத்துவாரம், மூலாதாரமுதலியன.

நீ இருப்பது எங்கே?

சடாதாரங்களில் ஒன்றாகிய மூலாதாரத்தில்.

இவ்வியாச்சியத்திற் பிரதிவாதிகளான ஆன்மாவுஞ் சரீரமுந் தெரியுமா?

தெரியும்.

அவர்கள் இந்த வியாச்சியத்திற் பிரதிவாதிகளென்பது தெரியுமா?

தெரியும்.

பிரதிவாதிகள் பக்கம் 19-ம், சாக்ஷியாக விசாரணை செய்வதற்காகவே உன்னை இக்கோர்ட்டு முன்னர் வரவழைக்கப்பட்டதென்பது தெரியுமா?

அதுவுந் தெரியும்.

ஆனால் இவ்வியாச்சியப்படிக் குற்றஞ் செய்தவர்கள் யாவர்?

அது தெரியாது.

அது எதனால்?

இவர்களது செய்கைகளொன்றிலும் யானுட்பட்டவனல்ல. எனது தொழில்களை மாத்திரம் யான் சரியானபடி செய்துகொண்டிருக்கின்றேன் அதனால்.

உனது தொழில் யாது?

ஜீவராசிகள் தங்களது போஷிப்பிற்காக உட்கொள்

ளுகின்ற ஆகாரப் பொருள்களின் கழிவுகளை உட்புறத்தில் வையாது ஒவ்வொரு வேளையும் வெளியில் தள்ளுவது. இப்பிரபஞ்சத்தில் இன்றியமையாத இவ்வொரு தொழிலையும் யான் செய்துவருவதனுற்றான் என்னை எல்லாரும் பெருமைப்படுத்துகின்றார்கள். அரசர்கள், அதிகாரிகள், குடிகள், வேலைக்காரர்கள், யாசகர்கள், சந்நியாசிகள் முதலிய யாவரும் ஒவ்வொரு நாளும் என்னைக் கைக்கொள்ளாதிருக்க மாட்டார்கள். என்னைக் கைக்கொள்ளாதிருந்தால் அவர்களொவ்வொருவரும் வௌவாலைப்போல உண்ட வழியாகவே மலவிசர்ச்சனமுஞ் செய்ய வேண்டியதாக வரும். ஜனங்கள் ஒருவித வெறுப்போடு என்னைக் கைக்கொண்டு வந்தாலும் எனது பெருமையை உண்மையாகத் தெரிந்தவர்கள் அப்படி வெறுப்பாக நினையார்கள். யோகிகள் தங்களது சுவாசத்தைத் தம்பனஞ் செய்யுங் காலங்களில் யான் அவர்களுக்குப் பெரிய உபகாரியாக விருக்கின்றேன். இதுதான் எனது தொழில்.

இவ்விதத் தொழில் செய்வதற்கு வல்லமையுள்ள நீ இப் பிரதிவாதிகளிற் குற்றவாளி இன்னுரென்று எனக்குத் தெரியாதென்று சொன்னதற்குக் காரணம் யாது?

எனக்குப் பிறபொருள்களது செய்கைகளை அறிவதற்கேதுவான் ஓரறிவு என்னிடத்திலில்லை. அதுதான் காரணம்.

அப்படியானுல் முற்கூறிய செய்கைகளை நீ எவ்வாறு செய்கின்றாய்?

அதை யாதோ ஒரு மகாசத்தியிருந்து என்னைக் கொண்டு நடத்துவிக்கின்றது.

அச் சத்தி யாது ?

அதுவுந் தெரியாது.

வாதி வக்கீல் கிருசில்லை.

கோர்ட்டார் வினவும், 19-ம், சாக்ஷி விடையும்.

வாக்குமூலம் வாசிக்கக் கேட்டாயா ?

கேட்டேன்.

சரிதானா ?

ஆம்.

பிரதிவாதி பக்கம் 19-ம், சாக்ஷி பாயுரு (கை—து.)

பிரதிவாதி பக்கம் 20-ம், சாக்ஷி

உபஸ்தஞ் சத்தியஞ்செய்து

தெரிவித்த வாக்குமூலம்.

சர்வ வல்லமையுள்ள தெய்வஞ் சாக்ஷியாக

நான் சொல்வதெல்லாம் உண்மை.

1-ம், பிரதிவாதி வக்கீல் வினவும், 20-ம், சாக்ஷி விடையும்.

உனது பெயர் யாது ?

உபஸ்தம்.

நீ இருப்பது எவ்விடத்தில் ?

(சாக்ஷி கோர்ட்டாரைப் பார்த்து)

மகானுபாவா ! என்னை இக்கோர்ட்டு முன்னர்ச் சாக்ஷியாக விசாரணை செய்வதும், என்னோடு வக்கீல்கள் பல கேள்விகள் கேட்பதும் எனக்கு அளவிறந்த வியசனமேயாம். எனது இரகசிய விருத்தாந்தங்களைச் சருவாந்தரியாமியான தங்களிடத்தில் வெளிப்படையாகச் சொல்

வதில் யாதொரு விரோதமுமில்லை. ஆனாலும் பலபேர் கூடியிருக்கின்ற இக்கோர்ட்டின் முன்னிலையில் யான் சொல்வதாயிருந்தால் அது தண்டனைக்கேதுவாக முடியும். ஆதலால் யான் மௌனமாக வாயை மூடிக்கொள்ளுகின்றேன், இப்பிரபஞ்சம் விருத்திப்பதும், நிலைப்பதும், பலவித விவகாரங்களுண்டாவதும் இன்னும் பல விசேஷ காரியங்கள் சம்பவிப்பதும் எனது மகிமையாற்றானென்றாலும், அச்செய்கைகளெல்லாவற்றையுஞ் சரியாக இருந்து கொண்டு நடத்துவிப்பது யாதோ ஒரு பெரிய சத்தியாகும். அச்சத்தியை இன்னதென்று அறிவதற்கும் இவ்வியாச்சியத்தில் குற்றவாளிகளின்னாரென்று தெரிவதற்கும் எனக்கு வல்லமையில்லை. இதுதான் என்னால் நீங்கள் தெரிந்துகொள்ளவேண்டியது.

கோர்ட்டார் வினாவும், 20-ம், சாக்ஷி விடையும்.

வாக்குமூலம் வாசிக்கக் கேட்டாயா ?

கேட்டேன்.

சரிதானா ?

ஆம்.

பிரதிவாதி பக்கம் 20-ம், சாக்ஷி உபஸ்தம் (கை—து.)

பிரதிவாதி பக்கம் 21-ம், சாக்ஷி

வசனஞ் சத்தியஞ்செய்து

தெரிவித்த வாக்குமூலம்.

சர்வ வல்லமையுள்ள தெய்வஞ் சாக்ஷியாக

நான் சொல்வதெல்லாம் உண்மை.

1-ம், பிரதிவாதி வக்கீல் வினவும், 21-ம், சாக்ஷி விடையும்.

உனது பெயர் யாது ?

வசனம்.

நீ இருப்பது எங்கே ?

நாக்கில்.

தொழிலென்ன ?

இவ்வியாச்சியத்திற் பிரதிவாதிகள் பக்கம்16-ம் சாக்ஷியாகிய வாக்குச் சொல்லிய யாவும் எனது தொழில்களே. யானில்லாதிருந்தால் ஒவ்வோ ரெழுத்துக்களையுஞ் சரியானபடி யுச்சரித்துப் பேசுவதற்கு அவ்வாக்கால் முடியாது. எனது மகத்துவத்தினாற்றான் யாவரும் சம்பாஷணை செய்கின்றார்கள். இதுதான் எனது தொழில்.

இவ்வியாச்சியத்தைப் பற்றி உனக்குத் தெரிந்தது யாது ?

ஒன்றுமில்லை.

அப்படித் தெரியாததற்குக் காரணமென்ன ?

என்னைக்கொண்டு யாதோ ஒரு மகா சத்தி இவ்விதத் தொழில்களை நடத்தி வருகின்றதே தவிர, எனக்குச் சொந்தமாய் எவ்விதச் செய்கையுஞ் செய்வதற்கு வல்லமையில்லை. அதுதான் காரணம்.

அச் சத்தி யாது ?

அது தெரியாது.

வாதி வக்கீல் கிறாசில்லை.

கோர்ட்டார் வினவும், 21-ம், சாக்ஷி விடையும்.

வாக்குமூலம் வாசிக்கக் கேட்டாயா ?

கேட்டேன்.

சரிதானா?

ஆம்.

பிரதிவாதி பக்கம் 21-ம், சாக்ஷி வசனம் (டை—து.)

பிரதிவாதி பக்கம் 22-ம், சாக்ஷி

கமனஞ் சத்தியஞ்செய்து

தெரிவித்த வாக்குமூலம்.

சர்வ வல்லமையுள்ள தெய்வஞ் சாக்ஷியாக

நான் சொல்வதெல்லாம் உண்மை.

1-ம், பிரதிவாதி வக்கீல் வினாவும், 22-ம், சாக்ஷி விடையும்.

உனது பெயர் யாது?

கமனம்.

தொழிலென்ன?

இவ்வியாச்சியத்திற் பிரதிவாதிகள் பக்கம் 17-ம், சாக்ஷியாகிய பாதஞ்சொல்லிய எல்லாவற்றையும் யான் றான் நிறைவேற்றுகின்றேன். அதனால் எனது தொழிலைப் பற்றி அதிகமாய்ச் சொல்லுவதில் யாதொரு பிரயோசனமுமில்லை.

இவ்வியாச்சியத்தைப் பற்றி யாதாவது உனக்குத் தெரியுமா?

ஒன்றுந் தெரியாது.

அது எதனால்?

ஒரு பெரிய மகாசத்தியினால் எல்லாக் காரியங்களையும் யான் செய்துவருகின்றேன். அதைத் தவிர எனக்கு எவ்வித வல்லமையுங் கிடையாது அதனால்,

அந்தச் சத்தி யாது ?

அது தெரியாது.

வாதி வக்கீல் கிருசில்லை.

கோர்ட்டார் வினவும், 22-ம், சாக்ஷி விடையும்

வாக்குமூலம் வாசிக்கக் கேட்டாயா ?

கேட்டேன்.

சரிதானா ?

ஆம்.

பிரதிவாதி பக்கம் 22-ம், சாக்ஷி கமனம் (கை—து.)

பிரதிவாதி பக்கம் 23-ம், சாக்ஷி

தானஞ் சத்தியஞ்செய்து

தெரிவித்த வாக்குமூலம்

சர்வ வல்லமையுள்ள தெய்வஞ் சாக்ஷியாக

நான் சொல்வதெல்லாம் உண்மை.

1-ம், பிரதிவாதி வக்கீல் வினவும், 23-ம், சாக்ஷி விடையும்.

உனது பெயர் யாது ?

தானம்.

நீ இருப்பது எங்கே ?

கொடுப்பவர்களது கையில்.

தொழிலென்ன ?

இவ்வியாச்சியத்திற் பிரதிவாதி பக்கம் 18-ம், சாக்ஷி யாகிய பாணி சொல்லியவற்றுள் பலவும் எனது தொழிலி னேரச்சத்தினற்ருன் நடைபெறுகின்றன. இதுதான் எனது தொழில்.

இவ்வியாச்சியத்தைப்பற்றி உனக்கு யாதாவது தெரியுமா ?

ஒன்றுந் தெரியாது.

அது எதனால் ?

ஒரு மகா சத்தியினது வல்லமையினால் அவைகள் யாவும் நடைபெறுகின்றன. அதைத்தவிர சொந்தமாய் எனக்கு எவ்வித அறிவுமில்லை அதனால்.

அச்சத்தி யாது ?

தெரியாது.

வாதி வக்கீல் கிறுசில்லை.

கோர்ட்டார் வினவும், 23-ம், சாக்ஷி விடையும்.

வாக்குமூலம் வாசிக்கக் கேட்டாயா ?

கேட்டேன்.

சரிதானா ?

ஆம்.

பிரதிவாதி பக்கம் 23-ம், சாக்ஷி தானம் (கை—து.)

பிரதிவாதி பக்கம் 24-ம், சாக்ஷி

விசர்க்கஞ் சத்தியஞ்செய்து

தெரிவித்த வாக்குமூலம்.

சர்வ வல்லமையுள்ள தெய்வஞ் சாக்ஷியாக

நான் சொல்வதெல்லாம் உண்மை.

1-ம் பிரதிவாதி வக்கீல் வினவும், 24-ம் சாக்ஷி விடையும்.

உனது பெயர் யாது ?

விசர்க்கம்.

தொழிலென்ன ?

இவ்வியாச்சியத்திற் பிரதிவாதிகள் பக்கம் 19-ம், சாக்ஷியாகிய பாயுரு சொல்லிய யாவும் எனது தொழில்களோடு சம்பந்தப்பட்டவைகள். அவற்றைத்தவிர வேறு பிரத்தியேகமான யாதொரு தொழிலும் எனக்கில்லை.

இவ்வியாச்சியத்தைப்பற்றி நீ அறிந்தது யாது?

ஒன்றுமில்லை.

அப்படி அறியாததற்குக் காரணமென்ன?

யான் செய்யும் ஒவ்வொரு தொழிலையும்பற்றி ஆலோசித்தால் அது நிச்சயமாக என்னால் நடைபெறவில்லையெனவும், எனக்குப் பிரத்தியேகமான ஒருணர்ச்சியில்லையெனவும், என்னைக்கொண்டு யாரோ ஒருவர் இச்செய்கைகளைச் செய்விக்கின்றாரெனவும் தெள்ளிதின் ஒவ்வொருவருக்கும் விளங்காநிற்கும். அதுதான் காரணம்.

அப்படிச் செய்விப்பவர் யாவர்?

தெரியாது.

வாதி வக்கீல் கிறாசில்லை.

கோர்ட்டார் வினவும், 24-ம், சாக்ஷி விடையும்.

வாக்குமூலம் வாசிக்கக் கேட்டாயா?

கேட்டேன்.

சரிதானா?

ஆம்.

பிரதிவாதி பக்கம் 24-ம், சாக்ஷி விசர்க்கம் (கை—து.)

பிரதிவாதி பக்கம் 25-ம், சாக்ஷி

ஆநந்தஞ் சத்தியஞ்செய்து

தெரிவித்த வாக்குமூலம்.

சர்வ வல்லமையுள்ள தெய்வஞ் சாக்ஷியாக

நான் சொல்வதெல்லாம் உண்மை.

1-ம், பிரதிவாதி வக்கீல் வினவும், 25-ம் சாக்ஷி விடையும்.

உனது பெயர் யாது ?

ஆநந்தம்.

தொழிலென்ன ?

சரசசல்லாப முதலிய அந்தரங்கச் செய்கைகளில் ஸ்திரீ புருஷர்களுக்கு அகமகிழ்ச்சியை யுண்டாக்குவது.

இதுவன்றி வேறு யாதாவது தொழிலுண்டா ?

உண்டு.

அது யாது ?

இவ்வியாச்சியத்திற் பிரதிவாதிகள் பக்கம் 20-ம், சாக்ஷியாகிய உபஸ்தன் சொல்லியவைகளும், மேற் சொல்ல வேண்டியவைகளும் எனது தொழில்களோடு சம்பந்தப்பட்டவைகளானதினால் அவைகளை வெளிப்படையாகச் சொல்லாமல் இம்மட்டில் நிறுத்துகின்றேன்.

இவ்வியாச்சியத்தைப்பற்றி உனக்கு என்ன தெரியும் ?

ஒன்றுந் தெரியாது.

அது எதனால் ?

எனக்கு எவ்விதத் தற்போதமு மில்லாததனால்.

தற்போதமில்லாத நீ முற்கூறிய செய்கைகளை எவ்வாறு செய்கின்றாய் ?

அவைகள் யாவும் யாதோ ஒரு பெரிய சத்தியினால் நடைபெறுகின்றன.

அச்சத்தி யாது ?

தெரியாது.

வாதி வக்கீல் கிராசில்லை.

கோர்ட்டார் வினவும், 25-ம், சாக்ஷி விடையும்.

வாக்குமூலம் வாசிக்கக் கேட்டாயா ?

கேட்டேன்.

சரிதானா ?

ஆம்.

பிரதிவாதி பக்கம் 25-ம், சாக்ஷி ஆநந்தம் (கை—து.)

பிரதிவாதி பக்கம் 26-ம், சாக்ஷி

மனஞ் சத்தியஞ்செய்து

தெரிவித்த வாக்குமூலம்.

சர்வ வல்லமையுள்ள தெய்வஞ் சாக்ஷியாக

நான் சொல்வதெல்லாம் உண்மை.

1-ம், பிரதிவாதி வக்கீல் வினவும், 26-ம், சாக்ஷி விடையும்.

உனது பெயர் யாது ?

மனம்.

தொழிலென்ன ?

எனது தொழிலையாவது தன்மையையாவது அளவையாவது வடிவத்தையாவது இன்னவிதமென்று சொல்வதற்கு ஒருவராலும் முடியாது. அவற்றைச் சரியானபடிப் பிறருக் குணர்த்துவதற்கான வார்த்தைகள்கூட இப்பிரபஞ்சத்திற் கிடையா. ஆனாற் சில பண்டிதர்கள் என்னைக் குரங்காகவும், ஆட்டுக்குட்டியாகவுங் கருதி அவைகளின் நாமத்தைக் கொடுத் தழைக்கின்றார்கள்.

அப்பண்டிதர்கள் அப்படி அழைப்பதின் உத்தேசமின்னதென்று உனக்குத் தெரியுமா ?

தெரியும்.

அது யாது ?

குரங்குகள் கொஞ்சநேரமாவது தங்களது கால் கைகளைச் சும்மா ஓரிடத்தில் வைத்துக்கொண்டிராமல் அளவுக்கதிகமான அனேகச் சேஷ்டைகளைச் செய்துகொண்டிருக்கின்றன. அதைப்போலவே யானும் ஓரிடத்திற் சற்று நேரமும் அடங்கியிராமற் பற்பல காரியங்களிற் பிரவேசிக்கின்றேன். ஆட்டுக்குட்டி எவ்வித எண்ணமுஞ் சேஷ்டையுமின்றி ஓரிடத்தில் நிற்கும்பொழுதே மனதில் எதையாவது நினைத்துக்கொண்டு தான் நின்றவிடத்தை விட்டுக் குதித்துக் கைகால்களை யுதறவும், காணப்பட்ட எல்லாவிடங்களிலுந் துள்ளிச் சாடியோடவும், தனது தாயாகிய ஆட்டைவிட்டு வேறுபடவும், சத்தமிடவுஞ் செய்கின்றது அதைப்போலவே யானும் நினைத்த விடத்திற்கெல்லாமோடவும், அலையவும், மூர்ச்சித்து வீழவும், ஒருவர் கையிலு மகப்படாமல் திரியவுஞ் செய்கின்றேன். அன்றியும், காரணமின்றிச் சந்தோஷிக்கவும், துக்கிக்கவும், வ்யசனிக்கவும், வேறு பல கோஷ்டிகள் செய்யவுஞ் செய்கின்றேன். இதனாற்றான் முற்கூறிய மிருகங்களுக்கு என்னை ஒப்பிட்டிருக்கின்றார்கள்.

அம்மிருகங்களது தொழில்களைப் போன்ற தொழில்கள் மாத்திரம் நீ செய்வாயா ?

அல்ல, வேறு தொழில்களுஞ் செய்வேன்.

அவை யாவை ?

பண்டிதர்கள் மனோவேகம், வாயுவேகமெனச் சொல்வதெல்லாம் எனது மகத்துவத்தை யறிந்துதான். வாயு சற்றுவது தாமதித்துத்தான் நினைத்த விடத்திற்குச் செல்லும். மனமாகிய யான் அப்படியல்ல. ஒரு கணநேரத்தில் இப்பிரபஞ்சமுழுவதையுஞ் சுற்றிச் சுவர்க்கம், நரகம்,

பாதாளமாகிய இவைகளினுஞ் சென்று நினைத்தவிடத்தில் வந்து நிற்பேன் அவ்வளவு விசேட வேக மென்னிடத்திலிருக்கின்றது. இதனாற்றான் மனிதர்களெல்லாம் "மனோகதி" என்று எனது வேகத்தை மிகுரமாகச் சொல்லுகின்றார்கள்.

உனது வியாபாரத்தில் இந்த மனோகதி ஒன்றுதான் விசேஷமானதா ?

அல்ல.

வேறு யாது ?

மனோராச்சியம், மனோபாவனை, மனோவியாபாரம், மனோக்கியம், மனோரதம், மனோசலனம், மனோசன், மனோற்சாகம், மனோராசி, மனோதீரம், மனோகதம், மனோசாத்தியம், மனோபாவம், மனோலயம், மனோரதம், மனோபீஷ்டம், மனோவிகாரம், மனோநிர்ணயம், மனோலவுவிய முதலியன.

இவைகளியாவும் உன்னிடத்தில் எப்பொழுது மிருக்கின்றவைகளா ?

ஆம்.

அவற்றுள் மனோராச்சிய மென்பது யாது ?

புதிது புதிதாகப் பல உலகங்களை அப்போதைக்கப்போது உண்டாக்கி அவற்றுள் பல நாடுநகரமுதலியவைகளை ஏற்படுத்தி இமைப்பொழுதிற் கோட்டை, கொத்தளம், அரண்மனை, மாடமாளிகை, கூடகோபுர முதலியவைகளைக் கட்டுவதும், இடிப்பதுமான பல வேலைகளையான் என்னிற்றானே செய்துகொள்வது.

மனோபாவனை என்பது யாது ?

இவ்வுலகத்தி லில்லாதனவும், அதிதூரத்தி லிருப்ப

தாகக் காதுகளினாற் கேள்வியுற்றறிந்தனவுங் கண்களாற் காணுதனவுமாகிய பல பொருட்களை நினைக்கும்போ தெல்லாம் முன்னிருப்பதாகக் கொண்டு அவைகளோவ் வொன்றின் தன்மையையும் இன்னவிதம், இன்னவித மென்று யான் என்னிற்றானே பாவித்துக்கொள்வது.

மனோவியாபார மென்பது யாது?

ஒன்றைப் பத்தாக்கிப் பத்தைப் பதினாயிர மாக்கி அதைப் பத்துக்கோடியாக்குவதும், அப்பால் அவற்றை ஒன்று சேர்த்துக் கூட்டிக் குறைத்துப் பெருக்கிப் பாகித் துக் காசியில் நடக்குங் காரியங்களைக் கன்னியாகுமரியில் நடக்குங் காரியங்களோடுங் கன்னியாகுமரியில் நடக்குங் காரியங்களைக் காசியில் நடக்குங் காரியங்களோடும் நிமிஷ நேரத்தில் என்னில் யானே சம்பந்தப்படுத்திக் கொள்வது.

மனோக்கியம் என்பது யாது?

கண்களாற் பாராத அனேக விசித்திர காட்சிகளை யும், காதுகளாற் கேட்ட ஸ்திரீ முதலியவர்களது வடிவங் களையும் அப்போதைக்கப்போது என்னில் யானே உருவப் படுத்தி அறிந்துகொள்வது.

மனோரத மென்பது யாது?

தேவாமிர்தத்தினும் மேன்மைப்பட்ட உருசிகரமான பொருள்களையும் ஒருகாலத்துங் கேளாத மிகவு மினிமை யான கீதங்களையும், எக்காலத்தும் இல்லாத பல பொருள் களையும் யான் என்னிற்றானே அதிவிரைவில் உண்டுங் கேட்டும் அனுபவித்துக் கொள்வது.

மனோசலன மென்பது யாது?

தண்ணீரின்மீது காற்றினால் அலையுண்டாவதுபோலப் பற்பல எண்ணங்களின் இயக்கத்தினால் யான் என்னிற் றானே எப்பொழுதும் அலைந்துகொண்டிருப்பது.

மனோசமனென்பது யாது ?

காதுகளால் கேட்டதும், கண்களாற் பார்த்ததும், பற்பல நூல்களினால் வாசித்தறிந்ததுமான அனேகாயிர சுந்தர ஸ்திரீகளை அனுபவிப்பது போலவும், அதனால் திருத்தியடைவது போலவும், அவர்களோடு வார்த்தை யாடுவது போலவும், யான் என்னிற்றானே அப்போதைக் கப்போது நிச்சயப்படுத்திக்கொள்வது.

மனோற்சாகமென்பது யாது ?

பற்பல நோய்களாற் பீடிக்கப்பட்டுச் சரீரம் அதிக வேதனையடைந்தாலும், நித்திய விருத்திக்கு யாதொரு கதியுமின்றி அளவற்ற வறுமையுற்றாலும், மனைவி, மக்கள், உறவினர் முதலானவர்கள் மிக்க ஆபத்தான விஷயங்களி லகப்பட்டாலும், அவற்றால் எவ்விதக் கவலையுமின்றி யான் என்னிற்றானே எப்பொழுதும் உற்சாகத்தோடிருப்பது.

மனோராசியென்பது யாது ?

குணம், தோஷம், சுகம், துக்கம், கொலை, இரட்சிப்பு, கலகம், சமாதானம், அசுத்தம், சுத்தம், களவு, காம முத லிய செய்கைகளுக்காக யான் என்னிற்றானே கருதி ஒரு க்ஷணப்பொழுதிற் செல்லுவது.

மனோதீரமென்பது யாது ?

தாங்கமுடியாத கஷ்ட நஷ்டங்கள் நேரிட்ட காலத் தும், பகைவராற் பகைக்கப்பட்டுத் தனது பிராணனுக்கு ஆபத்து வந்த காலத்தும், பொறுக்கவியலாத பல நோய்க ளாற் பீடிக்கப்பட்டு வருந்திய காலத்தும் யான் என்னிற் றானே கவலைகொள்ளாமல் தைரியமாயிருப்பது.

மனோகதமென்பது யாது ?

அரசனாயிருந்து இராச்சிய பரிபாலனஞ் செய்ய வேண்டுமெனவும், பிரபுக்களாயிருந்து குடும்பபாரத்தைத்

தாங்கி இரட்சித்து வரவேண்டுமெனவும், இரத முதலியவைகளின் மேலேறிச் சவாரி செய்யவேண்டுமெனவும், இவை போன்ற பிற விஷயங்களைச் செய்யவேண்டுமெனவும், யான் என்னிற்றானே அடிக்கடி நினைத்துக்கொள்வது.

மனோசாத்திய மென்பது யாது?

கிடையாததும் சம்பாதிப்பதற்கு முடியாததுமான பல பொருள்களைக் காணும்போதெல்லாம் அவைகள் அன்னியரது பொருள்களாக விருந்தாலும், அபூர்வமாயிருந்தாலும், ஆகாயத்திற் பறப்பனவாயிருந்தாலும் அவற்றின்மீது யான் என்னிற்றானே ஆசைகொள்வது.

மனோபாவ மென்பது யாது?

என்னிடத்துண்டாகின்ற எல்லா வெண்ணங்களையும் உண்மையாகவே இருப்பதாகப் பாவித்து மேலும் நவநவமான எண்ணங்களை என்னில் யானே உண்டாக்கிக் கொள்வது.

மனோல மென்பது யாது?

சினேகிதர்களைக் கண்டால் அவர்கள் சற்குணர்களாயிருந்தாலும் அவர்களை மாடெனவும், குரங்கெனவுங் கருதிப் பகைக்கேதுவான விஷயங்களை விளைப்பதும், ஒருவனது மனைவி மிகவும் நல்ல சீலமுடையவளாகவும், சுந்தரமுடையவளாகவு மிருந்தாலும் அவளைக்கண்ட அளவில் அவள்மீது வெறுப்புண்டாய் அவளைக் கெட்ட குணமுடையாளெனவும், விகாரரூபி யெனவும் நிந்திப்பதும், ஒவ்வொரு விஷயத்திற்கும் அதன் யதார்த்த அர்த்தத்தை விட்டு விகடார்த்தங் காட்டுவதுமான பல விஷயங்களை யான் என்னிற்றானே செய்துகொள்வது.

மனோரத மென்பது யாது?

ஒருவன் எவ்வளவோ தேக சுத்தத்தோடும் அழகோடும் பெருந்தன்மையோடு மிருந்தாலும் அவனுக்கு அவற்றையெல்லாம் மறப்பித்து அவனை அசுத்தமும் அருவருப்புமான விஷயங்களிற் பிரவேசிப்பித்து அதைச் சொர்க்கப் பதவியைப் பார்க்கினுஞ் சுகமாய் நினைப்பிப்பதும்; ஒருவனுக்கு இரதியையும் அழகினால் நாணச்செய்யும் அதிசுந்தரமுள்ள மனைவி யிருந்தாலும் அவளைச் சேர்ந்து சுகமனுபவியாதபடி அவனுக்கு அவளிடத்தில் வெறுப்பையுண்டாக்கிக்குஷ்டம், பிரமேகம், அரையாப்பு முதலிய வியாதிகளாற் பீடிக்கப்பட்டவளாகவோ, வேறு எக்காரணத்தினாலாவது தேகத்தில் துர்நாற்ற முடையவளாகவோ இருக்கின்ற ஒருத்தியின்மீது மோகத்தை யுண்டாக்கி அவளைச் சேரச் செய்து சுகிப்பிப்பதும், அவளது துர்நாற்றம் பரவிய உடலிலிருந்துண்டாகின்ற சீழ், இரத்த முதலியவைகளைக் கண், மூக்காகிய இவைகளறியாதபடி யானே முன்னாக நின்று மறைப்பிப்பதும், பெண்களிலும் சிலரை முற்கூறியவாறு சுத்தமும் சுந்தரமுமுள்ள தங்கள் நாயகர்களை யொழித்து அசுத்தமும் விகார ரூபமுமுள்ள பிறபுருஷர்களோடு சேரச் செய்து அதனாலுண்டாகும் இன்பத்தை மிகவும் மேலாகக் கருதுவிப்பதுமான பல விஷயங்களை யான் என்னிற்றானே நடத்திக்கொள்வது.

மனோபீஷ்ட மென்பது யாது?

இன்பத்தைத் தரவல்ல அமுது, கற்கண்டு, சர்க்கரை, பால் முதலியவைகளை வெறுப்பாகவும், கசப்பு, மயக்க முதலியவைகளைத் தருகின்ற கஞ்சா, அபின், சாராய முதலியவைகளை விருப்பமாகவும் யான் என்னிற்றானே கருதிக்கொள்வது.

மனோவிகார மென்பது யாது ?

எவ்வளவு உயர்தரப் பொருள்களா யிருந்தாலும் அவற்றை அதிருப்தியோடு புசித்தால் அவை வயிற்றிற் காகாமல் மந்திக்கவும், வாந்திக்கவும், கெட்டவும், எவ்வளவு அசுசியான பொருள்களாயிருந்தாலும் அவற்றைச் சந்தோஷமாய்ப் புசித்தால் அவை வயிற்றிற்கு ஏற்றவாய் யாதொரு இடையூறுமின்றித் திருப்தியைக் கொடுக்கவுமான விஷயங்களை யான் என்னிற்றானே யுண்டாக்கிக் கொள்வது.

மனோநிர்ணய மென்பது யாது ?

யான் எண்ணிய விஷயத்தைக் கூடியசீக்கிரத்தில் நிறைவேற்றுவது. அதாவது ஒரு புருஷனோ, பெண்ணோ, சிறு பருவத்தில் ஒரு பெண்ணையோ, புருஷனையோ விவாகஞ்செய்துகொள்ள வேண்டுமென்று தீர்மானித்த பின்னர் எந்தச் சமயத்திலும் எவ்விதத் தடைகள் நேர்ந்தாலும், நாட்கள் தம்மிற் பொருத்தமானாலும், விருத்தமானாலும், உறவினர்களுக்கு எவ்வளவு வெறுப்பு, விருப்பு ஏற்பட்டாலும், எவ்வளவு இன்பதுன்பம் நேர்ந்தாலும், முதலாவது தீர்மானித்த தீர்மானத்தைப் பேதப்படுத்தாமல் அந்தப் பெண்ணையோ, அந்தப் புருஷனையோ, மனைவியாகவோ நாயகனாகவோ கொண்டு தீர்மானித்தபடி நிறைவேற்றும் விஷயத்தை யான் என்னிற்றானே உறுதியாக வைத்துக்கொள்வது.

மனோ லவுலியமென்பது யாது ?

பூதப்பிரேதப்பைசாசங்களையும் வேறுவிதமான பயங்கர வடிவங்களையும் என்னில் யானே பார்த்து அவற்றின்

சாய்கைகள் தெரிவது போன்ற எண்ணத்தை என்னில் யானே உண்டாக்கிக் கொள்வது.

இவ்வித விஷயங்களெல்லாவற்றையும் நடத்துவதற்குப் போதுமான வன்மை உன்னிடத்திலிருக்கின்றதல்லவா?

ஆம்.

உனது அளவு யாது?

அதை ஒப்பிட்டுச் சொல்லுவதற்குப் போதுமான உவமைப் பொருள் இவ்வுலகத்திற் கிடையாது. வான சாஸ்திரிகள் பூமியிலிருந்து கிரக மண்டலம் இருபத்தைந்து கோடி இருபது லக்ஷங் காத தூரத்திலிருக்கின்றதென்று கணித்திருக்கின்றார்கள். இந்து சாஸ்திரிகள் ஆயிரத்தெட்டு அண்டங்களில் இவ்வண்டத்தையும் பதினுன்கு உலகங்களாகப் பாகித்து ஒவ்வொரு உலகங்களுக்கும் ஒவ்வொரு நூறு யோசனைத் தூரமென்று சூசனை பண்ணியிருக்கின்றார்கள். ஆனால் ஆகாயம் இவ்வளவு தூரத்தையுந் தாண்டி அப்பாலுங் கடந்திருக்கின்றது. இவ்வாறிருக்கின்ற வானம், பூமி, பாதாளம், திக்கு, திகாந்த முதலிய யாவும் ஒன்றாக நிறைந்திருக்கும் ஓர் விசுவரூபமாக எனது அளவை ஒருவாறு அநுமானப்படுத்தலாம். ஆனால் இந்த உருவமும் யான் ஒரு நொடிநேரத்தில் எடுக்கின்ற ஒருருவந்தான். இவ்வாறிருக்கின்ற என்னை வெல்வதற்கு ஒருவராலும் முடியாது. யாவும் என்னகத்து அடங்கிக் கிடக்கின்றன. இவ்வுலக முழுவதும் என்னதே. யானே இவ்வுலகம். இவ்வுலகத்தில் முற்கூறிய அநந்த வேலைகளைச் செய்கின்றேன். அவற்றுள் பிரதானமாக வேறொரு வேலையுஞ் செய்து வருகின்றேன்.

அது யாது?

இவ்வுலகத்தினிடத்துள்ள படைப்புகளெல்லாவற்றையும் அதனதன் சாய்கையாகப் படமெடுத்தாற்போலும் எடுத்து ஒன்ருகச் சேகரப்படுத்தி யான் என்னிடத்தில் வைத்துக் கொண்டிருக்கின்றேன். இதனுல் என்னிடத்தில் எவ்வளவு பெரிய ஓர் பண்டகசாலையிருக்கின்றதென்று கண்ணியமுள்ள கோர்ட்டாரே யோசிக்க வேண்டியதாக விருக்கின்றது. ஆயிரம் வருடங்களுக்கு முன்னர் வான்மீகி என்பவரால் எழுதப்பட்ட இராவண யுத்தத்தினது சுருக்கம் இப்பொழுதும் என்னகத்திருக்கின்றது. இரண்டு லக்ஷம் வருடங்களுக்கு முன்னர் மகாவிஷ்ணுவினுலெடுக்கப்பட்ட நரசிம்மாவதாரம் அப்பொழுதிருந்தது போலவே இப்பொழுதும் என்னிடத்திற் படிந்திருக்கின்றது. உத்தேசம் இரண்டாயிரம் வருடங்களுக்கு முன்னர் அவதரித்த பல மகான்களது சரித்திரங்களும் என்பால் அமைந்து கிடக்கின்றன. இவைகளெல்லாவற்றையும் அடக்கிவைத்துக்கொண்டிருக்கும் யான் பெரியோனென்று எனது வாயினுற்சொல்லவும் வேண்டுமா? வேண்டாமே.

இதைப் பார்க்கிலுமுயர்ந்த வேறு எந்தத் தொழிலையாவது நீ செய்கின்ருயா?

செய்கின்றேன்.

அது யாது?

எமதரும ராஜாவிற்குச் சித்திரபுத்திரனென ஒரு கணக்கனிருப்பதாகவும், அவன் இவ்வுலகத்தினிடத்துள்ள மனுஷியர்கள் எப்பொழுதுஞ் செய்துவருகின்ற எல்லாப் பாவ புண்ணியங்களையும் மிகவும் விளக்கமாய் எழுதிவருவ

தாகவுமுள்ள ஒரு கதை யாவருக்குந் தெரியுமல்லவா! அச் சித்திரபுத்திரன் யார்? மனமாகிய யானே. என்னை யன்றி வேறொருவருமில்லர். என்னைத் தான் அந்நாமத்தை சூட்டி இரகசியார்த்தமாக வைத்திருக்கின்றார்கள். யான்றான் ஒவ்வொரு நிமிஷத்திலும் ஒவ்வொருவருஞ் செய்கின்ற பாவ புண்ணியங்களை மனசாக்ஷியாக அறிந்து, அறிந்தவாறே படமெடுத்தாற்போலுஞ் சித்திரந்தீர்த்து வைக்கின்றேன். யான்றான் மரணகாலத்தில் அவரவர்களது பாவ புண்ணியங்களை உருவப்படுத்தி யுண்மையான கணக்கெடுத்துக் கணிப்போன். இதுதான் அந்தத் தொழில்.

நீ யாருக்காவது அடங்கி நடப்பவனோ?

அல்ல. என்னை யார் அடக்கி நடத்தவேண்டுமென்று நினைக்கின்றார்களோ? அவர்களது நினைப்பு முடிவில் வெறும் பயனற்றதாகவே முடியும். யான் ஒருவருக்கும் அடங்குபவனல்ல. என்னை அடக்கிச் சும்மாவிருக்கவேண்டுமென்பது வேத சாஸ்திரங்களின் முக்கிய கோட்பாடு. மகரிஷிகள், சந்நியாசிகள், தவசிகள், யோகிகள் முதலானவர்கள் மிக்க காலம் தவத்திலிருந்து கஷ்டப்படும்போது யான் அறவே அவர்களுக்கு அடங்காமற் போகமாட்டேன். என்னை அடக்கிய ஒருவனுக்கு இவ்வுலகம் அடங்கி நடக்கின்றது. கடவுளுஞ் சொந்தமாகின்றான். மோட்சம் அவனுக்கு யாதொரு சிரமமுமில்லாமற் சித்திக்கின்றது. ஆதலாற் பத்தியையும் முத்தியையுங் கருதுகின்ற எல்லாரும் என்னிடத்துத்தான் அதிக கவலையுள்ளவர்களாக விருக்கின்றார்கள். என்னை அடக்கியாளுவதற்கியலாமல் அநந்த போகிகள் அழுதகண்ணீருஞ் சிந்திய

மூக்குமாய் எப்பொழுதுந் துக்கசாகரத்திலேயே மூழ்கின வர்களாக விருக்கின்றார்கள். இவ்வாறு யோக போக விவேகப்பிரதாப வீரதீரனாகிய என்னை அடக்கியாளுவதற் குத் தகுந்த இலேசான பல மார்க்கங்களுமிருக்கின்றன. அவற்றிற் பிரதானமானது வாசியோகமென்னுஞ் சுவாச பந்தனம். ஒவ்வொரு நாளும் மநுஷியர்கள் சுவாசித்து வருகின்ற இரண்டாயிரத்தறுநூறு சுவாசத்தையும் நாள டைவிற் கிரமமாகக் குறைத்து வாசியோகத்தாற் பந்திக் கின்ற சமயத்தில், யான் யாதொரு விகாரமுமின்றி நிலைத் திருக்கின்றேன். எனது சித்தம் வேறொரு பொருளினிடத் தும் பிரவேசியாது. நிலைபரமான பக்தி அந்தச் சமயத்தி லுண்டாகின்றது. யான் திரச்சிந்தனை யல்லது எந்தப் பொருளினிடத்தாவது பிரவேசிக்கின்ற சமயத்தில் நிடூ ரென்று சுவாசம் பாயாமல் நிலைத்திருக்கும். அது இதற் கோருதாரணமாகும்

நீ இருப்பது எங்கே ?

சிரசின் முன்புறத்தில்.

கோர்ட்டார்.

ஒவ்வொரு சாக்ஷியினிடத்தும் இவ்விதக் கேள்வி களைக் கேட்பதில் யாதொரு பிரயோசனமுமில்லை. இவ் வியாச்சியத்தின் உருபகத்திற்கு வேண்டிய கேள்விகளை மாத்திரம் இனிக் கேட்கும்படி உத்திரவு செய்திருக்கின் றேன்.

வக்கீல்.

சாக்ஷிகளது பலவிதத் தொழில்களையும் அவர்களது வல்லமைகளையும் அவர்களைக் கொண்டே இக்கோர்ட்டு முன்னிலையிற் சொல்லுவிப்பதனால் இவ்வியாச்சியத்திற்குப் போதுமான உரூபகமுண்டாகும். அதனால் அவர்களொவ்வொருவரதும் பெயர், தொழில், ஜாதி, இருப்பிடம், வயதாகிய இவைகளியாவுங் கேட்டறிய வேண்டியதாகவே யிருக்கின்றன.

கோர்ட்டார்

சரி, கேட்கவேண்டிய கேள்விகளைச் சுருக்கமாகவும் விரைவாகவுங் கேட்கும்படி உத்திரவு செய்திருக்கின்றேன்.

இவ்வியாச்சியத்திற் பிரதிவாதிகளான ஆன்மாவுஞ் சரீரமுந் தெரியுமா ?

தெரியும்.

இவர்கள் செய்த குற்றந் தெரியுமா ?

தெரியாது.

வாதி வக்கீல் கிருசப், 26-ம், சாக்ஷி விடையும்

இரண்டிலக்ஷம் வருடங்களுக்கு முன்னர் நடந்த விஷயங்களும் ஜீவராசிகள் ஒவ்வொரு நிமிஷமுஞ் செய்கின்ற காரியங்களும், நன்றாக எனக்குத் தெரியுமென்று சற்றுநேரத்திற்குமுன் இக்கோர்ட்டு முன்னர் வாக்குமூலங் கொடுத்த நீ இந்தப் பிரதிவாதிகள் செய்த குற்றங்களினொன்றுந் தெரியாதென்று சொன்னதற்குக் காரணமென்ன ?

யான் சொன்ன எல்லாக் காரியங்களையும் இப்பொழுதும் யான் நடத்திவருகின்றேனாயினும், அவை யாவும் என்னால் நடத்தப்படுபவைகளல்ல, யான் ஒரு பாவைவையைப்போலுஞ் சும்மாவிருக்கின்றேன். என்னைக்கொண்டு யாரோ ஒருவர் அச் செய்கைகளைச் செய்து வருகின்றார். இதுதான் அதற்குக் காரணம்.

அவர் யாவர்?

தெரியாது.

கோர்ட்டார் வினாவும், 26-ம், சாக்ஷி விடையும்.

வாக்குமூலம் வாசிக்கக் கேட்டாயா?

கேட்டேன்.

சரிதானா?

ஆம்.

பிரதிவாதி பக்கம் 26-ம், சாக்ஷி மனம் (கை—து.)

பிரதிவாதி பக்கம் 27-ம், சாக்ஷி

புத்தி சத்தியஞ்செய்து

தெரிவித்த வாக்குமூலம்.

சர்வ வல்லமையுள்ள தெய்வஞ் சாக்ஷியாக

நான் சொல்வதெல்லாம் உண்மை.

1-ம், பிரதிவாதி வக்கீல் வினாவும், 27-ம், சாக்ஷி விடையும்.

உனது பெயர் யாது?

புத்தி.

நீ யார்?

அந்தக்கரணத்தின் ஓர் பாகஸ்தன்.

உனது தொழிலென்ன?

எனது தொழிலைப்பற்றி ஒன்றுந் தான் சொல்ல

வேண்டுமென்று எனக்குத் தோன்றவில்லை. "புத்திமான் பலவானுவான்" என்ற ஆப்த வாக்கியத்தினுலேயே இப் பிரபஞ்சத்தினிடத்துள்ள எல்லா விஷயங்களும் என்னால் நடைபெறுகின்றன வென்பது பிரத்தியக்ஷமாகின்றது. எந்த வேலையும் புத்திமான்களுக்குப்பெரிதல்ல, புத்தியினு லெல்லாவற்றையும் ஜயிக்கின்றூர்கள். சூரியோதய தான முதல் சூரியாஸ்தமனதானம் வரையுள்ள அளவற்ற யோசனைத் தூரத்தை ஜனங்கள் ஆதியில் எவ்வளவோ கஷ்டப்பட்டு, எவ்வளவோ வருடங்கள் நடந்து கடந்து வந்தார்கள். இப்பொழுது குறிப்பிட்ட சில தினங்களுக் குள் தாண்டுவதற் கேதுவான புகைவண்டி, கப்பல் முத லியவைகள் எனது சாமர்த்தியத்தினுல் நிருமிக்கப்படுகின் றன. அவற்றைப் பார்க்கினும் அதிவிசேடமும் அதி வேகத்திற் செல்லக் கூடியதுமான ஆகாயக்கப்பலும் இப் பொழுது எனது வல்லமையினுற் கண்டு பிடித்திருக்கின் றூர்கள். இதுவுமல்லாமல் ஜனங்கள் தங்களது சமாச் சாரத்தை அனேகாயிரம் மயில்களுக்கப்பா லிருக்கின்ற தங்களது உறவினர்களுக்கு நினைத்த அப்பொழுதே தந் தித் தபால் வழியாய்த் தெரிவிக்கின்றூர்கள். இதுவும் எனது வல்லமையைத் தெள்ளத் தெளியக் காட்டுகின் றது. இறந்த ஜனங்களை அந்த வடிவத்தோடு பார்க்க வும், அவர்களது சத்தத்தை அந்த ஓசையோடு கேட்க வுஞ் சில யந்திரங்களை எனது மகத்துவத்தினுற் சிலர் கண்டு பிடித்திருக்கிறூர்களென்பது சற்றும் பொய்யன்று. அளவற்ற ஜனங்கள் ஒன்று கூடி அனேக நாட்களாகச் செய்து முடிக்க வேண்டிய அநந்த வேலைகளை எனது மகத்துவத்தினுற் கண்டு பிடித்த சில யந்திரங்களால்

சொற்ப தினங்களுக்குட் செய்து முடிக்கின்றார்கள். இவ் விதமுள்ள யான் ஒருவரிடத்துத்தா னிருக்கிறேனா? அல்ல, எல்லாரிடத்து மிருக்கின்றேன். ஆனால் எல்லாரும் என்னை விளக்கப்படுத்திக் கொள்ளாமல் விலகவிட்டு விடுகின்றார்கள். என்னோடு கூடாதவர் இவ்வுலகத்தினிடத்து ஒருவருமில்லர். என்னோடு நீங்காமல் நிலையாகச் சேர்ந்திருப்பவர் ஒரு காலத்திலுங் கெட்டுப் போகமாட்டார். தரித்திரன், அங்கவீனன், பிணியாளன், விகாரரூபன், கீழ்குலத்தான் முதலிய யாவராயினும் என்னையுடையவர்களா யிருந்தால் அவர்களை யான் இராச சிங்காசனம் வரை பெரிய உன்னத பதவிகளிற் கொண்டுபோயிருத்துகின்றேன். அன்றியும், அவர்களது ஆயுளுள்வரை அவர்களுக்கு யாதொரு ஆபத்தும் வாராமல் அவர்களைக் காப்பாற்றுகின்றேன். அவர்கள் மகாப் புண்ணியவான்க ளென்று இவ்வுலகமுழுவதும் புகழ்கின்றன. அவர்கள் தங்களது சுக காரியங்களில் மாத்திரந் திருப்தியடையாமற் பரோபகாரமான காரியங்களிலும் பிரவேசித்துத் தங்களைப் போன்ற அநந்த ஜீவராசிகளைக் காப்பாற்றவும், அதனால் தங்களுக்குப் பெரிய பெருமை ஏற்படு அவர்களுள் தலைவர்களாக வீற்றிருக்கவுஞ் செய்கின்றார்கள். என்னை யுடையவர்களது பிராயத்தைப் பார்ப்பதனால் யாதொரு பிரயோசனமுமில்லை. அவர்கள் பதினாறு பிராயமுடையவர்களா யிருந்தாலும் ஐம்பது, அறுபது பிராயமுள்ள ஒவ்வொருவரும் அவர்களிடத்து வந்து ஒவ்வொரு காரியங்களையுஞ் சொல்லி அதற்குத் தக்க யோசனைகள் கேட்பதோடு அவர்களது சந்தேகத்திற்கும் முடிவு தேடிக் கொள்ளுகின்றார்கள். அழகும் பொருளும் வண்

ணமும் என்னோடு ஒப்பாகமாட்டா. என்னை யுடையவர்கள் முற்கூறிய அழகு முதலியன வுடையோர்களைப் பார்க்கினும் முன்னிலையாக நிற்பார்களென்பதில் எள்ளளவுஞ் சந்தேகமில்லை. அவர்கள் ஒரு காரியத்தை இதயத்தினிடத்து ஆலோசித்தால் அப்பொழுதே அக்காரியத்தைப் பலவாகப் பிரித்து அதன் தாரதம்மியங்களையுங் குணதோஷங்களையும் உடனே தெரிந்து கொள்ளுகின்றார்கள். இவ்வளவு பெரிய உபகாரமுள்ள தொழில்களைத் தாம் யான் செய்து வருகின்றேன்.

இவ்வியாச்சியத்தைப் பற்றி உனக்கு என்ன தெரியும்?

ஒன்றுந் தெரியாது.

அது எதனால்?

யான் சொந்தமாக யாதொரு தொழிலுஞ் செய்வதற்கு வன்மை யுடையேனல்லேன். முற்கூறிய செய்கைகளெல்லாவற்றையும் என்னைக்கொண்டு யாதோ ஒரு மகாசத்தி நடத்துவிக்கின்றது. அதனால்.

அச் சத்தி யாது?

தெரியாது.

வாதி வக்கீல் கிறுசில்லை.

கோர்ட்டார் வினவும், 27-ம், சாக்ஷி விடையும்.

வாக்குமூலம் வாசிக்கக் கேட்டாயா?

கேட்டேன்.

சரிதானா?

ஆம்.

பிரதிவாதி பக்கம் 27-ம், சாக்ஷி, புத்தி (கை—து.)

பிரதிவாதி பக்கம் 28-ம், சாக்ஷி
சித்தஞ் சத்தியஞ்செய்து
தெரிவித்த வாக்குமூலம்.
சர்வ வல்லமையுள்ள தெய்வஞ்சாக்ஷியாக
நான் சொல்வதெல்லாம் உண்மை.

1-ம், பிரதிவாதி வக்கீல் வினவும், 28-ம், சாக்ஷி விடையும்.

உனது பெயர் யாது ?

சித்தம்.

தொழிலென்ன ?

இப்பிரபஞ்சத்தினிடத்துள்ள எல்லா வேலைகளையும் நடத்துவது.

அது எவ்விதம் ?

அதை விவரமாய்ச் சொல்லுவது கஷ்டமாகும். மனம் ஒவ்வொரு விஷயத்தையும் நினைக்கும். புத்தி அவ்விஷயம் நன்றோ, தீதோ, என ஆலோசிக்கும். முடிவில் யான் இது சரி, இது தீதென்று தீர்மானிப்பதுந்தவிர, அவ்விஷயங் குணமாயிருந்தாலுங் குற்றமாயிருந்தாலுங் கூடிய சீக்கிரத்தில் அதைச் செய்து முடிப்பதே எனது முக்கிய தொழில். இதனாலன்றோ "சித்தம் வைத்தால் முடியாத தொன்றில்லை" யென்று பெரியோர்கள் கூறியிருக்கின்றார்கள். நாடு, நகரம், வீடு, மரக்கலம், யந்திர முதலிய எல்லாவற்றையும் உண்டாக்குவோனும் யான்றான். சாஸ்திரங்களை அட்சரவரிசையாக எழுதிப் புத்தகமாக்கி வெளியிடுபவனும் யான்றான். யானில்லாதிருந்தால் எந்தக் காரியமும் எண்ணி எண்ணி முடிவில் அந்த எண்ணத்தினளவிலேயே அழிந்துபோகும். இதுதான் அதன் விதம்.

இவ்வியாச்சிய சம்பந்தமாக உனக்கு யாதாவது தெரியுமா ?

ஒன்றுந் தெரியாது.

அது எதனால் ?

அந்தக்கரணத்தின் ஓரம்சமாகிய எனக்குச் சொந்தமாக எதையும் அறிவதற்குஞ் செய்வதற்கும் வல்லமையில்லை. அதனால்.

அப்படியானால் முற்கூறிய காரியங்களை நீ செய்வதெப்படி ?

அவற்றை யாதோ ஒரு பகாசத்தி இருந்து என்னைக் கொண்டு நடத்துவிக்கின்றது.

அச் சத்தி யாது ?

தெரியாது.

வாதி வக்கீல் கிருசில்லை.

கோர்ட்டார் வினவும், 28-ம், சாக்ஷி விடையும்.

வாக்குமூலம் வாசிக்கக் கேட்டாயா ?

கேட்டேன்.

சரிதானா ?

ஆம்.

பிரதிவாதி பக்கம் 28-ம், சாக்ஷி சித்தம் (கை—து.)

பிரதிவாதி பக்கம் 29-ம், சாக்ஷி

அகங்காரஞ் சத்தியஞ்செய்து

தெரிவித்த வாக்குமூலம்.

சர்வ வல்லமையுள்ள தெய்வஞ் சாக்ஷியாக

நான் சொல்வதெல்லாம் உண்மை.

1-ம், பிரதிவாதி வக்கீல் வினவும், 29-ம், சாக்ஷி விடையும்.

உனது பெயர் யாது ?

அகங்காரம்.

தொழிலென்ன ?

சித்தந் தீர்மானித்த விஷயங்களை மேலும் மேலும் எடுத்துணர்த்திக் கொண்டிருப்பது. அன்றியும், ஆவசியம், அல்லது அநாவசியமான எல்லாக் காரியங்களையுஞ் செய்வதற்கு ஆரம்பித்தால் உடன்றானே அவற்றைச் செய்து முடித்து விடவேண்டுமென்ற கருவத்தைக் கொள்வது. சற்றும் பிரயோசனமில்லாத காரியங்களினு முட்பட்டு எனது பராக்கிரமத்தைக காட்டுவது. இதுதான் எனது தொழில்.

இவ்வியாச்சியத்தைப்பற்றி உனக்குத் தெரிந்தது யாது ?

ஒன்று மில்லை.

அது எதனால் ?

பிரமம், தாமசாகங்காரத்தோடு சேர்ந்து இப்பிரபஞ்சமுண்டாயிற்றென் றேற்பட்டாலும் அகங்காரத்திரயத்தோடு கூடிய எனக்குச் சொந்தமாக எவ்வித வல்லமையுமில்லை. அதனால்.

சொந்த வல்லமையற்ற நீ முற்கூறிய செய்கைகளை எவ்வாறு செய்கின்றாய் ?

அவற்றை என்னைக்கொண்டு யாரோ ஒருவர் செய்விக்கின்றார்.

அவர் பெயர் யாது ?

தெரியாது.

அவர் எங்கே யிருக்கின்றார் ?

அதுவுந் தெரியாது.

வாதி வக்கீல் கிராசில்லை.

கோர்ட்டார் வினவும், 29-ம், சாக்ஷி விடையும்.

வாக்குமூலம் வாசிக்கக் கேட்டாயா ?

கேட்டேன்.

சரிதானா ?

ஆம்.

பிரதிவாதி பக்கம் 29-ம், சாக்ஷி அகங்காரம் (கை—து.)

பிரதிவாதி பக்கம் 30-ம், சாக்ஷி

அறிவு சத்தியஞ்செய்து

தெரிவித்த வாக்குமூலம்.

சர்வ வல்லமையுள்ள தெய்வஞ் சாக்ஷியாக

நான் சொல்வதெல்லாம் உண்மை.

1-ம், பிரதிவாதி வக்கீல் வினவும், 30-ம், சாக்ஷி விடையும்.

உனது பெயர் யாது ?

அதை இன்னதுதானென்று நிச்சயமாகச் சொல்ல முடியாது. என்னைப் பலரும் பலவாறு அழைப்பதோடு சிலர் ஆன்மா வெனவும், சிலர் சைதன்னியமெனவும், சிலர் புத்தியெனவும், சிலர் உணர்வெனவும், சிலர் ஞானமெனவும், சிலர் குருவெனவும் அவரவர்களுக்குத் தோற்றிய வாறு பெயர் சொல்லிக் கூப்பிடுகின்றார்கள். ஆனால் அவ ரவர்களது தோற்றப்படியே யானுமிருந்து வருகின்றேன். தண்ணீரென்பது தண்ணீரே. அதை சமுத்திரமெனவும்,

கழியெனவும், ஏரியெனவும், அருவியெனவும், கிணறெனவும், பலரும் பலவாறு சொல்லுகின்றார்கள். அவர்கள் எந்தெந்தப் பெயரையிட் டழைத்தாலும் அந்தத் தண்ணீர் தண்ணீர் தான். அதுபோல ஞான தத்துவமாகிய எல்லா நாமங்களும் எனக்குரித்தானவைகளே. ஆனாலும் எனது சரியான பெயர் அறிவு.

உனது தொழில் யாது?

என்னை யானே பார்த்து லயித்திருப்பது.

இவ்வியாச்சியத்தைப்பற்றி யாதாவது தெரியுமா?

ஒன்றுந் தெரியாது.

அது எதனால்?

எனக்குப் பிரத்தியேக அறிவில்லாததனால்.

அப்படியானால் உன்னை நீயே பார்த்து லயிப்பது எப்படி?

அப்படிப்பார்த்து லயிக்கச் செய்யுஞ் சத்தி வேறு.

அது யாது?

தெரியாது.

வாதி வக்கீல் கிராசில்லை.

கோர்ட்டார் வினாவும், 30-ம், சாக்ஷி விடையும்.

வாக்குமூலம் வாசிக்கக் கேட்டாயா?

கேட்டேன்.

சரிதானா?

ஆம்.

பிரதிவாதி பக்கம் 30-ம், சாக்ஷி அறிவு (கை—து.)

பிரதிவாதி பக்கம் 1-ம், சாக்ஷி

இடகலை சத்தியஞ்செய்து

தெரிவித்த வாக்குமூலம்.

சர்வ வல்லமையுள்ள தெய்வஞ் சாக்ஷியாக நான் சொல்வதெல்லாம் உண்மை.

1-ம், பிரதிவாதி வக்கீல் வினவும், 31-ம், சாக்ஷி விடையும்.

உனது பெயர் யாது?

இடகலை.

தொழிலென்ன?

மனுஷியர்களது வலக்கால் பெரு விரலினின்றேறி மூதுகின்றண்டின் வழியாகச்சென்று அங்கிருந்து கத்தரிக்கோல்போல் மாறிப் பிரிந்து இடது நாசி வழியாய்ச் சுவாசத்தை யுள்வாங்குவதும் வெளியில் விடுவதும்.

இவ்வியாச்சியத்தைப்பற்றி யாதாவது தெரியுமா?

ஒன்றுந் தெரியாது.

அப்படித் தெரியாததற்குக் காரண மென்ன?

முற்கூறிய செய்கையை என்னைக்கொண்டு யாதோ ஒரு மகாசத்தி நடத்துவிக்கின்றது. அதைத்தவிர, எனக்குச் சொந்த அறிவும் வன்மையுங் கிடையா. அதுதான் காரணம்

அச் சத்தி யாது?

தெரியாது.

வாதி வக்கீல் கிருசில்லை.

கோர்ட்டார் வினவும், 31-ம், சாக்ஷி விடையும்.

வாக்குமூலம் வாசிக்கக் கேட்டாயா?

கேட்டேன்.

சரிதானா ?

ஆம்.

பிரதிவாதி பக்கம் 31-ம், சாக்ஷி இடகலை(கை—து.)

பிரதிவாதி பக்கம் 32-ம், சாக்ஷி

பிங்கலை சத்தியஞ்செய்து

தெரிவித்த வாக்குமூலம்.

சர்வ வல்லமையுள்ள தெய்வஞ் சாக்ஷியாக

நான் சொல்வதெல்லாம் உண்மை.

1-ம், பிரதிவாதி வக்கீல் வினாவும், 32-ம் சாக்ஷி விடையும்.

உனது பெயர் யாது ?

பிங்கலை.

தொழிலென்ன ?

மனுஷியர்களது இடக்கால் பெருவிரலினின்றேறி முதுகின்றண்டின் மார்க்கமாய்ச் சென்று அங்குக் கத்தரிக்கோல்போல் மாறிப் பிரிந்து வலது நாசி வழியாய்ச் சுவாசத்தை உள்வாங்குவதும் வெளியில் விடுவதும்.

இவ்வியாச்சியத்தைப்பற்றி என்ன தெரியும் ?

ஒன்றுந் தெரியாது.

அப்படித் தெரியாததற்குக் காரணமென்ன ?

எனக்குச்சொந்தமான எவ்வித அறிவும் வன்மையுங் கிடையா. அதுதான் காரணம்.

சொந்த அறிவும் வன்மையுமில்லாத நீ முற்கூறிய தொழிலை எவ்வாறு செய்கின்றாய் ?

அதை யாதோ ஒரு மகாசக்தி என்னைக்கொண்டு நடத்துவிக்கின்றது.

அது யாது ?

தெரியாது.

வாதி வக்கீல் கிறுகில்லை.

கோர்ட்டார் வினவும், 32-ம், சாக்ஷி விடையும்.

வாக்குமூலம் வாசிக்கக் கேட்டாயா ?

கேட்டேன்.

சரிதானு ?

ஆம்.

பிரதிவாதி பக்கம் 32-ம், சாக்ஷி பிங்கலை (கை—து.)

பிரதிவாதி பக்கம் 33-ம், சாக்ஷி

சுழுமுனை சத்தியஞ்செய்து

தெரிவித்த வாக்குமூலம்.

சர்வ வல்லமையுள்ள தெய்வஞ் சாக்ஷியாக

நான் சொல்வதெல்லாம் உண்மை.

1-ம், பிரதிவாதி வக்கீல் வினவும், 33-ம், சாக்ஷி விடையும்.

உனது பெயர் யாது ?

சுழுமுனை

தொழில்லென்ன ?

மூலாதாரத்தினின்றேறி ஆறுதாரமுங் கடந்து எல்லா நாடிகளுக்கும் ஆதாரமான நடுநாடியாக மனுஷியர்களது உச்சித் துவாரம் வரை முட்டிநிற்பது

இவ்வியாச்சியத்தைப்பற்றி உனக்கு யாதாவது தெரியுமா ?

ஒன்றுந் தெரியாது.

தெரியாததற்குக் காரணமென்ன ?

தெரிந்துகொள்ளுவதற் கேதுவான அறிவோ? வன்மையோ? என்னிடத்திலில்லை. அதுதான் காரணம்.

அப்படியானல் முற்கூறிய செய்கையை நீ எவ்வாறு செய்து வருகின்றாய்?

என்னைக்கொண்டு யாரோ ஒருவர் அதைச் செய்விக்கின்றார்.

அவர் யாவர்?

தெரியாது.

வாதி வக்கீல் கிருசில்லை.

கோர்ட்டார் வினவும், 33-ம், சாக்ஷி விடையும்.

வாக்குமூலம் வாசிக்கக் கேட்டாயா?

கேட்டேன்.

சரிதானா?

ஆம்.

பிரதிவாதிபக்கம் 33-ம், சாக்ஷி சுழுமுனை (கை—து.)

பிரதிவாதி பக்கம் 34-ம், சாக்ஷி

சங்கினி சத்தியஞ்செய்து

தெரிவித்த வாக்குமூலம்.

சர்வ வல்லமையுள்ள தெய்வஞ் சாக்ஷியாக

நான் சொல்வதெல்லாம் உண்மை

1-ம், பிரதிவாதி வக்கீல் வினவும், 34-ம், சாக்ஷி விடையும்.

உனது பெயர் யாது?

சங்கினி.

தொழிலென்ன?

மூலாதாரத்தினின் றெழும்பி ஆண்குறி, பெண்குறிகளைப்பற்றி வேறொரு நாடியையும் மிஞ்சவிடாமல் அடக்கிக்கொண்டு நிற்பது.

இவ்வியாச்சியத்திற் பிரதிவாதிகளான ஆன்மாவுஞ் சரீரமுந் தெரியுமா?

தெரியும்.

இவர்கள் செய்த குற்றங்கள் தெரியுமா?

தெரியாது.

அது எதனால்?

எனக்குத் தற்போத மில்லாததனால்.

தற்போதமில்லாத நீ முற்கூறிய செய்கையை எவ்வாறு செய்கின்றாய்?

என்னைக் கொண்டு யாரோ? ஒரு சத்தி அதை நடத்து விக்கின்றது.

அந்தச் சத்தி யாது?

தெரியாது.

வாதி வக்கீல் கிறாசில்லை.

கோர்ட்டார் வினாவும், 34-ம், சாக்ஷி விடையும்.

வாக்குமூலம் வாசிக்கக் கேட்டாயா?

கேட்டேன்.

சரிதானா?

ஆம்.

பிரதிவாதி பக்கம் 34-ம், சாக்ஷி சங்கினி (கை—து.)

பிரதிவாதி பக்கம் 35-ம், சாக்ஷி
குரு சத்தியஞ்செய்து
தெரிவித்த வாக்குமூலம்.

சர்வ வல்லமையுள்ள தெய்வஞ் சாக்ஷியாக
நான் சொல்வதெல்லாம் உண்மை.

1-ம், பிரதிவாதி வக்கீல் வினவும், 35-ம், சாக்ஷி விடையும்.

உனது பெயர் யாது ?

குரு

தொழிலென்ன ?

மூலாதாரத்திலிருந்து தோன்றி நாபியில் நின்று கொண்டு சரலோடுகூடிக் குடலைப் புரட்டி வாயில் உமிழ் நீரை யுண்டாக்குவது.

இந்த வியாச்சியத்தைப்பற்றி நீ அறிந்தது யாது ?
ஒன்றுமில்லை.

இந்தப் பிரதிவாதிகளைத் தெரியுமா ?
தெரியும்.

இவ்வியாச்சியத்தைப்பற்றி நீ அறியாததற்குக்காரண மென்ன ?

உலகத்தில் நடக்கும் ஒவ்வொரு விஷயங்களையும் அறிவதற்கேதுவான அறிவும் சத்தியுமென்னிடத்திலில்லை. அதுதான காரணம்.

அப்படியானல் முற்கூறிய செய்கையை நீ செயவது எப்படி ?

அது என்னுற் செய்யப்படுவதன்று, என்னைக்கொண்டு யாரோ, ஒரு பெரியவர் செய்விக்கின்ருர்.

அவர் யாவர் ?

தெரியாது.

வாதி வக்கீல் கிருசில்லை.

கோர்ட்டார் வினவும், 35-ம், சாக்ஷி விடையும்.

வாக்குமூலம் வாசிக்கக் கேட்டாயா ?

கேட்டேன்.

சரிதானா ?

ஆம்.

பிரதிவாதி பக்கம் 35-ம், சாக்ஷி குகு (கை—து.)

பிரதிவாதி பக்கம் 36-ம், சாக்ஷி

காந்தாரி சத்தியஞ்செய்து

தெரிவித்த வாக்குமூலம்.

சர்வ வல்லமையுள்ள தெய்வஞ் சாக்ஷியாக

நான் சொல்வதெல்லாம் உண்மை.

1-ம், பிரதிவாதி வக்கீல் வினவும், 36-ம், சாக்ஷி விடையும்.

உனது பெயர் யாது ?

காந்தாரி.

தொழிலென்ன ?

நாபியி லிருந்தெழுந்து சத்த மெழுந்தும் எழு நாடியாகக் கண்டத்தோடு கூடிநிற்பது.

இப்பிரதிவாதிகளைத் தெரியுமா ?

தெரியும்

இவர்கள் செய்த குற்றங்கள் தெரியுமா ?

தெரியாது.

அது எதனால் ?

எனக்கு எவ்வித அறிவுமில்லை, அதனால்.

அறிவற்ற நீ முற்கூறிய செய்கையைச் செய்வது எப்படி ?

என்னைக்கொண்டு யாதோ, ஒரு பெரிய வல்லமை அதை நடத்துகின்றது.

அவ்வல்லமை யாது ?

தெரியாது

வாதி வக்கீல் கிறாசில்லை.

கோர்ட்டார் வினவும், 36-ம், சாக்ஷி விடையும்.

வாக்குமூலம் வாசிக்கக் கேட்டாயா ?

கேட்டேன்.

சரிதானா ?

ஆம்.

பிரதிவாதி பக்கம் 36-ம், சாக்ஷி காந்தாரி (கை—து.)

பிரதிவாதி பக்கம் 37, 38-ம், சாக்ஷிகளாகிய

அலம்புடை, புருடன் சத்தியஞ்செய்து

தெரிவித்த வாக்குமூலம்.

சர்வ வல்லமையுள்ள தெய்வஞ் சாக்ஷியாக

நாங்கள் சொல்வதெல்லாம உண்மை.

பிரதிவாதி வக்கீல் வினவும், 37,38-ம், சாக்ஷிகள் விடையும்.

நீங்களெத்தனை பேர் ?

இரண்டு பெயர்.

உங்களது பெயர்களென்ன ?

அலம்புடை, புருடனென்பன.

நீங்களிருவரும் ஒன்றாக இருப்பவர்களா ?

ஆம்.

உங்களுக்குத் தொழில் யாது ?

செவியினிடத்துள்ள நரம்புகளோடு கூடியிருப்பது.

இந்தப் பிரதிவாதிகள் தெரியுமா ?

தெரியும்.

அவர்கள் செய்த குற்றத்தைப்பற்றி யாதாவது தெரியுமா ?

ஒன்றுந்தெரியாது.

அப்படித் தெரியாததற்குக் காரணமென்ன ?

எங்களுக்குச் சொந்த உணர்ச்சியில்லை. அதுதான் காரணம்.

உணர்ச்சியில்லாத நீங்கள் செவியின் பக்கத்துள்ள நரம்புகளோடு எவ்வாறு கூடியிருக்கின்றீர்கள் ?

எங்களை அவ்வித மிருக்கச்செய்வது யாதோ ! ஒரு சத்தி.

அச் சத்தி யாது ?

தெரியாது.

வாதி வக்கீல் கிறாசில்லை.

கோர்ட்டார் வினவும், 37, 38-ம், சாக்ஷிகள் விடையும்.

வாக்குமூலம் வாசிக்கக் கேட்டாயா ?

கேட்டேன்

சரிதானா ?

ஆம்.

பிரதிவாதி பக்கம் 37-ம், சாக்ஷி அலம்புடை (கை—து.)
,, ,, 38-ம், சாக்ஷி புருடன் (கை—து.)

பிரதிவாதி பக்கம் 39, 40-ம், சாக்ஷிகளாகிய

அத்தி, சிருவை சத்தியஞ்செய்து

தெரிவித்த வாக்கு மூலம்.

சர்வ வல்லமையுள்ள தெய்வஞ் சாக்ஷியாக நாங்கள் சொல்வதெல்லாம் உண்மை.

பிரதிவாதி வக்கீல்வினவும், 39, 40-ம், சாக்ஷிகள் விடையும்.

நீங்களெத்தனை பேர்?

நாங்களிரண்டு பெயர்கள்.

உங்கள் பெயர் யாவை?

அத்தி, சிருவை யென்பன

நீங்களிருவரும் ஓரே தொழிற் செய்பவர்களா?

ஆம்.

உங்கள் தொழில் யாது?

நாடிகள் பத்தோடுங் கூடிக் கண்களினிடத்து நிற்பது.

இவ்வியாச்சியத்திற் பிரதிவாதிகளான ஆன்மாவுஞ் சரீரமுந் தெரியுமா?

தெரியும்.

இவ்வியாச்சியத்தைப்பற்றி யாதாவது தெரியுமா?

ஒன்றுந் தெரியாது.

அப்படித் தெரியாதது எதனால்?

எங்களுக்குச் சொந்த ஞான மில்லாததனால்.

சொந்த ஞானமில்லாத நீங்கள் முற்கூறியபடி கண்களினிடத்து நிற்பது எவ்வாறு?

எங்களை யாரோ? ஒரு பெரியவர் அப்படி நிற்கச் செய்விக்கின்றார்.

அவர் யாவர் ?

தெரியாது.

அவர் பெயரென்ன ?

அதுவுந் தெரியாது.

வாதி வக்கீல் கிறாஸில்லை.

கோர்ட்டார் வினாவும், 39, 40-ம், சாக்ஷிகள் விடையும்.

வாக்குமூலம் வாசிக்கக் கேட்டாயா ?

கேட்டோம்.

சரிதானா ?

ஆம்.

பிரதிவாதி பக்கம் 39-ம், சாக்ஷி அத்தி (கை—து.)
,, ,, 40-ம், சாக்ஷி சிகுவை (கை—து.)

பிரதிவாதி பக்கம் 41-ம், சாக்ஷி
பிராணன் சத்தியஞ்செய்து
தெரிவித்த வாக்குமூலம்.
சர்வ வல்லமையுள்ள தெய்வஞ் சாக்ஷியாக
நான் சொல்வதெல்லாம் உண்மை.

1-ம், பிரதிவாதி வக்கீல் வினாவும், 41-ம், சாக்ஷி விடையும்.

உனது பெயர் யாது ?

பிராணன்.

தொழிலென்ன ?

மனுஷியர்களது மூலாதாரத்தில் நின்றும் புறப்பட்டுச் சித்திரநாடியிற்கூடி இடகலை, பிங்கலையிலோடிக் கபாலத்தைச் சுற்றி நாசிவழியாய்ப் பன்னிரண்டங்குலம் வெளியில் வந்து நான்கங்குலங் குறைய மறுபடியும் எட்

டங்குல முள்ளே சென்று மூலாதாரத்தில் தாக்குவதோடு இத்தொழிலைப் பிரதி தினமுஞ் செய்து கொண்டிருப்பது. இதுதான் எனது தொழில்.

இவ்வியாச்சியத்திற் பிரதிவாதிகளான ஆன்மாவையுஞ் சரீரத்தையும் அறிவாயா ?

அறிவேன்.

அவர்கள் செய்த குற்றங்களில் எதையாவது அறிவாயா ?

ஒன்றுமறியேன்.

அது எதனால் ?

எனக்கு எவ்விதத் தொழிலுஞ் செய்வதற்கு வல்லமையில்லாததனால்.

வல்லமையில்லாத நீ முற்கூறிய செய்கைகளை எவ்வாறு செய்கின்றாய் ?

அவற்றை என்னைக்கொண்டு யாரோ ? ஒருவர் அவ்வாறு செய்விக்கின்றார்.

அவர் யாவர் ?

தெரியாது.

வாதி வக்கீல் கிராசில்லை.

கோர்ட்டார் வினாவும், 41-ம், சாக்ஷி விடையும்.

வாக்குமூலம் வாசிக்கக் கேட்டாயா ?

கேட்டேன்.

சரிதானா ?

ஆம்.

பிரதிவாதி பக்கம் 41-ம், சாக்ஷி பிராணன் (கை.—து.)

பிரதிவாதிபக்கம் 42-ம், சாக்ஷி

அபானன் சத்தியஞ்செய்து

தெரிவித்த வாக்குமூலம்.

சர்வ வல்லமையுள்ள தெய்வஞ் சாக்ஷியாக
நான் சொல்வதெல்லாம் உண்மை.

1-ம், பிரதிவாதி வக்கீல் வினவும், 42-ம், சாக்ஷி விடையும்.

உனது பெயர் யாது ?

அபானன்.

தொழிலென்ன ?

மூலாதாரத்தில் நின்றும் புறப்பட்டுக் குதம், குய்யமாகிய இவைகளைப்பற்றி நின்று அதாவது சமயங்களில் மல ஜலாதிகளை வெளியில் தள்ளுவது.

இவ்வியாச்சியத்திற் பிரதிவாதிகளான ஆன்மாவுஞ் சரீரமுந் தெரியுமா ?

தெரியும்.

அவர்கள் செய்த குற்றங்கள் தெரியுமா ?

தெரியாது.

தெரியாததற்குக் காரணமென்ன?

எனக்கு எவ்வித அறிவும் வன்மையுமில்லை. அதுதான் காரணம்.

அப்படி அறிவும் வன்மையுமில்லாத நீ முற்கூறிய செய்கையை எவ்வாறு செய்கின்றாய் ?

அதை என்னைக்கொண்டு யாதோ ? பெரிய ஒரு மகாசத்தி செய்விக்கின்றது.

அச் சத்தி யாது ?

அது தெரியாது.

வாதி வக்கீல் கிருசில்லை.

கோர்ட்டார் வினவும், 42-ம், சாக்ஷி விடையும்.

வாக்குமூலம் வாசிக்கக் கேட்டாயா?

கேட்டேன்.

சரிதானா?

ஆம்.

பிரதிவாதி பக்கம் 42-ம், சாக்ஷி அபானன் (கை—து.)

பிரதிவாதி பக்கம். 43-ம், சாக்ஷி

வியானன் சத்தியஞ்செய்து

தெரிவித்த வாக்குமூலம்.

சர்வ வல்லமையுள்ள தெய்வஞ் சாக்ஷியாக

நான் சொல்வதெல்லாம் உண்மை.

1-ம், பிரதிவாதி வக்கீல் வினவும், 43-ம், சாக்ஷி விடையும்.

உனது பெயர் யாது?

வியானன்.

தொழிலென்ன?

மூலாதாரத்தில் நின்றும் புறப்பட்டு மனுஷியர்களது தேகமுழுவதும் வியாபித்து அவர்களுக்கு அடிக்கடி தாகத்தையும் பசியையு முண்டாக்கிக் கொண்டிருப்பது.

இவ்வியாச்சியத்திற் பிரதிவாதிகளான ஆன்மாவுஞ் சரீரமுந் தெரியுமா?

தெரியும்.

இவர்களிற் குற்றஞ் செய்தவர் யாவர்?

தெரியாது.

தெரியாதது எதனால்?

தெரிந்துகொள்ளுவதற் கேதுவான சொந்த அறிவில்லாததனால்.

சொந்த அறிவில்லாத நீ உனது செய்கையை எவ்வாறு செய்கின்றாய் ?

அதை என்னைக்கொண்டு யாதோ, ஒரு மகா சத்தி நடத்துவிக்கின்றது.

அச் சத்தி யாது ?

தெரியாது.

கோர்ட்டார் வினவும், 43-ம், சாக்ஷி விடையும்.

வாக்குமூலம் வாசிக்கக் கேட்டாயா ?

கேட்டேன்.

சரிதானா ?

ஆம்.

பிரதிவாதி பக்கம் -43ம், சாக்ஷி வியானன் (கை—து.)

பிரதிவாதி பக்கம் 44-ம், சாக்ஷி

உதானன் சத்தியஞ்செய்து

தெரிவித்த வாக்குமூலம்.

சர்வ வல்லமையுள்ள தெய்வஞ் சாக்ஷியாக

நான் சொல்வதெல்லாம் உண்மை.

1-ம், பிரதிவாதி வக்கீல் வினவும், 44-ம், சாக்ஷி விடையும்.

உனது பெயர் யாது ?

உதானன்.

தொழிலென்ன ?

மூலாதாரத்தில் நின்றும் புறப்பட்டு மனுஷியர்களது நாபிஸ்தானத்தில் நின்று உதாராக்கினியை அதிகரிக்கச் செய்து அது காரணமாக மனுஷியர்கள் உண்ணு

கின்ற ஆகாரப் பொருள்களின் சாரத்தை நாடிகளின் மார்க்கமாய் இரத்தமாகச் செல்லச்செய்து தேகத்தைப் போஷிப்பது.

இந்தப் பிரதிவாதிகளிருவருந் தெரியுமா?

தெரியும்.

இவர்கள் செய்த குற்றங்களில் யாதாவது தெரியுமா?

ஒன்றுந் தெரியாது.

அது எதனால்?

தெரிவதற்கேதுவான எவ்வித அறிவுமில்லாததனால்.

அறிவில்லாத நீ முற்கூறிய செய்கையைச் செய்வது எவ்வாறு?

அதை என்னைக்கொண்டு யாதோ, ஒரு பெரிய சத்தி நடத்தி வருகின்றது.

அச் சத்தி யாது?

தெரியாது.

வாதி வக்கீல் கிறுசில்லை.

கோர்ட்டார் வினவும், 44-ம், சாக்ஷி விடையும்.

வாக்குமூலம் வாசிக்கக் கேட்டாயா?

கேட்டேன்.

சரிதானா?

ஆம்.

பிரதிவாதி பக்கம் 45-ம், சாக்ஷி உதானன் (கை—து.)

பிரதிவாதி பக்கம் 45-ம், சாக்ஷி
சமானன் சத்தியஞ்செய்து
தெரிவித்த வாக்குமூலம்.

சர்வ வல்லமையுள்ள தெய்வஞ் சாக்ஷியாக
நான் சொல்வதெல்லாம் உண்மை.

1-ம் பிரதிவாதி வக்கீல் விறைவும், 45-ம் சாக்ஷி விடையும்.

உனது பெயர் யாது ?

சமானன்.

தொழிலென்ன ?

மூலாதாரத்தில் நின்றும் புறப்பட்டு மனுஷியர்களது தேகத்தில் வாத பித்த சிலேட்டுமங்களை அதிகரிக்கவிடாமலும், வாயுக்களெல்லாவற்றையுங் கூடவோ, குறையவோ, விடாமலும் எப்பொழுதுஞ் சமமாக வைத்துக் கொண்டிருப்பது.

இந்தப் பிரதிவாதிகளை அறிவாயா ?

அறிவேன்.

இவர்கள் செய்த குற்றந் தெரியுமா ?

தெரியாது.

தெரியாததற்குக் காரணம் யாது ?

தெரிந்துகொள்ளுவதற் கேதுவான அறிவும் வன்மையு மென்னிடத்திலில்லை அதுதான் காரணம்.

அறிவும் வன்மையுமில்லாத நீ முற்கூறிய செய்கையை எப்படிச் செய்கின்றாய் ?

அதை என்னைக்கொண்டு யாரோ ஒரு பெரியவர் செய்விக்கின்றார்.

அவர் யாவர் ?

தெரியாது.

வாதி வக்கீல் கிருசில்லை.

கோர்ட்டார் வினவும், 45-ம், சாக்ஷி விடையும்.

வாக்குமூலம் வாசிக்கக் கேட்டாயா ?

கேட்டேன்.

சரிதானா ?

ஆம்.

பிரதிவாதி பக்கம் 45-ம், சாக்ஷிசமானன் (கை—து.)

பிரதிவாதி பக்கம் 46-ம், சாக்ஷி

நாகன் சத்தியஞ்செய்து

தெரிவித்த வாக்குமூலம்.

சர்வ வல்லமையுள்ள தெய்வஞ் சாக்ஷியாக

நான் சொல்வதெல்லாம் உண்மை.

1-ம், பிரதிவாதி வக்கீல் வினவும், 46-ம், சாக்ஷி விடையும்.

உனது பெயர் யாது ?

நாகன்.

தொழிலென்ன ?

மூலாதாரத்தில் நின்றுந் தோன்றி மனுஷியர்களது உடல், கண்டம், எலும்பு முதலிய தானங்களில் நின்று அவயவங்களை நீட்டவும், முடக்கவுஞ் செய்வதோடுகொட்டாவி, விக்கல் முதலிய கிரியைகளையுஞ் செய்வது.

இந்த ஆன்மாவுஞ் சரீரமும் தெரியுமா ?

தெரியும்.

இவர்களது குற்றங்களில் யாதாவது தெரியுமா ?

ஒன்றுந் தெரியாது.

அதற்குக் காரணமென்ன ?

தெரிந்துகொள்ளத்தக்க அறிவோ, வல்லமையோ, எனக்கில்லை.

அறிவும் வல்லமையுமில்லாத உனக்கு முற்கூறிய செய்கையைச் செய்யுந்தன்மை எங்கிருந்து வந்தது ?

அது என்னாற் செய்யப்படுவதல்ல.

வேறு யாரால் செய்யப்படுவது ?

யாரோ ஒரு பெரிய மகானல்

அவர் யாவர் ?

தெரியாது.

அவர் எங்கே யிருக்கின்றார் ?

அதுவுந் தெரியாது.

வாதி வக்கீல் கிறுசில்லை.

கோர்ட்டார் வினவும், 46-ம், சாக்ஷி விடையும்.

வாக்குமூலம் வாசிக்கக் கேட்டாயா ?

கேட்டேன்.

சரிதானா ?

ஆம்.

பிரதிவாதி பக்கம் 46-ம், சாக்ஷி நாகன் (கை—து.)

பிரதிவாதி பக்கம் 47-ம், சாக்ஷி

கூர்மன் சத்தியஞ்செய்து

தெரிவித்த வாக்குமூலம்.

சர்வ வல்லமையுள்ள தெய்வஞ் சாக்ஷியாக

நான் சொல்வதெல்லாம் உண்மை.

1-ம், பிரதிவாதி வக்கீல் வினவும், 47-ம், சாக்ஷி விடையும்.

உனது பெயர் யாது?

கூர்மன்.

தொழிலென்ன?

மூலாதாரத்தி லிருந்து தோன்றிக் கண்களினிடத்து நின்று இமைகளை அடைப்பிக்கவும், திறப்பிக்கவுஞ்செய்வதோடு சிலசமயங்களில் தேகத்தினிடத்துள்ள உரோமங்களைப் புளகிப்பிக்கவுஞ் செய்வது.

இவ்வியாச்சியத்திற் பிரதிவாதிகளான ஆன்மாவுஞ் சரீரமுந் தெரியுமா?

தெரியும்.

அவர்கள் செய்த குற்றங்கள் தெரியுமா?

தெரியாது.

அது எதனால்?

தெரிந்துகொள்ளும் அறிவில்லாததனால்.

அவ்வித அறிவில்லாத நீ முற்கூறிய வேலையைச்செய்வது எவ்வாறு?

அதை என்னைக்கொண்டு யாதோ, ஒரு பெரிய சத்தி செய்விக்கின்றது.

அந்தச் சத்தி யாது?

தெரியாது.

வாதி வக்கீல் கிராசில்லை.

கோர்ட்டார் வினவும், 47-ம், சாக்ஷி விடையும்.

வாக்குமூலம் வாசிக்கக் கேட்டாயா?

கேட்டேன்.

சரிதானா ?

ஆம்.

பிரதிவாதி பக்கம் 47-ம், சாக்ஷி கூர்மன் (கை—து.)

பிரதிவாதி பக்கம் 48-ம், சாக்ஷி

கிருதரன் சத்தியஞ்செய்து

தெரிவித்த வாக்குமூலம்.

சர்வ வல்லமையுள்ள தெய்வஞ் சாக்ஷியாக

நான் சொல்வதெல்லாம் உண்மை.

1-ம், பிரதிவாதி வக்கீல் வினாவும், 48-ம், சாக்ஷி விடையும்.

உனது பெயர் யாது ?

கிருதரன்.

தொழிலென்ன ?

மூலாதாரத்திலிருந்து தோன்றி மனுஷியர்களது புருவமத்தியில் நின்று கோபத்தையும், வெப்பத்தையும், தும்மலையும், அழுகையையு முண்டாக்குவது.

இவ்வியாச்சியத்திற் பிரதிவாதிகளான இருவருந் தெரியுமா ?

தெரியும்.

அவர்களது செய்கைகளில் யாதாவது தெரியுமா ?

ஒன்றுந் தெரியாது.

அப்படித் தெரியாததற்குக் காரணமென்ன ?

தெரிந்துகொள்ளும் சக்தி என்னிடத்தில்லை. அதுதான் காரணம்.

அச் சக்தியில்லாத நீ முற்கூறிய வேலைகளை எப்படிச் செய்கின்றாய் ?

அவற்றை என்னைக்கொண்டு யாதோ ஒரு மகா சத்தி செய்விக்கின்றது.

அச் சத்தி யாது ?

தெரியாது.

வாதி வக்கீல் கிறுசில்லை.

கோர்ட்டார் வினவும், 48-ம், சாக்ஷி விடையும்.

வாக்குமூலம் வாசிக்கக் கேட்டாயா ?

கேட்டேன்.

சரிதானா ?

ஆம்.

பிரதிவாதி பக்கம் 48-ம், சாக்ஷி, கிருதரன் (கை—து.)

பிரதிவாதி பக்கம் 49-ம், சாக்ஷி

தேவதத்தன் சத்தியஞ்செய்து

தெரிவித்த வாக்குமூலம்.

சர்வ வல்லமையுள்ள தெய்வஞ்சாக்ஷியாக

நான் சொல்வதெல்லாம் உண்மை.

1-ம், பிரதிவாதி வக்கீல் வினவும், 49-ம், சாக்ஷி விடையும்.

உனது பெயர் யாது ?

தேவதத்தன்.

தொழிலென்ன ?

மூலாதாரத்தில் நின்று தோன்றிக் கரசரணாதிகளிற் பாய்ந்து ஓட்டுவித்தல், நடப்பித்தல், பேசுவித்தல் முதலிய செய்கைகளைச் செய்வது.

இந்த ஆன்மாவையுஞ் சரீரத்தையும் அறிவாயா ?

அறிவேன்.

இவர்கள் செய்த குற்றத்தை அறிவாயா ?

அறியேன்.

அறியாததற்குக் காரணம் யாது ?

எனக்கு எவ்வித அறிவுமில்லை. அதுதான் காரணம்.

அறிவில்லாத நீ முற்கூறிய செய்கைகளைச் செய்வது எப்படி ?

யாதோ ஒரு சத்தி என்னைக்கொண்டு அவைகளைச் செய்விக்கின்றது.

அச் சத்தி யாது ?

தெரியாது.

வாதி வக்கீல் கிறுசில்லை.

கோர்ட்டார் வினவும், 49-ம், சாக்ஷி விடையும்.

வாக்குமூலம் வாசிக்கக் கேட்டாயா ?

கேட்டேன்.

சரிதானா ?

ஆம்.

பிரதிவாதி பக்கம் 49-ம், சாக்ஷி தேவதத்தன் (கை—து.)

பிரதிவாதி பக்கம் 50-ம், சாக்ஷி

தனஞ்சயன் சத்தியஞ்செய்து

தெரிவித்த வாக்குமூலம்.

சர்வ வல்லமையுள்ள தெய்வஞ் சாக்ஷியாக

நான் சொல்வதெல்லாம் உண்மை.

1-ம், பிரதிவாதி வக்கீல் வினவும், 50-ம், சாக்ஷி விடையும்.

உனது பெயர் யாது ?

தனஞ்சயன்.

தொழிலென்ன ?

மூலாதாரத்தில் நின்று தோன்றிச் சித்திரநாடியிற் பிரவேசித்து உடலைவிட் டுயிர்நீங்கிய பிற்பாடும் அவ்வுடலை விட்டு நீங்காமல் அவ்வுடலினுள்ளேயே யிருந்து அதை விங்குவித்தும் விரிப்பித்தும் மூன்றும் நாள் கபாலம் வெடிக்க அவ்வழியாய் வெளியிற் செல்லுவது.

இவ்வியாச்சியத்திற் பிரதிவாதிகளான ஆன்மாவுஞ் சரீரமும் தெரியுமா ?

தெரியும்.

அவர்கள் செய்த குற்றந் தெரியுமா ?

தெரியாது.

முற்கூறிய செய்கைகளெல்லாஞ் செய்யவல்ல நீ தெரியாதென்று சொன்னதற்குக் காரணம் யாது ?

எனக்கு எந்த வேலையுஞ் செய்வதற்கேதுவான சொந்த அறிவில்லை. அதுதான் காரணம்.

சொந்த அறிவில்லாத நீ முற்கூறிய வேலைகளை யான் செய்கின்றேனென்றது உண்மைதானா ?

என்னைக்கொண்டு ஒருவர் செய்விக்கின்றார். அதனாற்றான் செய்கின்றேனென்று சொன்னேன்

அவர் யாவர் ?

தெரியாது.

வாதி வக்கீல் கிறாசில்லை.

கோர்ட்டார் வினவும், 50-ம், சாக்ஷி விடையும்.

வாக்குமூலம் வாசிக்கக் கேட்டாயா ?

கேட்டேன்.

சரிதானா ?

ஆம்.

பிரதிவாதி பக்கம் 50-ம், சாக்ஷி தனஞ்சயன் (கை—து.)

பிரதிவாதி பக்கம் 51-ம், சாக்ஷி

ஆமாசயஞ் சத்தியஞ்செய்து

தெரிவித்த வாக்குமூலம்.

சர்வ வல்லமையுள்ள தெய்வஞ் சாக்ஷியாக

நான் சொல்வதெல்லாம் உண்மை.

1-ம், பிரதிவாதி வக்கீல் வினாவும், 51-ம், சாக்ஷி விடையும்.

உனது பெயர் யாது ?

ஆமாசயம்.

தொழிலென்ன ?

எப்பொழுதும் ஜீவராசிகள் உண்ணுகின்ற எல்லாப் பொருள்களும் முதலாவது என்னிடத்துவந்து தங்கிநிற்கின்றன. அப்பால் யான் அவற்றைக் கூட்டி யுருட்டிக் குழம்புபோலாக்கிப் பக்குவாசயத்திற்கு அனுப்புகின்றேன். இதுதான் எனது தொழில்.

இந்தப் பிரதிவாதிகளான இருவரையும் அறிவாயா ?

அறிவேன்.

அவர்கள் செய்த குற்றங்கள் தெரியுமா ?

தெரியாது.

அதற்குக் காரணம் யாது ?

எனக்கு எப்பொழுதும் எனது வேலையைச் செய்வதற்கே சமயஞ் சரியாயிருக்கின்றது. அதனோடு அன்னியர்களது வேலைகளைத் தெரிந்துகொள்ளுவதற் கேதுவான

அறிவும் வல்லமையும் என்னிடத்திலில்லை. அதுதான் காரணம்.

அவ்வாறு அறிவும் வல்லமையு மில்லாவிட்டால் உனது வேலையை உன்னால் எப்படிச் செய்யக்கூடும்?

அது என்னாற் செய்யப்படுவதன்று, என்னைக்கொண்டு யாரோ? ஒருவர் செய்விக்கின்றார்.

அவர் பெயர் யாது?

தெரியாது.

வாதி வக்கீல் கிராஸில்லை.

கோர்ட்டார் வினவும், 51-ம், சாக்ஷி விடையும்.

வாக்குமூலம் வாசிக்கக் கேட்டாயா?

கேட்டேன்.

சரிதானா?

ஆம்.

பிரதிவாதிபக்கம் 51-ம், சாக்ஷி ஆமாசயம் (கை—தா-)

பிரதிவாதி பக்கம் 52-ம், சாக்ஷி

பக்குவாசயஞ் சத்தியஞ்செய்து

தெரிவித்த வாக்குமூலம்.

சர்வ வல்லமையுள்ள செய்வஞ் சாக்ஷியாக

1-ம், பிரதிவாதி வக்கீல் வினவும், 52-ம், சாக்ஷி விடையும்.

உனது பெயர் யாது?

பக்குவாசயம்.

தொழிலென்ன?

ஜீவராசிகளுட்கொள்ளுகின்ற எல்லா ஆகாரம்

பொருள்களையும் யான் என்னில் வைத்து அன்னரசமாக வும், மலமாகவும் வேறுபடுத்துவது.

இந்தப் பிரதிவாதிகள் உனக்குத் தெரியுமா ?

தெரியும்

இவ்வியாச்சிய சம்பந்தமான விஷயங்களில் யாதாவது தெரிவிமா ?

ஒன்றுந் தெரியாது.

அது எதனால் ?

எனக்குச் சொந்த அறிவில்லாததனால்.

சொந்த அறிவில்லாத நீ முற்கூறிய செய்கையை எவ்வாறு செய்கின்றாய் ?

என்னைக்கொண்டு யாதோ ஒரு பெரிய சத்தி செய்விக்கின்றது

அச் சத்தி யாது ?

தெரியாது

வாதி வக்கீல் கிறாசில்லை.

கோர்ட்டார் வினவும், 52-ம், சாக்ஷி விடையும்.

வாக்குமூலம் வாசிக்கக் கேட்டாயா ?

கேட்டேன்.

சரிதானா ?

ஆம்.

பிரதிவாதி பக்கம் 52-ம், சாக்ஷி பக்குவாசயம் (கை—து.)

பிரதிவாதி பக்கம் 53-ம், சாக்ஷி

மலாசயஞ் சத்தியஞ்செய்து

தெரிவித்த வாக்குமூலம்.

சர்வ வல்லமையுள்ள தெய்வஞ் சாக்ஷியாக

நான் சொல்வதெல்லாம் உண்மை.

1-ம், பிரதிவாதி வக்கீல் வினாவும், 53-ம், சாக்ஷி விடையும்.

உனது பெயர் யாது ?

மலாசயம்.

தொழிலென்ன ?

ஜீவராசிகளினது ஆகாரப் பொருள்களினிடத்துள்ள இரசத்தை யொழித்துக் கழிவான மலத்தை என்னிடத்தில் வைத்திருந்து சமயாசமயங்களில் அதை வெளியில் தள்ளுவது.

இந்தப் பிரதிவாதிக ளிருவரையும் அறிவாயா ?

அறிவேன்.

இவர்கள் செய்த குற்றங்களை அறிவாயா ?

அறியேன்.

அறியாததற்குக் காரணமென்ன ?

அறியும் வல்லமையும் அறிவுமில்லை. அதுதான் காரணம்.

வல்லமையும் அறிவுமில்லாத நீ முற்கூறிய வேலைகளைச் செய்வது எப்படி ?

அவற்றை என்னைக்கொண்டு யாரோ ? ஒரு பெரியவர் செய்விக்கின்றார்.

அவர் யாவர் ?

தெரியாது.

வாதி வக்கீல் கிராசில்லை.

கோர்ட்டார் வினவும், 53-ம், சாக்ஷி விடையும்.

வாக்குமூலம் வாசிக்கக் கேட்டாயா ?

கேட்டேன்.

சரிதானு ?

ஆம்.

பிரதிவாதி பக்கம் 53-ம், சாக்ஷி மலாசயம் (கை—து.)

பிரதிவாதிபக்கம் 54-ம், சாக்ஷி

சலாசயஞ் சத்தியஞ்செய்து

தெரிவித்த வாக்குமூலம்.

சர்வ வல்லமையுள்ள தெய்வஞ் சாக்ஷியாக
நான் சொல்வதெல்லாம் உண்மை.

1-ம், பிரதிவாதி வக்கீல் வினவும், 54-ம், சாக்ஷி விடையும்.

உனது பெயர் யாது ?

சலாசயம்.

தொழிலென்ன ?

ஜீவராசிகளது ஆகாரப் பொருள்களில் நின்றுஞ் சலாம்சமாகப் பிரிகின்ற பாகத்தை என்னிடத்து வைத்திருந்து சமயம் நோக்கி வெளியிற்றள்ளுவது.

இந்தப் பிரதிவாதிகளான ஆன்மாவுஞ் சரீரமுந்தெரியுமா ?

தெரியும்.

இவர்கள் செய்த இவ்வியாச்சிய சம்பந்தமான குற்றங்கள் தெரியுமா ?

தெரியாது.

அது எதனுல் ?

அதை அறிவதற்கான அறிவில்லாததனுல்.

அறிவில்லாத நீ உனது செய்கையை எப்படிச் செய்கின்றாய்?

அதை யாதோ? ஒரு சத்தி என்னிடத்திருந்துகொண்டு செய்துவருகின்றது.

அது யாது?

தெரியாது.

வாதி வக்கில் கிராசில்லை.

கோர்ட்டார் வினாவும், 54-ம், சாக்ஷி விடையும்.

வாக்குமூலம் வாசிக்கக் கேட்டாயா?

கேட்டேன்.

சரிதானா?

ஆம்.

பிரதிவாதி பக்கம் 54-ம், சாக்ஷி சலாசயம் (கை—து.)

பிரதிவாதி பக்கம் 55 ம் சாக்ஷி

சுக்கிலாசயஞ் சத்தியஞ்செய்து

தெரிவித்த வாக்குமூலம்.

சர்வ வல்லமையுள்ள தெய்வஞ் சாக்ஷியாக

நான் சொல்வதெல்லாம் உண்மை.

1-ம், பிரதிவாதி வக்கில் வினாவும், 55-ம், சாக்ஷி விடையும்.

உனது பெயர் யாது?

சுக்கிலாசயம்.

தொழிலென்ன?

ஜீவராசிகளது தேகத்தினிடத்துள்ள சத்த தாதுக்களிலொன்றாகிய சுக்கிலத்தை என்னிடத்து வைத்திருந்து சமயமறிந்து வெளியில் விடுவது.

இவ்வியாச்சியத்திற் பிரதிவாதிகளான இருவருந் தெரியுமா?

தெரியும்.

அவர்கள் செய்த குற்றங்கள் தெரியுமா?

தெரியாது.

தெரியாததற்குக் காரணமென்ன?

தெரிந்துகொள்ளுவதற்கேதுவான அறிவோ, வல்லமையோ, என்னிடத்திலில்லை அதுதான் காரணம்.

அவ்வாறு வல்லமைபற்ற உன்னால் முற்கூறிய செய்கையைச் செய்வதற்கு முடியுமா?

அதை என்னைக்கொண்டு யாதோ, ஒரு திவ்விய சத்தி செய்விக்கின்றது.

அச் சத்தி யாது?

தெரியாது.

வாதி வக்கீல் கிறாசில்லை.

கோர்ட்டார் வினவும், 55-ம், சாக்ஷி விடையும்.

வாக்குமூலம் வாசிக்கக் கேட்டாயா?

கேட்டேன்.

சரிதானா?

ஆம்

பிரதிவாதி பக்கம் 55-ம், சாக்ஷி சுக்கிலாசயம் (கை—து.)

பிரதிவாதி பக்கம் 56-ம், சாக்ஷி

அன்னமயஞ் சத்தியஞ்செய்து

தெரிவித்த வாக்குமூலம்.

சர்வ வல்லமையுள்ள தெய்வஞ் சாக்ஷியாக

நான் சொல்வதெல்லாம் உண்மை.

1-ம், பிரதிவாதி வக்கீல் வினவும், 56-ம், சாக்ஷி விடையும்.

நீ யார்?

அறுவகைச் சுவைகளோடு கூடிய ஆகாரப்பொருள்களாற் போஷிக்கப்பட்டு விகாரமடைந்திருக்கும் ஸ்தூல தேகமாகிய ஓர் பொருள்.

உனது பெயர் யாது?

அன்னமயம்.

உனக்கு இவ்வியாச்சிய சம்பந்தமான பிரதிவாதிகள் தெரியுமா?

தெரியும்.

அவர்கள் செய்த குற்றங்களில் யாதாவது தெரியுமா?

ஒன்றுந் தெரியாது.

அப்படித் தெரியாதிருந்ததற்குக் காரணம் யாது?

அதைத் தெரிந்துகொள்ளுவதற்கான அறிவும் வல்லமையும் என்னிடத்திலில்லை அதுதான் காரணம்.

அறிவும் வல்லமையு மில்லாத நீ ஸ்தூல தேகமாயிருந்து எல்லாக் காரியங்களையும் நடத்துவது எவ்வாறு?

அவற்றை யாதோ ஒரு மகா சத்தி என்னைக்கொண்டு நடத்துவிக்கின்றது.

அச் சத்தி யாது?

தெரியாது.

வாதி வக்கீல் கிருசில்லை.

கோர்ட்டார் வினவும், 56-ம், சாக்ஷி விடையும்.

வாக்குமூலம் வாசிக்கக் கேட்டாயா?

கேட்டேன்.

சகிதானா ?

ஆம்.

பிரதிவாதி பக்கம் 56-ம், சாக்ஷி அன்னமயம் (கை—து.)

பிரதிவாதி பக்கம் 57-ம், சாக்ஷி

பிராணமயஞ் சத்தியஞ்செய்து தெரிவித்த வாக்குமூலம்.

சர்வ வல்லமையுள்ள தெய்வஞ் சாக்ஷியாக நான் சொல்வதெல்லாம் உண்மை.

1-ம், பிரதிவாதி வக்கீல் வினாவும், 57-ம், சாக்ஷி விடையும்

நீ யார் ?

பிராணனும், வாக்கு, பாதம், பாணி, பாயுரு, உபஸ்தமாகிய கருமேந்திரியங்களும் ஒன்றாய்க்கூடிய ஓர்பொருள்

உனது பெயர் யாது ?

பிராணமயம்.

உனக்கு இந்தப் பிரதிவாதிகள் தெரியுமா ?

தெரியும்.

இவர்கள் செய்த குற்றங்கள் தெரியுமா ?

தெரியாது.

அப்படித் தெரியாததற்கு முகாந்தரமென்ன ?

அதைத் தெரிந்துகொள்ளுவதற் கேதுவான அறிவு என்னிடத்திலில்லை. அதுதான் முகாந்தரம்.

அறிவில்லாத நீ உனது வேலையை எப்படிச் செய்கின்றாய் ?

அதை யாரோ ஒருவர் என்னிடத்திருந்து செய்விக்கின்றார்.

அவர் யாவர்?

தெரியாது.

வாதி வக்கீல் கிருசில்லை.

கோர்ட்டார் வினவும், 57-ம், சாக்ஷி விடையும்.

வாக்குமூலம் வாசிக்கக் கேட்டாயா?

கேட்டேன்.

சரிதானா?

ஆம்.

பிரதிவாதி பக்கம் 57-ம், சாக்ஷி பிராணமயம் (கை—து.)

பிரதிவாதி பக்கம் 58-ம், சாக்ஷி

மனோமயஞ் சத்தியஞ்செய்து

தெரிவித்த வாக்குமூலம்.

சர்வ வல்லமையுள்ள தெய்வஞ் சாக்ஷியாக

நான் சொல்வதெல்லாம் உண்மை.

1-ம், பிரதிவாதி வக்கீல் வினவும், 58-ம், சாக்ஷி விடையும்.

நீ யார்?

மனமும், கை, கால், வாய், அபானம், ஆண்குறி, பெண் குறியாகிய கருமேந்திரியங்களு மொன்றாகக் கூடிய ஓர் பொருள்.

உனது பெயர் யாது?

மனோமயம்.

உனக்கு இந்தப் பிரதிவாதிக ளிருவருந் தெரியுமா?

தெரியும்.

அவர்களது செய்கைகளில் யாதாவது தெரியுமா?

ஒன்றுந் தெரியாது.

அது எதனால் ?

அதை அறிவதற்கவகாசமான அறிவு என்னிடத்தி லில்லாததனால்.

அவ்வறிவில்லாத நீ உனது செய்கையை எவ்வாறு செய்கின்றாய் ?

அதை என்னைக்கொண்டு யாதோ ஒரு திவ்விய சத்தி செய்விக்கின்றது.

அச் சத்தி யாது ?

தெரியாது.

வாதி வக்கீல் கிறுசில்லை.

கோர்ட்டார் வினவும், 58-ம், சாக்ஷி விடையும்.

வாக்குமூலம் வாசிக்கக் கேட்டாயா ?

கேட்டேன்.

சரிதானா ?

ஆம்.

பிரதிவாதி பக்கம் 58-ம், சாக்ஷி மனோமயம் (கை—து.)

பிரதிவாதி பக்கம் 59-ம், சாக்ஷி

விஞ்ஞானமயஞ் சத்தியஞ்செய்து

தெரிவித்த வாக்குமூலம்.

சர்வ வல்லமையுள்ள தெய்வஞ் சாக்ஷியாக

நான் சொல்வதெல்லாம் உண்மை.

1-ம், பிரதிவாதி வக்கீல் வினவும், 59-ம், சாக்ஷி விடையும்.

நீ யார் ?

புத்தியும் மெய், வாய், கண், காது, மூக்காகிய ஞானேந்திரியங்களும் ஒன்றுசேர்ந்த ஓர் பொருள்.

உனது பெயர் யாது?

விஞ்ஞானமயம்.

இந்த வியாச்சியத்திற் பிரதிவாதிகளான இருவருந் தெரியுமா?

தெரியும்.

அவர்கள் செய்த குற்றங்கள் தெரியுமா?

தெரியாது.

தெரியாதது எதனால்?

எனக்குத் தற்போதமில்லாததனால்.

தற்போத மில்லாத நீ உனது செய்கைகளைச் செவ்வையாக யாதொரு இடையூறு மின்றிச் செய்வதெப்படி?

அவற்றையெல்லாம் என்னோடு யாரோ ஒருவரிருந்து என்னைக்கொண்டு செய்விக்கின்றார்.

அவர் யாவர்?

தெரியாது.

வாதி வக்கீல் கிறாசில்லை.

கோர்ட்டார் வினாவும், 59-ம், சாக்ஷி விடையும்.

வாக்குமூலம் வாசிக்கக் கேட்டாயா?

கேட்டேன்.

சரிதானா?

ஆம்.

பிரதிவாதி பக்கம் 59-ம், சாக்ஷி விஞ்ஞானமயம் (கை—து.)

பிரதிவாதி பக்கம் 60-ம், சாக்ஷி
ஆநந்தமயஞ் சத்தியஞ்செய்து
தெரிவித்த வாக்குமூலம்.

சர்வ வல்லமையுள்ள தெய்வஞ் சாக்ஷியாக
நான் சொல்வதெல்லாம் உண்மை.

1-ம், பிரதிவாதி வக்கீல் வினவும், 60-ம் சாக்ஷி விடையும்.

நீ யார்?

தேகத்தோடு சம்பந்தப்பட்டவனாகி விருந்தாலும் முடிவிலுண்டாகுங் காரண சரீரமாகிய ஓர் பொருள்.

உனது பெயர் யாது?

ஆநந்தமயம்.

உனக்கு இவ்வியாச்சியத்திற் பிரதிவாதிகளான ஆன்மாவுஞ் சரீரமுந் தெரியுமா?

தெரியும்.

அவர்கள் செய்த குற்றங்களில் யாதாவது தெரியுமா?

ஒன்றுந் தெரியாது.

அப்படித் தெரியாததற்குக் காரணமென்ன?

தெரிந்துகொள்ளுவதற் கேதுவான அறிவு என்னிடத்திலில்லை. அதுதான் காரணம்.

அறிவில்லாத நீ உனது செய்கைகளை எப்படிச் செய்கின்றாய்.

அவற்றைச் செய்பவன் யானல்ல.

வேறு யார்?

என்னைக்கொண்டு யாரோ ஒருவர் செய்விக்கின்றார்.

அவர் பெயர் யாது?

தெரியாது.

வாதி வக்கீல் கிராசில்லை.

கோர்ட்டார் வினவும், 60-ம், சாக்ஷி விடையும்.

வாக்குமூலம் வாசிக்கக் கேட்டாயா ?

கேட்டேன்.

சரிதானா ?

ஆம்.

பிரதிவாதி பக்கம் 60-ம் சாக்ஷி ஆசர்தமயம் (கை—து.)

பிரதிவாதி பக்கம் 61-ம், சாக்ஷி
சாக்கிரஞ் சத்தியஞ்செய்து
தெரிவித்த வாக்குமூலம்.
சர்வ வல்லமையுள்ள தெய்வஞ் சாக்ஷியாக
நான் சொல்வதெல்லாம் உண்மை.

1-ம், பிரதிவாதி வக்கீல் வினவும், 61-ம், சாக்ஷி விடையும்.

உனது பெயர் யாது ?

சாக்கிரம்.

இந்தப் பிரதிவாதிகள் தெரியுமா ?

தெரியும்.

உனக்குத் தொழிலென்ன ?

ஜீவராசிக ளெல்லாவற்றோடும் யான் சேர்ந்திருப்ப தால் இப்பிரபஞ்சம் அவைகளுக்குத் திருசியமாகின்றது. சேராவிட்டால் அது அதிருசியமாகும். உதாரணமாக, ஒருவன் உணர்வோ டிருக்கின்ற காலத்தில் அவனது கண் கள் காண்கின்றன. காதுகள் கேட்கின்றன. நாக்குச் சம்பாஷிக்கின்றது. மூக்கு முகருகின்றது. மெய் பரிசிக் கின்றது. எனதுணர்வு அவைகளில் நின்றுஞ் சற்று குறைந்தாற் பிரதமமான இந்த அவயவங்கள் யாதொரு கிரியைகளுஞ் செய்யாதொழிகின்றன. இதற்காகவே

எனக்கு மெய், வாய், கண், மூக்கு, செவி, சத்தம், பரிசம், உரூபம், இரசம், கந்தம், வாக்கு, பாதம், பாணி, பாயுரும், உபஸ்தம், வசனம், தானம், கமனம், விசர்க்கம், ஆநந்தம், பிராணன், அபானன், வியானன், உதானன், சமானன், நாகன், கூர்மன், கிருதரன், தேவதத்தன், தனஞ்சயன், மனம், புத்தி, சித்தம், அகங்காரமாகிய முப்பத்து நான்கு உபகரணங்கள் ராஜ சேவகர்களைப்போல் நியமிக்கப்பட்டு அவைகள் தத்தம் வேலைகளைச் சரிவரச் செய்து வருகின்றன. யான் அவைகளைக் கொண்டு இப்பிரபஞ்ச காரியங்களெல்லாவற்றையும் நடத்தி வருகின்றேன். ஆனால் எனக்கு விரோதியாக அஞ்ஞானமென்றொன்றிருக்கின்றது. அந்த அஞ்ஞானம் மிகவுங் கெட்டதெனவும் அது கூடவே கூடாதெனவும், எப்பொழுதுஞ் சாக்கிராவஸ்தையிற்றானிருக்கவேண்டுமெனவும், பெரிய பெரிய மகான்களெல்லாரும் என்னை வேண்டிக் கொள்ளுகின்றார்கள். இதுதான் எனது தொழில்

இவ்வியாச்சிய சம்பந்தமாக உனக்குத் தெரிந்ததுயாது?

ஒன்றுமில்லை.

வாதி வக்கீல் கிறுசும் 61-ம், சாக்ஷி விடையும்.

எப்பொழுதுஞ் சாக்கிராவஸ்தையிலேயே யிருக்கின்ற உனக்கு அவ்வவஸ்தையில் நடந்த காரியங்களில், ஒன்றுந் தெரியாதென்று சொன்னதற்குக் காரணம் யாது?

யான் எப்பொழுதும் உணர்வுள்ளவனாகவும், எல்லா ஜீவராசிகளுக்கும் உணர்வைக் கொடுப்பவனாகவு மிருந்தா

னும், அவை யாவும் எனது சொந்த சக்தியினால் நடத்தப்படுபவையல்ல. அதுதான் காரணம்.

வேறு யாரால் நடத்தப்படுகின்றன ?

யாரோ ஒரு பெரியவரால்.

அவர் யாவரென்று உனக்குத் தெரியுமா ?

தெரியாது.

உன்னோடு சேர்ந்தவர் வேறு யாராவது உண்டா ?

உண்டு.

அவர்களெத்தனை பேர் ?

நான்கு பெயர்கள்.

அவர்களது பெயரென்ன ?

சொப்பனம், சுழுத்தி, துரியம், துரியாதீதமென்பன.

அவர்கள் இங்கே வந்திருக்கின்றார்களா ?

ஆம்.

கோர்ட்டார் வினவும், 61-ம், சாக்ஷி விடையும்.

வாக்குமூலம் வாசிக்கக் கேட்டாயா ?

கேட்டேன்.

சரிதானா ?

ஆம்.

பிரதிவாதி பக்கம் 61-ம், சாக்ஷி சாக்கிரம் (கை—து.)

பிரதிவாதி பக்கம் 62-ம், சாக்ஷி

சொப்பனஞ் சத்தியஞ்செய்து

தெரிவித்த வாக்குமூலம்.

சர்வ வல்லமையுள்ள தெய்வஞ் சாக்ஷியாக

நான் சொல்வதெல்லாம் உண்மை.

1-ம், பிரதிவாதி வக்கீல் வினவும், 62-ம், சாக்ஷி விடையும்.

உனது பெயர் யாது?

சொப்பனம்.

இந்த வியாச்சியத்திற் பிரதிவாதிகளான ஆன்மாவுஞ் சரீரமுந் தெரியுமா?

தெரியும்

உனக்குத் தொழிலென்ன?

எனது தொழிலையும், என்னைப்பற்றி ஜனங்கள் கொண்டிருக்கும் அபிப்பிராயங்களையும் சொல்லவேண்டு மானால் அவை முடியாத காரியம்.

ஆயினுஞ் சுருக்கமாய்ச் சொல், பார்ப்போம்?

ஆச்சரியகரமான எனது ஒவ்வொரு தொழிலையும், ஜனங்களொவ்வொரு நாளுங் கொண்டாடுவதோடு அவற்றின் சூட்சுமங்களைக் கண்டுபிடிப்பதற் கியலாமல் மிகவும் வியசனிக்கின்றார்கள். ஆனால் என்னைப்பற்றிப் பல பண்டிதர்கள் பலவித அபிப்பிராயங்கள் சொல்லுகின்றார்கள். அவருள் சிலர் யாதாயினும் ஒரு விஷயத்தைதப்பற்றி எப்பொழுதுஞ் சிந்தித்துக்கொண்டிருந்தால் அவ் விஷயம் சொப்பன ரூபமாய்க் காண்பதற் கிடையாகுமெனவும், சிலர் தேக அசௌக்கிய முண்டானவர்களுக்கு அடிக்கடிப் பலவித சொப்பனங்க ளுண்டாய்க்கொண்டிருக்குமெனவுஞ் சொல்லுகின்றார்கள். அதற்குதாகாரணமாகக்

குழந்தைகள் அதிகமாய்ச் சாடுதல், குதித்தல், விழுதல் முதலிய தேக ஆயாசத்திற்குரிய தொழில்களைச் செய்கின்ற காலத்தில் அவர்களது நித்திரையில் அதிபயங்கரமான அளவற்ற சொப்பனங்களுண்டாகின்றனவெனவும், அதனால் அவர்கள் அந்தச் சமயத்தில் மிகவும் பயப்படுகின்றார்களெனவுங் கூறுகின்றார்கள். சிலர் சொப்பனங் காண்பது பித்தத்தினாலேற்படுஞ் சேஷ்டையென்று சொல்லுகின்றார்கள். சிலர் மூளைக்கு அதிக வேலை கொடுப்பதனாலுண்டாகின்றதென்று சொல்லுகின்றார்கள். சிலர் சொப்பனங் காண்பது ஒருவகை வியாதியெனவும், பைசாசத்தின் கோஷ்டியெனவும் அபிப்பிராயப்படுகின்றார்கள். இவ்வாறு பலரும் பலவித அபிப்பிராயப்பட்டாலும் எனது தொழில் மிகவும் ஆச்சரியகரமானதும் மற்றவர்களது யுத்திக்கு அதீதமானதுமா யிருக்கின்றது.

உனது ஆச்சரியகரமான தொழில்கள் யாவை? அவற்றைச் சொல்?

ஒருவன் கடல், கழி, மிகவுக் ஆழமுள்ள வாவி, கிணறு முதலியவைகளுள் எதிலாவது விழுந்து கரை காணாமல் அலைவதாகவும், அதனால் மிகவும் பயங்கர சித்தனாய்ப் பிரமிப்பதாகவும் கனவுகண்டால், அவன் அடுத்த நாள் ஜலதோஷம், குளிர் முதலிய வியாதிகளாற் பீடிக்கப்படுவான். ஒருவன் ஆகாயமார்க்கமாய்ச் சஞ்சாரஞ் செய்வதாகக் கனவுகண்டால், அவன் அடுத்த நாள் வாத நோயினாற் பீடிக்கப்படுவான். ஒருவன் தனது வீட்டில் நெருப்புப்பற்றி எரிவதாகவோ தான் நெருப்பின் மத்தியி லகப்பட்டுக்கொண்டதாகவோ கனவு கண்டால், அவன் மறுநாள் பித்தம், உஷ்ண முதலிய வியாதிகளினாற்

பிடிக்கப்படுவான். மோகாந்தகாரத்திற் சிக்கிய ஒருவன் தன்னாலிச்சிக்கப்பட்ட ஒரு பெண்ணைக் கனவிற்கண்டால், அப்பொழுதே அவளோடு சம்போகம் நடப்பதாகத் தோன்றி அவனது இந்திரியம் ஸ்கலிதமாகி விடுகின்றது. ஒருவன் தனக்கு நியாயமாகக் கிடைக்கவேண்டிய பொருள் கிடைத்ததாகக் கனவு கண்டால், அவனுக்கு அது எந்தக் காலத்திலுங் கிடைக்காமற் போகின்றது. தனது சொந்த ஊரிற்றானே இருப்பவனான ஒருவன் தூர தேசத்திலிருக்கின்ற தனதுறவினர்களில் யாருக்காவது நோயுண்டாகக் கனவு கண்டால், நிச்சயமாகக் காணப் பட்ட அவனுக்கு நோயே யுண்டாகின்றது. ஒருவனுக் குப் பலமுறை யோசித்தும் பொருட்படாத ஒரு வார்த் தையினது பொருள் அவனுக்குக் கனவில் திடீரென்று தோற்றுகின்றது. ஒருவன் தனக்குத் துன்பம், வியசனம், ஆபத்து, வறுமை முதலியனவை யுண்டான காலத்தில் இறந்துபோன தனது தாய், தந்தை, சகோதரர், சகோ தரி முதலியோரை நினைக்க, அவர்கள் கனவில் வந்து ஆறுதல் சொல்லித் தனக்கு யாதோ ஒரு வழியைக் காட்ட, அப்பால் அவ்வழியினாலேயே அவன் அதிக இன் பத்தையுஞ் சந்தோஷத்தையுஞ் செல்வத்தையு மடை கின்றான். இவ்வாறு மனுஷியர்கள் அநந்த சொப்பனங் கள் கண்டு அச்சொப்பனத்திற்குத் தக்கபடி இன்பதுன் பங்களை அனுபவிக்கின்றார்கள். ஒருவன், சூரியன், சந்தி ரன், யானை, குதிரை, சங்கு, மான் முதலியவைகளைக் கன விற்கண்டால் உத்தமமெனவும், ஆல், புன்னை, புளி, நல்ல பாம்பு, தேள் முதலியவைகளைக் கண்டால் அதியுத்தம மெனவும், காகம், மழைபெய்தல், வெள்ளை வஸ்திரங்

தரித்த பெண், தாசி, அரசன் முதலியவர்களைக் கண்டால் ஐசுவரியமும் சுகமுமுண்டாகு மெனவும், பன்றி, நாய், பருந்து முதலியவைகளைக் கண்டால் தரித்திரமும் கேடு முண்டாகு மெனவும், மாமுறிந்து வீழல், ஜலப்பிரளய முண்டாதல், புல், விறகு, பிண முதலியவைகளைக் கண்டால் வியாதி அல்லது மரண முண்டாகு மெனவும், அமேத்தியத்தைக் கண்டாற் பொருளுண்டாகுமெனவும், ஆகாரப்பொருள்களை யுண்ணுவதாகக் கண்டால் வியாதி யுண்டாகுமெனவும், பல் விழக்கண்டால் குடும்பத்தில் மரண முண்டாகுமெனவும், இன்னும் பலவிதமாகவும் ஜனங்கள் சொப்பனத்தினா லுண்டாகும் பிரயோசனங்களைப் பரம்பரையாகவே சொல்லி வருகின்றார்கள்.

ஜனங்கள் சொல்லுவதுங் கருதுவதும் எவ்வாறிருக்கினுமிருக்குக, உன்னிடத்து அதிசயமான தொழில் யாதாவது உண்டா ?

உண்டு.

அது யாது ?

கனவினால் மனுஷியர்களது மரண முதலியவைகளையும், கருப்பத்துள்ளிருக்கின்ற குழந்தை ஆண், அல்லது பெண்ணெனவும் முன்னாலேயே தெரிவிப்பது.

அது எவ்விதம் ?

ஆறு, அல்லது குளங்களிருக்கப்பட்ட தண்ணீர் வற்றிவிட்டதாகவாவது தலையின்றித் தனது நிழல் தோற்றவாவது ஒருவன் கனவிற்கண்டாற் கண்ட அவன் ஒரு மாதத்தினுள் நிச்சயமாக மரணமடைவான். இளநீரைக் கண்டால் ஆண் குழந்தையும், பூங்காவனத்தைக் கண்டாற் பெண் குழந்தையும் பிறக்கும். இதுதான் அதன் விதம்.

இவ்வியாச்சிய சம்பந்தமாக உனக்கு என்ன தெரியும் ?

ஒன்றுந் தெரியாது.

வாதி வக்கீல் கிருசும், 62-ம், சாக்ஷி விடையும்.

எல்லாச் சமயங்களிலுங் காணப்பட்ட சொப்பனங்கள் உண்மையும் சுபகரமுமானவைகளா ?

அல்ல.

பின் எவ்விதமானவை ?

இராக்காலங்களில் அன்னமருந்தி நித்திரை செய்த உடன்றானே காணப்பட்ட சொப்பனங்களியாவும் உண்மையில்லாத அதம சொப்பனங்களெனவும், அர்த்தராத்திரியிற் காணப்பட்ட சொப்பனங்கள் சத்தியமும் அசத்தியமும் இடையிடையே கலந்த மத்திம சொப்பனங்களெனவும், விடியற்காலத்திற் காணப்பட்ட சொப்பனங்கள் சத்தியமாய் நிறைவேறுகின்ற உத்தம சொப்பனங்களெனவும் சிலர் அபிப்பிராயப் படுகின்றார்கள். ஆனால் மகான்கள் காண்கின்ற சொப்பனங்களியாவுஞ் சொப்பனங்களல்ல, அவை அவர்களுடைய எண்ணங்களேயாம். அவர்கள் தூங்காமல் தூங்குவதனால் அத்தூக்கத்திற் காணப்பட்ட யாவு முண்மைதானென்று நம்புகின்றார்கள். அவ்வாறே அவைகளும் உண்மையாகவேயிருக்கின்றன. சாதாரண ஜனங்களுக்கு வாதபித்த சிலேத்துமங்கள் கூடுதலாகவும், குறைவாகவு மிருப்பதனால் அவர்கள் காண்கின்ற சொப்பனங்களத்தனையும் உண்மையாக இருக்கமாட்டா. மகான்களுக்குத் திரிதோஷங்கள் ஒரே விதத்திலிருப்பதனால் அவர்கள் காண்

கின்றசொப்பனங்க ளத்தனையு முண்மைதானென்று நம்பு வதற்கிடமிருக்கின்றது. இவ்வாறு சொப்பனங்களை யுண் மையாக்கிக்கொள்வது மகான்களது தொழில்களிற் பிர தானதொழில்களாம்.

நீ இருப்பது எங்கே?

இருபத்து நான்கு தத்துவங்களோடு கூடிக் கண்ட ஸ்தானத்தில்.

பிரதிவாதி வக்கீல் நீக்கிருசில்லை.

கோர்ட்டார் வினவும், 62-ம், சாக்ஷி விடையும்.

வாக்குமூலம் வாசிக்கக் கேட்டாயா?

கேட்டேன்

சரிதானா?

ஆம்.

பிரதிவாதி பக்கம் 62-ம், சாக்ஷி சொப்பனம் (கை—து.)

பிரதிவாதி பக்கம் 63-ம், சாக்ஷி

சுழுத்தி சத்தியஞ்செய்து

தெரிவித்த வாக்கு மூலம்.

சர்வ வல்லமையுள்ள தெய்வஞ் சாக்ஷியாக

நாங்கள் சொல்வதெல்லாம் உண்மை.

1-ம், பிரதிவாதி வக்கீல் வினவும், 63-ம், சாக்ஷி விடையும்.

உனது பெயர் யாது?

சுழுத்தி.

அதன் பொருளென்ன?

மயக்கமாகிய நித்திரை.

இவ்வியாச்சியத்திற் பிரதிவாதிகளான ஆன்மாவையுஞ் சரீரத்தையும் அறிவாயா?

அறிவேன்.

இவ்வியாச்சியத்தைப்பற்றி நீ அறிந்ததை இக்கோர்ட்டார் முன்னிலையிற் சொல்?

எனது தொழிலின் நிமித்தம் அதைப்பற்றி யாதொன்றும் அறிவதற்கு எனக்கு அவகாசமில்லை.

உனது தொழில் யாது?

ஜீவராசிகளது ஆயுளிற் பாதியை அபகரித்துக்கொண்டு அவர்களை நித்திராவசராக்குவது. அப்படியாக்குவதனால் நோயாளிகளுக்கு ஆறுதலும் கஷ்டப்படுபவர்களுக்குச் சுகமுமுண்டாகின்றன. அன்றியும், ஒவ்வொரு நாளும் மனுஷியர்கள் தங்கள் உறக்கத்தை விட்டெழும்பிய பின்னர் அந்தப் பகல் முழுவதும் அவர்களது ஒவ்வொரு அவயவங்களும் ஒவ்வொரு வேலையிலிருந்து மிக்க சிரமத்தை யடைவதால், அச்சிரமமு மகலுகின்றது. ஆனால் இது சாதாரணமாய்ப் பிறந்து மிறந்துஞ் சமுசார சாகரத்திற் கிடந்துழலுகின்ற அஞ்ஞானிகளுக்கே யன்றி மெய்ஞ்ஞானிகளுக்கன்று. அவர்கள் இராப்பகலற்ற ஓர் தானத்திலிருக்கின்றார்கள். நித்திரையாகிய யான் அவர்களுக்கோர் சத்துருவா யிருக்கின்றேன், . அகண்ட வடிவமாகிய ஞானஜோதியை அவர்கள் கைக்கொள்ளுகின்றார்கள். நித்திரை யாகிய எனக்கு அவர்கள் சமயம் கொடுப்பதில்லை. என்னிடத்தில் அவர்கள் ஒரு காலத்திலும் அகப்படுவது மில்லை சாதாரண மனுஷியர்களில் ஒருவனுக்கு வேறொருவனிடத் திருக்கின்ற தீராக்கோபத்தையும் வேறு பல விஷயங்களையும் அவனிடத் திருந்தும் யான் மறப்

பிக்கின்றேன். அவன் நித்திரையாகிய என்னை விட்டும் விழித்தெழும்பும்போது அவைகள் மறுபடியும் அவனது ஞாபகத்தில் வருகின்றன. ஞானஜோதியாகிய ஓரவஸ்தையை அவனில் நின்றும் வேறுபடுத்துகின்றன. இது தான் யான் செய்யுந் தொழில்.

நீ இருப்பது எவ்விடத்தில் ?

சித்தம், அகங்காரமாகிய இவைகளோடு கூடிக் கண்டத்தின் கீழ்ப்புறத்திருக்கின்ற இதய ஸ்தானத்தில்.

வாதி வக்கீல் கிறுசில்லை.

கோர்ட்டார் வினவும், 63-ம், சாக்ஷி விடையும்.

வாக்குமூலம் வாசிக்கக் கேட்டாயா ?

கேட்டேன்.

சரிதானா ?

ஆம்.

பிரதிவாதி பக்ஷம் 63-ம், சாக்ஷி சுழுத்தி (கை—து.)

பிரதிவாதி பக்கம் 64-ம், சாக்ஷி

துரியனு சத்தியஞ்செய்து

தெரிவித்த வாக்குமூலம்.

சர்வ வல்லமையுள்ள தெய்வஞ் சாக்ஷியாக

நான் சொல்வதெல்லாம உண்மை.

1-ம், பிரதிவாதி வக்கீல் வினவும், 64-ம், சாக்ஷி விடையும்.

உனது பெயர் யாது ?

துரியம்.

இதுவன்றி வேறு பெயர்களு முண்டா ?

உண்டு.

அவை யாவை ?

தன்னை மறந்தநிலை, சுத்தநிலை யென்பன.

தொழிலென்ன ?

கை, கால், தேகமாகிய இவைகள் சற்றும் அசையாமல் யாதொரு அசைவுமற்ற மரக்கட்டையைப்போல் நித்திரை செய்வது. ஆனால் சித்தமாத்திரம் என்னோடு சேர்ந்திருந்து என்னை யறியாமல் ஒவ்வொன்றையும் விசாரிக்கின்ற காரியத்தை நிறைவேற்றுகின்றது.

இவ்வியாச்சியத்திற் பிரதிவாதிகளான ஆன்மாவுஞ் சரீரமுந் தெரியுமா ?

தெரியும்.

அவர்கள் செய்த குற்றங்களில் யாதாவது தெரியுமா?

ஒன்றுந் தெரியாது.

தெரியாததற்குக் காரணமென்ன ?

தெரிந்து கொள்ளும் வல்லமை என்னிடத்திலில்லை. அதுதான் காரணம்.

வாதி வக்கீல் கிறுசில்லை.

கோர்ட்டார் வினவும், 64-ம், சாக்ஷி விடையும்.

வாக்குமூலம் வாசிக்கக் கேட்டாயா ?

கேட்டேன்.

சரிதானா ?

ஆம்.

பிரதிவாதி பக்கம் 64-ம், சாக்ஷி துரியம் (கை—து.)

பிரதிவாதி பக்கம் 65-ம், சாக்ஷி

துரியாதீதஞ் சத்தியஞ்செய்து

தெரிவித்த வாக்குமூலம்.

சர்வ வல்லமையுள்ள தெய்வஞ் சாக்ஷியாக

நான் சொல்வதெல்லாம் உண்மை.

1-ம் பிரதிவாதி வக்கீல் வினவும், 65-ம் சாக்ஷி விடையும்.

உனது பெயர் யாது?

துரியாதீதம்.

இதுவன்றி வேறு பெயர்களு முண்டா?

உண்டு.

அவை யாவை?

உயர்ந்தநிலை, சுத்தநிலை, கடந்தநிலை, எட்டாநிலை யென்பன.

உனது தொழில் யாது?

இப்பிரபஞ்ச விருத்திக்கு ஓர் மகத்துவத்தை யுண்டாக்குவது.

இந்தப் பிரதிவாதிகளான ஆன்மாவுஞ் சரீரமுந் தெரியுமா?

தெரியும்.

இவர்கள் செய்த குற்றங்களில் எதையாவது நீ அறிந்த துண்டா?

இல்லை.

அது எதனால்?

அதை அறிந்துகொள்ளும் அவகாசம் எனக்கில்லாததனால்

அவகாசமற்ற நீ முற்கூறிய செய்கையைச் செய்வது எப்படி?

அதை என்னைக்கொண்டு யாரோ ஒருவர் செய்விக்கின்றார்.

அவர் யாவர்?

தெரியாது.

வாதி வக்கீல் கிறாசில்லை.

கோர்ட்டார் வினவும், 65-ம், சாக்ஷி விடையும்

வாக்குமூலம் வாசிக்கக் கேட்டாயா?

கேட்டேன்.

சரிதானா?

ஆம்.

பிரதிவாதி பக்கம் 65-ம், சாக்ஷி துரியாதீதம் (கை—து.)

பிரதிவாதிபக்கம் 66-ம், சாக்ஷி

நல்வினை சத்தியஞ்செய்து.

தெரிவித்த வாக்குமூலம்.

சர்வ வல்லமையுள்ள தெய்வஞ் சாக்ஷியாக

நான் சொல்வதெல்லாம் உண்மை.

1-ம், பிரதிவாதி வக்கீல் வினவும், 66-ம், சாக்ஷி விடையும்.

உனது பெயர் யாது?

நல்வினை.

தொழிலென்ன?

எனக்கு அநந்த தொழில்களிருக்கின்றன. அவைகளெல்லாவற்றையுஞ் சொல்லுவதற்கு இக்கோர்ட்டிலிருந்து கொடுத்திருக்குஞ் சமயம் போதாது. ஆதலால் இப்பிரபஞ்சத்திற் சற்சனர்களால் நடத்தப்பட்டுவரும்

நல்வினைகளியாவும் எனது தொழிலின்ரெய்ச மென்று சுருக்கமாய்த் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

உனது தொழில்களின் தன்மை இன்னதென்று கோர்ட்டாருக்குத் தெரியவேண்டியதாக விருப்பதால் நீ அவற்றுள் சிலவற்றை மாத்திரஞ் சுருக்கி விவரமாய்ச் சொல் ?

இவ்வுலகத்திலுள்ள சகல மனுஷியர்களையுஞ் சகோதரராகப் பாவித்தல், அதனால் ஒவ்வொருவரிடத்துஞ் ஜீவகாருண்ணியமென்னும் ஓர் பிரதான குணத்தையுண்டாக்குதல், பசி, கவலை, துன்பம், ஆபத்து முதலியவைகள் தனக்கு நேரிடும்போது தான் கருதுவதுபோலவே பிறருக்கும் நேரிடும்போது கருதுதல். அறிவான விஷயங்களை மறைத்து வைக்காமல் உலகோபகாரார்த்தமாய்ப் பிரகாசிப்பித்தல், பிறரை நிந்தியாதிருத்தல், பிறரது செல்வத்தைப் பற்றிப் பொறாமை கொள்ளாதிருத்தல், பிறருக்கு அருவருப்புண்டாகும் விதத்தில் அவர்களை ஆட்சேபியாதிருத்தல், பிறரை வியசனப்படுத்தாதிருத்தல், பிறருக்கு இயன்றமட்டிலுந் தேகசகாயமும், வாக்குச் சகாயமுஞ்செய்தல், மகான்களை வணங்குதல், பெரியோர்களை வெகுமானப்படுத்தல், தாய தந்தையர்களைப் பூசித்தல், எப்பொழுதுஞ் சந்தோஷமாயிருத்தல், காரணமின்றி கோபமுண்டாகும் பொழுது ஈசுரதியானத்தோடு அக்கோபத்தைத் தணித்தல், தன்னைத் தொடர்ந்தவர்களைக் காப்பாற்றுதல், தன் குழந்தைகளுக்கு ஈசுரப்பதியை யுண்டாக்கத்தக்க உபதேசங்களைப் போதித்தல், கூடியவரை எந்தக் காரியத்திலும் அவசரப்படாதிருத்தல், மனதை எப்பொழுதுஞ் சுத்தமாய் வைத்திருத்தல்,

வீட்டி லிருக்கப்பட்ட வாகன முதலிய மிருகங்களைச் சதயாகக் காப்பாற்றிக் கிரமப்படி வேலைசெய்வித்தல், புருஷார்த்த சாதனத்திற்கு அதிமுக்கியமாகிய சரீரத்தைச் சுத்தமாகவும், நின்மலமாகவும் வைத்திருத்தல், தன் விரோதிகளுக்குந் தான் நல்லவனுயிருத்தல், குடி, திருடு, சூது, பொய், கொலை முதலிய பாவச் செய்கைகள் செய்கின்ற பாதகர்கள் நரகலோக வாசிகளென்று எப்பொழுதும் நினைத்தும் பயப்படுதல். அவைகளைக் கண்களாலொருபொழுதும் பாராதிருத்தல், பரஸ்திரிகளைத் தனது சகோதரிகளெனக் கருதுதல். அவர்களோடு வணக்கமாய்ப் பேசுதல், அவர்களை மரியாதியோடு பார்த்தல், விசுவாசத்தோடு நேசித்தல் முதலியன. இதுதான் எனது தொழில்.

உனது தொழிற்படி நடப்பவர்களுண்டா ?

உண்டு.

அவர்கள் யாவர் ?

ஞானிகள், தவசிகள், யோகிகள், சன்மார்க்கர்கள் முதலாயினோர்.

அதனல் அவர்களடையும் பிரயோசனம் யாது ?

முடிவில் அவர்களுக்கு மோட்சபதவி சித்திக்கும் ஒருக்காலமும் நரகவேதனை யுண்டாகமாட்டாது. இகத்திலும் பரத்திலும் அவர்கள் சுகமாகவே யிருப்பார்கள்.

இந்தப் பிரதிவாதிக ளிருவந் தெரியுமா ?

தெரியும்.

அவர்கள் செய்த குற்றங்கள் தெரியுமா ?

தெரியாது.

அப்படித் தெரியாததற்குக் காரணமென்ன ?

யான் அவ்விஷயங்களிற் பிரவேசிப்பதில்லை. மேலும் அவைகளை அறிவதற்கேதுவான அறிவும் எனக்கில்லை. இதுதான் காரணம்.

அறிவற்ற நீ உனது செய்கைகளை எப்படிச் செய்கின்றாய்?

அவற்றை யாதோ ஒரு சத்தி என்னைக்கொண்டு நடத்துவிக்கின்றது.

அச் சத்தி யாது?

தெரியாது.

வாதி வக்கீல் கிராசில்லை

கோர்ட்டார் வினவும், 66-ம், சாக்ஷி விடையும்.

வாக்குமூலம் வாசிக்கக் கேட்டாயா?

கேட்டேன்.

சரிதானா?

ஆம்.

பிரதிவாதி பக்கம் 66-ம், சாக்ஷி நல்வினை (கை—து.)

பிரதிவாதி பக்கம் 67-ம். சாக்ஷி

தீவினை சத்தியஞ்செய்து

தெரிவித்த வாக்குமூலம்.

சர்வ வல்லமையுள்ள தெய்வஞ் சாக்ஷியாக

நான் சொல்வதெல்லாம் உண்மை.

1-ம், பிரதிவாதி வக்கீல் வினவும், 67-ம், சாக்ஷி விடையும்.

உனது பெயர் யாது?

தீவினை.

தொழிலென்ன ?

எனது தொழில்களை விவரமாய்ச் சொல்ல இப் போது கொடுத்திருக்குஞ் சமயம் போதாது. யுகாந்தம் வரை சொல்லவேண்டுமானாலுஞ் சொல்லலாம்.

கேட்டாருக்குத் தெரியும் வண்ணஞ் சற்றுச் சுருக்கமாய்ச் சொல் ?

எனது தொழில் இதற்கு முன் விசாரணை செய்த நல்வினையினது தொழிலிற்கு நேர் விரோதமானது. அது ஒன்றை இரட்சிக்கவேண்டுமென்றால் யான் அதைப் பட் சிப்பேன். அது கோபத்தை அடக்கவேண்டுமென்றால் யான் அதை அதிகரிப்பிப்பேன். இவ்வாறு எல்லாத் தொழில்களிலும் யான் அதற்கு விபரீதமாக நின்று இப் பிரபஞ்சத்திலுள்ள நான்கில் மூன்று பாகத்தாரை என் னைத்தான் கைக்கொண்டு நடந்து வரும்படி செய்கின் றேன். நல்வினை, தீவினையாகிய யாங்களிருவரும் மிகவுஞ் சிநேகிதர்கள். எங்களோடு கூடாததர்கள் இப்பிரபஞ் சத்தி லொருவருமில்லர். மிக்கவரும் எனது உத்திரவைச் சிரமேற்கொண்டு நடப்பார்கள். அவ்வாறான எனதும் நல்வினையினதும் பெருமையைப்பற்றி ஆலோசித்தால், இவ்வுலகத்தினிடத்துள்ள மனுஷியர்கள் தங்களது ஜீவ தசையிற் பல விதத்தாலுஞ் சம்பாதித்து வைத்திருக்கும் பொருள்கள், மனதிற்கிசைந்த மனைவிமார்கள், உள்ளக் களிப்பைத் தருகின்ற புத்திரர்கள், ஆபத்துக்காலங்களி லுதவுஞ் சிநேகிதர்கள், தனது பிரயத்தினத்தாற் கிடைக்கப் பட்ட தானமானங்கள், குலத்தினாலேற்பட்ட உயர்வுகள் முதலிய யாவும் மரணித்துச் செல்லுகின்ற சமயத்தில் துணையாகவரமாட்டா. நல்வினை தீவினையாகிய எங்களா

லேற்பட்ட புண்ணிய பாவங்களே துணையாகவரும். "செத்தால் தெரியுஞ் செட்டியார் வாழ்" வென்ற முது மொழியு மிதற்குச் சான்றாகின்றது. இவ்வாறு எனது தொழில்களை யான் செய்துவருகின்றேன். இதுதான் எனது தொழில்.

இந்தப் பிரதிவாதிகளிருவருந் தெரியுமா ?

தெரியும்.

இவர்கள் செய்த குற்றங்கள் தெரியுமா ?

தெரியாது.

வாதி வக்கீல் கிறாசும், 67-ம், சாக்ஷி விடையும்.

பாவகாரியங்க ளெல்லாவற்றையுஞ் செய்வதற்கு மனுஷியர்களை உற்சாகப்படுத்துவோன் யானென்று வாக்குமூலங்கொடுத்த நீ இந்தப் பிரதிவாதிகள் செய்த குற்றங்களில் யாதொன்றும் எனக்குத் தெரியாதென்றுசொன்னதற்குக் காரணம் யாது ?

முற்கூறிய செய்கைக ளெல்லாவற்றையும் யான் செய்து வருகின்றேனாயினும் அவைகளி லொன்றையேனும் யான் எனது சொந்த அறிவோடு கூடிச் செய்யவில்லை. யாரோ ஒருவர் அதைச் செய்விக்கின்றார். ஆதலாற்றான் எனக்குத் தெரியாதென்று சொன்னேன். இதுதான் அதற்குக் காரணம்.

அவர் யார் ?

தெரியாது.

பிரதிவாதி வக்கீல் றீக்கிறாசில்லை.

கோர்ட்டார் வினவும், 67-ம், சாக்ஷி விடையும்.

வாக்குமூலம் வாசிக்கக் கேட்டாயா ?

கேட்டேன்.

சரிதானா ?

ஆம்.

பிரதிவாதி பக்கம் 67-ம், சாக்ஷி நீவினை (கை—து.)

பிரதிவாதி பக்கம் 68-ம், சாக்ஷி

காமஞ் சத்தியஞ்செய்து

தெரிவித்த வாக்குமூலம்.

சர்வ வல்லமையுள்ள தெய்வஞ் சாக்ஷியாக

நான் சொல்வதெல்லாம் உண்மை.

1-ம், பிரதிவாதி வக்கீல் வினவும், 68-ம், சாக்ஷி விடையும்.

உனது பெயர் யாது ?

காமம்.

தொழிலென்ன ?

தாவர ஜங்கமங்களாகிய எல்லாப் பொருள்களினிடத்தும் ஆசையோடிருப்பது. எனது வல்லமை காணக்கூடாத ஓர் சத்தியாயிருக்கின்றது. முப்பத்து முக்கோடி தேவர்களுக்கு அதிபனும், பிரகஸ்பதியினது சீடனும், நன்னடத்தை யுடையவனுமான இந்திரனைப்பிரமிப்பித்து கௌதம மகா இருஷியின் பத்தினியாகிய அகலிகையின் மீது மோகத்தை யுண்டாக்கி அவளது கற்பை யழிப்பித்துத் தேக முழுவதும் யோனி வடிவமாகச் செய்தேன். சிருஷ்டி கர்த்தாவாகிய பிரமனைத் தனது மகளாகிய சரசுவதியை மனைவியாக்கும்படி செய்தேன் தனது சீத கிரணங்களினால் தம்பதிகளுக்குக் குளிர்ச்சியையும், பிரிந்தவர்

களுக்கு வெப்பத்தையுங் கொடுக்கின்ற சந்திரனைத் தனது குரு பத்தினியாகிய தாரையை மோகிக்கும்படி செய்து அவளோடு கூடிக்கலந்து சுகிக்கச்செய்தேன். இவ்வாறு இவ்வுலகத்தினிடத்துள்ள மனுஷியர்களெல்லாரையும் யான் எனக்கு அடிமையாக்கி வைத்துக்கொண்டிருக்கின்றேன் இதுதான் எனது தொழில்.

இந்தப் பிரதிவாதிகளிருவருந் தெரியுமா ?

தெரியும்.

இவர்கள் செய்த குற்றங்களில் யாதாவது தெரியுமா?

ஒன்றுந் தெரியாது.

அது எதனால் ?

எனக்கு எவ்வித அறிவும் வல்லமையுமில்லாததனால்.

அறிவும், வல்லமையுமில்லாத நீ முற்கூறிய செய்கைகளை எவ்வாறு செய்கின்றாய் ?

அவற்றை என்னைக்கொண்டு யாரோ ஒருவர் செய்விக்கின்றார்

அவர் யாவர் ?

தெரியாது.

அவரிருப்பது எங்கே ?

அதுவுந் தெரியாது.

வாதி வக்கீல் கிறுசில்லை.

கோர்ட்டார் வினவும், 68-ம், சாக்ஷி விடையும்.

வாக்குமூலம் வாசிக்கக் கேட்டாயா ?

கேட்டேன்.

சரிதானா ?

ஆம்.

பிரதிவாதி பக்கம் 68-ம், சாக்ஷி காமம் (கை—து.)

பிரதிவாதி பக்கம் 69-ம், சாக்ஷி

குரோதஞ் சத்தியஞ்செய்து

தெரிவித்த வாக்குமூலம்.

சர்வ வல்லமையுள்ள தெய்வஞ் சாக்ஷியாக

நான் சொல்வதெல்லாம் உண்மை.

1-ம், பிரதிவாதி வக்கீல் வினவும், 69-ம், சாக்ஷி விடையும்.

உனது பெயர் யாது?

குரோதம்.

தொழிலென்ன?

ஜீவராசிகளுக்குக் கோபத்தை யுண்டாக்கிக்கொண்டிருப்பது.

அதை விவரமாய்ச் சொல்?

என்னை ஏற்றுக்கொண்ட எல்லாரிடத்தும் யானிருந்துகொண்டு அவர்களது மனக்கண்ணை மறைத்து அவர்களைக் குருடர்களாக்குகின்றேன். அவர்களது கீர்த்தி, கல்வி, அறிவு முதலியவைகளை அதிவிரைவில் நாசமாக்குகின்றேன். அவர்களைச் சேர்ந்த சிநேகிதர்கள், பந்துக்கள், வேலைக்காரர்கள், அதிகாரிகள் முதலிய யாவரையும் விரோதிகளாக்குகின்றேன். மேலும் இவ்வுலகத்தில் ஒருவன் ஒருவனை அடிப்பது மிடிப்பதுங் குத்துவதுங் கொலை செய்வதும் நிந்திப்பதும் என்னாற்றான் நடைபெறுகின்றன. என்னையுடைய ஒருவனிடத்து எவ்வளவு இனிமையான வார்த்தைகள் சொன்னாலும், அவன் அவற்றைக் காதுகளாற் கேளான். எவ்வளவு எளிய முகங்காட்டினாலும், அதை கண்களாற் பாரான். காதுங் கண்ணும் அவனுக்கிருந்தும் அந்தச் சமயத்தில் அவன் அவைகளில்லாதவனாகின்றான். இதுதான் அதன் விபரம்.

இவ்வியாச்சியத்தைப்பற்றி யாதாவது தெரியுமா ?

ஒன்றுந் தெரியாது.

தெரியாததற்குக் காரணமென்ன ?

தெரிந்துகொள்ளும் அறிவும் வல்லமையும் என்னிடத்திலில்லை. அதுதான் காரணம்.

அவையில்லாத நீ உனது தொழிலை எவ்வாறு செய்கின்றாய் ?

அதை யாரோ ஒருவர் என்னைக்கொண்டு செய்விக்கின்றார்

அவரை நீ பார்த்திருக்கின்றாயா ?

பார்க்கும் வடிவமுடையவரல்லர்.

அவர் பெயர் யாது ?

தெரியாது.

அவர் எங்கேயிருக்கின்றார் ?

அதுவுந் தெரியாது.

வாதி வக்கீல் கிராசில்லை.

கோர்ட்டார் வினவும், 69-ம், சாக்ஷி விடையும்.

வாக்குமூலம் வாசிக்கக் கேட்டாயா ?

கேட்டேன்.

சரிதானா ?

ஆம்.

பிரதிவாதி பக்கம் 69-ம், சாக்ஷி, குரோதம் (கை—து.)

பிரதிவாதி பக்கம் 70-ம், சாக்ஷி

உலோபஞ் சத்தியஞ்செய்து

தெரிவித்த வாக்குமூலம்.

சர்வ வல்லமையுள்ள தெய்வஞ்சாக்ஷியாக

நான் சொல்வதெல்லாம் உண்மை.

1-ம், பிரதிவாதி வக்கீல் வினவும், 70-ம், சாக்ஷி விடையும்.

உனது பெயர் யாது ?

உலோபம்.

தொழிலென்ன ?

பிறருக்கு எவ்வித உதவியுஞ் செய்யாதிருப்பதோடு செய்யும்படி நினைப்பவரையுஞ் செய்யவொட்டாமல் தடுப்பது. ஆனால் யான் எப்பொழுதும் உலுத்தர்களோடு தான் சிநேகனாயிருப்பேன். அவர்களிடத்தில் எனக்கு அதிக விருப்பமுண்டு. தருமமென்றால் அது எனக்கு மிகவும் விரோதமாகத் தோற்றும். அதைச் செய்ய நினைப்பவர்களிடத்துச் செய்யவொட்டாமல் மல்லாடிக் கொண்டிருப்பேன். என்னை யுடையவர்க ளிடத்திருக்கின்ற பொருள்கள் கடலிலிருக்கின்ற நீரையும் சருப்பத்தின் சிரத்திலிருக்கின்ற இரத்தினத்தையு மொப்ப யாதொரு பிரயோசனமு மற்றதாகச் செய்வேன். இதுதான் எனது தொழில்

இந்த வியாச்சியத்தைப்பற்றி யாதாவது தெரியுமா?

ஒன்றுந் தெரியாது.

ஒன்றுந் தெரியாத நீ முற்கூறிய வேலையைச் செய்வதெப்படி ?

அதை யாரோ ஒருவர் என்னைக்கொண்டு நடத்துவிக்கின்றார்.

அவர் யாவர்?

தெரியாது

அவரிருப்பது எங்கே?

அதுவுந் தெரியாது.

வாதி வக்கீல் கிறுசில்லை.

கோர்ட்டார் வினவும், 70-ம், சாக்ஷி விடையும்.

வாக்குமூலம் வாசிக்கக் கேட்டாயா?

கேட்டேன்.

சரிதானா?

ஆம்

பிரதிவாதி பக்கம் 70-ம், சாக்ஷி உலோபம் (கை—து.)

பிரதிவாதி பக்கம் 71-ம், சாக்ஷி

மோகஞ் சத்தியஞ்செய்து

தெரிவித்த வாக்குமூலம்.

சர்வ வல்லமையுள்ள தெய்வஞ் சாக்ஷியாக

நான் சொல்வதெல்லாம் உண்மை.

1-ம், பிரதிவாதி வக்கீல் வினவும், 71-ம், சாக்ஷி விடையும்.

உனது பெயர் யாது?

மோகம்

தொழிலென்ன?

ஒருவனுக்கு ஒரு பொருளின்மீது அதிக விருப்பமுண்டாகும்போது அவனை அந்நிலைமையிற்றானே தன்னை மறந்து நிற்கும்படி செய்வது.

அதை விவரமாய்ச் சொல்?

சாதாரணமாக ஒருவனுக்கு ஒரு பெண்ணின்மீது மோகமுண்டானால் உண்டான அவனை அவ்வெண்ணத்தைவிட்டும் வேறுபடுத்தாமல் அந்நிமிஷத்திற்றானே அவனது உடல், பொருள், ஆவியாகிய மூன்றையும் மறப்பித்து நியாயத்தை முற்றுமொழிப்பித்து அவனது மோக சாத்தியத்திற்கு வேண்டிய பல கெட்ட செய்கைகளைச் செய்யும்படி தூண்டுகின்றேன். நியாயவாயிலாக யாதொன்றையும் ஆலோசிப்பதற்கு அவனுக்குச் சமயங்கொடுப்பதில்லை. அவனது வெட்கத்தை அப்பொழுதே இல்லாமற் செய்கின்றேன். எப்பொழுதுங் காமத்தோடுகூடி வாசஞ்செய்கின்ற யான் அவனை முடிவில் மிகவுந் தாழ்ந்த நிலைமையிற் கொண்டு வருகினறேன். இதுதான் அதன் விபரம்.

இந்தப் பிரதிவாதிக ளிருவருந் தெரியுமா ?

தெரியும்.

இவர்கள் செய்த குற்றங்கள் தெரியுமா ?

தெரியாது.

முற்கூறிய செய்கைகளனைத்தையுஞ் செய்வதற்கு வல்லமையுள்ள நீ இவர்களது குற்றங்கள் மாத்திரந் தெரியாதென்று சொன்னதற்குக் காரணமென்ன ?

அச்செய்கைகளை யாரோ ஒருவர் என்னைக்கொண்டு செய்விக்கின்றார் எனக்குச் சொந்த அறிவோ ? வல்லமையோ, கிடையா. அதுதான் காரணம்.

அவர் யாவர் ?

தெரியாது.

அவர் எவ்விடத்திலிருக்கின்றார் ?

அதுவுந் தெரியாது.

வாதி வக்கீல் கிறாசில்லை.

கோர்ட்டார் வினவும், 71-ம், சாக்ஷி விடையும்.

வாக்குமூலம் வாசிக்கக் கேட்டாயா?

கேட்டேன்.

சரிதானா?

ஆம்.

பிரதிவாதி பக்கம் 71-ம், சாக்ஷி மோகம் (கை—து.)

பிரதிவாதி பக்கம் 72-ம், சாக்ஷி

மதஞ் சத்தியஞ்செய்து

தெரிவித்த வாக்குமூலம்.

சர்வ வல்லமையுள்ள தெய்வஞ் சாக்ஷியாக

நான் சொல்வதெல்லாம் உண்மை.

1-ம், பிரதிவாதி வக்கீல் வினவும், 72-ம், சாக்ஷி விடையும்.

உனது பெயர் யாது?

மதம்.

தொழிலென்ன?

அரசன்முதல் ஏழைவரையுள்ள யாவரையும் அகந்தை யுடையவர்களாகச் செய்வது.

அதை விவரமாய்ச் சொல்?

யான் எவனிடத்துச் சிநேகஞ் செய்கின்றேனோ? அவன் எவ்வளவு சன்மார்க்கனாயிருந்தாலும், அரசனாயிருந்தாலும், மந்திரியாயிருந்தாலும், வேதியனாயிருந்தாலும், வணிகனாயிருந்தாலும், மிகவும் ஏழைப்பட்டவனாயிருந்தாலும் அவனை அதிகக் கெட்டவனாக்கி அவனுக்குத் தகுந்த வழியினால் அவனைப் பிடித்துக் கெடுக்கின்றேன். குபேரனுக்கொப்பாகிய அதிக தனவந்தர்களையும் பிரபுக்களையும், மற்ற ஜனங்களையும் தனத்தினது மதத்தி

னால் அகந்தையுடையவர்களாக்கி அதனால் அவர்களை இவ்வுலகம் நிந்திக்கும்படி செய்கின்றேன். பிரசங்கிகள் வித்துவான்கள் முதலானவர்களை அவர்கள் கற்ற கல்வியி னால் அகந்தை யுடையவர்களாக்கி அதனால் அவர்களைக் கெடுக்கின்றேன். சிலரைத் தங்களது சமயமதத்தினாற் கெடுக்கின்றேன். சிலரைத் தங்களது சாதி மதத்தினாற் கெடுக்கின்றேன். இவ்வாறு என்னை நேசித்த ஒவ்வொரு வரையும் ஒவ்வொரு வழியினாற் கெடுக்கின்றேன். இது தான் அதன் விபரம்.

இவ்வியாச்சியத்திற் பிரதிவாதிகளான இருவருந் தெரியுமா ?

தெரியும்.

அவர்களிற் குற்றக்காரரின்னாரென்று தெரியுமா ?

தெரியாது.

முற்கூறிய செய்கைகளெல்லாவற்றையுஞ் செய்வ தற்கு வல்லமையுள்ள நீ அது தெரியாதென்று சொன் னது எதனால் ?

எனக்கு எவ்விதச் செய்கையுஞ் செய்வதற்கு வன் மையில்லை என்னைக்கொண்டு யாரோ ஒருவர் அவை களைச் செய்விக்கின்றார். அதனால்.

அவர் யாவர் ?

தெரியாது.

அவர் பெயரோ ?

அதுவுந் தெரியாது

வாதி வக்கீல் கிறாசில்லை.

கோர்ட்டார் வினவும், 72-ம், சாக்ஷி விடையும்.

வாக்குமூலம் வாசிக்கக் கேட்டாயா ?

கேட்டேன்.

சரிதானா ?

ஆம்.

பிரதிவாதி பக்கம் 72-ம், சாக்ஷி மதம் (கை—து.)

பிரதிவாதி பக்கம், 73-ம், சாக்ஷி

மாற்சரியஞ் சத்தியஞ்செய்து

தெரிவித்த வாக்குமூலம்.

சர்வ வல்லமையுள்ள தெய்வஞ் சாக்ஷியாக

நான் சொல்வதெல்லாம் உண்மை.

1-ம், பிரதிவாதி வக்கீல் வினவும், 73-ம், சாக்ஷி விடையும்.

உனது பெயர் யாது ?

மாற்சரியம்.

தொழிலென்ன ?

அது மிகவுமிழிந்ததென்று யான் ஒப்புக்கொள்ளாமலிருப்பதற்கு யாதொரு மார்க்கமுமில்லை. ஆனால் அவைகளியாவும் எனது சொந்த அறிவோடும் வல்லமையோடுங் கூடிச் செய்யாதவைகளானதினால், அவைகளுக்காக யான் குற்றவாளியாக மாட்டேனென்ற உத்தம விசுவாசத்தோடு அவைகளைப் பூரணமாகவும் விவரமாகவும் இக்கோர்ட்டு முன்னிலையில் தெரிவித்துக் கொள்ளுகின்றேன். அதாவது மனதின்கண் பொறாமையை வைத்து வெளியிற் சினேகனைப்போலப் பாவனைகாட்டிச் சமயம் நேர்ந்தபோது பிறரைக் கெடுப்பதும், கெடுப்பதற்காகக் காத்திருப்பதுமே. ஆனால் இவ்வாறு மனதின்கண் விரோதத்

தையும், வெளியிற் சினேகத்தையும் வைத்து மலர்ந்த முகத்தோடு இனிமையான வார்த்தைகளைப் பேசிக்கொண்டு திரிபவன் தனது இதயத்தின் கண்ணுள்ள விரோதாக்கினியினால் தானே சுடப்பட்டு வெந்து சாம்பராவா னென்பனிதைச் சற்றுங் கவனிப்பதில்லை. பொறாமைப் புத்தியினால் ஜனங்களுக்கிடையில் ஒவ்வொருநாளும் அனேகக் கெட்ட செய்கைகளைச்செய்துகொண்டு வருகின்றேன். இதுதான் யான் செய்யுந் தொழில்.

இவ்வியாச்சியத்திற் பிரதிவாதிகளான ஆன்மாவுஞ் சரீரமுந் தெரியுமா ?

தெரியும்.

அவர்கள் செய்த குற்றங்கள் தெரியுமா ?

தெரியாது.

முற்கூறிய கெட்ட செய்கைகளைச்செய்வதற்கு வல்லமையுள்ள நீ அதை அறியாதிருந்ததற்குக்காரணமென்ன ?

அறிவதற்கேதுவான அறிவோ, வன்மையோ என்னிடத்திலில்லை. ஆனால் எனது செய்கைக ளெல்லாவற்றையும் என்னைக்கொண்டு யாரோ ஒரு பெரியவர் நடத்துவிக்கின்றார், அதுதான் காரணம்.

அவர் பெயர் யாது ?

தெரியாது.

அவரிருப்பது எங்கே ?

அதுவுந் தெரியாது.

வாதி வக்கீல் கிறாசில்லை.

கோர்ட்டார் வினவும், 73-ம், சாக்ஷி விடையும்.

வாக்குமூலம் வாசிக்கக் கேட்டாயா ?

கேட்டேன்.

சரிதானா ?

ஆம்.

பிரதிவாதி பக்கம் 73-ம், சாக்ஷி மார்ச்சரியம் (கை—து.)

பிரதிவாதி பக்கம் 74-ம், சாக்ஷி

இடும்பை சத்தியஞ்செய்து

தெரிவித்த வாக்குமூலம்.

சர்வ வல்லமையுள்ள தெய்வஞ் சாக்ஷியாக

நான் சொல்வதெல்லாம் உண்மை.

1-ம், பிரதிவாதி வக்கீல் வினவும், 74-ம், சாக்ஷி விடையும்.

உனது பெயர் யாது ?

இடும்பை.

தொழிலென்ன ?

யான் என்னைச் சேர்ந்தவர்களைப் பிறரை மதியாமல் நடக்கும்படி தூண்டுகின்றேன். அன்னியரை வஞ்சிக்கும் பொருட்டுப் பல திருட்டுவேஷங்களைப் போடும்படி செய்கின்றேன். சந்நியாசி வேடத்தைப் பூண்டு பகலெல்லாம் பெரிய மேதாவிகளைப்போல் நடிக்கச்செய்து இரவானவுடன் வேசிகள் வீட்டிலும், தாசிகள் வீட்டிலும்போய் அவர்களோடு சரசசல்லாபமாடிச் சுரதலீலா சாகரத்தில் மூழ்கும்படி செய்கின்றேன். மேலும், சற்றும் பலமற்ற ஒருவனை மகாப் பலசாலியாகவும், ஒன்றுந் தெரியாத ஒருவனை எல்லாந் தெரிந்தவனாகவும் பாவித்து

நடக்கச் செய்கின்றேன். இவ்வாறு செய்வதுதான் எனது தொழில்.

இவ்வியாச்சியத்திற் பிரதிவாதிகளான இருவருந் தெரியுமா ?

தெரியும்.

அவர்கள் செய்த குற்றங்களில் யாதாவது தெரியுமா?

ஒன்றுந்தெரியாது.

அப்படித் தெரியாத நீ முற்கூறிய செய்கைகளைச் செய்வது எப்படி ?

அவைகளை என்னைக்கொண்டு யாரோ ? ஒரு பெரியவர் செய்விக்கின்றார். அதைத்தவிர எனக்குச் சொந்த வல்லமையோ அறிவோ கிடையா.

அவர் யாவர் ?

தெரியாது.

அவர் எங்கே யிருக்கின்றார் ?

அதுவுந் தெரியாது.

அவர் பெயரோ ?

இன்னதென்று யான் கேள்விப்படவில்லை

வாதி வக்கீல் கிறாசில்லை.

கோர்ட்டார் வினவும், 74-ம், சாக்ஷி விடையும்.

வாக்குமூலம் வாசிக்கக் கேட்டாயா ?

கேட்டேன்.

சரிதானா ?

ஆம்.

பிரதிவாதி பக்கம் 74-ம், சாக்ஷி இடும்பை (கை—து)

பிரதிவாதி பக்கம் 75-ம், சாக்ஷி

அசூயை சத்தியஞ்செய்து

தெரிவித்த வாக்குமூலம்.

சர்வ வல்லமையுள்ள தெய்வஞ் சாக்ஷியாக

நான் சொல்வதெல்லாம் உண்மை.

1-ம், பிரதிவாதி வக்கீல் வினவும், 75-ம், சாக்ஷி விடையும்.

உனது பெயர் யாது ?

அசூயை.

தொழிலென்ன ?

மற்றவர்கள் மேன்மையா யிருப்பது எனக்கும் என்னோடு சேர்ந்தவர்களுக்கும் மிகவும் விசனமாகத் தோற்றுவது.

அதை விபரமாய்ச் சொல் ?

ஒருவன் என்முன் மிகவும் இழிந்த கோலத்தோடும் அழுக்கு வஸ்திரங்களோடும் வருவானானால் அவனைப் பார்க்க எனக்கு மிகவுஞ் சந்தோஷமாயிருக்கும். அதற்கு மாற்றமாக, அவன் மிகவும் உயர்ந்த கோலத்தோடும் பட்டு, சரிகை முதலிய வஸ்திரங்களோடும் ஆபரணங்களோடும் வருவானானால் அப்பொழுது என் இதயத்தின் கண் என்னை யறியாமல் ஒருவிதத் துன்பமுண்டாகின்றது. அதனோடு அவனைப் பார்ப்பதற்குக்கூட எனக்கு வெறுப்பாக விருக்கின்றது. இச் சுவபாவத்தை யான் மட்டுங் கைக்கொள்ளுகின்றே னென்பதல்ல, என்னைச் சேர்ந்த எனது சினேகிதர்களுங் கைக்கொள்ளுகின்றார்கள். பெரிய பெரிய மேதாவிகளைக் கூட யான் பிடித்து அவர்களையும் இவ்வழியில் திருப்புகின்றேன். இதுதான் எனது தொழில்.

இவ்வியாச்சியத்திற் பிரதிவாதிகளது சாக்ஷிகள் உனக்குத் தெரியுமா?

தெரியும்.

அவர்களில் 68-முதல் 74-வரையுள்ள சாக்ஷிகளாகிய காமம் முதலானவர்கள் உனக்கு யார்?

சகோதரர்கள்.

எவ்வழியில்?

மனதிற்குப் பிரவிருத்தி, நிவிருத்தியென இருமனைவிக ளிருக்கின்றார்கள். அவரிற் காம முதலிய யாங்களெட்டுப் பெயரும் பிரவிருத்தியாற் பெறப்பட்டவர்கள். ஆதலால் அவ்வழியில்.

நிவிருத்தி யென்பவளுக்குப் புத்திரர்களுண்டா?

உண்டு.

அவர்கள் யாவர்?

விவேகாதி முதலானவர்கள்

இவ்வியாச்சியத்தைப்பற்றி யாதாவது உனக்குத் தெரியுமா?

ஒன்றுந் தெரியாது.

அது எதனால்?

எனக்குத் தற்போத மில்லாததனால்.

தற்போத மில்லாத நீ முற்கூறிய செய்கைகளை எவ்வாறு செய்கின்றாய்?

அவற்றை யாரோ ஒருவர் என்னைக்கொண்டு செய்விக்கின்றார்.

அவரை நீ எப்போதாவது பார்த்ததுண்டா?

இல்லை.

ஏன் பார்க்கவில்லை ?

அவர் பார்வைக்கதீதமானவர்.

அவர் பெயரென்ன ?

தெரியாது.

எங்கே யிருக்கின்றார் ?

அதுவுந் தெரியாது.

வாதி வக்கீல் கிராசில்லை.

கோர்ட்டார் வினவும், 75-ம், சாக்ஷி விடையும்.

வாக்குமூலம் வாசிக்கக் கேட்டாயா ?

கேட்டேன்.

சரிதானா ?

பிரதிவாதி பக்கம் 75-ம், சாக்ஷி அருமை (கை—து.)

பிரதிவாதி பக்கம் 76-ம், சாக்ஷி

இராசதஞ் சத்தியஞ்செய்து

தெரிவித்த வாக்குமூலம்.

சர்வ வல்லமையுள்ள செய்வஞ் சாக்ஷியாக

நான் சொல்வதெல்லாம் உண்மை.

1-ம், பிரதிவாதி வக்கீல் வினவும், 76-ம், சாக்ஷி விடையும்.

உனது பெயர் யாது ?

இராசதம்.

தொழிலென்ன ?

என்னை நேசிப்பவர்களுக்கு மனவூக்கம், தானம், தவம், தருமம், வீரம், ஞானம், கல்வி, கேள்வியாகிய எட்டுக் குணங்களையுங் கொடுப்பது.

நீயும் அவ்வெட்டுக் குணங்களோடுங் கூடினவன் ஞறு ?

ஆம்.

நீ அக் குணங்களைக் கொடுப்பதனால் அவர்களுக் குண்டாகும் பயன் யாது ?

அவர்கள் ஒரு காலத்திலுங் கெட்டுப்போகமாட்டார் கள். எப்பொழுதும் மேன்மையாகவே யிருப்பார்கள், இதுதான் அவர்களுக்குண்டாகும் பயன்.

இந்தப் பிரதிவாதிகளான ஆன்மாவுஞ் சரீரமுந் தெரியுமா ?

தெரியும்.

இவ்வியாச்சிய சம்பந்தமாக யாதாவது தெரியுமா ?

ஒன்றுந் தெரியாது.

அப்படித் தெரியாதிருந்ததற்குக் காரணமென்ன ?

எனக்குச் சொந்த அறிவும் வல்லமையுங் கிடையா. அதுதான் காரணம்.

சொந்த அறிவும் வல்லமையுங் கிடையாத நீ முற் கூறிய செய்கைகளை எவ்வாறு செய்கின்றாய் ?

அவற்றை என்னைக்கொண்டு யாதோ ஒரு மகாசத்தி செய்விக்கின்றது

அச் சத்தியின் பெயரென்ன ?

தெரியாது.

அது இருப்பது எங்கே ?

அதுவுந் தெரியாது.

வாதி வக்கீல் கிராசில்லை.

கோர்ட்டார் வினவும், 76-ம், சாக்ஷி விடையும்.

வாக்குமூலம் வாசிக்கக் கேட்டாயா?

கேட்டேன்.

சரிதானா?

ஆம்.

பிரதிவாதி பக்கம் 76-ம், சாக்ஷி இராசதம் (கை— து.)

பிரதிவாதி பக்கம் 77-ம், சாக்ஷி

தாமசஞ் சத்தியஞ்செய்து

தெரிவித்த வாக்குமூலம்

சர்வ வல்லமையுள்ள தெய்வஞ் சாக்ஷியாக

நான் சொல்வதெல்லாம் உண்மை.

1-ம், பிரதிவாதி வக்கீல் வினவும், 77-ம், சாக்ஷி விடையும்.

உனது பெயர் யாது?

தாமசம்.

தொழிலென்ன?

என்னை நேசிப்பவர்களுக்குப் பேருண்டி, நெடுந்துயில், நீதிவழு, ஒழுக்கவழு, மறதி, பொய், சோம்பு, காமம், கோபம், கொலை. வஞ்சகமாகிய குணங்களைக் கொடுப்பது.

நீயும் அக்குணங்களோடு கூடினவன்றானே?

ஆம.

நீ அக் குணங்களைக் கொடுப்பதனால் அவர்களுக்குண்டாகும் பயன் யாது?

ஒன்றுமில்லை. அக்குணத்தினால் அவர்கள் கெட்டுப் போகின்றார்கள். அனேகர் என்னை நேசித்துக் கெட்டே போனார்கள்.

இந்தப் பிரதிவாதிகளிருவருந் தெரியுமா ?

தெரியும்.

இவ்வியாச்சிய சம்பந்தமாக யாதாவது தெரியுமா ?

ஒன்றுந் தெரியாது

ஒன்றுந்தெரியாத நீ உனது செய்கைகளை எவ்வாறு செய்கின்றாய் ?

அவைகளைச் செய்பவன் யானல்ல. என்னைக்கொண்டு யாரோ ஒருவர் செய்விக்கின்றார்.

அவர் யாவர் ?

தெரியாது.

அவர் எங்கே இருக்கின்றார் ?

அதுவுந் தெரியாது.

வாதி வக்கீல் கிருசில்லை.

கோர்ட்டார் வினவும், 77-ம், சாக்ஷி விடையும்.

வாக்குமூலம் வாசிக்கக் கேட்டாயா ?

கேட்டேன்.

சரிதானா ?

ஆம்.

பிரதிவாதி பக்கம் 77-ம், சாக்ஷி தாமசம் (கை—து.)

பிரதிவாதி பக்கம் 78-ம், சாக்ஷி

சாத்துவிகஞ் சத்தியஞ்செய்து

தெரிவித்த வாக்குமூலம்.

சர்வ வல்லமையுள்ள தெய்வஞ் சாக்ஷியாக

நான் சொல்வதெல்லாம் உண்மை.

1-ம், பிரதிவாதி வக்கீல் வினவும், 78-ம், சாக்ஷி விடையும்.

உனது பெயர்யாது ?

சாத்துவிகம்.

தொழிலென்ன ?

என்னை நேசிப்பவர்களுக்கு ஞானம், அருள், தவம், பொறை, வாய்மைமென்மை, மோனம், ஐம்பொறி யடக்கலாகிய குணங்களைக் கொடுப்பது.

நீயும் அக் குணங்களோடு கூடினவன்றானே ?

ஆம்.

நீ அக்குணங்களைக் கொடுப்பதனால் அவர்கள் அடையும் பயன் யாது ?

அளவற்றன.

நீ இதைத்தவிர வேறு யாதாவது செய்கின்றாயா ?

செய்கின்றேன்.

அது யாது ?

யானும் என்னோடு சேர்ந்த இராசதம், தாமதமாகிய இருவரும் முக்குணங்களென்ற பெயரோடு கூடியிருந்தாலும் யாங்களே இப்பிரபஞ்சத்தின்கண் சிருட்டி, திதி, சங்காரமாகிய முத்தொழில்களுக்கும் காரணபூதர்களாகவிருக்கின்றோம். அத்தொழில்களைச் செய்யவல்ல கர்த்தாக்களாகிய பிரமா, விட்டுணு, சிவனென்பவர்களும் எங்களோடு கூடினவர்கள் தாம். இதைப்பற்றி வேதங்களெல்லாம் மூறையிடுகின்றன. இதுதான் அது.

உனக்கு இந்தப் பிரதிவாதிகள் தெரியுமா ?

தெரியும்.

இவ்வியாச்சியத்தைப்பற்றி யாதாவது தெரியுமா ?

ஒன்றுந் தெரியாது.

தெரியாததற்குக் காரண மென்ன ?

எனக்குச் சொந்த அறிவும் வல்லமையுமில்லை அது தான் காரணம்

அறிவும் வல்லமையுமில்லாத நீ உனது தொழில்களை எவ்வாறு செய்கின்றாய் ?

அவற்றை யாதோ ஒரு மகாசத்தி என்னைக்கொண்டு செய்விக்கின்றது.

அச் சத்தி யாது ?

தெரியாது.

அதன் பெயரென்ன ?

நான் கேள்விப்படவில்லை.

அது இருப்பது எவ்விடத்தில் ?

தெரியாது.

வாதி வக்கீல் கிறுசில்லை.

கோர்ட்டார் வினவும், 78-ம், சாக்ஷி விடையும்.

வாக்குமூலம் வாசிக்கக் கேட்டாயா ?

கேட்டேன்.

சரிதானு ?

ஆம்.

பிரதிவாதி பக்கம் 78-ம், சாக்ஷி சாத்துவிகம் (கை—து.)

பிரதிவாதி பக்கம் 79-ம், சாக்ஷி

அர்த்தேடனை சத்தியஞ்செய்து

தெரிவித்த வாக்குமூலம்.

சர்வ வல்லமையுள்ள தெய்வஞ் சாக்ஷியாக

நான் சொல்வதெல்லாம் உண்மை.

1-ம், பிரதிவாதி வக்கீல் வினவும், 79-ம், சாக்ஷி விடையும்.

உனது பெயர் யாது ?

அர்த்தேடணை.

தொழிலென்ன ?

சூதாடியோ, வாதாடியோ, பொய்யுரைத்தோ, திருடியோ, அபகரித்தோ, பொருள் சம்பாதிப்பதும், அதனால் மகிழ்வதும், அச் சம்பாத்தியத்திற்காக இரவும், பகலும் உற்சாகத்தோடிருப்பதும், பிறரை மருட்டுவதும், உருட்டுவதுமாகிய இவைகள்.

உன்னோடு சேராதவர்கள் அப்பொருளை எவ்வாறு நினைக்கின்றார்கள் ?

என்னோடு சேராதவர்கள் ஒருவருமில்லர். ஒருவேளை யிருந்தால் அவர்கள் அதை ஓட்டைப்போல் நினைப்பார்கள்.

உனக்கு இப்பிரதிவாதிக ளிருவருந்தெரியுமா ?

தெரியும்.

இவ்வியாச்சியத்தைப்பற்றி யாதாவது தெரியுமா ?

ஒன்றுந் தெரியாது.

அது எதனால் ?

எனக்குச் சொந்த அறிவோ, வல்லமையோ, இல்லை. அதனால்.

அவையில்லாத நீ உனது செய்கைகளை எப்படிச் செய்கின்றாய் ?

அவற்றை என்னைக்கொண்டு யாரோ, ஒரு பெரியவர் செய்விக்கின்றார்.

அவர் யாவர் ?

தெரியாது.

அவர் எங்கே யிருக்கின்றார் ?

அதுவுந் தெரியாது.

அவர் பெயரென்ன ?

நான் கேள்விப்படவில்லை

வாதி வக்கீல் கிறாசில்லை.

கோர்ட்டார் வினவும், 79-ம், சாக்ஷி விடையும்.

வாக்குமூலம் வாசிக்கக் கேட்டாயா ?

கேட்டேன்.

சரிதானா ?

ஆம்.

பிரதிவாதி பக்கம் 79-ம், சாக்ஷி அர்த்தேடனே (கை—து.)

பிரதிவாதி பக்கம் 80-ம், சாக்ஷி

புத்திரேடனை சத்தியஞ்செய்து

தெரிவித்த வாக்குமூலம்.

சர்வ வல்லமையுள்ள தெய்வஞ் சாக்ஷியாக

நான் சொல்வதெல்லாம் உண்மை.

1-ம், பிரதிவாதி வக்கீல் வினவும், 80-ம், சாக்ஷி விடையும்.

உனது பெயர் யாது ?

புத்திரேடனை.

தொழிலென்ன ?

மனுஷியர்களுக்குப் புத்திரர்கள் வேண்டுமென்ற எண்ணத்தை அதிகப்படுத்திக் கொண்டிருப்பது. அதனோடு என்னை நேசிப்பவர்களுக்கு எத்தனை புத்திரர்களிருந்தாலும் மேலும் புத்திரர்கள் வேண்டுமென்ற எண்

ணத்தையும், இருக்கின்ற புத்திரர்களைச் சந்தோஷிப்பிப்பதற்கும். அவர்களது இதானுசாரணார்த்தமாய்க் கூத்தாடுவதற்குமான புத்தியையுங் கொடுத்து அவ்வையே காரணமாகத் தேகத்தையிளைப்பித்து அவர்களை மரண மாக்குகின்றேன். இதுதான் எனது தொழில்.

இந்தப் பிரதிவாதிகள் தெரியுமா ?

தெரியும்.

அவர்கள் செய்த குற்றங்களில் யாதாவது தெரியுமா ?

ஒன்றுந் தெரியாது.

தெரியாததற்குக் காரணமென்ன ?

எனக்குச் சொந்த அறிவும் வல்லமையு மில்லை. அதுதான் காரணம்.

அறிவும் வல்லமையுமில்லாத நீ உனது செய்கைகளை எப்படிச் செய்கின்றாய் ?

அவைகளை என்னைக்கொண்டு யாரோ ஒரு பெரியவர் செய்விக்கின்றார்.

அவர் யாவர் ?

தெரியாது.

அவரிருக்கு மிடமாவது தெரியுமா ?

அதுவுந் தெரியாது.

வாதி வக்கீல் கிறாசில்லை.

கோர்ட்டார் வினவும், 80-ம், சாக்ஷி விடையும்.

வாக்குமூலம் வாசிக்கக் கேட்டாயா ?

கேட்டேன்.

சரிதானா?

ஆம்.

பிரதிவாதி பக்கம் 80-ம் சாக்ஷி புத்திரேடணை (கை—து.)

பிரதிவாதி பக்கம் 81-ம், சாக்ஷி

தாரேடணை சத்தியஞ்செய்து

தெரிவித்த வாக்குமூலம்.

சர்வ வல்லமையுள்ள தெய்வஞ் சாக்ஷியாக

நான் சொல்வதெல்லாம் உண்மை.

1-ம், பிரதிவாதி வக்கீல் வினாவும், 81-ம், சாக்ஷி விடையும்.

உனது பெயர் யாது?

தாரேடணை.

தொழிலென்ன?

ஆடவர்களுக்குப் பெண்களின் மீது எப்பொழுதும் மாறாத விருப்பத்தை யுண்டாக்குவது. அதனோடு அவர்களை அப்பெண்களுக்கு வசப்பட்டவர்களாக்கி அவர்களேவும் ஒவ்வொரு வேலையையும் அவர்களைக் கொண்டு செய்விப்பது. அன்றியும் அப்பெண்கள் மீதுள்ள மோகத்தை அவ்வாடவர்களது மரணபரியந்தம் அவர்களது மனதிற் குடியாக விருக்கும்படி செய்கின்றேன். இதுதான் எனது தொழில்.

இவ்வியாச்சியத்திற் பிரதிவாதிகளான ஆன்மாவுஞ் சரீரமுந் தெரியுமா?

தெரியும்.

இவ்வியாச்சிய சம்பந்தமான குற்றங்களில் யாதாவது தெரியுமா?

ஒன்றுந் தெரியாது.

தெரியாததற்குக் காரணமென்ன?

எனக்குச் சொந்த அறிவும், வல்லமையுமில்லை. அது தான் காரணம்.

அறிவும், வல்லமையு மில்லாத நீ உனது தொழில்களை எவ்வாறு செய்கின்றாய்?

அவற்றை என்னைக்கொண்டு யாரோ ஒருவர் நடத்துவிக்கின்றார்.

அவர் யாவர்?

தெரியாது.

எங்கே யிருக்கின்றார்?

அதுவுந் தெரியாது.

பெயரோ?

நான் கேள்விப்படவில்லை.

வாதி வக்கீல் கிறாசில்லை.

கோர்ட்டார் வினவும், 81-ம், சாக்ஷி விடையும்.

வாக்குமூலம் வாசிக்கக் கேட்டாயா?

கேட்டேன்.

சரிதானா?

ஆம்.

பிரதிவாதி பக்கம் 81-ம், சாக்ஷி தாரேடணை (கை—து.)

பிரதிவாதி பக்கம் 82, 83, 84-ம், சாக்ஷிகள்

வாத பித்த சிலேத்துமஞ் சத்தியஞ்செய்து தெரிவித்த வாக்குமூலம்.

சர்வ வல்லமையுள்ள தெய்வஞ் சாக்ஷியாக நான் சொல்வதெல்லாம் உண்மை.

பிரதிவாதி வக்கீல் வினவும், 82,83,84-ம், சாக்ஷி விடையும்.

உங்கள் பெயர்கள் யாவை ?

வாத பித்த சிலேத்துமங்கள்.

வேறு பெயரு முண்டா ?

உண்டு.

அது யாது ?

திரிதோஷம்.

இந்தப் பெயர் உங்களுக்கு ஏற்பட்ட தெதனால் ?

யாங்கள் மூன்று பெயரும் ஒருவரைவிட் டொருவர் பிரியாதிருப்பதனால்.

உங்களைத் தோஷமென்று சொல்லக் காரண மென்ன ?

யாங்கள் மனுஷியர்களுக்கு எப்பொழுதும் குணத்தைச் செய்யாமல் எங்களில் யாராவது அவர்களைத் தோஷப் படுத்திக் கொண்டிருப்பதனால் அவ்வாறு சொல்லுகின்றார்கள்பேயனும். இதுதான் அதற்குக்காரணம்.

நீங்கள் இருப்பது எங்கே ?

மனுஷியரது தேகமாகிய வீட்டில்.

நீங்கள் மூன்று பெயரும் ஒரே சிநேகர்களா ?

ஆம். ஆயினும் எங்களி லொவ்வொருவருக்கும் உன்னத ஸ்தான மிருப்பதனால் யாங்க ளொவ்வொருவரும் அந்த ஸ்தானத்தி லேறியிருப்பதற்கு இச்சிப்பது சகஜம்.

அப்படி யிச்சிப்பதனால் உங்களிற் கலகமுதலியன உண்டாகுமல்லவா ?

ஆம்.

அப்படி யுண்டானால் நீங்கள் செய்வது யாது?

யாங்கள் குடியிருக்கின்ற தேகமாகிய வீட்டை நாசமாக்குவது.

நீங்கள் இப்படிச் செய்வதனால் உங்களுக்கு ஜனங்கள் ஒரு பெயர் கொடுத்திருக்கின்றார்களல்லவா?

ஆம்.

அப் பெயர் யாது?

ஜனத் துவேஷிக ளென்பது.

உங்கள் தொழிலென்ன?

யாங்கள் எப்பொழுதும் மனுஷியர்களது தேகத்தில் நின்றும் நீங்காமல் உயர்ந்தும், தாழ்ந்தும், எதிர்த்தும், உருண்டும், புரண்டும், எங்களில் யாங்களே பலவாறு யுத்தஞ் செய்வதுபோலக் காட்டிக்கொண்டிருப்பது. அன்றியும் நாலாயிரத்து நானூற்று நாற்பத்தெட்டு வியாதிகளாகிய வீரர்கள் எங்களுக்குச் சைனியமாக எங்களோடு சேர்ந்திருக்கின்றார்கள். அவர்களில் யாராவது ஒருவர் தமது வல்லமையைக் காட்ட ஆரம்பித்தால் அப்பொழுதே அங்குத் தக்க வயித்தியர்கள் வரவேண்டும். வந்தாலும் அவர்களது மருந்துகள் நன்றாய் வேலை செய்வதுவரை அவ்வீரர் தமதுவல்லமையைக் காட்டாதிருக்க மாட்டார். ஒருவேளை அவர்களது மருந்து நல்ல வேலைசெய்தாலும் அந்தச் சமயத்திற்கே அவர் தமது வல்லமையைக் காட்டாமற் சற்று மறைந்து நிற்பார். சிலவேளை மருந்து கொடுக்கும் வயித்தியர்களைக்கூட அவர் நேரா யெதிர்ப்பார். அப்பொழுது அவர்களுக்கும் வேறு வயித்தியர்களது உதவி வேண்டியதா யிருக்கின்றது. அதனோடு யாங்கள் மூன்று பேர்க

ளும் மூவ்வித மூர்க்க சுபாவமுள்ளவர்களாக விருக்கின்றோம் எங்களில் ஒருவன் அக்கினி சம்பந்தமாகிய பித்த கோபத்தோடு சேர்ந்தவன். ஒருவன் வாயு சம்பந்தமாகிய வாத கோபத்தோடு சேர்ந்தவன். ஒருவன் தண்ணீர் சம்பந்தமாகிய சிலேத்தும கோபத்தோடு சேர்ந்தவன். இவ்வாறிருக்கின்ற எங்களுக்கு வரன்முறையாகச் செய்ய வேண்டிய அவுஷதங்களெல்லாவற்றையும் ஒப்பற்ற கடவுள் பல தானங்களிலுமுண்டாக்கி யிருக்கின்றார். அவைகளெல்லாவற்றையும் இவ்வுலக முழுவதையுங் கண்டறிந்த மகான்கள் தெரிந்து அவைகளை உபயோகிக்கும் முறைமைகளையும் இன்னதென்று தீர்மானித்திருக்கின்றார்கள். ஆபினும் எங்களது வல்லமையைய அவர்களாலோ மற்றவர்களோ, நினைத்த அப்பொழுதே மாற்றவோ, முழுவதும் நீக்கவோ, இயலவே யியலாது. எங்களது கோபத்தைக் காட்டுகின்ற ஓர் சலனக்குறியை மனுஷியர்களின் கைகளிற் பார்க்கலாம். நாடி சாஸ்திரமறிந்த பண்டிதர்கள் அதைத் தங்கள் கையினால் தொட்டு அறிந்து இப்போது பித்த நாடி ஓடுகின்றது வாத நாடி அடிக்கின்றது. சிலேத்தும நாடி உயர்கின்றதென்று சொல்லி அத்தேகத்தி னிடத்திருக்கின்ற தன்மையை அறிகின்றார்கள். அப்பொழுதும் எங்களது கோபமுஞ் சண்டையும் அதிகரிப்பதனால் அவ்வாறு பார்த்தறிந்த வயித்தியர்கள் கூடப் பயந்து விடுகின்றார்கள். அவ்வாறுள்ள எங்களை மிகவும் பணிந்து எப்பொழுதுஞ் சமாதானத்தோடு காப்பாற்றி வைத்துக்கொண்டிருப்பவர்கள் தங்களது சரீரங்களை அகால அபாயங்களுக்குக் கொடார்கள். அப்படியிருப்பது மிகவும் முடியாத காரியம். அப்

படி யிருப்பவர்களும் மிகவுஞ் சுருக்கம். இதுதான் எங்களது தொழில்.

இவ்வியாச்சியத்தைப்பற்றி யாதாவது உங்களுக்குத் தெரியுமா ?

ஒன்றுந் தெரியாது.

இந்தப் பிரதிவாதிகள் தெரியுமா ?

தெரியும்.

அவர்களைத் தெரிந்த நீங்கள் அவர்களது செய்கைகளில் ஒன்றுந் தெரியாதென்று சொன்னதற்குக் காரணம் யாது ?

எங்களுக்குப் பிறரது செய்கைகளை அறிவதற்கேது வான அறிவும் வல்லமையுமில்லை. அதுதான் காரணம்.

அறிவும் வல்லமையுமில்லாத நீங்கள் உங்களது செய்கைகளை எவ்வாறு செய்கின்றீர்கள் ?

அவைகளை யாதோ ஒரு மகா சத்தியிருந்து எங்களைக் கொண்டு நடத்துவிக்கின்றது.

அச் சத்தி யாது ?

தெரியாது.

அச் சத்தியின் பெயரென்ன ?

அதுவுந் தெரியாது.

வாதி வக்கீல் கிறுசில்லை.

கோர்ட்டார் வினவும், 82, 83, 84-ம், சாக்ஷிகள் விடையும்.

வாக்குமூலம் வாசிக்கக் கேட்டீர்களா ?

கேட்டோம்.

சரிதானா ?

ஆம்

பிரதிவாதி பக்கம் 82-ம், சாக்ஷி வாதம் (கை—து.)
,, ,, 83-ம், சாக்ஷி பித்தம் (கை—து.)
,, ,, 84-ம், சாக்ஷி சிலேத்துமம் (கை—து.)

பிரதிவாதி பக்கம் 85-ம், சாக்ஷி

ஆணவஞ் சத்தியஞ்செய்து

தெரிவித்த வாக்குமூலம்.

சர்வ வல்லமையுள்ள தெய்வஞ் சாக்ஷியாக

நான் சொல்வதெல்லாம் உண்மை.

1-ம், பிரதிவாதி வக்கீல் வினாவும், 85-ம், சாக்ஷி விடையும்.

உனது பெயர் யாது ?

ஆணவம்.

இதுவன்றி வேறு பெயர்களுமுண்டா ?

உண்டு.

அவை யாவை ?

அகங்கார முதலியன ?

உனது தொழிலென்ன ?

இவ்வுடம்பை "யான்" "எனது" எனக் கொண்டிருப்பது.

இந்த வியாச்சியத்திற் பிரதிவாதிகளான ஆன்மா, சரீரமாகிய இருவருந் தெரியுமா ?

தெரியும்.

அவர்கள் செய்த குற்றங்களில் யாதாவது தெரியுமா ?

ஒன்றுந் தெரியாது.

அப்படித் தெரியாதிருந்ததற்குக் காரணமென்ன?

தெரிந்துகொள்ளுவதற் கேதுவான அறிவும் வல்லமையும் என்னிடத்திலில்லை. அதுதான் காரணம்.

அறிவும் வல்லமையுமில்லாத நீ உனது தொழிலை எவ்வாறு செய்கின்றாய்?

அதை என்னைக்கொண்டு யாரோ ஒருவர் செய்விக்கின்றார்.

அவர் யாவர்?

தெரியாது.

அவர் பெயரென்ன?

நான் கேள்விப்படவில்லை.

அவர் எவ்விடத்தி லிருக்கின்றார்?

அதுவுந் தெரியாது.

வாதி வக்கீல் கிராசில்லை.

கோர்ட்டார் வினவும், 85-ம், சாக்ஷி விடையும்.

வாக்குமூலம் வாசிக்கக் கேட்டாயா?

கேட்டேன்.

சரிதானா?

ஆம்.

பிரதிவாதி பக்கம் 85-ம், சாக்ஷி ஆணவம் (கை—து.)

பிரதிவாதி பக்கம் 86-ம், சாக்ஷி

காமியஞ் சத்தியஞ்செய்து

தெரிவித்த வாக்குமூலம்.

சர்வ வல்லமையுள்ள தெய்வஞ் சாக்ஷியாக

நான் சொல்வதெல்லாம் உண்மை.

1-ம், பிரதிவாதி வக்கீல் வினவும், 86-ம், சாக்ஷி விடையும்.

உனது பெயர் யாது?

காமியம்.

தொழிலென்ன?

ஆசைக்கு மூலஸ்தானமா யிருப்பது. அன்றியும், "ஆசைக்களவில்லை" யென்றபடி அவ்வாசை எவ்வளவு அதிகரிக்கின்றதோ, அவ்வதிகரிப்பனைத்திற்கும் உறைவிடமாயிருந்து மனதையும் அதனோடு சேரச்செய்வது. இதுதான் எனது தொழில்.

இப்பிரதிவாதிக ளிருவருந் தெரியுமா?

தெரியும்.

இவ்வியாச்சிய சம்பந்தமான குற்றங்களில் யாதாவது தெரியுமா?

ஒன்றுந் தெரியாது.

அப்படித் தெரியாததற்குக் காரணமென்ன?

எனக்குத் தெரிந்துகொள்ளுவதற் காதாரமான அறிவும் வல்லமையு மில்லாமையே.

அறிவும் வல்லமையுமில்லாத நீ உனது தொழிலைச் சரிவரச் செய்வது அசாத்தியமல்லவா?

அல்ல.

அல்லவென்றதற்கு நியாயமென்ன?

எனது தொழிலை என்னைக்கொண்டு யாரோ ஒருவர் செய்விக்கின்றார் அதுதான் நியாயம்.

அவர் யாவர்?

தெரியாது.

அவ ரிருப்பிடம் எங்கே?

அதுவுந் தெரியாது.

பெயரோ ?

நான் கேள்விப்படவில்லை.

வாதி வக்கில் கிருசில்லை.

கோர்ட்டார் வினவும், 86-ம், சாக்ஷி விடையும்.

வாக்குமூலம் வாசிக்கக் கேட்டாயா ?

கேட்டேன்.

சரிதானா ?

ஆம்.

பிரதிவாதி பக்கம் 86-ம், சாக்ஷி காயியம் (கை—து:).

பிரதிவாதி பக்கம் 87-ம், சாக்ஷி

மாயை.

பிதிவாதி பக்கம் 87-ம், சாக்ஷியாகிய மாயை யென்பவள் கோர்ட்டில் வந் தேறினவுடன் அக்கோர்ட்டு முழுவதும் ஓர் நடுக்கமுண்டாயிற்று. அவளது கூந்தலோ ? மேகத்தை நிகர்த்தது. நெற்றி இளஞ்சந்திரனை நிகர்த்தது. புருவங்கள் வில்லை நிகர்த்தன. கண்கள் கரியவிடத்தை நிகர்த்தன காதுகள் வள்ளைத்தண்டை நிகர்த்தன. மூக்குச் சண்பகமலரை நிகர்த்தது. அதரங்கள் பவளத்தை நிகர்த்தன. பற்கள் முத்துகளை நிகர்த்தன. இனிய வார்த்தை அமுதத்தை நிகர்த்தது. முகம் பூரணச்சந்திரனை நிகர்த்தது. கழுத்துக் கமுகையொத்தது. தோள்கள் மூங்கிலையொத்தன. முன்கைகள் யாழை யொத்தன. உள்ளங்கைகள் காந்தண் மலரை யொத்தன. விரல்கள் கெளிற்றை யொத்தன. நகங்கள் கிளிமூக்கை யொத்தன. தனங்கள் மலையை யொத்தன. வயிற்றினி

டத்துள்ள மயிரினொழுங்கு எறும்பினொழுக்கை யொத்தது. இடை துடியை யொத்தன. தொடைகள் வாழைத்தண்டைப்போன்றன கணைக்கால்கள் வராலைப் போன்றன. பரடுகள் தராசைப்போன்றன. குதிங்கால்கள் பந்தைப்போன்றன. புறந்தாள்கள் ஆமையைப் போன்றன. விரல்கள் மணியின் குலத்தைப் போன்றன. பாதங்கள் தாமரை மலரைப் போன்றன. சாயல் மயிலை நிகர்த்தது. இவ்வித வடிவத்தையுடைய அவள் மானிடப்பெண்ணோ, தெய்வ மகளோ, நாகக்கன்னியோ, எனச்சந்தேகிக்குமாறு நின்றாள். அவ்வாறு நிற்பதைக்கண்ட மிஸ்டர், மாயாமய ஐயராகிய மாஜிஸ்திரேட்டவர்கள் சற்றுநேரம் ஒன்றுந் தோன்றாமல் தன்னை மறந்தவராயிருந்தார். நியாயஸ்தர்களான பஞ்சாயத்துக்காரர்களும் வக்கீல்களுந் திடுக்கிட்டுச் சரீரமுழுவதுந் துடிக்க, உணர்ச்சியற்று மதிமயங்கினார்கள். அங்குச் சூழ்ந்திருந்த யாவர்களும் செய்வதின்னதென்று தெரியாமல் சித்தப்பிரமை கொண்டார்கள். தங்களுக்கு கோர்ட்டாராற் கிடைக்கப் போகின்ற கொடிய தண்டனையைக்கூடப் பொருட்படுத்தாமற் பிரதிவாதிகளாகிய ஆன்மாவுஞ் சரீரமும் அம்மாயையைப் பார்த்து நடுங்கிப் புன்சிரிப்புக் கொள்ளாமலிருந்திலர். இவ்வாறு அரை நாழிகை நேரஞ் சென்றபின்னர் ஒவ்வொருவருந் தங்கள் தங்கள் சுய அறிவு வரப்பெற்றார்கள். அப்பொழுது.

(கோர்ட்டார் மாயையைப் பார்த்து)

நீ பெண்பாலாக விருப்பதனால் இந்தச் சாக்ஷிகளெல்லாரையும் விசாரணை செய்து தீர்ந்த பின்னர் உன்னை

விசாரிக்கின்றோம். அதுவரை நீ ஒரு மறைவான விட்டுத் திற்போய் நில்.

மாயை.

அப்படியே நின்றுகொள்ளுகின்றேன்.

பிரதிவாதி பக்கம் 88, 89, 90-ம், சாக்ஷிகளாகிய

சூரிய சந்திர அக்கினி சத்தியஞ்செய்து

தெரிவித்த வாக்குமூலம்.

சர்வ வல்லமையுள்ள தெய்வஞ் சாக்ஷியாக

நான் சொல்வதெல்லாம் உண்மை.

பிரதிவாதி வக்கீல் வினாவும், 88, 89, 90-ம், சாக்ஷி விடையும்.

உங்கள் பெயர் யாது?

மும்மண்டலம்.

அவற்றை விவரமாய்ச் சொல்லுங்கள்?

சூரிய மண்டலம், சந்திர மண்டலம், அக்கினி மண்டலமென்பன.

நீங்கள் மூன்றுபேரும் ஒரே சிநேகிதர்களா?

ஆம்.

உங்களது வாசஸ்தானம் யாது?

மனுஷியர்களது தேகம்.

அத்தேகத்தி லெவ்விடத்தி லிருக்கின்றீர்கள்?

சிரோமத்தியிற் சந்திரனும், இதயத்திற் சூரியனும், நாபியில் அக்கினியுமாக விருக்கின்றோம்.

உங்கள் தொழில் யாது?

மூலாதாரத்தில் நின்றுந் தோன்றிய பிராணவாயு எங்கள் மூன்றுபேரையுஞ் சுற்றிச் சஞ்சரிப்பதினால் மனுஷியர்கள் ஜீவனோடு நிலைத்திருக்கின்றார்கள். மும்

மண்டலங்களாகிய யாங்களே தலையையும் உடலையு மொன்ருக்கி வைத்துக்கொண் டிருக்கின்ருேம். ஆன்ம ஞான முடையவர்களுக்குத்தாம் எங்களது சரியான தொழி லின்னதென்று விளங்கா நிற்கும். இதுதான் எங்களது தொழில்.

இந்தப் பிரதிவாதிகள் தெயுமா ?

தெரியும்.

இவர்கள்செய்த குற்றங்களில் யாதாவதுதெரியுமா ?

ஒன்றுந் தெரியாது.

அது எதனுல் ?

எங்களுக்குச் சுய அறிவு இல்லாததனுல்.

அப்படியானுல் நீங்கள் உங்கள் தொழில்களைச் செய்வது எப்படி ?

அவற்றை யாரோ ஒருவர் எங்களைக்கொண்டு செய் விக்கின்ருர்கள்.

அவர் பெயரென்ன ?

தெரியாது

அவர் எங்கே யிருக்கின்ருர் ?

அதுவுந் தெரியாது.

வாதி வக்கீல் கிருசில்லை.

கோர்ட்டார் வினுவும், 88, 89, 90-ம், சாக்ஷிகள் விடையும்.

வாக்குமூலம் வாசிக்கக் கேட்டாயா ?

கேட்டேன்.

சரிதானு ?

ஆம்.

பிரதிவாதி பக்கம் 88-ம், சாக்ஷி சூரியன் (கை—து.)
,, ,, 89-ம், சாக்ஷி சந்திரன் (கை—து.)
,, ,, 90-ம், சாக்ஷி அக்கினி (கை—து.)

பிரதிவாதி பக்கம் 91-ம், சாக்ஷி
மூலாதாரஞ் சத்தியஞ்செய்து
தெரிவித்த வாக்குமூலம்.
சர்வ வல்லமையுள்ள தெய்வஞ் சாக்ஷியாக
நான் சொல்வதெல்லாம் உண்மை.

1-ம், பிரதிவாதி வக்கீல் வினவும், 91-ம், சாக்ஷி விடையும்

உனது பெயர் யாது?

மூலாதாரம்.

நீ இருப்பது எங்கே?

மனுஷியர்களது தேகத்தினிடத்துள்ள குதத்திற்குங் குய்யத்திற்கும் மத்தியிலிருக்கின்ற முக்கோணப்பீடத்தில்.

உனது நிறம் யாது?

நீலம்.

அத்தானத்தின் அதிதேவதை யாவர்?

கணபதி.

அவருக்கு அக்ஷரமென்ன?

"ஓம்" என்னும் பிரணவம்.

இந்தப் பிரதிவாதிகளிருவருந் தெரியுமா?

தெரியும்.

இவ்வியாச்சியத்தைப்பற்றி யாதாவது தெரியுமா?

ஒன்றுந் தெரியாது.

தெரியாததற்குக் காரணமென்ன?

தெரிந்துகொள்ளுவதற் கேதுவான அறிவும் வல்லமையுமில்லை. அதுதான் காரணம்.

வாதி வக்கீல் கிறுசில்லை.

கோர்ட்டார் வினவும், 91-ம், சாக்ஷி விடையும்.

வாக்குமூலம் வாசிக்கக் கேட்டாயா ?

கேட்டேன்.

சரிதானா ?

ஆம்.

பிரதிவாதி பக்கம் 91-ம், சாக்ஷி மூலாதாரம் (கை—து.)

பிரதிவாதி பக்கம் 92-ம், சாக்ஷி

சுவாதிட்டானஞ் சத்தியஞ்செய்து

தெரிவித்த வாக்குமூலம்.

சர்வ வல்லமையுள்ள தெய்வஞ் சாக்ஷியாக

நான சொல்வதெல்லாம் உண்மை.

1-ம், பிரதிவாதி வக்கீல் வினவும், 92-ம், சாக்ஷி விடையும்.

உனது பெயர் யாது ?

சுவாதிட்டானம்.

நீ இருப்பது எங்கே ?

மூலாதாரத்திற் கிரண்டங்குலத்திற்கு மேல்புறத்திருக்கின்ற அடிவயிற்றினது சதுர்க்கோணப்பீடத்தில்.

உனது நிறமென்ன ?

பொன்னிறம்.

அத்தானத்தின் அதிதேவதை யாவர் ?

பிரம்மா.

அவருக்கு அக்ஷரம் யாது ?

"ந" என்பது.

இவ்வியாச்சியத்திற் பிரதிவாதிகளான இருவருந் தெரியுமா ?

தெரியும்.

அவர்கள் செய்த குற்றங்கள் தெரியுமா ?

தெரியாது.

தெரியாதது எதனால் ?

தெரிந்துகொள்ளுவதற்கேதுவான அறிவும், வல்லமையுமில்லாததனால்.

வாதி வக்கீல் கிறுசில்லை

கோர்ட்டார் வினாவும், 92-ம், சாக்ஷி விடையும்.

வாக்குமூலம் வாசிக்கக் கேட்டாயா ?

கேட்டேன்.

சரிதானா ?

ஆம்.

பிரதிவாதி பக்கம் 92-ம், சாக்ஷி சுவாதிட்டானம் (கை—து.)

பிரதிவாதி பக்கம் 93-ம், சாக்ஷி

மணிபூரகஞ் சத்தியஞ்செய்து

தெரிவித்த வாக்குமூலம்.

சர்வ வல்லமையுள்ள தெய்வஞ் சாக்ஷியாக

நான் சொல்வதெல்லாம் உண்மை.

1-ம், பிரதிவாதி வக்கீல் வினாவும், 93-ம், சாக்ஷி விடையும்.

உனது பெயர் யாது ?

மணிபூரகம்

நீ இருப்பது எங்கே ?

சுவாதிட்டானத்திற்கு எட்டங்குலத்திற்கு மேல்பாலிருக்கின்ற நாபிஸ்தானத்தினது பிறைக்கோணத்தில்.

உனது நிறமென்ன ?

மரகதம்.

அத்தானத்திலிருந்து அரசு செலுத்துபவர் யாவர் ?

விட்டுணு.

அவருக்கு அக்ஷரமென்ன ?

"ம" என்பது.

இந்தப் பிரதிவாதிகள் தெரியுமா ?

தெரியும்.

அவர்கள் செய்த அக்கிரமமான செய்கைகளில் யாதாவது தெரியுமா ?

ஒன்றுந் தெரியாது.

அப்படித் தெரியாததற்குக் காரணமென்ன ?

எனக்குச் சொந்த அறிவோ வல்லமையோ இல்லை. அதுதான் காரணம்.

வாதி வக்கீல் கிருசில்லை.

கோர்ட்டார் வினவும், 93-ம், சாக்ஷி விடையும்.

வாக்குமூலம் வாசிக்கக் கேட்டாயா ?

கேட்டேன்.

சரிதானா ?

ஆம்.

பிரதிவாதி பக்கம் 93-ம், சாக்ஷி, மணிபூரகம் (கை—து.)

பிரதிவாதிபக்கம் 94-ம். சாக்ஷி

அனுகதஞ் சத்தியஞ்செய்து

தெரிவித்த வாக்குமூலம்.

சர்வ வல்லமையுள்ள தெய்வஞ் சாக்ஷியாக

நான் சொல்வதெல்லாம் உண்மை.

1-ம், பிரதிவாதி வக்கீல் வினவும், 94-ம், சாக்ஷி விடையும்.

உனது பெயர் யாது?

அநாகதம்.

நீ இருப்பது எங்கே?

மணிபூரகத்திற்குப் பத்தங்குலத்திற்கு மேல்பாலுள்ள இதய ஸ்தானத்தில்.

உன் நிறமென்ன?

படிகம்.

அத்தானத்திலிருந்து அரசு செய்பவர் யாவர்?

உருத்திரன்.

அவருக்கு அட்சரம் யாது?

"சி" என்பது.

இந்தப் பிரதிவாதிகளிருவருந் தெரியுமா?

தெரியும்.

அவர்கள் செய்த குற்றங்களில் யாதாவது தெரியுமா?

ஒன்றுந் தெரியாது.

அப்படித் தெரியாதிருந்ததற்குக் காரணமென்ன?

தெரிந்து கொள்ளுவதற் கேதுவான அறிவும், வல்லமையு மில்லை. அதுதான் காரணம்.

வாதி வக்கீல் கிறாசில்லை.

கோர்ட்டார் வினவும், 94-ம், சாக்ஷி விடையும்.

வாக்குமூலம் வாசிக்கக் கேட்டாயா?

கேட்டேன்.

சரிதானா ?

ஆம்.

பிரதிவாதி பக்கம் 94-ம், சாக்ஷி அனாகதம் (கை—து.)

பிரதிவாதி பக்கம் 95-ம், சாக்ஷி

விசுத்தி சத்தியஞ்செய்து

தெரிவித்த வாக்குமூலம்.

சர்வ வல்லமையுள்ள தெய்வஞ் சாக்ஷியாக

நான் சொல்வதெல்லாம் உண்மை.

1-ம், பிரதிவாதி வக்கீல் வினாவும், 95-ம், சாக்ஷி விடையும்.

உனது பெயர் யாது ?

விசுத்தி.

நீ இருப்பது எங்கே ?

அனாகதத்திற்குப் பத்தங்குலத்திற்கு மேற்பாலிருக்கும் அறுகோணமாகிய கண்ட ஸ்தானத்தில்.

உனது நிறமென்ன ?

மேகம்.

அவ்விடத்திருந்து அரசு செய்பவர் யாவர் ?

மகேச்சுரன்.

அவருக்கு அட்சரமென்ன ?

"வ" என்பது.

இந்தப் பிரதிவாதிகளாகிய ஆன்மாவுஞ் சரீரமுந் தெரியுமா ?

தெரியும்.

இவர்கள் செய்த குற்றங்களில் யாதாவது தெரியுமா ?

ஒன்றுந்தெரியாது.

அதற்குக் காரணமென்ன ?

தெரிந்து கொள்ளுவதற் காதாரமான அறிவோ வல்லமையோ என்னிடத்திலில்லை. அதுதான் காரணம்.

வாதி வக்கீல் கிருசில்லை.

கோர்ட்டார் வினவும், 95-ம், சாக்ஷி விடையும்.

வாக்குமூலம் வாசிக்கக் கேட்டாயா ?

கேட்டேன்.

சரிதானா ?

ஆம்.

பிரதிவாதி பக்கம் 95-ம், சாக்ஷி விசுத்தி (கை—ஆ.)

பிரதிவாதி பக்கம் 96-ம், சாக்ஷி

ஆஞ்ஞை சத்தியஞ்செய்து

தெரிவித்த வாக்குமூலம்.

சர்வ வல்லமையுள்ள தெய்வஞ் சாக்ஷியாக

நான் சொல்வதெல்லாம் உண்மை.

1-ம், பிரதிவாதி வக்கீல் வினவும், 96-ம், சாக்ஷி விடையும்.

உனது பெயர் யாது ?

ஆஞ்ஞை.

நீ இருப்பது எங்கே ?

விசுத்திக்குப் பன்னிரண் டங்குலத்திற்கு மேல்பாலிருக்கும் வட்ட வடிவமாகிய நெற்றியில்.

அத்தானத்தி லிருந்து அரசு செய்பவர் யாவர் ?

சதாசிவன்.

அவருக்கு அக்ஷரமென்ன ?

"ய" என்பது.

ஆதாரங்களாகிய நீங்கள் அறுவர்களுஞ் செய்யுந் தொழில் யாது ?

எங்களாற்றான் மனுஷியர்களது தேகம் நிலைத்து நின்று சகல தொழில்களையும் நிறைவேற்றுகின்றது. எங்களையன்றித் தேகமில்லாததனால் மனுஷியர்களே இல்லாமலாகின்றார்கள். மனுஷியர்களில்லாவிட்டால் இவ்வுலகமுமில்லை. ஆதலால் எங்களாற்றான் எல்லாம் நிலைத்திருக்கின்றன. இதுதான் எங்களது தொழில்.

உனக்கு இந்தப் பிரதிவாதிகளிருவருந் தெரியுமா ?

தெரியும்.

அவர்கள் செய்த குற்றங்களில் யாதாவது தெரியுமா?

ஒன்றுந் தெரியாது.

ஒன்றுந் தெரியாத நீ முற்கூறியபடி மற்ற ஆதாரங்களோடு சேர்ந்து உனது தொழிலைச் செய்வது எவ்வாறு ?

அது என்னாற் செய்யப்படுவதன்று, என்னைக்கொண்டு யாரோ ஒரு பெரியவர் செய்விக்கின்றார்.

அவர் யாவர் ?

தெரியாது

அவர் எங்கே யிருக்கின்றார் ?

அதுவுந் தெரியாது

அவர் பெயரென்ன ?

நான் கேள்விப்படவில்லை.

அவரை காணக்கூடுமா ?

காட்சிக்கு அதீதமானவரென்று கேள்வி.

வாதி வக்கீல் கிறாசில்லை.

கோர்ட்டார் வினவும், 96-ம், சாக்ஷி விடையும்.

வாக்குமூலம் வாசிக்கக் கேட்டாயா ?

கேட்டேன்.

சரிதானா ?

ஆம்.

பிரதிவாதி பக்கம் 96-ம், சாக்ஷி ஆஞ்ஞை (கை—து.)

ஹியறிங்.

வாதி பக்கம் வக்கீல்

ஞானச்சந்திரையரது விவாதம்.

இவ்வியாச்சியத்தில் வாதி பக்கம் 1-ம், 2-ம், சாக்ஷிகளாகிய காலன், சித்திரகுப்த னென்பவர்களது வாக்குமூலங்களால் வியாச்சியப்படியுள்ள குற்றங்களனைத்தும் 1-ம், 2-ம், பிரதிவாதிகளே செய்தார்களென்று வெள்ளிடை மலைபோல் விளங்குகின்றன. அதனோடு அப்பிரதிவாதிகளும் அக்குற்றத்தைச் சம்மதித்தே வாக்குமூலங் கொடுத்திருக்கின்றார்கள். ஆயினும் அவை நடப்பதற்குக்காரணம் 1-ம், பிரதிவாதிதானென 2-ம், பிரதிவாதியும், 2-ம், பிரதிவாதி தானென 1-ம் பிரதிவாதியுஞ் சொல்லித் தம்மில் தருக்கித்ததோடு அதற்காகத் தங்கள் பக்கம் மண் முதலிய 96-சாக்ஷிகளைக் குறிப்பிடவுஞ் செய்தார்கள். அக்குறிப்பின்படியே அவர்களையும் விசாரணை செய்ததில் அவர்களி லொருவரது வாக்குமூலத்தினாலாவது அக்குற்றஞ் செய்தவ ரின்னாரென்று வெளிப்படவில்லை. அதனால் அக்குற்றத்திற்கு இருவருமே உத்திரவாதியாக விருக்கின்றார்கள். ஆதலால் மகா கண்ணியமுள்ள கோர்ட்டார் மிகவும் நியாயமாக ஆலோசித்துக் குற்றவாளிகளாகிய

1-ம், 2-ம், பிரதிவாதிகளைத் தக்கபடி தண்டிக்க வேண்டு மென்று மிகவுந் தாழ்மையாய்க் கேட்டுக்கொள்ளுகின் றேன்.

1-ம் பிரதிவாதி வக்கீல்

சரசநாயகம் பிள்ளையினது விவாதம்.

பிரதிவாதிகள் பக்ஷமுள்ள சாக்ஷிகள் (96) பெயர் களுள் மாயை யென்பவள் நீங்கலாக மற்ற சாக்ஷிகள் (95) பெயர்களையும் இக்கோர்ட்டு முன்னர்ச் சத்தியமொழி வாங்கி விசாரணை செய்யப்பட்டது. அவர்களில் ஒருவரது வாக்குமூலத்திலாவது எனது பிரதிவாதியாகிய ஆன்மா இவ்வியாச்சியப்படி குற்றஞ் செய்ததாகவாவது குற்றஞ்செய்யப் பிரயத்தனப்பட்டதாகவாவது உருபகப் படவில்லை. மேலும், அவ்வான்மாவினது பரிசுத்தத்தைப் பற்றி ஆலோசித்தால் இவ்வியாச்சியத்தில் வாதி பக்கஞ் சாக்ஷிகளாகிய காலன், முதலானவர் இக்கோர்ட்டு முன் னிலையில் தெரிவித்த குற்ற கரங்களாகிய யாவும் செய்ய வல்லதோவென்று சந்தேகிக்க வேண்டியதாகவு மிருக் கின்றது. ஆதலால் மகா கண்ணியமுள்ள கோர்ட்டார் மிகவுந் தயவோடாலோசித்து எனது பிரதிவாதியாகிய ஆன்மாவை நிர்தோஷி யெனக் கண்டு இவ்வியாச்சியத் தில் நின்றும் விட்டுவிட வேண்டுமென்று மிகவுந் தாழ்மை யாய்க் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

2-ம், பிரதிவாதி வக்கீல்.

தத்துவவாதி யையரது விவாதம்.

பல தினங்களாக விசாரணை செய்யப்பட்ட சாக்ஷிக ளாகிய (96) பெயர்களதும் வாக்கு மூலங்களால் இவ்

வியாச்சிய சம்பந்தமான விஷயங்கள் யாவுங் கோர்ட்டா ருக்கு நிச்சயமாய்த் தெரிந்திருக்கலாம். அச்சாக்ஷி மொழிக ளெல்லாவற்றாலும் பிரதிவாதிகள் நிரபராதிக ளென்று வெளிப்பட்டதே யன்றிக் குற்றவாளிகளென்று சற்றும் வெளிப்பட வில்லை. எவ்வாறு பார்த்தாலும் "பிரபஞ்ச தர்ம" மென்னுஞ் சட்டப்படி எனது பிரதி வாதியாகிய சரீரம் நிர்த்தோஷி யென்பது யாதொரு களங்கமு மின்றி விளங்குகின்றது. இனி இந்தச் சாக்ஷிக ளது வாக்குமூலங்களால் எவ்விதப் பிரயோசனமும் ஏற் படுமென்று நான் நினைக்க வில்லை. பஞ்சாயத்துக்காரர் களது அபிப்பிராயங்கள் முக்கியம் அறிய வேண்டியதா கவே யிருக்கின்றன. அவர்களுக்கும் முற்கூறிய சாக்ஷிக ளது வாக்குமூலங்களாற் சரீரம் சுத்த நிர்த்தோஷியென்று தெரிந்திருக்கின்றது. ஆதலால் கோர்ட்டார் மிகவுந் தயவோடு யோசித்து எனது கக்ஷியாகிய 2-ம், பிரதி வாதியை இவ்வியாச்சியத்தில் நின்று மொழித்து நிரப ராதியாக விட்டுவிட வேண்டுமென்று மிகவும் பணிவாய் வேண்டிக் கொள்ளுகின்றேன்.

கோர்ட்டார்.

சேவகா! விசாரணை செய்யப்பட்ட சாக்ஷிகளுள் இன்னுஞ் சிலரைக்குறித்து எனக்குச்சில கேள்விகள் கேட்க வேண்டிய அவசிய மிருப்பதால் அவர்களைப்போய் விடா மல் ஒரு புறத்தில் ஒதுக்கமாய் நிற்கச் சொல்.

சேவகன்.

அவ்வாறே சொல்கின்றேன்.

கோர்ட்டார்.

பிரதிவாதிகளுக்கு இனி இக்கோர்ட்டின் முன்னிலையில் யாதாவது தெரிவிக்க வேண்டியதிருந்தால் அவர்களோ, அவர்களது பிரதி நிதிகளாகிய வக்கீல்களோ, அதி விரைவில் தெரிவித்துக் கொள்ளுவார்களாக.

1-ம், பிரதிவாதி வக்கீல்.

எனக்கு இக்கோர்ட்டின் முன்னிலையில் தெரிவிக்க வேண்டிய விஷயங்கள் அநந்தமிருக்கின்றன. கோர்ட்டார் அதற்காகச் சமயங் கொடுத்தால் அவைகளெல்லாவற்றையும் நியாயமாகவும் விவரமாகவுந் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

கோர்ட்டார்.

நீவிர் உமது கக்ஷிக்காக இக்கோர்ட்டின் முன்னிலையில் தெரிவிக்கும் எல்லா விஷயங்களையுங் கோர்ட்டிலிருந்து புத்தி பூர்வமாய்க் கேட்கப்படும். ஆதலால் அவைகளனைத்தையுஞ் சுருக்கமாகவும் விரைவாகவுந் தெரிவித்துக் கொள்வீராக.

1-ம், பிரதிவாதி வக்கீல்.

இவ்வியாச்சிய சம்பந்தமாக வாக்குமூலங் கொடுத்த சாக்ஷிகளிலொருவரும் இப்பிரதிவாதிகள் செய்த குற்றங்களிலொன்றையேனுந் தமது கண்களாறக் கண்டதாகச் சொல்லவில்லை. ஆனால் வியாச்சியப்படியுள்ள குற்றங்கள் யாவும் நடந்தது உண்மைதானென்று வாதி புறத்துச்

சாக்ஷிகளாலும் வேறு சில அநுமானங்களாலும் நிச்சயமாய் விளங்குகின்றன. இனி அவற்றைச் செய்தது இப்பிரதிவாதிகளுள் ஆன்மாவா, சரீரமா, என்று தான் யோசிக்க வேண்டியதாயிருக்கின்றது. அதற்காக அப்பிரதிவாதிகளுள் ஆதிவஸ்து வின்னதென்று நியாய வாயிலாக உரூபகப்பட்டால் அவ்வாதி வஸ்துவே குற்றவாளியென்று யாதொரு சந்தேகமுமின்றி விளங்காநிற்கும். இவ்விஷயத்தைப்பற்றிப் பிரதிவாதிகள் பக்கம் சாக்ஷி விசாரணைக்கு முன்னர் ஒரு சிறிய விவாதமும் நடந்ததுண்டு. ஆனால் உண்மையாக ஆதிவஸ்து சரீரந்தானென்பதற்குக் கொஞ்சமுந் தருக்கமில்லை. அதனோடு சரீரந்தான் ஆதியென்று வேதங்களும், புராணங்களும், பலமதங்களுங் கோஷிக்கின்றன. அவ்வாறுள்ள ஆதியஸ்துவான சரீரத்திற்காகத்தான் அநாதி வஸ்துவான இந்த ஆன்மா அதனோடு சேர்ந்து சஞ்சரிக்கின்றது. அதனாற் சரீரத்திற்காகவே ஆன்மா உண்டாயிற்றென்பது சுருதி, யுத்தி, அநுபவமாகிய மூன்றிற்கு மொத்திருக்கின்றது. கிறிஸ்து மதத்தோர் தெய்வமே ஆன்மாவெனவும், ஆதி மனுஷியரான ஆதாம் மண்ணினாற் சிருஷ்டிக்கப்பட்டாரெனவும், அப்பால் ஜீவ சுவாசம் அம்மண்ணினாற் சிருட்டிக்கப்பட்ட சரீரத்தின் மூக்கிலூதப்பட்டதெனவும், அதனால் அவர் உயிருள்ள மனுஷியராக எழும்பினாரெனவுஞ் சொல்லுகின்றார்கள். முகம்மதியர்களும் முதலாவது ஆண்டவன் ஆதமென்பவரைச் சிருட்டிக்கத் தேவாதிபரான ஜிபுரீலென்பவரைப் பூலோகத்திற் சென்று மண்ணெடுத்து வாருமென்றேவ, அவர் இப்பூமியின் கண்ணுள்ள திருமதினா வென்னுமூரினது பரிசுத்தமான ஒரு

தானத்திலிருந்து மண்ணெடுத்து வந்ததெனவும், அப்பால் அம்மண்ணினுல் ஆகமென்பவாது சரீரம் படைக்கப்பட்டதெனவும், அதனுள் உயிர் ஊதப்பட்டதெனவுஞ் சொல்லுகின்றார்கள். யசுர் வேதத்தினுள்ளவர்களெல்லாம், ஒரு காலத்தில் ஒன்றுசேர்ந்து ஒரு பெரிய யாகஞ் செய்தார்களெனவும், அந்த யாகத்திலிருந்து விராட்புருடனுண்டாயினனெனவும், அவனுல் ஜீவராசிகள் சிருட்டிக்கப்பட்டார்களெனவும், உயிர் பெற்றார்களெனவுந் தெரிகின்றன. இவ்வாறு பலவேறுபட்ட மதங்களாது தத்துவங்களைப் பற்றி நிச்சயமாய் ஆலோசிக்கின்ற காலத்தில் ஆன்மாவிற்காகச் சரீரஞ் சிருஷ்டிக்கப்பட்டதென் றெனவும், சரீரத்திற்காகவே ஆன்மா சிருஷ்டிக்கப்பட்டதெனவுங் கரதலாமலகம்போல் விளங்குகின்றன. அன்றியும் பிரதிவாதிகள் பக்கம் ஒன்றுமுதல் ஐந்துவரையுள்ள சாக்ஷிகளாகிய மண், தண்ணீர், நெருப்பு, காற்று, ஆகாயங்களைந்தும் இக்கோர்ட்டு முன்னர்க் கூறிய வாக்குமூலங்களாலும், பஞ்ச பூதங்களாலுருவான சரீரமே ஆதி வஸ்துவெனவும், அப்பால் அச்சரீரத்தில் ஆன்மா சேருவதால் அவ்வான்மா அநாதி வஸ்துவெனவுந் தெள்ளத் தெளியத் தெரிகின்றன. தனது சொந்த வேலைக்காக ஆன்மாவைத் தேடிக்கொண்ட ஆதி வஸ்துவாகிய சரீரம் அநாதி வஸ்துவாகிய ஆன்மாவைச் சன்மார்க்க நெறியில் நடத்தி மோட்சத்திற்கோ, துன்மார்க்க நெறியில் நடத்தி நரகத்திற்கோ, வேறு எவ்விடத்திற்கோ கொண்டுபோனுலும் அவ்வான்மா அச்சரீரத்திற்கு ஒரு கையாயுதமேயன்றி கருத்தாவாக மாட்டாது. சரீரந்தான் கருத்தாவாகின்றது ஆதலாற் சரீரமே குற்றவாளியென நிச்சயமாய்த் தெரிகின்றது.

பஞ்சாயத்தார்.

மிகவும் அழகிய ஒரு பெண்ணைச் சரீரத்தின் முகத்தினிடத்துள்ள கண்கள் கண்டால், கண்ட அவ்வளவிலேயே அப்பெண்மீது ஆன்மாவிற்கு இச்சை யுண்டாகின்றது. உடனே சரீரத்தின் தத்துவங்களாகிய பாதம், பாணி, உபஸ்தமென்பவைகள் அந்த இச்சா சாத்தியத்திற்கு வேண்டிய முயற்சிகளைச் செய்கின்றன. அப்பொழுது மனம், புத்தி, சித்தம், அகங்காரமாகிய நான்கும் தங்களின் அந்தக்கரணச் சேஷ்டைகளாற் சரீரத்தைப் பூரிப்பித்து ஆநந்திப்பிப்பதற்கு வேண்டிய முறைகளைச் செய்கின்றன. அப்பால், சரீரம் இரத்தத்தையும் ஆநந்தமயத்தையும் அதிகரிக்கச்செய்து பசியை அடக்கிச் சேர்க்கை செய்ய ஆரம்பிக்கின்றது. அதனாற் சரீரத்திற்கும், ஆன்மாவிற்கும் ஒரே காலத்தில் இன்பஞ் சனிக்கின்றது. ஆனால் இச்செய்கை பரஸ்திரீ கமனமென்னுங் குற்றத்திற்குட்பட்ட தென்பதற்கு யாதொரு சந்தேகமுமில்லை. இதற்குக் கருத்தா யாரென்று எவ்விதத்தில் தீர்மானப்படுத்துவது. முதலாவது, சரீரத்தினிடத்துள்ள கண்கள் பார்த்தன. இரண்டாவது, ஆன்மா விஷயத்திற்கு இச்சித்தது. அப்பால், அச்செய்கைகளைச் சரீரமும் நடத்திற்று இன்பத்தை இருவருஞ்சமமாக அனுபவித்தார்கள். ஆன்மா, சரீரமாகிய இருவரும் இவ்வாறு உட்பட்டிருப்பதனால் அவ்விருவரும் இவ்வியாச்சியத்திற் குற்றவாளிகளாகவிருக்கின்றார்கள். ஆதலால் பிரதிவாதிக ளிருவரையும் அவர்கள் செய்த குற்றத்திற்குத்தக்கவாறு தண்டிக்க வேண்டுமென்பதே எங்களது அபிப்பிராயம்.

கோர்ட்டார்.

மிகவும் அழகாகவும், எவ்வித வியாதியு மில்லாததாகவு மிருக்கின்ற சரீரத்தையுடைய ஒருவனது ஆன்மாவானது எல்லையில்லாத வியசனத்திற் காளாய் அளவற்ற கஷ்டங்களை அனுபவித்துக் கொண்டிருக்கின்றது. முழுவதும் புண்களாலும், சொறி சிரங்குகளாலும் பீடிக்கப்பட்டுத் துர்நாற்றத்தோடிருக்கின்ற சரீரத்தையுடைய ஒருவனது ஆன்மாவானது எவ்விதக் கவலையு மின்றி யாதொரு துன்பமு மற்றதாகப் பலவித இன்பத்தை அனுபவித்துக் கொண்டிருக்கின்றது. ஆதலால் ஆன்மா கஷ்டப்படுவதைப்பற்றிச் சரீரத்திற்கோ, சரீரங் கஷ்டப்படுவதைப்பற்றி ஆன்மாவிற்கோ, எவ்வித வியசனமு மேற்படுவதாகத் தெரியவில்லை. அவரவர்கள் அனுபவிக்கின்ற இன்ப துன்பங்களுக்கு அவரவர்களே யுரியவர்களாகின்றார்கள். பஞ்சாயத்துக் காரர்களது அபிப்ராயப்படி ஆன்மா, சரீரமாகிய இவர்க ளிருவரும் ஒன்று சேர்ந்தே பல காரியங்களிலு மேற்படுகின்றார்கள். அப்பொழுது சரீரத்தினால் ஆன்மா குற்றவாளி யாகமாட்டாதெனவும், ஆன்மாவினால் சரீரங் குற்றவாளி யாகமாட்டாதெனவும், நிச்சயமா யறியலாம். சரீரத்தினது இழி செய்கைகளால் ஆன்மா கெட்ட தெனவும், ஆன்மாவினது இழி செய்கைகளாற் சரீரங் கெட்ட தெனவும், இருவருஞ் சமமாக விருந்து கொண்டு தம்மில் ஒருவரை ஒருவர் குற்றவாளியாக்குவது தகாது இருவரது தன்மையையும் பற்றி யோசிக்கும்போது அவர்க ளிருவருமே குற்றவாளிகளாகவும், தண்டனைக் குரியவர்களாகவு மிருக்கின்றார்கள். அன்றியும், ஸ்திரீ சம்பந்தத்திற்குத் தகுதி

யில்லாத ஒரு சரீரத்தினது உட்புறந்து வியாபகமா யிருக்கின்ற ஓரான்மாவானது தனது மனக் கண்ணினால் ஒரு அழகிய பெண்ணைப்பார்த்து மாயையினது அந்த கார வலோற்காரத்தினல் இச்சித்து மோகிக்கவும், அம் மோக சாத்தியத்திற்குச் சரீரம் எவ்வித உதவியுஞ் செய்யா திருக்கவுஞ் செய்தால், அக்குற்றத்தைப் பற்றி விசாரணை செய்யும்பொழுது சரீரம் எவ்விதத் தண்டனைக்கு முள்ளாக மாட்டாது. ஆன்மாவே அப்பெண்ணை இச்சித்ததினல் அதுவே குற்றத்திற் காளாகின்றது. அவ்வாறே ஸ்திரீ சம்பந்தத்தை முற்றும் வேண்டா மென் றொழித்து நிர்ச் சிந்தையா யிருக்கின்ற ஒரு ஆன்மாவினது அழகிய சரீரத்தைப் பார்த்து மோக விகாரங் கொண்ட ஒரு பெண்ணானவள் அவ்வான்மாவினது சமீபத்தில் வந்து அதன் அழகிய சரீரத்தை வலுவந்தமாய்த் தனது தேகத்தோடு சேர்க்கில், அவ்வான்மா அறியாத வண்ணமே அச்சரீரத்திற் கோர்விதச் சலன முண்டாகின்றது. அச்சலனத்தினது ஆவேசத்தினல் அச்சரீரம் அவளோடு சம்பந்தப்படு மாயின் அதைப்பற்றி விசாரணை செய்யும் பொழுது ஆன்மா அக்குற்றத்திற் காளாக மாட்டாது. சரீரமே அச்செய்கைக் குடன் பட்டதனல் அதுவே குற்றத்திற் காளாகின்றது. ஆதலால் இப்பிரதிவாதிக ளிருவருஞ் செய்த குற்றங்களுக்கு இவர்களிருவருமே உத்தரவாதிகளா யிருக்கின்றார்கள்.

2-ம், பிரதிவாதி வக்கீல்.

ஆன்மா சரீரத்தை அடிமையாக்கி வைத்துக் கொண் டிருப்பதனல்.

கோர்ட்டார்.

என்ன ? சரீரம் ஆன்மாவிற் கடிமைப்பட் டிருக்கின்ற தென்று சொல்வது எவ்வாறு ? ஒரு விஷயத்தை வாயில் வந்த வண்ணஞ் சொன்னாற் போதுமா ? அதற்குப் போதுமான உதாரணங்களோடு சொல்லவேண்டாமா ? ஆதலால் நீவிரெடுத்துச் சொல்லப் போகும் விஷயங்க ளெல்லாவற்றையுந் தக்க உதாரணங்களோடுஞ் சொல்ல உத்தரவளித்திருக்கின்றேன்.

2-ம், பிரதிவாதி வக்கீல்.

ஆன்மாவே சரீரத்தை அடிமையாக்கி வைத்துக்கொ ண்டிருக்கின்ற தென்பதற்கு அநந்த நியாயங்களிருக் கின்றன. அவைகளெல்லாவற்றையும் இப்பொழுது தக்க உதாரணங்களோடுந் தெரிவித்துக் கொள்ளுகின்றேன். அவையாவன:— அநாதி வஸ்துவாக ஒவ்வொருவராலுங் கருதப்படுகின்ற ஆன்மாவானது பரத்தைத்தரிசிப்பதற்கு முன்னர் நால்வகை யோனி, எழுவகைத்தோற்றம், எண் பத்துநான்கு நூறாயிரம் ஜீவ பேதங்களில் மாறி மாறிப் பிறக்கவேண்டுமென்பதே ஒப்பற்ற கடவுளது தீர்மானம். அத்தீர்மானப்படியே அந்த எண்பத்து நான்கு நூறாயிர ஜீவ பேதங்களாய் மாறி மாறிப் பிறப்பதற்காக நியமிக்கப் பட்ட அநாதி வஸ்துவாகிய ஆன்மாவானது தானெடுத்த ஒவ்வொரு பிறப்பிலும் செய்த புண்ணிய பாவங்களுக்குத் தக்கபடி இன்ப துன்பங்களை அநுபவித்தற்காகவே மீண் டும் புனர் ஜன்மமெடுத்துத் தன்னிடத்துப் பற்றியிருக் கின்ற ஆணவ காமிய மாயை யென்னும் மும்மலங்களின் மலினத்தைப்போக்கி ஒவ்வொரு ஜன்மத்திலுந் தான்

பூரணமாக வெடுக்கின்ற காரண தேகத்தின் உப பலத்தால் சம்பூரணப் பிராப்தியை யடைந்து தன்னிற்றனே ஆதிமத்தியாந்த ரகிதோத்தம குணபராபரத்தோடுகலந்து நித்தியாநந்தப் பொருளாய் வாழ்வதற்கு நியமிக்கப்பட்டிருப்பதால் பாதைகளில் ஒவ்வொரு நாழிகை தூரத்திலும் நாட்டப்பட்டிருக்குஞ் சுமைதாங்கியை யொப்பாகிய சரீரத்தைக்கொண்டு ஒவ்வொரு ஜன்மத்திலும் சஞ்சிதச் சுமையின் பாரத்தை இலகுவாக்கிக் கொண்டு போக வேண்டியதா யிருக்கின்றது. அதனேடு ஆன்மாவிற்குச் சரீரம், சத்திரத்தை நிகர்த்திருக்கின்றது. இக்காரணங்களால் ஆன்மாவிற்குச் சரீரம் அடிமை யென்பதில் எவ்விதச் சந்தேகமுமில்லை. ஆதலால் வியாச்சியப்படியுள்ள குற்றத்திற்கு ஆன்மாவே உத்திரவாதியாகவேண்டும்.

1-ம், பிரதிவாதி வக்கீல்.

ஆன்மாவானது தன்னிற்றனைப் அண்டம், பை, வியர்வை, நிலமென்னும் நால்வகை யோனிகளால் வெளிப்பட்ட சுரர், நரர், விலங்கு, பறப்பன, ஊர்வன, நீர் வாழ்வன, தாவரமாகிய எழு பிறப்பில் ஒவ்வொரு பிறப்பிலு முண்டான எண்பத்துநான்கு நூறுயிர ஜீவ பேதங்களிலும் தனது மும்மலத்தின் வலுவிற் கேற்பப் போய்ப் போய் அவதரிக்குமென்பது ஒரு காலத்தும் நம்பத்தக்கதன்று. இந்து ஞானிகளில் அனேகர் "இறந்துபோன மானிடரினிப் பிறப்பதில்லை" என்று சொல்லியிருக்கின்ருர்கள். கிறிஸ்து மத சித்தாந்தத்தில் ஆதி மனுஷியனை "ஆதாமுக்குக் கடவுள் "நீ சாகவேண்டும்" என்றிட்ட சாபமானது யாவர்மீது மந்தகாரத்தைக் காட்டி எல்லாரையும்

பாவிகளாக்கினதால் அதற்காக யாவருஞ் சாகவேண்டு மெனவும், ஆதாமினாலுண்டான ஜன்ம கன்மத்திற்குச் சாவே பலனெனவும், ஒவ்வொருவரும் இப்பூமியின் கண் பிறந்து தத்தஞ் சித்தி புத்திகளாற் செய்யும் நன்மை தீமைகளுக்குப் பிரதிபலனாக யுகாந்தகாலத் தீர்ப்பினால் சுவர்க்க நரகமாகிய இரண்டிலொன்று கிடைக்குமென வும், அதற்காக ஒவ்வொரு ஆன்மாவும் அக்காலம்வரை எங்கேனும் ஓரிடத்திலிருக்க வேண்டுமெனவுஞ் சொல்லப் படுகின்றதே தவிரப் புனர் ஜன்மம் உண்டென்று ஓரி டத்திலுஞ் சொல்லப்படவில்லை. இப்புனர் ஜன்மமில்லை யென்பதைக் கிறிஸ்தவர்கள் மாத்திரமல்ல. முகம்மதியர் களும், யூதர்களு மொப்புக் கொள்ளுகின்றார்கள். இவ் வாறிருக்க 2-ம், பிரதிவாதியாகிய சரீரத்தின் வக்கீல் தமது புத்திக்கொத்த ஓர் கட்டுக் கதையை இக்கோர்ட்டார் முன்னர்க் கூறியதைப்பற்றி யான் மிகவும் ஆச்சரியப்படு கின்றேன். ஒவ்வொருவருக்கும் எழு பிறப்புண்டென்று சொல்வது சிறுவர்களுக்குக்கூட நகையை யுண்டாக்குமல் லவா ? அன்றியும், சரீரத்தைவிட ஆன்மா ஒருவிதத்தா லும் விசேடப்பட்டதன்றெனவும், ஆன்மாவிற்கு எழுபிறப் பில்லை யெனவுஞ் சொல்வதற்கு அநந்த நியாயங்களிருக் கின்றன. அவையாவன :—கடவுளின் சிருஷ்டி, ஸ்திதி, சங்காரமாகிய முத்தொழிற்குங் காரணமாகச் சாத்து விகம், இராசதம், தாமச மென்னு மூவிதக் குணங்க ளிருக்கின்றன. இம்முக்குணங்களிற் சாத்துவிகக் குணம், இரசோ குணமாகிய இவற்றின் விவகரிப்பாய் ஓர் மகத் துவ முண்டாயிற்று. அம்மகத்துவமே இலிங்கமாய்த் திரி ந்தது. அந்த இலிங்கத்திற்குச் சத்த முண்டாயிற்று, அப்

பால் அவ்விலிங்கந்தனது உருபத்தைவேறுபடுத்திப் பஞ்ச பூதங்களிலொன்றான மஞ்சள் நிறமாகிய ஆகாயமாய்ப் பிரிந்தது. அதில் நின்றே பச்சை நிறமாகிய வாயுவும், கரு நிறமாகிய தேயுவும், செம்மை நிறமாகிய அப்புவும், வெண்மை நிறமாகிய பிருதிவியு முண்டாயின. அவற்றில் நின்று மெய், வாய், கண், மூக்கு, செவியாகிய ஐம்பொறிகளோடு பலவடிவங்களுண்டாயின. அவ்வாறுண்டான பின்னரே அதற்கு ஆன்மா அளிக்கப்படுகின்றது. அதனாற் சரீரந்தான் ஆதி வஸ்துவாகின்றது. ஆதலால் ஆன்மா அழுன்றுமூன்று ஏழு ஜன்ம மெடுக்கின்ற தென்பது சுத்தப் பொய்யும் நம்பத் தகாததுமா யிருக்கின்றது.

2-ம், பிரதிவாதி வக்கீல்.

யாது கூறினீர்? மறுத்துஞ் சொல்லும்.

1-ம், பிரதிவாதி வக்கீல்.

சரீரமே ஆதி வஸ்துவாகையினால் இவ்வியாச்சிய சம்பந்தமான குற்றத்திற்கு அச்சரீரமே உத்தரவாதியாக வேண்டும்.

2-ம், பிரதிவாதி வக்கீல்.

நீவிர் நன்றாகச் சொன்னீர். சொன்னது மிகவும் விசேஷமா யிருக்கின்றது. இது உமது சொந்த யுத்தியா? அல்லது நியாயானுசரண மானதா? ஆன்மாவைப் பார்க்கினுஞ் சரீரமா முந்தினது? அதனோடு ஆன்மாவிற்குப் பிறப்பில்லை யென்றுஞ் சொல்லுகின்றீரே? இது மிகவும் நன்றாயிருக்கின்றது. ஆன்மாவே ஆதி வஸ்துவா யிருந்து

பஞ்சமகா பூதங்களையுஞ் சிருஷ்டித்து எல்லாவற்றையும் நடத்துகின்றதென்று சொல்லக் கூடாதா? பராபரத்தில் நின்றும் பரந்தோன்றிப் பரத்தில் நின்றுஞ் சிவந் தோன்றிச் சிவத்தில் நின்றுஞ் சத்தி தோன்றிச் சத்தியில் நின்றும் விந்து தோன்றி விந்துவில் நின்றும், நாதந் தோன்றி நாதத்தில் நின்றுஞ் சதாசிவன் தோன்றிச் சதாசிவனில் நின்றும் மகேசன் தோன்றி மகேசனில் நின்று முருத்திரன் தோன்றி யுருத்திரனில் நின்றும், விட்டுணு தோன்றி விட்டுணுவில் நின்றும், பிரமா தோன்றிப் பிரமாவில் நின்றும் ஆன்மாதோன்றிற்று. இவ்வாறு ஒன்றில் நின்று மொன்று தோன்றி முடிவா யுண்டா[illegible] ஆன்மாவில் நின்றும், பஞ்ச மகா பூதங்களுண்டாயினவேயல்லாமற் பூதங்களுக்குப் பின்னர் ஆன்மா உண்டாகவேயில்லை. இதுதானுண்மை. இவ்வாறுண்டான ஆன்மாவானது ஆணவத்தையே தனக்கு ஆபரணமாகக்கொண்டு மனோ வாக்குக் காயங்களினா லுண்டான கருமானுபவங் களுக்காகக் கடவுளால் எழுவகை நரகமென்று சொல்லப்பட்ட எழுவகை ஜன்மங்களில் தள்ளப்பட்டுப் பல துன்பத்தையடைகின்றது. ஆதலால் ஆன்மாவே காரண காரியமாய் நின்று நடத்துகின்ற சகல கிரிகைகளுக்குஞ் சரீர முத்தரவாதியாவது எவ்வாறு? மேலும் ஐந்தாம் வேதமென்று யாவராலுங் கூறப்படுகின்ற ஸ்ரீ மகா பாரதத்தினாலும் புனர் ஜன்ம மிருக்கின்றதென்று நிச்சயமாய்த் தெரிகின்றது. அதனோடு புனர் ஜன்ம முண்டென்று ஸ்தாபிப்பதற்கு யான் அநேக சாஸ்திரங்கள் கோர்ட்டார் முன்னிலையில் ஆஜராக்குகின்றேன். நிமிச் சக்கரவர்த்தி இராச்சிய பரிபாலனஞ்செய்து கொண்டிருக்கின்ற காலத்

தில் அவர் ஒரு யாகஞ் செய்ய வேண்டுமெனவும், அதற்குத் தமது குலகுருவாகிய வசிஷ்ட மகாமுனியே முன்னிலைச் சுட்டாக விருக்கவேண்டு மெனவுந் தம்முள் தீர்மானித்து அவ்விஷயத்தை அம்மகாமுனிவருக் கறிக்கையிட்டான். அவர் அப்பொழுது தாம் இந்திரனால் செய்யப்படும் ஓர் யாகத்திற்குப் போவதாகவும், போய்வந்தவுடன் அவ் யாகத்தைக் கூட விருந்து நிறைவேற்றுவதாகவும், அதுவரைப் பொறுக்க வேண்டு மென்பதாகவுஞ் சொல்லிப் போய்விட்டார். அதனால் நிமிச்சக்கரவர்த்தி மிகவுங் கோபாவேசனாப் அம்முனிவரது வார்த்தைகளை நிராகரித்து விட்டு வேறோர் முனிவனை அவ்யாகத்திற்குக் குருவாக நியமித்து அவ்யாகக் கிரியைகளைச் செய்து முடித்தான். அப்பால் வசிஷ்டமுனிவர் வந்து தம்மையொழித்து யாகஞ் செய்து நிறைவேற்றியதை யுணர்ந்து அடக்க முடியாத கோபாந்தகாரராகி அந்நிமிச் சக்கிரவர்த்திக்குச் சாபங் கொடுக்க, அச்சக்கரவர்த்தியும் அவருக்குச் சாபங்கொடுத்தான். அதனால் இருவருக்கும் ஜன்ம மெடுக்கவேண்டியதாக வந்தது. வசிஷ்ட மகாமுனி மித்திரவருணன்மாரது புத்திரராகப் பிறந்தார். அதனால் அவ்வசிஷ்ட மகாமுனிக்குப்புனர் ஜன்ம முண்டாயிற்றென்று விளங்குகின்றது நாரதர் ஒரு ஜென்மத்தில் பிரமாவினது தொடையிலும், வேறொரு ஜன்மத்தில் வேசியினது வயிற்றிலும் பிறந்து, அப்பால் காசிபனது புத்திரனாகவும், ஜன்ம மெடுத்தாரென்று பல கதைகள் நாம் கேள்விப்படுகின்றோம். அன்றியும் இப்பூமியின் கண் மனுஷியர்களைப் படைக்க வேண்டுமென்று தக்கன் செய்த முயற்சி

களுக்கு இடையூறுண்டாக்கினதினால் அவரை மறுபடியும் பெண்களது கருப்பத்தில் நின்றும் பூமியிற் பிறக்க வேண்டுமென்று அந்தத் தக்கன் சபிக்க, அப்பொழுது பிரமா சமாதானஞ் செய்ததினால் அந்தத் தக்கனது புத்திரியின் வயிற்றில் அப்பிரமாவினது புத்திரனாகப் பிறந்தாரல்லவா? அதனாலும் தேவ முனிவராகிய அங்காரதர் புனர் ஜன்ம மெடுத்தா ரென்பது களங்கமற விளங்குகின்றது. விட்டுணுவினது துவார பாலர்களான ஜய விஜயர்களுக்குஞ் சாபத்தினது கொடுமையால் இரணிய, இராவண, சிசுபாலர்களாக மூன்று ஜனனமெடுக்கவேண்டியதாக நேரிட்டதே. இதுவுஞ் சாஸ்திர சம்பந்தமல்லவா? இவைகளனைத்துந் தெரிந்திருந்தும் உடனே அவற்றை மறந்து "இறந்துபோன மானிடர் இனிப் பிறப்பதில்லை" என்று யாரோ ஒரு ஞானி கூறியது மாத்திரம் உமது ஞாபகத்தில் வந்தது மிகவும் விசேஷம். ஆனால் அதற்கும் யான் சமாதானஞ் சொல்லுகின்றேன். அதாவது இறந்துபோன ஒருவன் அதே சரீரத்தில் இன்னுமொரு ஜன்மமெடுக்க மாட்டானென்பதே. ஆனால் அதனோடு இன்னுமொருவகைப் பொருள் கூறலாம் அதாவது தெய்வத் தன்மையெனவும் மானுஷிகத் தன்மையெனவு மிருவகைத் தன்மைக ளிருக்கின்றன. இத்தன்மைக ளிரண்டும் ஒன்றோடொன்று ஒப்புரவானவைகள். மற்ற தன்மைகள் இவற்றோடு ஒப்புரவாகமாட்டா. அவைகள் அஞ்ஞானத் தன்மைகளென்று சொல்லப்படும். தெய்வீக மானுஷிகமாகிய இருதன்மைகளுமே மெய்ஞ்ஞானத் தன்மைகளாம். அவற்றுள் மானுஷிகத்தன்மை கிடைத்தவனுக்குத் தெய்வீகத்தன்மையும், இலகுவிற் கிடைக்

கும். அது கிடைக்கில் அவனுக்கு மரண ஜனனங்களுண் டாகமாட்டா. ஆதலால் மானுஷிகத்தன்மையை அடைந்த ஒருவன் தேகவியோகமானால் அவன் பிறக்கவுமாட்டான் இறக்கவுமாட்டான், அவன் தெய்வீக சம்பந்தனாகின் றான். அவ்வாறன்றி மானுஷிகத் தன்மையற்று இறந்து போகின்ற ஒருவன் அத்தன்மை தனக்குக் கிடைக்குமள வும் பிறந்திறந்து கொண்டிருக்க வேண்டியவனாகின்றான். இதனாலும் எழு பிறப்புண்டென்று நிச்சயமா யுரூபகமா கின்றது. ஆதலால் இவ்வியாச்சிய சம்பந்தமான குற்றங் களுக்கு ஆன்மாவே உத்தரவாதியென்று தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

1-ம், பிரதிவாதி வக்கீல்.

ஆன்மாவிற்கு எழு பிறப்புண்டென்பதை நீவிர் மாத் திரம் உண்மையென்று நம்பிக்கொண்டாற் போதுமா? எனக்கும் கோர்ட்டாருக்கும் இப்பிரபஞ்சத்திலுள்ளவர்க ளுக்கும் அதில் நம்பிக்கை யுண்டாக வேண்டாமா, ஆத லால் அதற்குப் பிரத்தியேகமான பல மேற்கோள்கள் வேண்டியதாக விருக்கின்றன. கண்டுங் கேட்டு மறியாத ஒரு விஷயத்தை ஒருவன் சொல்வதானால் அதன் உண் மைத் தன்மையை நுட்பமாய் வெளிப்படுத்துவதற்குப் போதுமான அறி குறிகளுள்ள உரூபகங்கள் காட்டுதல் வேண்டும். அது கிடக்கட்டும். எழு பிறப்புண்டென்று உண்மையாகவுஞ் சூட்சமமாகவும் நம்புகின்ற நீவிர் யான் கேட்குஞ் சில வினாக்கட்கு விடை சொல்லுவீராக. அவை யாவன:—ஒரு ஆன்மாவானது யாதோ ஒரு பிறப்பிற் பிறந்து அந்தப் பிறப்பின் ஜீவிய கால முழுவதும் அச்

சரீரத்தோடிருந்து அப்பால் அதன் அந்திய காலத்தில் தான் பெற்றிருந்த அச்சரீரத்தை விட்டுவிட்டு அகன்று செல்லுமாயின் அது வேறொரு யோனிவழியாய் வேறொரு ஜன்ம மெடுக்கவேண்டும். அல்லது வேறொரு தானத்தில் தங்கி யிருத்தல்வேண்டும். அப்படி யிருப்பதை நம்புவதில் எவ்விதக் கெடுதியுமில்லை. ஆனால் அப்படி இருப்பவற்றை யே இந்து சாஸ்திரோத்தமாய் அறியப்பட்ட தென்புலத் தாரென்று கூறும் நமது சொந்த ஜனங்களாகிய பிதிர்தே வதைகளெனவும், அவைகளியாவும் ஓரிடத்தில் தங்கியிருக் கின்றன வெனவும், அந்த இடந் தென்திசையிலிருக்கின்ற எமலோக மெனவும், அவைகளுக்குக் காவலா யிருப்பவன் எமதருமராஜ னெனவும், அவ்வெமதரும ராஜனது அடைக்கலத்தால் அவைகள் சுகமாயிருக்கின்றன வென வும், அவைகள் வருடத்திற் கொருமுறை பூமியிலிருக் கின்ற மனுஷியர்களோடு சந்திப்பதற்காக விடப்படுகின் றன வெனவும், அம்முறைகளில் மனுஷியர்கள் திதியென வும், திவசமெனவுஞ்சொல்லி அவைகளை வழிப்பட்டு வருகின்றார்க ளெனவும், பிரத்தியட்சமாகத் தெரிகின் றன. அவ்வாறிருக்க, இறந்து போன ஆன்மாக்கள் மற்ற யோனிகளிற் போய்ப் பிறக்கின்றன வென்றால் அப்பிதுர் தேவதைகளென்பவை யாவை? அந்த ஆன்மா யாது? நமது அனுபவத்திற்கூட இறந்தவர்கள் சொப்பன ரூப மாகவந்து நமக்கு காட்சி தரப் பார்க்கின்றோம். அவர்க ளது ஆன்மாக்கள் யாவை? அவை மறுத்தும், மறுத்தும் புதிதாகப் படைக்கப் பட்டவைகளா? அல்லவே. ஆத லால் உண்மையாக மறுபிறப்பில்லை யெனவும், வியாச்சியப் படியுள்ள குற்றத்திற்குச் சரீரமே உத்தரவாதி யெனவுந் தெரிவித்துக் கொள்கின்றேன்

---

2 ம், பிரதிவாதி வக்கீல்.

1-ம், பிரதிவாதியாகிய ஆன்மாவின் வக்கீலினது விவாதங்கள் மிகவும் நன்று யிருக்கின்றன. ஆதலால் கோர்ட்டார் தயவுசெய்து எனது விடைகளையும், வினாக்களையும் கோட்டுச் செய்யும் பொருட்டு வேண்டிக் கொள்ளுகின்றேன்.

கோர்ட்டார்.

அஃதிருக்கட்டும். நீவிர் அவரது வினாக்களுக்கு விடை சொல்வீராக.

2-ம், பிரதிவாதி வக்கீல்.

கடவுளோடு ஐக்கியமாகும் சாயுச்சிய பதவி முக்தியம் ஒவ்வொரு ஆன்மாவிற்கும் வேண்டியதா யிருப்பதனால் அத்தன்மைக்குப் பாத்திரமாகின்ற செய்கைகளை முற்றுஞ் செய்வதற்கு முன்னர் அவ்வான்மா எக்காரணத்தினாலாவது தானெடுத்திருந்த சரீரத்தை விட்டுவிடில், அது பிதுர் லோக முதலிய லோகங்களிற் சேர்க்கப்பட்டுக் கடவுளின் சற்பங்கையை எதிர் பார்த்துக் கொண்டிருக்கும். அப்பொழுது அவ்வான்மாவினது கன்மங்கள் குறையும் பொருட்டுப் பூமியிலிருக்கின்ற அதன் சந்ததியார்கள் சிரார்த்த முதலிய பிதுர் பூஜை நடத்துவார்கள். ஆயினும் சாயுச்சிய பதவி கிடைப்பதுவரை அவ்வான்மா மறுத்தும் ஜன்மமாகிய சக்கரத்திலேயே கிடந்து சுழல வேண்டியதா யிருக்கின்றது. ஆதலால் மறு ஜன்ம முண்டெனவும் வியாச்சியப்படியுள்ள குற்றத்திற்கு ஆன்மாவே-

உத்தரவாதி யெனவும் உண்மையாய்த் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

1-ம், பிரதிவாதி வக்கீல்.

நீவிர் முன்னர்க் கூறியபடி தேவர், மக்கள், விலங்கு, பறப்பன, நீர் வாழ்வன, தாவரங்களாகிய இந்த ஏழு பிறப்பில் எப்பிறப்பிலாவது ஆன்மா போய்ச் சேர்கின்றதென்று கருதலாமல்லவா? அவற்றுள் முதலாவது பிறப்பாகிய தேவர்களுக்கும் மற்ற ஜீவ ஜாலங்களுக்கும் இந்திரிய ஓட்டம் ஒன்றே பேதமாய்த் தெரிகின்றது. மனுஷியர்களுக்கு அவ்விந்திரிய ஓட்டத்தினால், பிணி, மூப்பு, சாக்காடென்னுந் தன்மைகளுண்டாகின்றன. தேவர்களுக்கோ? அவ்விந்திரிய ஓட்டமு மில்லை. அதனாலுண்டாகும் பிணி, மூப்பு, சாக்காடாகிய தன்மைகளுமில்லை. ஆதலால் தேவர்களை மனுஷியர்களோடு ஒப்பாக்குவதில் யாதொரு பிரயோசனமுமில்லை. மனுஷியர் முதலாக மற்ற ஜீவராசிகளியாவும் சப்த, ஸ்பரிச, ரூப, ரச, கந்தமென்னும் ஐம்புலன்களால் வெவ்வேறு பிரித்தறிய வேண்டியனவா யிருக்கின்றன. அவற்றுள் புல், பூடு முதலிய தாவரங்கள் வாயுவைப் பரிசித்தறிகின்ற ஓரறிவுடையன வெனவும், நத்தை, சங்கு முதலியன பரிசத்தை யறிவதோடு நாவினால் இரசத்தையு மறிகின்ற ஈரறிவுடையன வெனவும், எறும்பு, கறையான் முதலியன பரிச ரசங்களை அறிவதோடு மூக்கினாற் கந்தத்தையு மறிகின்ற மூவறிவுடையன வெனவும், தும்பி, வண்டு முதலியன ஸ்பரிச ரச கந்தங்களை யறிவதோடு கண்ணினால் உருவத்தையு மறிகின்ற நான்கறிவுடையன வெனவும், மனுஷியர்,

மிருக முதலியன ஸ்பரிச ரச கந்த ரூபங்களை யறிவதோடு காதுகளினாற் சத்தத்தையுமறிகின்ற ஐயறிவுடையனவெனவும், பல சாஸ்திரங்கள் முறையிடுகின்றன. அவ்வாறிருக்கத் தனது கன்ம பலத்தினால் மனுஷிய ஜன்மத்தை விட்டுச் சிங்க ரூபமாய்ப் பிறந்த ஒருவன் அப்பிறப்பில் தனது பசிக்காக ஐயறிவுடைய மற்ற மிருகங்களைக் கொன்று தின்று அதனாற் பாவத்தைச் சம்பாதிக்கின்றான். அதன் பின் அவன் மாடாகப் பிறந்தானென்று ஒப்புக்கொள்வோம். அப்பொழுதும் அவன் தனது பசிக்காக ஓரறிவுடைய புற்களைப் புசித்து அதனாலும் பாவத்தைச் சம்பாதிக்கின்றான் அப்பால் அவன் அந்த ஜன்மத்தை யொழித்து ஓர்வகைப் பக்ஷியாய்ப் பிறந்தானென்று வைத்துக் கொள்வோம் அப்பொழுதும் தனது பசிக்காக மூவறிவுடைய பூச்சிகளைப் புசித்து அதனாலும் பாவத்தைச் சம்பாதிக்கின்றான். அதன் பின் ஓர்வகை எறும்பாகப் பிறந்தானென்று சொல்லுவோம். அந்தக் காலத்திலும் ஓரறிவுடைய தானியங்களைப் புசித்து அதனாலும் பாவத்தைச் சம்பாதிக்கின்றான். முடிவிற் புல்லாகப் பிறந்தானென்று விசாரித்தாலும் அவன் அந்தப் புல்லுருவமாக விருந்து தமது இரட்சிப்பிற்காகச் சத்தம், ஸ்பரிசம், உருவம், இரச மென்னும் நால்வகை அறிவோடு கூடிய பஞ்ச பூதியங்களி லொன்றான தண்ணீரைப் புசித்து அதனாலும் பாவத்தைச் சம்பாதிக்கின்றான். ஆகையால் இவ்வளவு ஜன்மங்களிலும் அவ்வாறு பாவத்தைச் செய்து கொண்டு வந்த அவன் கடைசி ஜன்மமாகிய ஏழாவது பிறப்பில் தாவரமாய்ப் பிறந்தும் அப்பிறப்பிற் கூடத் தண்ணீரை யருந்தி அதனாற் பாவத்தைச் சம்

பாதிக்கில், அப்பால் அந்தப் பாவத்திற்காக அவன் எடுக்க வேண்டிய ஜென்மம் யாது? ஒரு வேளை எட்டாவதும் ஒரு பிறப்புள்ளதா? அன்றியும், மனுஷியர்கள் கொலை, களவு முதலிய கெட்ட செய்கைகளைச் செய்வது பாவமெனவும், அந்தப் பாவங்களுக்காகத் தான் மறு ஜன்மமெனவுங் கூறி யிருப்பதால் ஒருவன் ஓரறிவுயிராகிய தானியங்களைப் புசிப்பதும், கீரை, கிழங்கு, காய், கனி முதலியவைகளைப் புசிப்பதுங் கொலை பாதகமாகின்றதல்லவா? தூரத் திருஷ்டிக் கண்ணாடியினால் பார்த்தால் ஓர் துளி நீரிற் பரமாணுப் பிரமாணமான எத்தனையோ? கிருமிகளிருப்பதாக நமது பார்வைக்குத் தெரிகின்றன. அக்கிருமிகளையுடைய நீரைத்தான் மனுஷியர்கள் ஒவ்வொரு நாளும் அருந்தி அதனால் அக்கிருமிகளைக்கொல்லுகின்றார்கள். ஆகாரப் பொருள்களுக்காக அவர்கள் அவ்வாறு அவைகளைக் கொன்று ஒவ்வொரு நாளும் பல கொலைக் குற்றங்களை யேற்றுக் கொள்ளுவார்களானால் வேறு எவ்விதத்தினாற்றான் மறு ஜன்மத்திற்குப் போகாத கிரியைகளைச் செய்து முடிப்பார்கள். ஆதலால் மறு ஜென்ம மில்லை யெனவும், வியாச்சியப்படியுள்ள குற்றத்திற்கு 2-ம, பிரதிவாதியாகிய சரீரமே உத்திரவாதி யெனவுந் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்,

---

2-ம், பிரதிவாதி வக்கீல்.

ஒவ்வொரு ஆன்மாக்களும் தத்தம் பிறப்பின் றன்மைக் கேற்றவாறு ஓரறிவுயிரையோ? ஈரறி வுயிரையோ? மூவறி வுயிரையோ? நாலறி வுயிரையோ? ஐயறி வுயிரையோ? தமக்கு ஆதார மாக்கிக் கொள்ளுகின்றன.

அதனால் அவ்வான்மாக்கள் ஒவ்வொரு ஜன்மத்திலும் பாவத்தையே மேலும் மேலும் சம்பாதித்துக் கொள்ளு கின்றனவன்றி ஒழித்த பாட்டைக் காணவில்லையென்று சற்றுங் கருதவே கூடாது. ஒரு ஜன்மத்தில் மனுஷிய னாக அவதரித்த ஓரான்மா அந்த ஜன்மத்தின் கணிதப் படி அளவற்ற ஆகாரப் பொருள்களைப் புசித்ததாக வைத் துக்கொள்ளுவோம். அதனால் அவ்வான்மாவிற்கு எவ் விதப் பாவமும் நேரிடாது. ஏனெனில், அவ்வான்மா புசித்த அப்பொருள்க ளனைத்தும் தாங்களெடுத்த ஒவ் வொரு ஜன்மத்திலும் அவ்வான்வாவைத் தங்களுக்கு ஆகாரமாய்ப் புசித்திருக்கலாம் "என்னை யடித்தான் யானு மடித்தேன்" என்றபடிப் பூர்வ ஜன்மத்தில் அவைகள் அவ்வான்மாவைப் புசித்ததினாலேயே இந்த ஜன்மத்தில் அவ்வான்மாவிற்கு அவைகளைப் புசிக்க நேர்ந்தது. அவ்வாறு ஒவ்வொரு ஆன்மாக்களும் அந்தந்த ஜன்மங்களில் ஒன்றை யொன்று கொலை செய்தும் ஒன் றை யொன்று உபத்திரவித்தும், ஒன்றையொன்று வஞ் சித்தும், ஒன்றை யொன்று அபகரித்தும், ஒன்றை யொன்று ஆட்கொண்டுஞ் செய்த பாவங்களுக்குத் தக்க படி அடுத்த ஜன்மங்களில் அப்பாவ நிவாரணஞ் செய்து கொண்டிருக்கின்றன. அது சித்தியானவுடன் அவை களுக்கு ஞானவிருத்தி யுண்டாகின்றது. அதனாற் பசி, தாகம் முதலியவைகள் அவற்றை விட்டு மகலுகின்றன. அப்பொழுது அவைகள் ஒப்பற்ற பராபரப் பொருளைத் தரிசித்து அதனோடு இலயமாகின்றன. அவ்வாறு பாவ நிவாரணஞ் செய்து புண்ணியத்தைச் சம்பாதித்துக் கொள்ள வேண்டுமேயன்றி அவைகளுக்கு வேறு மார்க்

கங்கள் யாதொன்று மில்லை. ஆன்மாக்கள் எப்பொழுதும் பாவ சாகரத்திற்கிடந் தழுன்றுகொண் டிருப்பதனால் அவைகளுக்கு மறு ஜனன முண்டு. ஆதலால் இவ் வியாச்சியப்படி யுள்ள குற்றத்திற்கு அவ்வான்மாவே உத்தரவாதி யெனத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

1-ம், பிரதிவாதி வக்கீல்

ஜன்மத்தினாற்றான் ஒருவனுக்குப் பாவம் நீங்குவதா யிருந்தால் வேதங்களிற் சொல்லப்பட்ட இரௌரவ முதலிய நரகங்களேன்? ஒவ்வொருவருந் தமது மனம், வாக்கு, காயமாகிய இவைகளாற் செய்கின்ற பாவங்களனைத்தையு மனுபவித்துத் தொலைப்பதற்காக வல்லவா? அந்த இரௌரவம், மகாரௌரவம், தாமிசிரம், அந்ததாமிசிரம், கும்பிபாகம், கால சூத்திரம், அசிபத்திராரணியம், சூகரமுகம், அந்தகூபம், கிருமிபோசனம், சந்தம்சம், சத்தசூர்மி, வச்சிரகண்டம், சலவசதி, வைதருணி, பூயோதம், தப்தலோகம், பிரோதாதம், விசாசனம், இலாலாபக்ஷம், சாரமேயோதனம், அவீச்சிரய பாசனம், க்ஷாரகர்த்தமம், இரக்ஷோகணபோஜனம், சூலப்பிரோதம், தந்தசூகம், நிரோதனம், பரியாவருத்தனம், சூசி முகமாகிய இருபத்தெட்டு நரகங்கள் ஈசுவர சித்தத்தால் அமைக்கப்பட்டு அவைகளை ஆட்சிசெய்வதற்காக எமதரும ராஜாவை நியமிக்கப்பட் டிருக்கின்றது. யான் என்னும் அகங்காரத்தோடு ஒன்றையும் பொருட்படுத்தாமல் திரிகின்ற ஆணவப் பேயர்களைப் பிடித்துக் காலதூதர்கள் பாசத்தாற் கட்டி இழுத்துக்கொண்டு வந்து அவற்றுள் முதன்மையான இரௌரவ மென்னும் நரகத்திற்

போட்டு வேதனைப் படுத்துகின்றார்கள். யான் தெரியுமா?
எனது வன்மைகளை நீ அறிவாயா? இவை யாவும் எனது
சொந்தப் பொருள்களே. யான்றான் யாவரிலும் மேலா
னவனென்னும் அகம்பாவத்தோடு பூத துரோகஞ் செய்து
தமது குடும்பத்தை மாத்திரங் காப்பாற்றிப் பிறருக்கு
எவ்வித உதவியுஞ் செய்யாமற் காலங்கழித்து வருகின்ற
புருடர்கள் மகா ரௌரவ மென்னும் நரகத்திற் கொண்டு
போய்த் தள்ளப்படுகின்றார்கள். அவர்கள் அந்நரகத்திற்
கிடந்து அளவற்ற காலம் அநந்த துன்பங்களை அநுபவிக்
கின்றார்கள். அத்துன்பத்தைப் பற்றி விவரமாய்ச் சொல்
லுவதற்கு ஒருவராலும் முடியாது. அன்னியரது பொருள்
மனைவி முதலானவர்களை வலோத்காரமாய் அபகரிக்கின்ற
சண்டாளர்களைப் பிடித்து வந்து தாமிசிரமென்னும் நரகத்
தில் தள்ளி எவ்வளவுந் தயையில்லாது வதைக்கின்றார்கள்.
அங்கே அவர்கள் பார்ப்பதற்கு மிகவும் அச்சத்தைத்
தரத்தக்க அந்த எமகால தூதர்கள் அடிக்கின்ற தண்டா
யுதத்தின் அடிகளாலும், தண்ணீர்த் தாகத்தாலும், மிக்க
பசியினாலும் அதிகக் கஷ்டப்பட்டு அடிக்கடி நினைவின்றித்
தம்மை மறந்து இடை யிடையே ஞாபக முடையோர்க
ளாகத் தெளிந்து அப்பொழுதுந் தாகத்தால் தளர்ந்து
ஆசையினால் ஆதியிற் செய்த கெட்ட செய்கைகளைச் சிந்
தித்து அவற்றிற்கு முடிவு நேரிடும் வரை கிடந்து வேத
னைப்பட வேண்டியதா யிருக்கின்றது. கொலை செய்து
அபகரிக்கின்ற பாதகர்கள் அந்த தாமிசிர மென்னும்
நரகத்தில் தள்ளப்படுகின்றார்கள். அங்கே அவர்கள் தாமி
சிர நரகத்திற் கிடப்பவர்கள் அநுபவிக்குந் துன்பத்தைப்
பார்க்கிலும் அதிகத் துன்பம் அநுபவிக்க வேண்டியதா

யிருக்கின்றது. சரீரத்தை மாத்திரங் காப்பாற்றுவதற்
காகக் கொஞ்சமுந் தயையின்றிப் பறவை, விலங்கு
முதலிய ஜீவ ஜாலங்களை உபத்திரவித்துக் கொன்று தின்
னுகின்ற புருஷர்கள் கும்பிபாகமென்னும் பெருநரகத்திற்
கொண்டுபோய்த் தள்ளப்பட்டு அந்நகரத்திலுள்ள செம்
புப் பாத்திரங்களிற் கொதிக்கும்படிக் காய்ச்சிய நெய்யில்
தூக்கிப் போடப்பட்டு மாறி மாறிப் பொரிக்கப்படுகின்றார்
கள். அதனால் அவர்கள் படுங்கஷ்டத்திற்குக் கணக்கில்லை.
அக்கஷ்டம் அவர்களுக்கு மாறாமல் அநந்த காலம் அங்கே
யிருந்துகொண்டே யிருக்கின்றது. எப்பொழுதும் பிதா
மாதாக்களை உபத்திரவித்துக்கொண்டிருக்கிற புருடர்கள்
காலசூத்திரமென்னும் நரகத்திற் கொண்டுபோய்த்தள்ளப்
படுகின்றார்கள். அந்நரகத்தினது சமாச்சாரம் நினைத்தாற்
கூடப் பயங்கரத்தைத்தரத்தக்கதா யிருக்கின்றது. அந்நர
கம் பதினாயிரங்காதம விஸ்தாரமுள்ள தாம்பிரத் தகட்டி
னாற் செய்யப்பட்ட தளத்தையுடையது. மேலே சூரியனது
வெப்பத்தாலும், கீழே மேனோக்கிப் பற்றி யெரிகின்ற அக்
கினியினது சூட்டாலும் அதிற் கிடப்பவர்கள் பொறுக்க
முடியாத துன்பத்தைக் கொண்டு கிடப்பதற்கும் இருப்ப
தற்கும் நடப்பதற்கும் முடியாமல் உருண்டும் புரண்டுஞ்
சரிந்தும் தாங்கள் செய்த கன்மத்திற்குத் தக்கபடி துன்
பத்தை அனுபவிக்கின்றார்கள். அவர்கள் அப்படி அனுப
விக்கின்ற துன்பமும், அதற்குரிய காலமும் எல்லையற்றன.
குற்றஞ் செய்யாத மற்றவர்களை உபத்திரவிக்கின்ற பிரபுக்
களுந் தலைவர்களுஞ் சூகரமுக மென்னும் நகரத்தில் தள்
ளப்படுகின்றார்கள். வருணாச்சிரம தருமங்களை நிராகரித்து
நடக்கின்ற துட்டர்கள் அசிபத்திர வனமென்னும் நர

கத்தில் தள்ளப்படுகின்றார்கள். ஜீவப் பிராணிகளை உபத்திரவிக்கின்ற பாவிகள் அந்த கூபாக்கிய மென்னும் நரகத்தில் தள்ளப்படுகின்றார்கள் போசனப் பொருள்களை ஒருவருக்குங் கொடாமல் தாம் மாத்திரமுண்டு சந்தோஷிக்கின்ற வன்னெஞ்சக் கள்ளர்கள் கிருமிப் போஜனமென்னும் நரகத்தில் தள்ளப்படுகின்றார்கள். மகான்களது பொருள்களை வலுவந்தமாய் அபகரிக்கின்ற பாதகர்கள் சத்தங்கிச மென்னும் நரகத்தில் தள்ளப்படுகின்றார்கள். அவர்கள் அங்குள்ள வெப்பத்தினால் வேவதோடு கத்தி, வாள் முதலிய ஆயுதங்களாற் குத்தப்பட்டும், வெட்டப்பட்டும் வேதனைப்படுகின்றார்கள். வியபிசாரஞ்செய்த காமிகள் வச்சிரகண்ட சன்மலியென்னும் நரகத்தில் தள்ளப்படுவதோடு அங்குள்ள அக்கினி மயமாகிய இரும்புப் பாவைகளாற் கட்டி ஆலிங்கனஞ்செய்யப்பட்டு முன்னனுபவித்த சுகத்திற்கு இப்பொழுது சுகம் எவ்வாறிருக்கின்றதென்று கேட்கப்படுகின்றார்கள். இராச நீதியை மறந்து குடிகளை வேதனைப்படுத்துகின்ற அரசர்கள் வைதருணியென்னும் நரகத்தில் தள்ளப்படுகின்றார்கள். அவர்கள் அங்கே தாங்கள் செய்த வேதனைக்குக் கோடிப்பங்கதிகமாகப் பற்பல கொடிய ஜந்துக்களாற் கடிக்கப்பட்டு அவற்றின் மல மூத்திர முதலியவைகளை உண்டு பல துன்பங்களை அனுபவிக்கின்றார்கள். அவ்வாறு ஒவ்வொருவரும் அவரவர்கள் செய்த பாவத்திற்குத் தக்கபடி அவரவர்களுக்கென்று நியமிக்கப்பட்ட நரகங்களிற் கிடந்து பற்பல துன்பங்களை அனுபவிக்கின்றார்கள். அப்படி அனுபவிக்கின்ற அவர்கள் மறுத்தும் பூமியில் எவ்வாறு பிறப்பார்கள். பிறக்கமாட்டார்கள். ஆதலால் மறு பிறப்பில்லை

யெனவும், இவ்வியாச்சியப்படியுள்ள குற்றத்திற்கு ஆன்மாவே உத்தரவாதியெனவுந் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

2-ம், பிரதிவாதி வக்கீல்.

ஒவ்வொருவருக்கும் அவரவரது பாவத்திற்குத் தக்கபடி மூவிதத் தண்டனைகள் நியமிக்கப்பட்டிருக்கின்றன. அவைகள் ஆதி தெய்வீகம், ஆதி பௌதீகம், ஆதி ஆத்மீக மென்பன. ஒரு குழந்தை முதலாவது வயிற்றினிடத்துக் கருவாய்த்தரித்து அவயவங்க ளியாவும் பூரணப்பட்டு ஆறுவது மாத முதல் பத்தாவது மாதம்வரை வயிற்றினிடத்துள்ள இரத்தம் மல முதலியவைகளி லுருண்டு புரண்டு கிடந்து அவற்றோடு வியாபித்து வருகின்ற வாயுவை உச்சுவாச நிச்சுவாசஞ் செய்து அங்குமிங்கும் புரளுவதற்குக் கைகால்களை நீட்டி முடக்குவதற்கும் மார்க்கமின்றிப் பரிதபித்துக் கரண விஷயாதிகளில் மனதைச்செலுத்திச் சுகிப்பதற்குஞ் சத்தியற்று முடிவிற் பத்தாவது மாதம் பிரசவவேதனையால் வருந்தித் தப்பித்தவறி வெளியில் வந்து, வந்த கஷ்டங்களைப்பொறுக்கமுடியாமல் அழுகின்றது. அதுவே ஆதி தெய்வீகம். அந்த ஆதி தெய்வீகத் தண்டனையை அனுபவித்து இப்பிரபஞ்சத்தில் மானுஷிய வடிவத்தோடு பிறந்த அக்குழந்தை ஈ, எறும்பு, அரணை, பாம்பு, பல்லி முதலிய விஷ ஜந்துக்களாலும்; கரடி, சிங்கம், புலி, யானை முதலிய துஷ்ட மிருகங்களாலும், பாஷாணம், அபினி, கஞ்சா முதலிய விஷத் திரவியங்களாலும், துப்பாக்கி, ஈட்டி, வாள், வேல், குந்த முதலிய ஆயுதங்களாலும்; மருந்தீடு, சதி முதலிய தந்திரங்க

ளாலும், இடி விழ்ச்சி, மின்னற் பாய்தல், சுவரிடிதல், பூகம்ப முண்டாதல் முதலிய அபாயங்களாலும் நேரிடு கின்ற பயங்கரமான பற்பல விபத்துகளனைத்திற்கு முட் பட்டு வருந்துகின்றது. அதுவே ஆதி பௌதீகம். ஒவ் வொரு ஆன்மாவும், ஸ்தூல தேகத்தோடிருந்து செய்த பாவங்களுக்காக அத்தூல தேகத்தை விடுத்தது முதல் வேறொரு தூல தேகத்திற் போய்ப் புகும் வரை இடை யிலுள்ள காலங்களில் அளவற்ற துன்பங்களை அனுபவிக் கின்றது அதுவே ஆதி ஆத்மீகம். அப்படி அனுபவிக் கின்ற துன்பங்களையே நரக வேதனையென அவற்றை இரு பத்தெட்டாகப்பிரித்து அவ்விருபத்தெட்டிற்கும் இரௌர வாதி இருபத்தெட்டு நரகங்களெனப் பெயரிட்டு வியாச முனிவரால் எழுதப்பட்ட பல சாஸ்திரங்களில் அவர் குறிப்பிட்டிருக்கின்றார். முற்கூறியவாறு ஸ்தூலதேகத் தை விட்டு வேறொரு ஸ்தூலதேகத்தை எடுப்பதற்கிடை யிலுள்ள காலங்களில் அவ்வான்மா அனுபவிக்கின்ற கஷ் டங்களால் அதன் பாவங்களனைத்தும் நீங்கி அதுபரிசுத்த மாய் விடுகின்றதென்று ஒருவரும் நினைக்கக் கூடாது. சூக்கும தேகத்தோடு கூடி இரௌரவாதி நரகங்களில் அனுபவித்த கஷ்டங்களேயல்லாமல் எஞ்சிய பாவத்தை வேறொரு ஸ்தூல தேகமெடுத்து அந்த ஸ்தூல தேகத்தி லுங் கூன், குருடு, செவிடு, நொண்டி, சப்பாணி, ஊமை முதலிய அங்க பங்கங்களாலும், குஷ்ட முதலிய பல வியாதிகளாலும், அனுபவித்துத் தீர்க்கவேண்டியதாயிருக் கின்றது. அதனாலும் அப்பாவம் முழுவதுந் தீர்ந்துவிட்ட தென்று நினைக்கக் கூடாது. மறுபடியும் அந்தந்த ஜன் மங்களில் என்னென்ன பாவங்கள் செய்கின்றதோ, அப்

பாவத்திற்குத் தக்கபடி மறுமையிலும் மறு ஜன்மத்தி லும் கஷ்டங்கள் அனுபவிக்கவேண்டியதா யிருக்கின்றன. அவ்வாறு ஜன்மங்கள் தோறும் ஆன்மாக்கள் தம்மைத் தா மறிவது வரை துன்பங்களை அனுபவிக்கவேண்டுமென் பது நிச்சயமான காரியம். ஆதலால் அப்படி அனுபவிப் பதற்காக மறு ஜனன முண்டெனவும், வியாச்சியப்படி யுள்ள குற்றத்திற்கு ஆன்மாவே உத்தரவாதி யெனவுந் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

1-ம், பிரதிவாதி வக்கீல்.

மனுஷியர்க ளிறந்ததின் பின்னர் அவர்களது சரீரத் தில் நின்றும் வேறுபட்ட ஆன்மாக்களிற் சில தத்தங்கன் மத்திற்கேற்ற ஜன்மங்களாய்ப்போய்ப் பிறக்காமற் காளி, கூளி, மாடன், சாத்தன் குறளி முதலிய அசுத்த ஆவிக ளென நாமம் பூண்டு இப்பிரபஞ்சத்தினது பலவிடங்களி லும் அலைந்து திரிந்து அனேகரை உபத்திரவித்து வரு கின்றன. இறந்துபோன சரீரத்திலுள்ள ஆன்மாக்கள் மறு ஜன்மமெடுக்கின்றன வென்பது உண்மையாயின் அவைகள் அவ்வாறு யாதொரு ஆதரவுமின்றிச் சுற்றித் திரிவதற்குக் காரணம் யாது? அவ்வாறு வடிவங்கொண்ட ஆன்மாக்களது சத்தத்தையும், வடிவத்தையும் யாங்கள் கண்ணாரக் கண்டோமென்று சொல்லுவதற்கு இப்பொழு தும் அனேகர் சித்தமாயிருக்கின்றார்கள். அன்றியும், சிலர் அவற்றிற் சிலவற்றை மந்திரத்தாலுஞ் சக்கரத்தா லும் வரவழைத்துப் பூசை, பலி முதலிய சோடசோபசா ரங்கள் செய்து வசியப்படுத்திப் பின்னால் அவற்றைக்கொ

ண்டு மாரணம், பேதன முதலிய பல துஷ்டச் செய்கைக ளைச் செய்துவருகின்றார்கள். அவ்வாறே கிறிஸ்துவர்களி லும் மோலாக்கு, ஓரஸ், சாத்தான், அஸ்ஸாயேல் ஜின் முதலிய அனேகப் பைசாசங்க ளிருப்பதாகவும், அப்பை சாச விஷயத்திற் கைதேர்ந்த மாந்திரிகர்க ளனேகர் யூதர் களி லிருந்ததாகவும், அவர் தங்களிடத்து வசியப்பட்டி ருந்த பைசாசங்களி னுதவியினால் இறந்துபோன அனேக ரது வடிவங்களைப் பிறருக்குக்காட்டி அதனால் மிக்க பொ ருள் சம்பாதித்து வந்ததாகவும் பல சமாச்சாரங்களிருக் கின்றன. அவைகளனைத்தையும் பற்றி ஆலோசிக்குமிடத் துப் பைசாசங்க ளிருக்கின்றனவென்றே விளங்குகின்றது. ஆன்மாக்களே அவ்வாறு பைசாசங்களா யிருக்குமாயின் அவ்வான்மாக்கள் மற்ற சரீரங்களிற் போய்ப் புகுவது எவ் வாறு? ஆதலால் மறு ஜன்மமில்லை யெனவும், வியாச் சியப்படியுள்ள குற்றத்திற்குச் சரீரமே உத்தரவாதியென வுந் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

2-ம், பிரதிவாதி வக்கீல்.

நீவிர் சொல்லியவாறு காளி, கூளி, ஜின் முதலிய பல பைசாசங்களும் அசுத்த ஆவிகளு முண்டென்பதற்கு எவ்விதச் சந்தேகமுந் தடையுமில்லை. அவைகளை மூடர் கள் பூசித்து வணங்கி வருகின்றார்க ளென்பது முண்மை தான். அவைகளைக்கொண்டு கன்மிகளாகிய சில மாந்திரீ கர்கள் இயந்திரம், சக்கர முதலியவைகள் செய்து ஓம், சுவாஹா என்னு மெழுத்துக்களுக்கிடையில் அந்தந்தப் பைசாசங்களுக்குத் தக்க வருணனைகளைச் சேர்த்து மந்திரங்க ளுண்டாக்கிப் பூமாலைகளாலோ? துளசி மாலை

களாலோ? உருக்கள் ஐந்தைச் சுடலைக்கரு, ஐங்கோலக்கரு, ஐங்காய்க்கரு முதலிய கருக்களாற் சக்கரத்தின து மத்தியிற் சத்ராதி முதலானவர்களது நாமங்களை வரைந்து அதின் மீதிருந்து மாரணம், பேதன முதலிய துஷ்டச் செய்கைகளைச் செய்து வருகின்றார்க ளென்பது முண்மைதான். ஆனாற் புனர் ஜனன மென ஒன்றிருக்கில் அவ்வாறு அவ்வான்மாக்கள் பைசாசங்களாக அலைந்து திரியவேண்டிய காரணம் யாது? என்பதே உமது கேள்வி. அதைப்பற்றி மறுத்தும் மறுத்துஞ் சொல்வதில் எவ்விதப் பிரயோசனமு மில்லை. ஆன்மாக்கள் தங்கள் ஜாதகப்படியுள்ள ஜீவிதகால முடிவதற்கு முன்னர்த் தங்களது சரீரத்தை எவ்விதக் காரணத்தினாலாவது விட்டுவிட்டால் அவ்வான்மாக்கள் முற்கூறியவாறு பைசாசங்களாகித் தங்களது கால வரையறை வரைச் சூக்ஷ்ம தேகத்தோடு தங்கள் வடிவத்தையுஞ் சத்தத்தையுஞ் சில வேளைகளிற் சிலருக்குக் காட்டி எங்கும் அலைந்து திரிந்து அக்கால வரையறை தீர்ந்தால் மறு ஜென்மத்தைத் தேடிக் கொள்ளுகின்றன. ஆதலால் மறு ஜன்ம முண்டெனவும், வியாச்சியப்படியுள்ள குற்றத்திற்கு ஆன்மாவே உத்தரவாதி யெனவுந் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

1-ம, பிரதிவாதி வக்கீல்.

ஆன்மா அகண்டமன்றிக் கண்டமன்று. அகண்டமென்பது எவ்விடத்தும் வியாபகமா யிருப்பது. கண்டமென்பது ஓரிடத்திருப்பது போல் மற்றவிடத்தில்லாதிருப்பது. அகண்ட மென்பதை ஆகாயத்தோடும், கண்ட

மென்பதை சரீரத்தோடும் உவமானப் படுத்தலாம். ஆகாயமென்பது ஒன்றுமில்லாத வெட்டவெளி. அவ்வாகாயமென்னுஞ் சூனிய தானத்தை நாம் எவ்விடத்தும் பார்க்கலாம். காற்றி னிடத்தும் அக்காற்றை நீக்கிப் பரிசோதித்தால் அங்கு மிருக்கின்றது அஃதில்லாதவிட மொன்றுமில்லை. ஆனாற் சரீரமோ அவ்விதமன்று. காசியி லிருக்கின்ற ஒரு சரீரத்தைக் கன்னியா குமரியிலும், கன்னியா குமரியி லிருக்கின்ற ஒரு சரீரத்தைக் காசியிலுந் தேடினால் அவை அங்கு அகப்படா. ஆகலால் ஆகாயத்தைப்போல எவ்விடத்தும் வியாபித்திருக்கின்ற ஆன்மாவானது ஓரிடத்திருக்கின்றது; ஓரிடத்தில்லை யென்று சொல்லுவதற்கு மார்க்கமில்லை. எவ்விடத்தும் நிறைந்திருக்கின்றது. அவ்வாறிருக்கின்ற ஆன்மாவானது ஒரு சரீரத்தை விட்டும் நீங்கினால் மறுத்தும் நீங்கியவாறே வேறொரு சரீரத்திற் போய்ப் புகுந்து கருமத்திற்குத்தக்கவாறு இப்பிரபஞ்சத்தின்கண் அவதரிக்கின்றதென்று சொல்வது எவ்வாறு? உதாரணமாக கடாகாயத்திற்கும், மகாகாயத்திற்குமுள்ள பேதத்தைப் பற்றிச்சற்று ஆலோசிப்போம். குயவனால் மண்ணாற் செய்யப்பட்டதும் உருண்டை வடிவமுள்ளதுமான ஒரு கடத்தினது உட்புறத்திருக்கின்றதெதுவோ அதுவே வெளிப்புறத்துமிருக்கின்றது. ஆனால் உட்புறத் திருப்பதற்குக் கடாகாயமெனவும், வெளிப்புறத் திருப்பதற்கு மகா காயமெனவும் பெயர் சொல்லுகின்றார்கள். ஆயினும் அவ்விரு ஆகாயத்திற்கும் யாதொரு வித்தியாசமுமில்லை. அக்கடத்தையுடைத்தால் அதனுட்புறத்திருந்த ஆகாயம் மகா காயத்தோடு கலந்து விடுகின்றது மறுத்தும்

அதை ஒரு கடத்தினது உட்புறத்துச் சேர்ப்பது முடியாத காரியம். முன் உடைந்த அக் கடமிருந்த விடத்திற்றானே வேறொரு கடத்தை வைத்தாலும் அதனுள் நிறைகின்ற ஆகாயமானது முன்னுடைந்த கடத்திலிருந்து வேறுபட்ட ஆகாயந்தா னென்பதற்கு யாதொரு நியாயத்தையுங் காணவில்லை அன்றியும், சமுத்திரத்தில் நின்றும் ஒருவன் ஒரு கை நிறைய நீரை அள்ளினனென்று வைத்துக்கொள்வோம். அந்நீரை மறுபடியும் அச்சமுத்திரத்தில் விட்டுவிட்டு அவன் மீண்டும் முன்னரள்ளிய நீரை அள்ளுவதற்குப் பிரயத்தனப்பட்டால், அது முடியுமா? முடியாதே. அதைப்போல ஆன்மாவானது எண்பத்துநான்கு நூறாயிர ஜீவ பேதங்களிலும் அவற்றின் யோனி பேதங்களிலுந் தனித்தனி நிற்பதாகக் காணப்பட்டாலும், எல்லாம் சரீரத்தை விடுகின்ற அவசரத்தில் ஒன்றாகவே சேர்ந்து கொள்ளுகின்றன. சேர்ந்த பின்னர் அதற்குப் பிரிவினை கிடையாது. அரூபமும் அகண்டமுமானதனால் அப்படிச் சேராமலிருப்பதற்கும் மார்க்கமில்லை எல்லா ஆன்மாக்களும் அகண்டமென்றால் அவைகளெல்லாவற்றையுங் கொண்டிருக்குந் தானம் யாது? எண்பத்துநான்கு நூறாயிரம் ஆன்மாக்களென்றால் அக்கணக்கு எங்கே யிருக்கின்றது. எல்லாம் ஒன்றே அதனால் அதை எண்ணுவது எவ்வாறு? பிரத்தியேகம் பிரித்து அதற்கு ஜனன மிருக்கின்றதென்பது எவ்விதம்? ஆதலால் மறு பிறப்பில்லையெனவும், வியாச்சியப்படியுள்ள குற்றத்திற்கு ஆன்மாவே உத்தரவாதியெனவுந் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

2-ம், பிரதிவாதி வக்கீல்.

ஆன்மா அகண்டமன்றிக் கண்டமன்று. அஃதில்லாத இடமுமில்லை. அது சாராத பொருளுமில்லை. அது காணுத காட்சியுமில்லை. அவைகளியாவு முண்மைதான். ஆனலும் அது சரீரத்தினலல்லாமல் தன்னைத்தா னறிவதற்குச் சக்தியுடையதன்று. அகண்ட தத்துவத்தின்படி அத னிடத்து மகத்துவத்திற்கு மகத்துவமாகவும் அணுவிற் கணுவாகவு மிருக்கின்ற வல்லமையுண்டு. ஆயினும் அது ஆணவ முதலிய மும்மலங்களாற் சூழப்பட்டிருப்பது வரைத் தானே தனியென் றகங்காரங்கொண்டு தான் யாரெனவும், தனது வடிவம் யாதெனவும் அறியாதிருந்து முடிவில் அப்படி யறியாதிருந்த கருவிகரணாதிகளற்று யாதுமில்லாத ஏகமௌனத்திலடங்கி, மௌனமே தனது வடிவமாயிருக்கின்ற நிராலம்ப பராபர வெளியிற் கலக் கின்றது. ஆகையால் நீவிர் ஆன்மாவை அகண்டமென்று நிலைநிறுத்திய காலத்தும் உலக வியாபகத்திற்காக மாயை யினது சேஷ்டைகளாற் பல்வகை யோனிகளிலும் போய்ப் புகுந்து தாமெடுக்கும் ஜன்மத்திற்குத் தக்கபடி நன்மை யையோ, தீமையையோ, செய்து சரீரத்தை விடுகின்ற அவ சரத்தில் மறுத்தும் தான் செய்த பாவ புண்ணியங்களுக் கேற்றவாறு ஜன்மங்களை எடுக்கின்றதென்று யான் இத ஞல் நிச்சயப்படுத்துகின்றேன். ஆன்மா புனர் ஜன்ம மெடுப்பதில்லையென்று நீவிர் அபிப்பிராயப்படுகின்றபடி யே இப்பிரபஞ்சத்திலும் அனேகர் அபிப்பிராயப்படுகின் ஞர்கள். அவ்வாறு அபிப்பிராயப்படுவதில் அனேக மாற் றங்க ளிருக்கின்றன. ஒரு கட்சியார் ஆன்மா அகண்ட மாயிருந்தாலும் அல்லது பிண்டத்திற் கேற்ப பல பாக

மாய்ப் பாகுபாடடைந்திருந்தாலும், அப்பிண்டத்தை விட்ட பின்னர் அது ஆகாயத்திலொன்றாய்க் கலந்துவிடுமெனவும், அப்பால் அவ்வான்மா வேறு யோனிகளிற் போய்ப் பிறவாதெனவும், தான் செய்த புண்ணிய பாவங்களுக்குத் தக்கபடி இன்ப துன்பங்களை அனுபவியாதெனவும், இப்பிரபஞ்சத்திற் பிறந்த ஒருவன் தனக்கு விவகாரத் தசை வந்த காலத்தில் விவாக முதலியன செய்து புத்திரர்களைப் பெற, அப்புத்திரர்களும் அவ்வாறே வேறு புத்திரர்களைப்பெற அவ்வாறு தலைமுறை தலைமுறையாய்ப் பெற்று வருவதுதான் மறு பிறப்பெனவும், அல்லையேல் ஒவ்வொரு நாளும் மனுஷியர்களது குணமானது இருந்தவாறன்றி நிமிஷத்திற்கு நிமிஷம் பேதப்படுவதுதான் மறு பிறப்பெனவுஞ் சொல்லுகின்றார்கள். வேறொரு கட்சியார் ஆன்மா வடிவமற்றதாயிருந்தாலும் அது ஒப்பற்ற கடவுளால் அப்போதைக் கப்போது நூதனமாய்ச் சிருஷ்டிக்கப்பட்டதெனவும், அவ்வாறு சிருஷ்டிக்கப்பட்ட அது மனுஷியர்களுக்கே கொடுக்கப்படுகின்றதெனவும், மற்றவைகளுக்குக் கொடுக்கப்படாதெனவும், அவ்வான்மா தாமெடுத்த சரீரத்தை விட்ட பின்னர் இவ்வுலக முடிவுரை ஓரிடத்திற் போய்த் தங்கியிருக்கின்றதெனவும், முடிவிற் கடவுளால் அது செய்த புண்ணிய பாவங்களுக்குத் தக்கபடி அதற்கு மோக்ஷமோ ! நரகமோ ! கொடுக்கப்படுமெனவும், அபிப்பிராயப்படுகின்றார்கள். மேலும் அதைப்பற்றி அநந்த அபிப்பிராயங்களிருக்கின்றன. அவைக ளெல்லாவற்றையும் இங்கே எடுத்துச் சொல்லுவது அநாவசிய மென்றொழித்து முற்கூறிய இரு கட்சியார்களது அபிப்பிராயங்களோடு உம்

முடைய அபிப்பிராயத்தையும் பற்றிக் கூறுகின்றேன். அவையாவன:—முந்தினகட்சியாரது அபிப்பிராயங்களைப் பற்றி ஆதியில் விசாரிக்குமளவில் இப்பிரபஞ்சத்தின் கண் கடவுள் ஆன்ம கோடிகளை எதற்காகச் சிருஷ்டிக்கின்றார். அவ்வான்மாக்கள் தங்கள் தங்கள் ஜீவிய காலத்தில் செய்த புண்ணிய பாவங்களுக்குத் தக்கபடி ஜன்மங்களெடுத்து இன்ப துன்பங்களை அனுபவியாமற் போனால் அச்சிருஷ்டிப்பினா லுண்டான பயன் யாது? ஆதலால் அக்கடவுள் அச்சிருஷ்டித் தொழிலை விடுத்து மௌனமா யிருப்பது மிகவும் உத்தமமாகும். அல்லது சிருட்டித்தாலும் யாவரையும் ஒரே விதமாய்ச் சிருட்டித்து முடிவில் ஒரே விதமாய்த் தன்னிடத்திற் சேர்த்துக் கொள்ள வேண்டும். அவ்வாறின்றிச் சிலரை வித்துவான்களாகவும், சிலரைத் தனவான்களாகவும், சிலரை மூடர்களாகவும், சிலரை ஏழைகளாகவும், சிலரைச் சுந்தரர்களாகவும், சிலரை விகாரர்களாகவும், சிலரைச் சிறியர்களாகவும், சிலரைப் பெரியர்களாகவும் பலவாறு சிருட்டித்து இப்பிரபஞ்சத்தைப் பல பேதப்படுத்தி யிருக்கின்றார். அதனால் அக்கடவுளது ஒப்பற்ற நீதியைப் பற்றிச் சற்று யோசிக்க வேண்டிய அவசியம் ஏற்படுகின்றது. ஆனால் அதற்குச் சமாதானமாக ஒவ்வொரு ஆன்மாக்களும் இப்பிரபஞ்சத்திற் பிறந்த பின்னர்த் தமக்குத் தாமே கல்வி முதலியன கற்றுங் கேட்டும் ஞானத்திற் புகுந்து பூரணப்பட வேண்டியதா யிருக்கின்றனவென்று சொல்லுகின்றார்கள். அதை யான் ஒரு காலத்தும் ஒப்புக் கொள்ளமாட்டேன். ஏனெனில், அப்படி அவ்வான்மாக்கள் பூரணப்படும், படாவென அக்கடவுளுக்குத்

தெரியாதா? அவைகளை வீணாகப் பலவிதமாய்ப் படைத்து வித்தியாசப்படுத்தி வைத்துக்கொண்டிருப்பதனால் அக் கடவுளுக்கு வந்த பயன் யாது? ஒருவன் சுத்தப் பைத்தியக்காரனாகப் பிறந்து இப்பிரபஞ்சத்திலிருக்கு மளவும் பைத்தியக்காரனாகவே யிருந்து இறப்பானாயின் அவனை அக்கடவுள் எதற்காகப் படைத்தார்? அவனை எதற்காக இறப்பித்தார்? அவன் கல்வி முதலியன கற்று ஞானசாகரத்தில் மூழ்குவதற்கு அவனுக்கு நல்லறிவு ஏன் கொடுக்கப்படவில்லை? ஆனால் ஒருவேளை அதைக் கடவு ளின் திருவிளையாட்டென்பீர்கள் அப்படி விளையாடு வதற்கு அக்கடவுள் சிறுபிள்ளையுமல்லவே. இனி மற்ற கட்சியாரது அபிப்பிராயத்தைப் பற்றிச் சற்றுக் கவனமா யோசிப்போம். ஆன்மாவைக் கடவுள் அப்போதைக்கப் போது படைத்து அவற்றை மனுஷியர்களுக்குமாத்திரங் கொடுத்து அவர்களை இப்பிரபஞ்சத்தினிடத்து ஜீவித்தி ருக்கும்படி ஏற்பாடு செய்து அவர்கள் செய்கின்ற புண் ணிய பாவங்களுக்காக இவ்வுலக முடிவில் அவ்வான்மாக் களுக்கு மோட்சநரகங்களைக் கொடுக்கின்றாரென்பது எவ் வளவு ஆச்சரியமான காரியம் ஏனெனில், சூத்திரதாரி கடவுளாக விருக்க, இயந்திரமாகிய மனுஷியர்கள் யாது செய்வார்கள். கயிறு பிடித்து அவர் ஆட்டும் விதமெல் லாம் அவர்கள் ஆடுவார்கள். அவ்வாறு ஆட்டி அலைத்த அக்கடவுள் அவர்களை முடிவில் அவர்கள் செய்த பாவத் திற்காக நரகத்தில் தள்ளினால் அது நியாயமாகுமா? ஒருக் கால் நியாயந்தானென்று ஒப்புக்கொண்டாலும், ஆன்மா வானது அருவமும் அகண்டமுமா யிருப்பதால் அதை யுக முடிவிற் பலபாகமாகப் பகுத்து அதற்கு மோட்ச

நரகங்கள் கொடுக்கச் சாத்தியமாகுமா? மாயையினால் அனேகமாகப் பிரிக்கப்பட்ட ஆன்மாவானது முடிவிலும் அனேகமாயிருக்குமென்பது நகைப்பிற் கிடமாகின்றது. மேலும், அதை ஒரு பெரிய நியாயந்தானென்று சொல்வதற்கு யாதொரு மார்க்கத்தையுங் காணவில்லை. அதனால் ஆன்மாவானது அகண்டமும் ஏகமுமாயிருந்தாலும் அது மாயையினால் அனேகமாய்ப் பிரிக்கப்பட்டுத் தனது கன்மத்தினா லேற்படும் ஜன்மங்களிற் கிடந்துழன்று அக்கன்மமானதிருக்குமளவும் அவ்வாறு பாகுபாடடைந்தது போலிருந்து அவை யாவுந் தீர்ந்தவுடன் முன்போல ஏகமாய்ப் பூரணமாகின்றது ஆதலால் மறு ஜனனமுண்டெனவும், 1-ம், பிரதிவாதியாகிய ஆன்மாவே குற்றவாளியெனவுந் தெரிவித்துக் கொள்கின்றேன்.

1-ம், பிரதிவாதி வக்கீல்.

ஜனன முண்டென்று நீவிர் சொல்லுகின்றீர். சரி, அதை யானும் ஒப்புக்கொள்ளுகின்றேன். ஆனால் நாம் போன ஜன்மத்தில் இவ்வாறு இருந்தோம், இவ்வாறு வளர்ந்தோம், இவ்வாறு ஜீவித்தோம், இவ்வாறு இறந்தோமென நமக்கு ஓரணுப்போலும ஞாபகமில்லை. நாம் போன ஜன்மத்திற் பிறந்ததும் வளர்ந்ததும் உண்மையாயிருக்கில், நமக்கு அவ்விஷயத்திற் சற்றேனும் ஞாபகமிருக்க வேண்டும். எவ்வளவோ வருடங்களுக்கு முன்னர் நடந்த விஷயங்களைக் கூட நாம் சற்று ஞாபகப்படுத்திச் சொல்லுகின்றோம். இவ்விஷய மாத்திரம் நமது ஞாபகத்தை விட்டு மகலுவதற்குப் பிரதான நியாயம் யாது? ஆதலால்

மறு பிறப்பில்லையெனவும், 2-ம், பிரதிவாதியாகிய சரீரமே குற்றவாளியெனவுந் தெரிவித்துக்கொள்ளுகின்றேன்.

2-ம், பிரதிவாதி வக்கீல்.

நீவிர் சென்ற மாதம் பன்னிரண்டாம் தேதி காலை குடித்த ஜலம் எவ்வளவு? உண்ட அன்னம் எவ்வளவு? அருந்திய பதார்த்த வகைகள் யாவை? அல்லது நீவிர் பிறந்த நாள் முதல் இன்று காறும் நாவிதனைக்கொண்டு எத்தனை தடவை க்ஷௌரகம் பண்ணிக்கொண்டீர், சென்ற ஆறு வருடங்களுக் கிடையில் எத்தனை தடவை மழை பெய்தது! இவ்வினாக்களுக்கு உம்மாலோ! உம்மோடு சேர்ந்த பிறராலோ! உண்மையான விடை சொல்லக் கூடுமா? அவ்விஷயத்தில் உமக்கும் அவர்களுக்குஞ் சந்தேகந்தானே. அது போகட்டும்; நீவிர் இவ்வுலகத்திற் பிறந்த மூன்று வருடங்களுக் கிடையில் நடந்த விவகாரங்கள் யாவை? நீவிர் கருப்பவறையி லிருக்கின்ற காலங்களில் நடந்தது யாது? அங்கே நீவிர் கண்ட அற்புதங்களென்ன? உமது அன்னை உம்மை எவ்வாறு சுமந்து கொண்டிருந்தாள்? எவ்வாறு இரட்சித்தாள்? எவ்வாறு நீவிர் கருப்பவறையிலுறைந்தீர்? இவ்வினாக்களுக்கு நீவிர் எவ்வாறு விடை சொல்லுவீர்? காலஞ் செல்லச் செல்லப் பஞ்சேந்திரியங்களின் விஷய சம்பந்தமாய் அறிவு விசாலித்து ஞாபக சத்தி அதிகப்படுகின்றது. விஷயபோகமின்றி அச் சத்தி யதிகப்படாது மாணிக்கத்தை மெழுகு மூடிக் கொண்டிருப்பதுபோலக் கன்மமானது ஆன்மாவாகிய மாணிக்கத்தை மூடிக் கொண்டிருக்கின்றது, விஷய போகங்களாகிய சுவாலை அம்மெழுகின் மீது

பாயப்பாய அச்சூட்டினால் அம்மெழுகானது உருகுவது போலக் கண்மமுமுருகியோடும். அப்பால் அம்மாணிக்கத்தின் காந்தியானது நாலாபக்கமும் பரவுகின்றது அதைப்போல ஆன்மாவும் தானெடுத்த சரீரத்தை யொழிப்பதற்கு முன்னர்ச் சகல தநுகரண புவன போக அந்தகாரங்களி லெல்லாம் பிரகாசித்துத் தானெடுத்த ஜென்மங்களையும் அந்தந்த ஜென்மங்களில் நடந்த விசேடங்களையுந் தெள்ளத் தெளியத் தெரிகின்றது. அதனால் முன் ஜன்மத்தில் நடந்த சகல விசேடங்களையும் பூர்வ ஞானமுடையவர்க ளறிகின்றார்கள். அஞ்ஞானிகள் ஒரு காலத்திலும் அறியார்கள். ஆதலால் மறுஜென்ன முண்டெனவும் 1-ம், பிரதிவாதியாகிய ஆன்மாவே குற்றவாளி யெனவும் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

1-ம், பிரதிவாதி வக்கீல்.

சத்த ஸ்பரிச ரூப ரச கந்த மென்னும் பஞ்சபுலன்களை ஆன்மா வென்று சிலர் சொல்லுகின்றார்கள். அப்புலன்களைந்தும் உயிர் போகும்போது ஐந்து வழிகளாக உடலைவிட்டு ஓட ஆரம்பித்துச் சத்தம் ஆகாயத்திலும், ஸ்பரிசம் காற்றிலும், உரூபம் அக்கினியிலும், இரசம் ஜலத்திலும், கந்தம் பூமியிலுங் கலந்து போகின்றன. அப்பொழுது ஆன்மா இருப்பது எங்கே? அதற்கு மறு ஜெனன முண்டாவது எவ்வாறு? ஆதலினால் ஜெனன மில்லை யெனவும், சரீரமே குற்றவாளி யெனவும் நிச்சயமாகத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்

2-ம், பிரதிவாதி வக்கீல்.

நியாய வாயிலாக யோசிக்கும்போது உபது கேள்வி சரியாகவே யிருக்கின்றது. ஆயினும் ஒரு விஷயத்தைப்

பற்றி யோசிக்க வேண்டியதா யிருக்கின்றது. அதாவது ஆன்மாவிற்குஞ் சரீரத்திற்கும், ஐந்து படிகளிருக்கின்றன. அவை ஸ்தூலம், சூக்குமம், காரணம், கூடஸ்தம், பிரம மென்பன. அவற்றுள் ஸ்தூல மென்பது உயிரோடுகூடிப் பிரத்தியட்சமா யிருக்கின்ற தற்கால சரீரம். பிரம்ம மென்பது அவ்வுயிரினது ஆன்மா. இங்கே முற்கூறிய ஐவகைத் தேக மென்று சொல்லப்பட்ட ஒருவனிறந்தால் அவனது ஸ்தூல சரீர மாத்திரம் பிரிந்து அந்த ஸ்தூல தேகத்தி லிருந்த பஞ்ச பூதங்களும் அதனதன் பூதங்களிற் போய்ச் சேருகின்றன. அப்பால் அவனுக்குச் சூக்குமம், காரணம், கூடஸ்தம், பிரமமென நால்வகைச் சரீரங்க ளிருக்கின்றன. ஸ்தூல தேகத்தோ டிருக்கின்ற பாவியாகிய ஒருவனுக்கு ஸ்தூலப் பார்வையாகிய ஒன்றுளது. அப்பார்வையினுல் அவன் மனுஷியர்களது மரணத்தைப் பார்த்தால் அது தான் அவர்களுக்கு முடிவென்று விசாரித்துக் கொள்ளுகின்றான். சூக்கும முதலிய மற்ற நான்கு பார்வைகளும் கன்ம நாசத்தினுல் ஒவ்வொருவருக்கு முண்டாகின்றன. கன்ம நாசம் வருத்தி அந்த நான்கு பார்வைகளையு மடைந்த ஞானிகள் வெகுவாய் அம்முடிவி னுண்மையை அறிந்திருக்கின்றார்கள். ஆதலினுல் ஒவ்வொரு ஆன்மாவும் ஐவகைத் தேகங்களோடு ஐவகைப் பார்வைகளையும் பெற்று இறக்காமல் ஒன்றிலொன்றை ஒடுக்கிக் கொண்டிருக்க வேண்டும் அப்படி யிருப்பது தான் ஒப்பற்ற கடவுளுக்குப் பிரியமானது. மனுஷியர்கள் தமது சொந்த வினையினுலும் அறியாமையினுலுந் தமது சரீரத்தை அடிக்கடி யிழந்து விடுகின்றார்கள். ஸ்தூல தேகத்தை யிழந்தால் ஞான மார்க்கம் ஒரு காலத்திலுங்

கைகூடாது. அதை யிழக்கா திருந்தாற்றான் அம்மார்க்கங் கைகூடும். மேலும் ஸ்தூல தேகத்திலிருக்கின்ற கண்களுக்கு மற்றப் பிரகிருத தேக மழிந்ததாகக் காண்பதனால் மற்ற தேகங்களு மழிந்த தென்று ஒரு காலத்திலுஞ் சொல்லக்கூடாது அதைப் பற்றி விவரித்துச் சொல்லுவதற்கு இப்போதிருக்குஞ் சமயம் போதாது. ஆதலால் மறு ஜெனன முண்டெனவும், ஆன்மாவே, குற்றத்திற்கு உத்தரவாதி யெனவும், நிச்சயமாய்த் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

1-ம், பிரதிவாதி வக்கீல்.

சிலர் இரத்தத்தினிடத் திருக்கின்ற சூக்குமாக்கினிச் சத்தியையே ஆன்மா வென்று சொல்லுகின்றார்கள். அச்சொற்படி இரத்தத்தினால் மாத்திரம் வலிமை யடைகின்ற அச்சத்தியானது அவ்விரதஞ் சுத்தமா யிருப்பது வரை ஐவகை யறிவிற்கும் நல்ல சுத்த ஞாபகத்தைக் கொடுக்கின்றது. இரத்தங் கெட்டுப் பலவீனப்பட்ட காலத்தில் அதன் சூக்கும சத்தியும் பலவீனப்பட்டு அப்பலவீனத்தினாற் கண்கள் மருண்டு காதுகளடைத்து வாய்குளறி ஸ்பரிச உணர்ச்சி, நாவினுருசி, ஸ்திரப் புத்தியாகிய இவைகளொன்றுமின்றி கேடு சம்பவிக்கின்றது. ஆனால் ஆன்மா வென் றொன்றிருக்கில் முற்கூறிய சம்பவங்களொன்றும் நேரிடாது. முன்னிருந்தவாறே இருக்கும். அதனால் ஆன்மா வென்பது பிரத்தியேகமாக ஒன்றில்லை. அப்படி யில்லாத ஆன்மாவிற்கு ஜென்மமு மில்லை. ஆதலால் மறு ஜென்ம மில்லை யெனவும், சரீரமே குற்றவாளி யெனவும் யான் உறுதியாய்த் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

2-ய், பிரதிவாதி வக்கீல்

இரத்தமே ஆன்மா வென்று சொல்லுகின்ற சில வகுப்பாரது சித்தாந்தமானது சுவர்க்கம், நரக முண்டென்று நம்புகின்ற மனுஷியர்களது புத்தியை அடிக்கடி மயக்கக் கூடியதா யிருக்கின்றது. ஆனால் அதைப்பற்றி ஆலோசிக்கின்ற சமயத்தில் மனுஷியர்கள் குழந்தைகளா யிருக்கும் பொழுது அவர்களது சரீரத்திற் சரியான இரத்தமும், கொழுப்பும், சூடும் பூரணமாயில்லாமற் குறைவாயிருப்பதனாலும், தலை மூளையில் உப்பும், சுண்ணும்புச் சத்தும், நிதானமா யில்லாததினாலும், வேகமாயோடி வட்டமிட்டு வராநிற்கும் அவ்விரத்த வோட்டத்திற்கு இலக்காகிய இரத்தத் தாரைகளின் திறப்பு அதிகமா யில்லாததினாலும், அவர்கள் புத்தியும், அறிவும், வஞ்சகமு மில்லாதிருக்கின்றார்கள். அப்பால் அவர்கள் நாள் தோறும் வளருவதனால் அவ்விரத்தத்திற் சூடுங் கொழுப்பு மதிகரித்து மேலும் மேலும் விசார சக்தி யுண்டாக்கி அறிவினாற் பிரகாசிக்கப்பட்டுப் பண்டிதர்க ளாவதற்குக் காரணமாகின்றது. அவ்வாறு இரத்தத்தினது சூடு, கொழுப்பு முதலியவைகளாற் புருஷப் பிராயத்தை யடைந்து சரியான உலக ஞாபகத்தைப் பெற்ற மனுஷியர்கள் மேக நோய் முதலிய வியாதிகளால் தங்களது இரத்தத்தைக் கெடுத்து விடுகின்றார்கள். அப்படிக் கெடுத்துவிட்ட அசுத்த விரத்த சஞ்சாரத்தால், மெய், வாய், கண், மூக்கு, செவியாகிய பஞ்சேந்திரியங்கள் கெட்டுப் பித்த நீரும், மேக நீருஞ் சமரசமாய்த் தலையிலேறி மூளையை ஒன்றுக்கு முதவாமலாக்கி விடுகின்றன. சைசவம், கௌமாரம், யௌவனம், வார்த்திக மென்னு மிந்நான்கு வகைக்

காலச்சக்கரச் சுழற்சியும் இரத்தத்தினாற் சம்பவிப்பதால் ஜன்மமும் இரத்தத்தின் செயலாகின்றது. எவ்வாறெனில், பலாஷ்டிகர்களான மனுஷியர்களுக்குச் சரீரத்தி லிரத்தத்தினாற் போதுமான சூடும், மூளை, முதுகெலும்பு, நாடி முதலியவைகளிற் போதுமான சுண்ணும்பும், உவர்ச்சத்து மிருக்கில், ஆண்மையும், வீரமும் மண்டையில் ஏகமாய்க் கொதித்துப் பொங்கா நிற்கும். அதனால் அவர்கள் சுாதநீர் அதிகரித்து ஸ்திரீ சம்போகத்திற்கு ஏற்றவர்களாகின்றார்கள். அப்பொழுது சந்தான விருத்தி யுண்டாகின்றது. இவை யாவும் இரத்தத்தினது பிரத்தியேகச் செயல்களாம். இரத்தமே ஆன்மாவென்று சொல்லுஞ் சித்தாந்தத்திற்கு இவை போன்ற அநந்தத்திருஷ்டாந்தங்க ளிருக்கின்றன. ஆயினும், இவ்வளவும் இரத்தத்தின் குண குண பேதா பேதங்களன்றி வேறொன்று மல்ல வென்று சாதிக்கின்ற அன்னோரது அபிப்பிராயப்படிக் கல்வியும், அறிவுங்கூட அவ்விரத்தத்தினது செயல்களென்று சொல்லலாம். ஏனெனில் அதற்கும் அநந்தத் திருஷ்டாந்தங்க ளிருக்கின்றன. அவற்றை இங்கு எடுத்துக் கூற வேண்டு மென்ற அவசியமில்லை. இரத்தமே யாவற்றிற்குங் காரண பூதமாய் நின்று எல்லாவற்றையும் நடத்தி வருகின்றதென்று சாதித்தாலும் அவ்விரத்தமே எல்லையின்றி அதிகரிக்கின்ற காலத்தில் அதைக் குறைப்பதற்குங் குறைகின்ற காலத்தில் அதிகரிப்பிப்பதற்கும் மற்ற வேளைகளிற் சமமாக நடத்துவதற்கும், அவ்விரத்தத்தைப் பார்க்கினும் மேலான அதிகாரம் வாய்க்கப் பெற்ற ஓர் பொருளிருப்பதாகத் தெரிகின்றது. மேலும் இரத்தத்தினாலே அறிவுண்டாயின் அவ்வறிவு

எப்பொழுதும் அவ்விரத்தத்திற்குக் கீழ்ப்படிந்ததாக இருத்தல் வேண்டும். அவ்வாறன்றி அவ்வறிவு அவ்விரத்தத்தைத் தனது சொந்தப் பிரியப் பிரகாரம் நடத்தி வருவதை நாம் எப்பொழுதும் பார்க்கின்றோம். உதாரணமாக அதிகரித்த இரத்தக் கொழுப்பையுடைய ஜனங்கள் எப்பொழுதும் சும்மா ஓரிடத்திலிராமல் காரணமின்றிப் பிறரை அடிக்கவும், ஏசவும், பேசவும், நினைத்தவிடத்திற் கெல்லாம் நாய் போலோடி யலையவும், பரஸ்திரீகளை இச்சித்து அம்மோக சாத்தியத்திற்கு வேண்டிய பல துஷ்டக் கிரியைகளைச் செய்யவும் இன்னும் பல அகிருத்தியங்களைப் புரியவுஞ் செய்கின்றார்கள். தேகத்திற் பூரிப்புண்டாகின்ற காலத்தில் பூரிப்புண்டான அவன் நல்ல புத்திசாலியாகவும், சன்மார்க்கனாகவு மிருந்தால் அதை அப்போதைக்கப்போது கண்டித்து அவ்விரத்தச் சேஷ்டையினால் எவ்விதத் தீங்கும் நேரிடாதபடி தன்னைத்தானே காப்பாற்றிக் கொள்ளுகின்றான். அறிவாளிகளுக்கு அது தெரியாமலிராது. ஆனாற் சிலருக்கு இரத்த அதிகாரமே அதிகமாயிருக்கின்றது. அறிவின் மகத்துவத்தைச் சற்றேனுங் காணவில்லையே யென்ற ஒரு சந்தேகத்தை இதன் மத்தியிற் சொன்னாலுஞ் சொல்லலாம். அவ்வாறு சொல்லில் அதற்குச் சமாதானமுமிருக்கின்றது. அதாவது ஓரே விதமான தழை, இலை முதலியன புசித்துத் தங்கள் பசியைத் தணித்துவருகின்ற யானைக்குங் கழுதைக்கும் எவ்வளவு வித்தியாச மிருக்கின்றதோ, அவ்வளவு வித்தியாசம் இரத்தத்தை அடக்கித் தன் மன இச்சையின்படி நடக்கத் தக்க வல்லமையுடைய புத்திமான்களுக்கும், அதை அடக்கி நடப்பதற்கு வல்லமையில்லாத மடையர்

களுக்கு மிருக்கின்றதென்று சொல்லலாம். யானையும், கழுதையும் அறிவில்லாத மிருகங்களாயிருந்தும், அவற்றைப் பழக்குகின்ற காலத்திற் கழுதையைப் பார்க்கினும் யானைக்கு அதிகப்புத்தி யுண்டாவதற்குக் காரணம் யாது? கழுதையினிடத்திருக்கின்ற இரத்தத்தைப் போலவே யானையினிடத்துமிரத்த மிருக்கின்றது. ஆகலால் இரத்தமே அறிவிற்குக் காரணமென்பது சரியான நியாயமன்று. ஒருவேளை அவ்விரண்டும் வெவ்வேறு விதமான பிறப்புகளென்ற ஓராட்சேபம் இடையில் வந்தாலும் வரலாம். அஃது உண்மையே. ஆனால் பிறப்பினால் வடிவ மாத்திரம் வேறுபடுகின்றதே தவிர இரத்தம் இரண்டிற்கும் ஓரே விதமாகத்தானே யிருக்கின்றது. அதனால் அறிவும் ஓரே விதமாகத்தானே இருத்தல் வேண்டும். அவ்வாறின்றிப் பேதப்பட்டிருப்பதற்குக் காரணம் யாது? அஃது இரத்தந்தானென்று சொல்லுவதற்கு இனி வழியில்லை. ஒருக்கால் தலையிலும் மூளையிலும் வித்தியாசங்களிருக்கலாமென்று சொல்லுவீர். அந்தநியாயம் இங்கே ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. ஆனால் இவைகளனைத்திற்குங் காரணங் கன்மமே தவிர வேறொன்றுமில்லை. அந்தக் கன்மத்தினது வன்மையினால்தான் கழுதைக்கு மந்தப் புத்தியும், யானைக்குச் சற்று அறிவுமுண்டாயின. அவ்வாறே மனுஷியர்களுள்ளும் அவரவர்களது கன்மத்திற்குத் தக்கபடி மந்தப் புத்தியும், விசேட அறிவுமுண்டாகின்றனவென்று தெரிந்துகொள்ளவேண்டும். ஆகையினால் அறிவே ஆன்மாவன்றி இரத்தம் ஆன்மாவன்று. அன்றியும் அறிவிற்கு இரத்தங் காரணமுமன்று. மண்ணினால் வீடு ஏற்படுவது போல உதிரத்தினால் பஞ்சபூத சம்பந்தமான இச்சரீரம்

ஏற்படுகின்றது. அதற்கு இயக்கமும் ஏற்படுகின்றது. அவ்வாறு ஏற்படுகின்ற வீடாகிய சரீரத்தில் அறிவாகிய ஆன்மா சஞ்சாரஞ் செய்கின்றதன்றி இரத்தம் ஆன்மாவைச் சேர்ந்ததுமன்று. அது ஆன்மாவை நடத்துவதுமன்று ஆதலால் இரத்தம் ஆன்மாவாகாதெனவும், மறுஜனன முண்டெனவும்,1-ம், பிரதிவாதியாகிய ஆன்மாவே குற்றவாளியெனவுந் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

1-ம், பிரதிவாதி வக்கீல்

பிராண வாயுவைச் சிலர் ஆன்மாவென்று சொல்லுகின்றார்கள். உயிர் போகும்பொழுது அப்பிராண வாயு வாயுவோடு கலந்துபோகின்றது. அவ்வாறு கலந்துபோன அது கலந்த வண்ணமே மறுபடியும் மீளாது. அதனால் அதற்கு மறு ஜனன முண்டாவது எவ்வாறு, ஆதலால் ஆன்மாவிற்கு மறு ஜனனமில்லையெனவும், சரீரமே குற்றவாளியெனவு முண்மையாய்த் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

2-ம், பிரதிவாதி வக்கீல்

நீவிர் சொல்லியவாறு ஆன்மாவைப் பிராண வாயுவென்று சொல்வதற்குப் பல திருஷ்டாந்தங்களிருக்கின்றன மேலும் அதுவே ஜீவன் நிலைப்பதற்கு ஆதாரமாகவும், பிண்ட உற்பத்திக்குக் காரணமாகவு மிருக்கின்றது. அதனால் அதை ஆன்மாவென்று அநேகர் அபிப்பிராயப்படுகின்றார்கள். ஆனால் யான் அவ்வபிப்பிராயத்தை ஒருகாலத்தும் ஒப்புக்கொள்ளமாட்டேன். புராதனர்களான ஞானிகளும், இருஷிகளும் தபோதனர்களும் தங்கள் தங்கள் பரோக்ஷ அபரோக்ஷ ஞானங்களுக்கு எட்டியவரையிற் கண்டு பிடித்ததாவது:—மனுஷியர்களது உட்புறத்து

னின்றும், நிச்சுவாச உச்சுவாசங்களா யுலாவிவரும் வாயு வானது பத்துவிதமாய்ப் பாகுபாடடைந்திருக்கின்றதென் பதே. அவை பிராணன், அபானன் சமானன், வியா னன், உதானன், நாகன், கூர்மன், கிருதரன், தேவதத்தன், தனஞ்சயனென்பன. அவற்றுள் பிராண வாயுவானது மற்ற ஒன்பது வாயுக்களைப் பார்க்கினும் பிரதானமான தும், உயிருக்கு ஆதாரமானதுமாயிருப்பதால் மற்ற வாயுக்களை உபேட்சித்து அதுவே மேலானதெனவும், ஆன்மாவெனவும், தன்னிகரற்ற சுயம்பிரகாச சத்திய வஸ்துவெனவும், புகழ்ந்து மகா மேருவெனச் சாஸ்திர இதிகாசங்களிற் குறிப்பிடப்பட்டிருக்கின்றது அவ்வாறு குறிப்பிடப்பட்ட அம் மகாமேருவினது அடியும் முடியும் ஒருவருக்குங் காண முடியாதெனவும், அதன் சிகரத்தில் ஒரு கற்பக விருட்சம் நிற்கின்றதெனவும், அவ்விருட்சத் தினது பழங்களிலுள்ள மதுக்கள் ஓராறாய்ப்பெருகியோடு கின்றன வெனவும், அவ்வாற்றிலுள்ள நீரை யருந்து வோர்க்கு ஜனன மரணமில்லையெனவும், அம் மகாமேரு அக்கினி மண்டலம், சூரிய மண்டலம், சந்திரமண்டலம் வரை வியாபித்திருக்கின்றதெனவும், பலவாறு வருணித்து எழுதியிருக்கின்றார்கள் அவ்வாறெழுதிய அக்கதைக ளனைத்தும் பிராண வாயுவைப் பற்றியதென்று தெரியாத மனுஷியர்களிற் சிலர் மகாமேருவென்னும் பெரிய ஓர் மலை உண்மையாகப் பூலோகத்திலிருக்கின்றதென்று மயங்கு கின்றார்கள். சிலர் பூகோள சாஸ்திரங்களெல்லாவற்றை யுஞ் சிரத்தையோடு படித்து நாலா பக்கங்களிலும் யாத்தி ரை செய்து தேடி இருபத்தொன்பதினாயிரத்திரண்டடி யுயரமுள்ள இமய மலையைத்தவிர வேறொன்றையுங்காண

மற் புராணங்களிலுஞ் சாஸ்திரங்களிலும் சொல்லியிருக்கின்ற யாவுஞ் சந்தேகத்திற் கிடமாயிருக்கின்றனவென்று சொல்லுகின்றார்கள். ஆனாற் பிராணவாயுவே மற்ற வாயுக்களுக்கு ஆதாரமாயிருப்பதனாலும், அவ்வாயு மூலாதாரத்தில் நின்றுந் தோன்றி உச்சிவரையிலும் மகாமேருப் பருவதத்தைப்போலு மெழும்பி ஆதியந்தமற்றதா யிருப்பதனாலும், அவ்வாயுவினது சிகரங்களாகிய சிரகிரி, பரகிரியிலிருந்து கற்பக விருட்சத்தினது இரசத்தைப்போன்ற காயசித்திக்குரிய ஆநந்த மதியமிர்தஞ் சிந்துவதாக யோகிகள் தங்களது யோகாநுபவத்தாற் கண்டு அதை அநுபவித்துக்கொண் டிருப்பதனாலும், அவ்வாயுவே ஓங்கார ரூபமாய் அதனிடத்துப் பிறந்த மூன்றெழுத்துக்களும், அக்கினி, சந்திரன், சூரியனென்னும் மூன்று பிண்ட மண்டலங்களையும் அளாவி யிருப்பதனாலும் ஞானிகள் அவ்வாயுவை மிகவும் உயர்வாகக்கருதி அதை மகாமேருப் பருவதமென உருவகப்படுத்தி யிருக்கின்றார்க ளென்பது நிச்சயமாக விளங்குகின்றது. ஆனால் அப்பிராண வாயு அளாவியிருக்கின்ற அம்மண்டலங்கள் மூன்றும் முப்பாழ்களாம். அவை சத்தி பாழ், சிவம்பாழ், பரம்பாழென்பனவற்றுள் அடங்காநிற்கும். அம்மும்மண்டலங்களையுங் கடந்து பிராண வாயுவையுந்தாண்டி நிராமயப் பரவெளியிற் கலந்தவர்களைத் தவிர மற்றவர்களை ஞானிகளென்று அழைத்தல் கூடாது. ஆதலால் நீயிர் கூறிய பிராணவாயுவை ஆன்மாவென்று உறுதிப்படுத்துவதற்கு இங்கே என்ன நியாயமிருக்கின்றது. அதை ஆன்மாவென்று சொல்லில், தானாகநின்ற அவ்வான்மா தன்னிற்றானைத் தானே ஒடுக்கமாகவேண்டும். மேலும் அதுவே சாயுச்

சியமாய் முடியவேண்டும். அவ்வாறின்றி அவ்வாயுவின் சிகர முகட்டையுங் கடந்த ஆகாய வெட்ட வெளியையே சாயுச்சியமெனக் கருதி அவ்வெளியில் நுழைகின்ற சமயத்தில் நீவிர் கூறிய அவ்வாயுவை எவ்வாறு ஆன்மாவென்று சொல்லக்கூடும். அன்றியும் ஆன்மாவானது நாசமற்ற ஒரு அநாதி நித்திய வஸ்துவாகவல்லவா இருத்தல்வேண்டும். நாசமுற்ற வஸ்துவா யிருந்தால் ஏன்? ஒவ்வொருவரும் மோக்ஷம் மோக்ஷமென்று அலைந்து காற்றாய் பறக்கின்றார்கள். வாயுவை அநாதி நித்திய வஸ்துவென்று எவ்வாறு சொல்லலாம். மண், தண்ணீர், நெருப்பாகிய இவைகளுக்கு நாசமுண்டாவதுபோல அதற்கும் நாசமுண்டாகுமல்லவா? எல்லாம் நாசமாய் முடிவில் தனிப்பது ஆகாயமல்லாமல் வேறு யாது? ஆதலால் ஆன்மாவானது ஆகாய ரூபத்தைத்தவிர வாயு ரூபமாயிருப்பதென்பது ஒவ்வாத நியாயம். வாயுவோ அழிந்து போகும். ஆன்மாவோ அழியாது. ஆனால் பிராணவாயு நிராட்சேபமாய் மனுக்சமா யிருப்பதனால் அம்மனதை நிறுத்தி அதைச் சூனியத்தில் இலயப்படுத்துவதற்கான இடகலை, பிங்கலை யென்னுங் கடிவாளத்தைப் போன்றிருப்பதன்றி அது ஒருக்காலமும் ஆன்மாவாகமாட்டாது மறுத்தும் இவ்வாகாயரூபமான ஆன்மாவிற்கு மறுஜனன மெவ்வா றுண்டாகின்ற தென்றால் அதைப்பற்றி யான் முன்னரே பரக்கக்கூறி யிருக்கின்றேன் ஆதலால் மறுஜனன முண்டெனவும், இவ்வியாச்சியப்படி யுள்ள குற்றத்திற்கு 1-ம், பிரதிவாதியாகிய ஆன்மாவே உத்தரவாதி யெனவுந் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

1-ம், பிரதிவாதி வக்கீல்.

சர்வமும் பிரமம். அதாவது யாவும் பிரமசொரூபமாயிருப்பதனால் ஒவ்வொரு ஜீவனது உள்ளும் புறமும் பிரம மயமாகவே யிருக்கின்றது. அதனால் உலகத்தில் நடைபெறுகின்ற யாவும் பிரமச்செயல்கள்தாம். ஆதலால் கருமமென்பது யாது? தருமமென்பது யாது? கருமஞ்செய்பவர் யாவர்? தருமஞ்செய்பவர் யாவர்? கருமத்திற்காகத் தண்டிக்கப்படுவோர் யாவர்? தருமத்திற்காக இரட்சிக்கப்படுவோர் யாவர்? கருமத்தினாலுந் தருமத்தினாலுமுண்டான தண்டிப்பையு மிரட்சிப்பையு மநுபவிப்போர் யாவர்? இறப்போர் யாவர்? பிறப்போர் யாவர்? எல்லாம் பிரமச்செயலானதனால் எதற்காக மறு ஜனனமெடுத்தல் வேண்டும். ஆதலால் மறு ஜனனமில்லை யெனவும், வியாச்சியப்படியுள்ள குற்றத்திற்கு 2-ம் பிரதிவாதியாகிய சரீரமே உத்தரவாதி யெனவும யான் உறுதியாகத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

2-ம், பிரதிவாதி வக்கீல்

ஆம், சர்வமும் பிரமமே பிரமத்தைத்தவிர வேறொன்றுமில்லை ஆயினும் மனோவாக்குக் காயங்களுக் கெட்டாத அநாதி நித்திய நின்மல நிர்க்குண நிரஞ்சன நிராதார நிராகர நிராமய நிராலம்ப நிஷ்களவத்துவாகிய சிற்சொரூபமானது சதாகாலமுந் தன்னோடு நிர்த்தொந்த லயமாயிருக்கும் மூல மாயையோடு தானே தன்னுருவத்தை விகாரப்படுத்தின சமயத்தில் இப்பிரபஞ்சத்தில் யாவுந் தானாகவே யுண்டாயின. அது எவ்வாறென்னில், அப்பரமான்மா மூலமாயையைச் சூக்குமமாய்ப் பார்க்க, அதனாலான பிரதிபிம்பாகாசத்தால் ஜீவர்களது ஜீவான்மாக்க

ளுண்டாயின. அவைகள் தம்மையுந் தலைவனையும் அறியா திருத்தற் கேதுவான அஞ்ஞான விருளாற் சூழப்பட்டன * ஆனாற் பதியைத்தவிரப் பசுவுமில்லை. பசுவைத் தவிரப் பதியுமில்லை. பதியே பசுவாகவும், பசுவே பதியாகவும் ஒன்றையொன்று இரேகித்து ஒன்றிலொன்று வியாபித்ததாக விருந்தாலும் நியாயவாயிலாக உற்றுநோக்கும் பக்ஷத்திற் பதிவேறு, பசுவேறென நிச்சயமாய் விளங்குகின்றன. எவ்வாறென்னில், ஓரே சமயத்திற் பல பாத்திரங்களில் நீரை நிரப்பி அதனுள் சூரியகிரணத்தைச் செலுத்திப் பார்த்தால் அப்பாத்திரங்க ளெல்லாவற்றினுள்ளும் ஓரேவிதமான பல சூரியர்கள் பிரதிபிம்பித்திருப்பதாக நமக்குத் தோற்றுநிற்கும். அவ்வாறு தோற்றிய பிரதி பிம்பங்கள் யாவு முண்மையிற் சூரியனல்ல. சூரியனைவிட்டு வேறுமல்ல. ஆனால் உண்மையான சூரியனது பிரதிபிம்பமே அப்பிரதிபிம்ப சூரியர்களாகவும், அச்சூரியனைத் தவிர அப்பிம்பங்கள் வேறல்லனவாகவும், உற்றுநோக்கில் அப்பிம்பங்கள் தாமல்லனவாகவும், எவ்வாறிருக்கின்றனவோ, அவ்வாறே பதியாகிய பிரமமும் தன்னாலுண்டான மாயையினாற் சிருட்டிக்கப்பட்ட சரீரங்களாகிய ஜீவராசியினுள் தனது பிம்பத்தை ஜீவான்மாவாய்ப் பிரதிபிம்பிக்கச் செய்து தானே அவ்வான்மாக்களாகிய பசுவாகவும், தன்னைத்தவிர அப்பசுக்கள் வேறல்லவாகவும், உற்றுநோக்குகின்ற காலத்தில் அப்பசுக்கள்

* இவ்விடத்திற் பதியென்பதைப் பிரமமாகவும், அப்பதியினாலுண்டான பசுவென்பதை ஆன்மாவாகவும், அவ்வான்மாவைப் பந்தப்படுத்துகின்ற சரீரத்தையும் மும்மலத்தையும் பாசமெனவுங் கொள்ளுதல் வேண்டும்.

தானல்லவாகவு மிருக்கின்றது. இங்கே நீரையுடைய பாத்திரங்களிற் பிரதிபலித்த சூரியர்கள் அப்பாத்திரங்களிருப்பதுவரை உருவத்தைக் காட்டிப் பிரதிபலித்துக் கொண்டிருந்து நாளடைவில் அப்பாத்திரங்களுடைந்து நீருந் தரையிற்சிந்தி முற்றும் வற்றிப்போக அங்குக் காணாமற் போகின்றன. அவைகள் தரையிலுமில்லை. சூரியனிலுமில்லை. மற்ற எவ்விடத்திலுமில்லை. அவ்வாறு சரீரத்தினிடத்துப் பிரதிபலித்துக் கொண்டிருக்கின்ற ஆன்மாவாகிய பசுக்கள் அச்சரீரம் வீணாய் விழுந்து விடுகின்ற காலத்தில் போகின்ற வழி தெரியவே தெரியாது. அதை ஒரே வார்த்தையிற் சொல்லி முடிக்க வேண்டுமானால் மறுத்தும் அவ்வான்மாக்களாகிய பசுக்கள் இல்லவேயில்லை. ஒருவேளை பதியிலொடுங்கினவோ, என்று சந்தேகிக்கினும் அவ்வாறு ஒடுங்கினதாகத் தெரியவில்லை. பசுவானது பதியிலொடுங்குகின்ற சமயத்தில் அவ்வாறு ஒடுங்கிற்றென்று சொல்லுவதைவிட எல்லா ஆன்மாக்களும் பிரமத்தோடு ஐக்கியமாய் மோக்ஷத்தை அநுபவிக்கின்றனவென்று ஒரே சாதனையாய்ச் சாதித்துச் சொல்லலாம். ஆதலாற் சூரியன் எல்லா விடங்களிலும் வியாபித்தும், அதன பிரதிபிம்பங்கள் தாங்கள் செல்லும் அவ்வப் பாத்திரங்களினளவாய்ச் சுருங்கி அப்பாத்திரங்களெல்லாவற்றிலும் பிரகாசிப்பதுபோல, பரப்பிரமமானது எங்குஞ் சர்வ வியாபியாகவும் பூரண ஞானியாகவும் நிறைந்து வியாபித்தும், அதன் பிரதிபிம்பங்களாகிய பசுக்கள் அவ்வச் சரீரத்தினளவாய்ச் சுருங்கிச் சரீரங்களெல்லாவற்றிலும் பிரகாசித்திருந்து சிற்றறிவுடையனவாய்த் தம்மையோ, தமது சரீரத்தையோ, அறிவதற்கும் வல்லமை

யற்று மயங்கிக்கிடப்பதால் முற்கூறிய பதிக்கும் இப்பசுவுக்கும் அளவற்ற வித்தியாசங்க ளிருக்கின்றன. அவையிரண்டிற்குஞ் சம்பந்தமேயில்லை. மேலும் ஒரு பாத்திரமுடைந்த விடத்தில் வேறொரு பாத்திரத்தை வைத்தால் அப்பாத்திரத்திலுஞ் சூரியனது பிரதிபிம்பந் தோற்றுகிற்கும். அதையும் உடைத்து அவ்விடத்தில் வேறொரு பாத்திரத்தை வைத்தால், அப்பாத்திரத்திலும் அது தோற்றும். அவ்வாறு அங்கு நீரால் நிரப்பப்பட்ட அளவற்ற பாத்திரங்களை ஒன்றொன்றாக வைத்து, வைத்த அவைகளையு முடைத்து மேலும் வைத்தால் அதிலும் முன் வைத்த ஒவ்வொன்றிலுந் தோற்றியவாறே அப்பிரதிபிம்பந் தோற்றுகிற்கும். அவ்வாறே ஒவ்வொரு சரீரத்திலுள்ளுந் தோற்றிக்கொண்டிருக்கின்ற பசுவாகிய ஆன்மாக்கள் தாங்கள் சேர்ந்திருந்த சரீரங்கள் எத்தனை தடவை அழிந்து மறுத்தும் எத்தனை தடவை யுண்டானாலும் அந்தத்தடவைகளி லெல்லாம் அவற்றுள் நுழைந்துகொண்டுதானிருக்கும். சரீரங்கள் அழிவதும், மறுபடியுமுண்டாவதும், ஆன்மாக்கள் அவற்றி னகத்து நுழைந்திருப்பதும், மறுபடியும் மறைவது மாகிய இவைகள கன்மத்தினாலுண்டான அவத்தைகளென்று ஒவ்வொருவரும் நன்றாய்த் தெரிந்துகொள்ளுதல் வேண்டும். கன்மமொழிந்தாற் சரீரத்தினது பிறப்புமொழியும். கன்மமிருந்தால் ஒருக்காலமும் அப்பிறப் பொழியாது. இது உண்மை. கன்மங்களொழிய வேண்டுமென்ற எண்ணமிருக்கில் இப்பிரபஞ்சத்திலுள்ள சுகாசுகங்களில் அதிகமாக இச்சையைச் செலுத்தாமல் ஒவ்வொரு நாளும் பத்தியை அதிகரிக்கச் செய்து காயசித்திபெற்றுக் காயத்தை இரட்சித்

துக் கொள்ளுவது மல்லாமல் தங்கள் பத்தியினுறுதியி னல் மூலாக்கினியைக் கொண்டு சரீரத்தினிடத்திருக் கின்ற சகல வியாதிகளேயுஞ் சங்காரஞ்செய்து அச் சரீ ரத்தை வளர்த்துவதோடு பாலிய காயசித்தி பெற்றவர் களைப் போலும் தங்களது ஸ்தூல தேகத்தைச் சூக்கும தேகமாக மாற்றி அப்பால் அச் சூக்கும தேகத்தைக் காரணதேகமாகக் கொண்டு முன்னர்த் தந் தேகத்திற் சொற்ப அறிவோடு மயங்கிக்கிடந்த ஆன்மாவை எவ் விடத்தும் வியாபித்திருப்பதாகக் கண்டு அணிமா, மகிமா, கரிமா, இலகிமா, பிராத்தி, பிராகாமியம், ஈசத்துவம், வசித்துவமாகிய அஷ்டசித்திகளேயு மடைந்து தங்களிடத் துப் பிரதிபலித்துக் கொண்டிருக்கின்ற பசுவாகிய ஆன்மா இதுவேயெனத் தெரிந்து அதைத் தாங்களாகவே பதி யோடு சேர்த்தொடுக்குவதற்கான தக்க வன்மையுடைய வர்களாய் இரண்டறக் கலந்து தாங்களே பரப்பிரம சொருபர்களா யாநந்தித்திருப்பார்கள். அன்றியும், பிரதி பிம்பமாகிய ஆன்மாவை மெய்ப்பிம்பமாகிய சின்மயமாக் கிக் கொள்ளுவதற்குக் காயசித்தியைத் தேடிக்கொள்ளு கின்ற அனேகர் அனேக வகையான காயகற்பங்கள் சாதி த்து உபரசங்களெல்லாம் வெண்ணெயைப்போலும் புசித் து அமுரி, மூலப்புளி முதலியன அந்தி சந்தி அப்பிய சித்து மோகமற்றுத் தாகமற்று அனந்தகோடி வருடங் கள் நிலையா யிருந்து சற்றும் உண்மை ஞானங் கிடையா மற் கன்மவசத்தினுற் சிலவேளை தங்களது சரீரத்தைவிட் டு விட்டு மறைந்து செல்லுகின்றார்கள். ஆதலால் எல்லாம் பிரமமாகவே யிருந்தாலும், சூரியனது பிரதி பிம்பங்கள் எவ்வாறு ஒப்பற்றனவாகவும், பற்றற்றனவாகவும், அநித்

திய மற்றனவாகவு மிருக்கின்றனவோ? அவ்வாறே மனத் திரயத்தினுல் விகாரமடைந்த பரப்பிரமத்தின் பிரதிபிம்பங் களாகிய ஆன்மகோடிகளும் பரப்பிரமத்தோடு எவ்விதத் தொந்தமு மில்லாதவைகளாய்க் கன்மமுள்ளளவும் அக் கன்மத்திற் கேற்ற ஜன்மங்களெடுத்துக்கொண்டு அலையு மென்பது நிச்சயமான காரியம். ஆகையால் எவ்விதச் சந்தேகமுமின்றி யுண்மையாக மறு ஜனன முண்டெனவும், வியாச்சியப்படியுள்ள குற்றத்திற்கு 1-ம், பிரதிவாதி யாகிய ஆன்மாவே குற்றவாளியெனவுங் களங்கமறத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

கோர்ட்டார்.

போதும், போதும். நீங்களிருவரும் ஒருவருக் கொருவர் உயர்வு, தாழ்வின்றி நெடுநேரம் வாதித்தீர்கள். உங்களது விவாதத்தினுல் இவ்வியாச்சியத்திற்குச் சரியா ன ஒரு தீர்மான மெழுதுவதற்கு எவ்வித நியாயத்தையுங் காணவில்லை. ஆதலால் உங்களது விவாதத்தை நிறுத்துங் கள். பஞ்சாயத்துக்காரர்கள் தங்களது அபிப்பிராயத் தைத் தெரிவிக்கட்டும்.

பஞ்சாயத்தார்கள்.

இந்த வக்கீல்க ளிருவரது விவாதங்களையும் யாங்கள் கேள்வியுற்றதில் இவ்வியாச்சிய சம்பந்தமாக எங்களுக்கு ஒன்றுமே சொல்லப் புலப்படவில்லை. இவ்வாறு ஒருவ ரோ டொருவர் ஜயாபஜயமின்றி விவாதிக்கின்ற இவர் களை இன்னும் இவ்வியாச்சியத்தைப்பற்றி யாதாவது சொல்லச் சொன்னுல் இவர்கள் இந்த யுகபரியந்தஞ்சொ ல்லிக் கொண்டே நிற்பார்கள். ஆதலால் இவர்களது விவா தத்தை இம்மட்டில் நிறுத்தி அதிக உரூபகத்திற்குக்

கோர்ட்டாரே வேறு சாக்ஷிகளை யழைத்து வாக்குமூலம் வாங்க வேண்டுமென்று யாங்கள் அபிப்பிராயப் படுகின்றோம்.

கோர்ட்டார்.

சேவகா! முன்னர் உன்னிடத்திற் கட்டளை செய்தபடி இவ்வியாச்சிய சம்பந்தமான சாக்ஷிகள் தொண்ணூற்றாறு பெயர்களையும் ஒரிடத்தி லொதுக்கமாக நிறுத்தியிருக்கின்றாயா?

சேவகன்.

கட்டளைப்படியே செய்திருக்கின்றேன்.

கோர்ட்டார்.

அவர்களுள் தொண்ணூறு முதல் தொண்ணூற்றாறு வரையுள்ள சாக்ஷிகளாகிய மூலாதார முதலான அறுவர்களையும் இங்கே விரைவில் அழைத்து வா.

சேவகன்.

அவ்வாறே செய்தேன்.

கோர்ட்டார்.

யான் உங்களிடத்தில் வாக்குமூலம் வாங்கும்பொழுதே உங்களது வாக்குமூலங்களில் சில அம்சங்களைப் பிரத்தியேகமாக நோட் செய்திருக்கின்றேன். உங்களுக்கு முன்னர் விசாரணைசெய்த தொண்ணூறு சாக்ஷிகளுள்ளும் ஒரு சாக்ஷியாவது தன்னிடத்தில் எந்த அதிதேவதையு மிருந்து அரசாக்ஷி செய்துவருவதாகச் சொல்லவில்லை. உங்கள் ஆறுபேரிடத்துந் தான் மூலாதாரத்திற் கணேசனும், சுவாதிட்டானத்திற் பிரமாவும், மணிபூரகத்தில் விட்டுணுவும், அநாகதத்தில் உருத்திரனும், விசுத்தியில் மகேசனும், ஆஞ்ஞையிற் சதாசிவனும் கருத்தாக்களா

யிருக்கின்றார்கள். அவர்களாலேயே இப்பிரபஞ்ச விருத்திக் காதாரமான பல செய்கைகளுஞ் செய்யப்படுவதாய்த் தெரிகின்றன. அதனால் அவர்கள் தாம் இவ்வியாச்சிய சம்பந்தமான குற்றத்திற்கு உத்தரவாதிகளாகவேண்டும். ஆதலால் அவர்கள் ஆறு பெயர்களும் எங்கே யிருக்கின்றார்கள்.

சேவகன்.

இதோ! பிரமா, விட்டுணு, உருத்திரன், மகேசன், சதாசிவனென்னும் ஐவர்களும் பஞ்சாயத்துக்காரர்களா யிவ்விடத்திற்றானே யிருக்கின்றார்கள். கணேசன் கடைத் தெருவிற்றுப் போயிருக்கின்றான் உத்தரவு கொடுத்தால் உடனே பிடித்துக்கொண்டு வருகின்றேன்.

கோர்ட்டார்.

பஞ்சாயத்துக் காரர்களாக இங்கே உட்கார்ந்திருக்கின்ற இவ்வைவர்களு மோடிப்போகாமல் இவர்களைப் பிடித்துக் கட்டிவிட்டு அவனை அழைத்துவா.

சேவகன்.

கட்டளைப்படியே அழைத்துவந்தேன். இதோ! நிற்கின்றான் கணேசன்.

கணேசன்.

ஐயையோ! யானல்லேன், எனக்கு ஒன்றுந் தெரியாது, யான் ஒன்றையுங் காணவுமில்லை, கேட்கவுமில்லை, பஞ்சாயத்துக் காரர்களாகிய இவர்கள் ஐவர்களுமே பஞ்ச கிருத்தியங்களை நடத்துகின்றார்கள். யான் எனது வயிற்றுப்பாட்டிற்காக எப்பொழுதும் நடுவீதிகளிலுங் கடைத் தெருக்களிலும் போயிருந்து கொண்டு எள்ளு, பயிறு, சர்க்கரை, வெல்லம், தேங்காய், தோசை, பணியாரம்

கரும்பு முதலியவைகளை யுண்டும் எனது பசியடங்காமல் அவ்வேலையிற்றானே எப்பொழுதுஞ் சுறுசுறுப்பா யிருக்கின்றேன். ஆதலால் எனக்கு இச்சமாச்சாரத்தி லொன்றுந் தெரியாது. என்னை விரைவில் விட்டுவிட வேண்டும். வயிறு மிகவும் பசிக்கின்றது.

கோர்ட்டார்.

ஆனால் நீ விரைவிற் செல்.

பஞ்சாயத்தார்.

யாங்களே சிருட்டி, திதி, சங்காரம், திரோபவம், அநுக்கிரகமென்னும் பஞ்ச கிருத்தியங்களைச்செய்தாலும் அவைகள் எங்களது மனைவிமார்களான ஸ்திரீ சாதிகளது சத்தியினாற் செய்யப்படுகின்றன.

கோர்ட்டார்.

சேவகா! அந்த ஸ்திரீ சாதிகள் யாவர்? அவர்களை உடனே இங்கு அழைத்து வா.

சேவகன்.

கோர்ட்டார் சட்டளைப்படியே இந்த ஐவர்களது மனைவிமார்களான சரஸ்வதி, இலக்குமி, பார்வதி, மகேசுவரி, மனோன்மணியாகிய ஐவர்களையும் இதோ அழைத்து வந்தேன்.

ஸ்திரீஜாதிகள்.

யாங்கள் செய்வது ஒன்றுமில்லை. எங்களுக்குச் சக்களத்திகளாக ஐந்து சத்திகளிருக்கின்றார்கள். அவர்களே முற்கூறிய விஷயங்க ளெல்லாவற்றையும் நடத்துகின்றார்கள். அவர்களுள் ஒருத்தி உயிருக்கொளியா யிருக்கின்றாள்; அவள் பெயர் சிற்சத்தி. வேறொருத்தி பிராணன் முதலிய வாயுக்களிற் கலந்திருக்கின்றாள்; அவள்

பெயர் பராசத்தி வேறொருத்தி பஞ்சபூதமயமாயிருந்து யாவற்றையும் ஆட்டுகின்றாள்; அவள் பெயர் இச்சாசத்தி. வேறொருத்தி ஞானேந்திரியங்களில் உணர்வோடு சேர்ந்திருக்கின்றாள்; அவள் பெயர் ஞானசத்தி. வேறொருத்தி மற்ற எல்லாச் செய்கைகளுக்குந் துணையாயிருக்கின்றாள்; அவள் பெயர் கிரியாசத்தி. அவர்களைத்தாம் பஞ்சசத்திகளென்று சொல்லுகின்றார்கள். அவர்கள் தாம் பஞ்ச கிருதியங்களைச் செய்பவர்கள். ஆதலாற் கோர்ட்டார் மிகவுந் தயவு செய்து எங்களையும் எங்களது நாயகர்களையும் எவ்விதக் குற்றமுஞ் செய்தறியாத நிரபராதிகளாக விட்டுவிட வேண்டுமென்று மிகவும் பணிவாகக் கேட்டுக்கொள்ளுகின்றோம்.

கோர்ட்டார்.

சேவகா! இவர்கள் சொன்ன பஞ்ச சத்திகளையும் இப்பொழுதே சென்று இங்கு அழைத்து வா.

சேவகன்.

கட்டளைப்படி இதோ அழைத்து வந்தேன்.

சத்திகள்.

"உலகம் சத்திமயம்" என்றவாறு யாங்களே சத்திகளாயிருந்து யாவும் நடத்துகின்றோ மாயினும் எங்களது சத்தி வருக்கத்தில் ஒருத்தியாகிய மாயாசத்தியென்பவள் இவ்வியாச்சியத்திற் பிரதிவாதிகள் பக்கம் ஒரு சாக்ஷியாயிருந்தும் அவள் இதுவரை வாக்குமூலங்கொடுத்ததாகத் தெரியவில்லை. ஆதலால் கோர்ட்டார் மிகவுந் தயவுசெய்து அவளை வரவழைத்து விசாரணை செய்தால், இவ்வியாச்சியத்தினது உண்மைகளியாவும் நிச்சயமாக விளங்கு

மென்றயாங்கள் மிகவும் பணிவாய்த் தெரிவித்துக்கொள்ளுகின்றோம்

கோர்ட்டார்.

சேவகா! அம்மாயை யென்பவளை இக்கோர்ட்டின் முன்னர் அழைத்து வந்து நிறுத்து.

சேவகன்.

அவ்வாறே நிறுத்தி விட்டேன்.

மாயை.

யான் சொல்லுவது யாது? சொல்லப்படுவது யாது? ஒன்றுமில்லை. வேதவேதாந்தப்படியல்லால் என்னைப்பற்றி உலகத்தார் சொல்லிக்கொள்ளுஞ் சில விஷயங்களை மாத்திரம் யானிங்கு விவகரிக்கின்றேன். அவையாவன:—எனக்குப் பிறப்புமில்லை. இறப்புமில்லை. யான் வலியளுமல்லள். சிறியளுமல்லள் யான் இளமையுமல்லள். முதுமையுமல்லள். யான் உடலுமல்லள். உயிருமல்லள் யான் அறிவுமல்லள். தெளிவுமல்லள். யான் உருபியுமல்லள். அருபியுமல்லள். ஆனால் இவைகளியாவும் என்னிற்றாமுண்டாகின்றன. யானே இவைகளியாவுமா யிருக்கின்றேன். யானே அண்ட பிண்டம். யானே ஆகாயம் யானே பஞ்சபூதம். யானே உலகம் யானே இராச்சியம். யானே சத்தலோகம் யானே சத்தசாகரம் யானே மலை. யானே குன்று. யானே பைசாசம். யானே பூதம். யானே காந்தருவர். யானே இராட்சதர். யானே விலங்கு. யானே பறவை யானே ஊர்வன. யானே நீர்வாழ்வன. யானே தாவரம் யானே போசனப்பொருள். யானே வாதி பிரதிவாதி. யானே வக்கீல், யானே பஞ்சலோகம், யானே நவமணி, யானே நாயகன், யானே நாயகி.

யானே தாய், யானே தந்தை. யானே மக்கள், யானே உற வினர். யானே மண், யானே மனை. யானே இன்பம், யா னே துன்பம். யானே உருவம், யானே அருவம். யானே வெண்மை, யானே கருமை. யானே வெம்மை, யானே குளிர்மை. யானே நரை, யானே திரை. யானே தூலம், யானே சூக்குமம். யானே என்பு, யானே தசை. யானே இரத்தம், யானே சுக்கிலம், யானே சுரோணிதம், யானே மதன். யானே இரதி. யானே மோகம், யானே வெறுப்பு. யானே வேதம், யானே சாஸ்திரம். யானே கல்வி, யானே கேள்வி. யானே மணம், யானே நாற்றம். யானே நோய், யானே மருந்து. யானே இயந்திரம், யானே தந்திரம், யானே வித்துவான். யானே மூடன். யானே அர சன். யானே குடி. யானே எஜமானன், யானே வேலைக் காரன். யானே பிரமா யானே சரஸ்வதி. யானே மோ னம், யானே ஞானம். யானே எல்லாம். ஆனல் யான் பெண்வடிவமா யிருப்பதால் தேவர்களெல்லாம் என்னிட த்து மயங்குகின்றார்கள். முனிவர்கள் மயங்குகின்றார்கள். இருஷிகள் மயங்குகின்றார்கள், தபோதனர்கள் மயங்கு கின்றார்கள். பண்டிதர்கள் மயங்குகின்றார்கள், வேதாந்தி கள் மயங்குகின்றார்கள், வீரர்கள் மயங்குகின்றார்கள். சூரா ர்கள் மயங்குகின்றார்கள், அவ்வாறு இப்பிரபஞ்சத்தி லுள்ள யாவரையும் எனது மாயா சேஷ்டைகளினால் மயங் கும்படிச் செய்கின்றேன். ஓரே வார்த்தையில் முடிவாய் சொல்லவேண்டுமானுற் சிருட்டி, திதி, சங்கார முதலிய பஞ்சகிரியைகளும் யானுகவே யிருக்கின்றேன். அக் கிரியைகளைச்செய்து வருகின்ற பிரமா, விஷ்ணு, உருத் திரன் முதலான பஞ்ச கருத்தாக்களுக்கும் யானுகவே

பிருக்கின்றேன். அப்பஞ்ச கருத்தாக்களுக்கும் அவரவர்களுக்குத் தக்கவேலையைக் கொடுக்கின்ற பாப்பிரமமும் யானுகவே யிருக்கின்றேன். அந்த அநாதி வஸ்துவிற் கலந்திருக்கின்ற மூலப்பிரகிருதியும் யானுகவே யிருக்கின்றேன். அப்பிரமம் எவ்வாறிருக்கின்றதோ? அதைப்போலவே யான் ஆணுமல்லள், பெண்ணுமல்லள், அலியுமல்லள், அதுவுமல்லள், இதுவுமல்லள், ஒன்றுமல்லள் யான் மாயை! மாயை!! மாயை!!! இதோ என துருவத்தை உள்ளா உள்ளபடி காட்டுகின்றேனென்று சொல்லி உடன்றுனே அம்மாயை யென்பவள் தனது அலங்காரப் பொருள்க ளெல்லாவற்றையும் வேறு படுத்த ஆரம்பித்தாள். அவ்வாறு ஆரம்பித்த அப்பொழுதே அங்கே ஒருவரையுங் காணவில்லை. யாவும் மறைந்துபோயின. கோர்ட்டாரையோ? பஞ்சாயத்துக்காரர்களையோ? வக்கீல்களையோ? சாக்ஷிகளையோ? வாதிபிரதிவாதிகளையோ? அங்கு நின்ற மற்றவர்களையோ? காணவில்லை. கோர்ட்டிருந்த தானமும் இதுவென்று அறிவதற் கிடமில்லாமற் போயிற்று. முடிவில் அந்தப் பட்டணங்கூடக் காணுமலாய் விட்டது. சுபம்.

வேதாந்த விவகாரக்
கிரிமினல் கேஸ்
முற்றிற்று.

தேவலோக கிரிமினல் கேஸ்.

இதில் அரிச்சந்திரன் சரித்திரம், சூர்ப்பநகை பங்கம், வாலி வதம், இலங்கா தகனம், அதற்கு அப்பீல்; அரம்பைப் பலவந்தம், கோபிகா ஸ்திரீகள் வஸ்திராபஹரணம், துரோபதை வஸ்திராபஹரணம், அதற்கு புனர் விசாரணை அப்பீல்; கீசகன் பலவந்தம் முதலான கதைகளில் வரும் கொள்கைகளைக் கொண்டு சீர்தூக்கி தற்காலத்தில் போலீஸ் கோர்ட்டுகளில் நடைபெறும் வியாச்சியங்கள்போலத் தொடுத்தெழுதப்பட்ட எட்டு கிரிமினல் கேசுகள், அடங்கி யிருக்கின்றன.

இக்கேசுகள் விசாரிக்குமிடமும் கோர்ட்டுகளும்: நியாயாதிபதிகளின் பெயர்கள் முறையே சத்தியலோகம், டிஸ்டிரிக்டு மாஜிஸ்டிரேட்டு கோர்ட்டு பிரமதேவனும், வைகுண்டம் செஷன்கோர்ட்டு மகாவிஷ்ணுவும், கைலாசம் ஹைகோர்ட்டு ருத்திரர்களேயாவர். வக்கீல்களோ தேவர்கள் சாக்ஷிகளோ தேவர்களும் முனிவர்களும். வாதி பிரதிவாதிகளோ இராமன், இலக்ஷ்மணன், அநுமான், சூர்ப்பநகை, சுக்கிரீவன், அங்கதன், இராவணன், ஸ்ரீ கிருஷ்ணன், கோபிகாஸ்திரீகள், அரம்பை, பாண்டவர்கள், துரியோதனாதிகள், சகுனி, கீசகன், துரோபதை, அரிச்சந்திரன், விசுவாமித்திரன், சுக்கிரன், காசிராஜன் முதலாயினோர்.

இக்கேசுகள் ஒவ்வொன்றினுள்ளும் முதல் வியாச்சியம், பின்னர் வாதி விசாரணை, வாதி சாக்ஷி விசாரணை, குற்றப் பத்திரிகை, பிரதிவாதி விசாரணை, பிரதிவாதி சாக்ஷி விசாரணை, வக்கீல்களினது ஹியரிங் ஜட்ஜ்மெண்டாகிய இவைகள் அடங்கி யிருப்பதோடு சில கேசுகளுக்கு அப்பீலும், அப்பீலுக்கு அப்பீலும் இருக்கின்றன.

ஷை விசாரணைகளில் காணப்படும் நியாயங்களுக்கு யுக்தி வார்த்தைகளும், ஆபத்து காலங்களிலும் தேகப் பாதுகாப்பின் பொருட்டும், சித்தப்பிரமை கொண்டவர்களும் உபத்திரவம் பொறுக்கமாட்டாமல் இன்னின்ன குற்றங்கள் செய்தால் அவைகள் குற்றமாகா வென்றும், தற்காலம் ஆங்கிலேய துரைத்தனத்தார் போலீஸ் கோர்ட்டுகளிலும், ஹைகோர்ட்டுகளிலும் தீர்ப்பாகிற ஹேதுக்களை ஆதாரமாகக்கொண்டு, தீர்ப்புகொடுத்திருக்கிற விவரங்களையும் தெளிவாய் எழுதியிருக்கின்றது. மேலும் இதிற் காட்டப்பட்டிருக்கும் லாக்கள் அனைத்தும் இந்தியன் பினல் கோடு முதலிய சட்டப் புத்தகங்களிலுள்ளனவே. இதொளன் 272-பக்கங்களுடையது.

விலை ரூ. 1—8—0.

எம். ஆதி அண்டு கம்பெனி,

39, சின்னதம்பி தெருவு, மதராஸ்.